மங்கையர் மலர்



படிப்போடு என்ன கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கலாம்?

MANGAYAR MALAR ஜூன் 1998 விலை ரூ. 10


இதயம் தொட்ட இனியவர்


இதமானது


COFFEE
BAR
Iced or Steamy Hot
புதிய நூதன ப்ரௌன்ஸ் :
அடிப்படை வண்ணங்களுக்கு
அப்பாற்பட்டது. இதமான காஃபி
வண்ணச் சாயல்கள்... இது நீங்கள்
அணிந்திடும் அனைத்துக்கும் ஒரு
புதிய மேன்மை
தோற்றத்தையளிக்கும்.
103
ஜாவா பீன்
புதிய!
17
காஃபி பீன்
80
காப்புசினோ
புதிய!
102
எஸ்பரஸ்ஸோ
புதிய!
REVLON
REVOLUTIONARY

புதியதாக....

கதைகள்



மலர் : 18
இதழ் : 5
ஜூன் 1998

மங்கையர் மலர்

சந்திக்கலாம் இவர்களை...



சுற்றுலா


கல்கி

7.6.98 இதழில்....

- உலக அழகி ஐஸ்வர்யாராய் சிறப்புப் பேட்டி!
- சுமி சூப்பர் மார்க்கெட்
  – ஒரு மத்தாப்புப் பெண்ணின் ஊசிப் பட்டாசு கமெண்ட்ஸ்!
- காளான் வளர்த்து, கலக்கும் இளைஞர்!
  – சிறப்புக் கட்டுரை
- கலைஞர் – 75
  – முதல்வரின் பவள விழாவையொட்டி விறுவிறுப்பான ஸ்பெஷல் பக்கங்கள்




Vasanth
CEILING FAN
வாங்குவோர்க்கு
ரூ.238/- மதிப்புள்ள
வாட்டர் கூலர் ஜக்
இலவசம்.
உங்கள் இல்லத்தில்
வசந்தம் வீசிட
வசந்த் சிலிங் ஃபேன்
கல்வி நிறுவனங்கள்
மற்றும்
மருத்துவமனைகளுக்கு
கூடுதல் சலுகை உண்டு!
• டபுள் பால் பேரிங்
• கண்கவர் வண்ணங்கள்
• அறை முழுவதும் பரவலான காற்றுவீச்சு
• உறுதியான இறக்கைகள்
Vasanth
MIX-FAST
வாங்குவோர்க்கு
ரூ.375/- மதிப்புள்ள
அழகிய டிராவல் பேக்
இலவசம்.
மற்றும்
Gift உங்கள் Choice
Vijai Iron Box அல்லது Titan Watch அல்லது Philips Radio அல்லது Gold Coin அல்லது Pressure Cooker
• ஓவர்லோடு இண்டிகேட்டர் வசதி
• இயங்கும்போது ஏற்படும் வெப்பத்தை உடனுக்குடன் வெளியேற்றும்
• 3 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடிகள்
• கடின தாக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட உதிரிபாகங்கள்
Vasanth வசந்த் & கோ
SHOPPING TO YOUR SATISFACTION
Credit Cards Accepted
சென்னை: • தி.நகர் : 45 தெற்கு உஸ்மான் சாலை & 8A தெற்கு உஸ்மான் சாலை • மைலாப்பூர் : முதல் மாடி, கார்னர், லஸ் • புரசைவாக்கம் : 191 புரசைவாக்கம் நெடுஞ்சாலை • கோடம்பாக்கம்: 20, ஆற்காடு ரோடு, மேம்பாலம் அருகில் • அடையார் : 4 பத்மநாப நகர், சிக்னல் அருகில் • பாடி : 63, M.T.H. சாலை • வண்ணாரப்பேட்டை : 339 திருவெற்றியூர் நெடுஞ்சாலை • ராயபுரம் : 67 மன்னார்சாமி கோயில் தெரு • தாம்பரம் : 21–22 சண்முகம் சாலை • செங்கல்பட்டு : 5, G.S.T. ரோடு, இந்தியன் வங்கி அருகில் • வேலூர் : 15–16, காட்பாடி ரோடு • சத்துவாச்சாரி : 14, ஆற்காடு ரோடு • சேலம் : 34, முதல் அக்ரஹாரம் • ஓசூர் : 86 B தாலுகா ஆபீஸ் ரோடு • ஈரோடு: 640, பெருந்துறை ரோடு • கோயம்புத்தூர் : 15, ஒப்பணக்கார வீதி • கோயம்புத்தூர் : 1098, கிராஸ் கட் ரோடு, காந்திபுரம் • திருநெல்வேலி : 14, பராசக்தி பில்டிங் • பாளையங்கோட்டை : 11, திருவனந்தபுரம் ரோடு, ஜவஹர் ... • திருச்சி : 2-B/1 கோட்டை ஸ்டேஷன் ரோடு • தஞ்சாவூர் : 11 சிவராயர் கார்டன் முதல் தெரு, மானம்புச்சாவடி • மதுரை : 162, தெற்கு மாசி வீதி • மதுரை: 54 தெற்கு மாசி வீதி • பாண்டிச்சேரி : 414, மகாத்மா காந்தி ரோடு • பெங்களூர் : பிரஸ்டீஜ் கோர்ட், 101/1 K.H ரோடு (டபுள் ரோடு).
Insight




'பொங்கி எழும்' கதாநாயகிகள்

மஞ்சுளா ரமேஷ்


பெண்களுக்கு என்று இல்லை, பொதுவாகவே இன்றைய சமூக நிலையில் சகிப்புத்தன்மை என்பது ரொம்பக் குறைந்து விட்டதோ என்று தோன்றுகிறது. நமது அலுவலகத்திற்கே நிறைய கடிதங்கள் வரும். 'என் வாழ்வில் இதெல்லாம் பிரச்னைகள், நான் வீட்டை விட்டு எங்கேயாவது பிழைத்துக் கொள்கிறேன். எனக்கு ஏதேனும் உதவி செய்யுங்கள்' என்று. இப்படி எழுதுவதால் அவர்களுக்கு எல் லாம் உபதேசம் செய்ய ஆரம்பித்து விடப் போவதில்லை. வாழ்க்கையிலேயே மிகமிகச் சுலபமான விஷயம் மற்றவர்களுக்கு அறிவுரை சொல்வதுதான். அதற்கு வரவில்லை. இதையொட்டி பார்த்துக் கொண்டிருக்கும் சில விஷயங்கள் யோசிக்கத் தூண்டுகிறது.

நினைக்கவே பயங்கரமாக இருந்த ஓர் அனுபவத்தைச் சமீபத்தில் படிக்க நேரிட்டது. மாபெரும் பண்டிதர் குமாரிலபட்டர் தான் பௌத்த மதத்தினரை ஏமாற்றி அவர்களின் சமய ரகசியங்களையெல்லாம் தெரிந்து கொண்டதற்காக வாழ்வின் கடைசியில் தன்னைத்தானே தண்டித்துக் கொண்டாராம். எப்படி? உமியில் தணல் மூட்டி அதில் மூழ்கச் செய்து கொண்டாராம். உமி எரியுமா என்ன? தணல் மட்டுமே பரவும். அப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னைக் கருக்கிக் கொண்டு இறந்தாராம். ஐயோ, கற்பனை செய்யவே நடுங்குகிறது. எப்பேர்ப்பட்ட மரணம்! அதை ஏற்றுக் கொள்ள அவருக்கு எவ்வளவு சகிப்புத் தன்மை இருந்திருக்க வேண்டும்.

அதே போல நிறைய பெரியவர்கள் இருந்திருக்கிறார்கள். தாங்கள் ஏற்றுக் கொண்ட லட்சியங்களுக்காக, கொள்கைகளுக்காக அவர்கள் தாங்கிக் கொண்ட துயரங்கள், அவமானங்கள் ஏராளம். அவற்றையெல்லாம் தாண்டி வைராக்கியத்தோடு தாங்கிக் கொண்டு உறுதியாக நின்றபோதுதான் அவர்கள் சரித்திரம் படைத்தார்கள்.



இவற்றை வேறு வழிகளில் போதிக்கவே ராமாயண, மகாபாரதம் போன்ற பல கதைகள் சொல்லப்பட்டன. சீதையின் சோகத்தையும், திரௌபதியின் கண்ணீரையும் அறியாத இந்தியப் பெண் இருக்கிறாளா என்ன? சாதாரண குடும்பங்களிலே, கூட்டுக் குடும்பங்களிலே அன்பு, பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தனக்கென்று எடுத்துக்



கொள்ளாத தியாகங்கள், சுய கட்டுப்பாடு என நிறைய வழி வழியாகப் போதிக்கப்பட்டன. அதனால் குடும்பங்கள் சிதையாமல் காக்கப் பட்டன.

ஆனால், இன்றைய கதைகளிலும், திரைப் படங்களிலும் அநீதி கண்டு 'பொங்கி எழும்' கதாநாயகிகளே அதிகம். பெட்டியோடு வாசலிலே நிற்கும் நாயகிகள் சித்திரிக்கப்படு கிறார்கள். உணர்ச்சியே பிரதானமாகக் கற்பிக் கப்படுகிறது. தியாகம் என்பது ஏமாளித்தன மாகி விட்டது. பொறுமை என்பது 'அசமஞ்சம்' ஆகிவிட்டது. இப்படி பல நல்லுணர்வுகள் கொச்சைப்படுத்தப்பட்டு விட்டன. திருமணம் என்ற பந்தம் ஒருவரையொருவர் கசக்கிக் கொள்ளும் குஸ்தி களமாகி விட்டது. பயில்வான்களைத்தான் இப்போது நிறைய காண முடிகிறது. ஏனெனில் இது WWF காலமல்லவா?

இப்படிப் பேசுவது மடிசஞ்சித்தனம்; பெண்கள் தலைதூக்கி தன்மானத்தோடு வாழ்வதால்தான், நம்மைக் கேவலப்படுத்தியவர்கள், புழுவாய் மிதித்தவர்கள் யோசிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள் எனலாம்.

'தாங்க முடியாத அக்கிரமம்' எனும்போது தடை தாண்டி நிமிர வேண்டியதுதான். ஆனால் அதன் அளவுகோல் என்ன என்பதில் தான் இன்றைய தலைமுறையினர் வித்தியாசப்படுகிறார்கள். திருமணமாகி ஒரே வாரம் குடித்தனம் நடத்திவிட்டு டைவர்ஸ் கேட்கும் தம்பதிகள் இருக்கிறார்கள். தீராத வியாதி எதுவுமில்லை, 'மனம் ஒத்துப்' போகவில்லையாம்! ஒரே வாரத்தில் பந்தத்தில் இருந்து வெளிவரத் துடிப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். முடியாதவர்கள் வீட்டையே நரகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

காரணம் 'சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை' எனும் இரு சிறிய வார்த்தைகள், ஆனால் பெரிய வாழ்க்கைத் தத்துவங்கள் காணாமல் போனதுதான்!

சரி, இன்று இந்தப் பிரச்னையிலிருந்து வெளியேறி விடுகிறோம், நாளை வாழ்க்கை ரோஜாப்பூ மலர்ப்பாதையாக இருக்கப் போகிறதா என்பதையும் தீர ஆலோசிக்க வேண்டும் இல்லையா? அவமானங்கள், வருத்தங்கள் யாருடைய வாழ்க்கையில் இல்லை? துரோகங்களை அனுபவிக்காதவர்கள் உண்டா? இன்றைய மிகப்பெரும் சாதனையாளர்களின் வாழ்க்கைகளைத் திறந்து பார்த்தீர்கள் என்றால் வழியெல்லாம் அவர்கள் சிந்திய ரத்தம் இருக்கும். ஒருவன் எத்

தலைக்கெத்தனை உயர்ந்த நிலையில் இருக்கிறானோ அத்தனைக்கத்தனை வாழ்வில் தாங்கவொணா துன்பங்களை அனுபவித்திருப்பான்.

தரையில் எவ்வளவு அழுத்தமாக பந்து அடிக்கப்படுகிறதோ அவ்வளவு உயரத்திற்கு அது எழும்பும் என்பதுதான் இயற்கையின் நிகழ்வு.

முன்பின் தெரியாத ஆட்டோக்காரர், 'ஏ சாவுக்கிராக்கி, பாத்துப் போடா' என 'டா' போட்டுக் கத்திவிட்டுப் போகிறார். அவமானம் தாளாமல் செத்தா போகிறோம். வெளியுலகில், வேலை செய்யும் இடங்களில் முன் பின் தெரியாத மனிதர்களிடத்தில் எத்தனையோ சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் கட்டாயம் கருதி சகித்துக் கொள்கிறோம். மேலே இருப்பவர் நம் கையில் எச்சில் துப்பி விட்டார் என கையையா வெட்டிக் கொள்கிறோம். இட்டிக் கொண்டேனும் கையைக் கழுவிவிட்டு நம் வேலையைப் பார்க்கப் போகிறோம். இரண்டு நிமிடம் வேண்டுமானால் அவரிடம் சண்டை போடலாம். அங்கேயே தங்கி அவருடனே காலமெல்லாம் கத்திக்குத்தா நடத்த முடியும்.

பின் விளைவுகள், நடப்பினை விட மோசமாக இருக்கும் என்ற சந்தர்ப்பங்களில் சகித்துக் கொண்டு போகலாம். காலம் இவற்றைச் சரிசெய்யும் என்பதற்கு விட்டுக் கொடுக்கலாம். பொறுக்க முடிகிற அளவிற்குப் பொறுத்துப் போகலாம். வாழ்க்கை என்று வரும்போது உணர்வு ரீதியாக பார்ப்பதை விட்டு, அறிவு கொண்டு யோசிக்க இன்று நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்.

எதைச் செய்தாலும் தீர ஆலோசித்து அமைதியாக உட்கார்ந்து கொண்டு எப்படிச் செய்யலாம் என யோசித்து முடிவு எடுக்க வேண்டும், அது எதுவாக வந்தாலும். உணர்ச்சி வேகம் இருக்கும்போது முடிவுகளை ஒத்திப் போடுங்கள்.

அமைதியான மனதால் எடுக்கப்படும் முடிவுகளே சரியாக இருக்கும். அப்போது எடுக்கும் தீர்மானங்களை நன்கு இட்டமிட்டு படிப் படியாக நிறைவேற்றுங்கள். வாழ்க்கையில் வெற்றிப்பாதை உங்களுக்குக் கிடைக்கும்.

இது கம்ப்யூட்டர் காலம். மனம் குழம்பி இருந்தால் ரெண்டு ரெண்டும் நாலு என்ற கணக்குக் கூட தவறாகத்தான் வரும். கம்ப்யூட்டரும் உங்களை 'ராங் கமாண்ட்' என்று இட்டும்!



அல்சரா ! மூட்டு வலியா !
இனி கவலையே வேண்டாம்!
தெய்வீக மூலிகை மருத்துவம்



அல்சர் நோயாளிகள் அவ்வப்போது ஏதேனும் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். வயிற்றுப் பகுதியினை காலியாக வைத்திருந்தால் எரிச்சல் உண்டாகும் என்னும் கருத்து முற்றிலும் தவறானதாகும். குடல் பகுதிகளுக்கு போதிய ஓய்வினை அளிப்பதன் மூலமும் , கசப்பு சுவை நிறைந்த மூலிகைகளை உண்பதன் மூலமுமே, குடல் பாகத்தினில் ஏற்பட்டுள்ள புண்களை ஆற்றுதல் முடியும். புண்களினால் எரிச்சல் இருப்பின் அவ்வப்போது தண்ணீர் அருந்தலாம். ஆபரேஷன் செய்ய வேண்டும் என்ற நிலையிலுள்ள அல்சர் நோயாளிகளும் தெய்வீக மூலிகைகள் மூலம் குணம் பெறலாம். நடக்கவும், குனியவும், உட்காரவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தீராத மூட்டுவலி உடையவர்களும் முறையான உணவு கட்டுப்பாட்டுடன் தெய்வீக மூலிகைகளை தேவைக்கேற்ப பயன்படுத்தி உண்பதன் மூலம் நாட்பட்ட மூட்டு வலியிலிருந்து நிவாரணம் பெறலாம்.

இரசாயனப் பொருட்கள் கலக்காத உணவும், மருந்துமே, அல்சர் நோய்க்கான முதலுதவி, மூட்டு வலிக்கு காரணமாக விளங்கும் பசை, சுரப்பது குறைவதற்கு காரணமே இரத்தத்தில் இரசாயனப் பொருட்களின் ஆதிக்கமே. வேப்பிலை, அத்தி, துளசி, வில்வம், அருகு போன்ற தெய்வீக மூலிகைகளாலும், இயற்கை உணவுகளாலும் மட்டுமே முழுமையாக நீக்க முடியும். இது பற்றிய விரிவான ஆலோசனையை நேரிலும், கடித மூலமும் பெற முகவரிகள்.

50



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் செல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

Singapore Enquiry : Mrs. Renuka, Blk 101, #04, -176, Jurong East Street-13, Singapore - 600 101. ✆ : 0065 - 5621218

1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (சங்கர்), 16, ஆஃபீஸர்ஸ் லைன். ✆ : 0416 / 23060.
2-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	5 to 6 ராஜும் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு. ✆ : 04112 / 22519.
1,3,10,17,18,19,20,27,28த்தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில். ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.D.)	: காலை	9 to 11 ஆர்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல். ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில். ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில் செம்பே கவுடா ரோட். ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட். ✆ : 04344 / 22899.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில். ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில். ✆:0424 / 226611 / 12 / 13 / 14/15/16/17/18
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிரான்ட்ஸ் சென்டரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ : 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ். ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்டரல் பஸ் நிலையம் அருகில். ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா. ✆ : 04286 / 20433
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மகேந்திரா லாட்ஜ். ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ். ✆ : 0421 / 740416.
22-ந் தேதி	- உடுமலைப்பேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு. ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தரபதி, மதுரை ரோடு. ✆ : 0462 / 333312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரவண, மீனாட்சிபுரம். ✆: 04652 / 25689.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு. ✆ :: 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார். ✆ : 63763.

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

7-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

+2வில் எந்த குருப் எடுப்பது?



தன் மகன் அல்லது மகள் பள்ளி இறுதித் தேர்வை வெற்றிகரமாக முடித்ததுமே அவர்களை மருத்துவர் (அ) பொறியியல் வல்லுனராக்கி ஏராளமாக சம்பாதிக்க வைக்க வேண்டுமென்பதுதான் பெரும்பாலான பெற்றோர்களுக்கு மிகப் பெரிய கனவாக இருக்கிறது. இக்கனவு மிக மோசமாகச் சிதையும்போது பெற்றவர்கள் மட்டுமின்றி, பிள்ளைகளும் அடையும் ஏமாற்றம் மனதுக்குள்ளேயே அவர்களை குமுறச் செய்கிறது. தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையின் முதல்படியே முற்றிலும் சிதைந்து போய் விட்டதாக எண்ணித் துன்புறும் காட்சிகள் ஒவ்வொரு கல்வியாண்டின் ஆரம்பத்திலும் அதிகமாகிக் கொண்டே போகிறது.

ஏறத்தாழ ஆறு லட்சம் மாணவர்கள் தங்கள் பள்ளி இறுதித் தேர்வு முடிவுடன் வாழ்க்கையின் அடுத்தகட்ட நடவடிக்கையை எதிர்நோக்கி உள்ளனர். பாலர் வகுப்பு முதல் பள்ளி இறுதித் தேர்வு வரை பள்ளிச் செயல்களிலேயே பெரும்பாலான சிந்தனையைக் கழித்த மாணவர்களுக்கு மேல்நிலைக் கல்வி (+2) பற்றிய அறிவு முழுமையாக இல்லையென்பது நிதர்சனமான உண்மையாகும். இது வரை இருந்ததுபோன்றே இந்தச் சமயத்திலும் தங்களது பெற்றோர்களின் வழிகாட்டுதலையே மாணவர்கள் அதிகம் எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால் பெற்றோர்களின் நிலை?

பெரும்பாலான பெற்றோர்களும் மேல்நிலைக் கல்வி குறித்த முழுமையான அறிவினைப் பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. தற்போதைய சமுதாய மதிப்பீடுகள், தங்களின் தனிமனித உணர்வுகள், உறவினர் நண்பர்களிடத்தில் தமக்குத் தேவையான அந்தஸ்து போன்ற காரணிகளையே தங்கள் பிள்ளைகளின் படிப்பை நிர்ணயிக்க வைக்கின்றனர்.

இப்போது நமது நாட்டில் மிக உயர்ந்த சமுதாய அந்தஸ்தையும், அதிக சம்பாத்தியத்தையும் அளிக்கும் தொழிலாக மருத்துவம், இன்ஜினியரிங் துறை கருதப்படுகின்றன. இது எந்தளவு உண்மையென்பது கேள்விக்குரிய விஷயம். ஆனால், ஒவ்வொரு பெற்றோரும் எல்.கே.ஜி. வகுப்பில் சேர்க்கும்போதே தங்கள் மகன் (அ) மகள் படித்து மருத்துவன் (அ) என்ஜினியராக வரவேண்டும் என்ற ஆசையுடன்தான் சேர்க்கின்றனர். இந்த ஆசை வளர்ந்து பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெறும் போது உச்சநிலையை அடைகிறது. இதனால் மேல்நிலைக் கல்வியில் அறிவியல் பாடப் பிரிவிலேயே சேர்க்கவிழைகின்றனர். ஏதோ மேல்நிலைக் கல்வியே மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளுக்கு அடித்தளம் அமைக்கும் கல்வி என்றே பெரும்பாலோர் எண்ணுகின்றனர். ஆனால் உண்மை நிலை?

மேல்நிலைக் கல்வியில் சுமார் 300 பாடப் பிரிவுகள் உள்ளன. இவைகள் பொதுப்பிரிவு, தொழிற் பிரிவு என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அறிவியல், கலைப் பாடங்கள் பொதுப் பிரிவிலும் (General Stream) தொழில் ஒன்றை முக்கியப் பாடமாகக் கொண்டது தொழில் பிரிவிலும் (Vocational Stream) வருகின்றன. பொதுப் பிரிவில் முழுவதும் அறிவியல் பிரிவு சார்ந்தது (Science Group) முழுவதும் கலைப் பிரிவு சார்ந்தது (Arts Group) மட்டுமின்றி இரண்டும் கலந்த பிரிவுகள் கூட உண்டு. உதாரணமாக, இயற்பியல், வேதியியல், கணிதம், வணிகவியல் பாடப் பிரிவு ஒவ்வொரு பள்ளியும் தங்களது சூழ்நிலை, அப்பகுதி

மாணவர்களின் தேவை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பாடப் பிரிவுகளைத் தொடங்குகின்றன.

அறிவியல் பிரிவில் படித்து வெற்றி பெறும் மாணவர்களுக்கு மருத்துவம் பொறியியல் மட்டுமின்றி இயற்பியல், வேதியியல், தாவரவியல், கணிதம் போன்ற பல்வேறு அறிவியல் பாடங்களில் பட்ட வகுப்பு படிப்பதற்கும் வாய்ப்புண்டு. கலைப் பாடங்களைப் படித்தால் இவ்வாய்ப்புகள் இல்லை. ஆனால் வணிகவியல், பொருளாதாரம், இலக்கியம், வரலாறு போன்ற பாடங்களில் பட்ட வகுப்பு சேரும் தகுதியுடன் கணிப்பொறி (Computer Science) கணிதம் போன்ற அறிவியல் பட்ட வகுப்பில் சேரும் தகுதியும் உண்டு. இதே போல தொழிற் பிரிவு மாணவர்களுக்கு முழுவதும் மருத்துவம் சம்பந்தமான பாடங்களைத் தவிர மற்ற தொழிற் கல்வி பட்ட வகுப்புகளில் சேரும் தகுதியுடன் பி.ஏ., பி.எஸ்ஸி., பட்ட வகுப்பில் சேரும் தகுதியும் உண்டு. ஆனால் இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்களே ஒதுக்கப்படுகின்றன.

இதிலிருந்து இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதம் அடங்கிய பிரிவைப் படிக்கும் மாணவர்களுக்கு மற்ற எந்தப் பிரிவைப் படிக்கும் மாணவர்களை விடவும் மேற்கல்வி வாய்ப்புகள் மிகவும் அதிகம் என்பதை உணரலாம். ஆனால் இந்த உண்மை ஒன்றிற்காக மட்டுமே தங்கள் பிள்ளைகளை அப்பிரிவில் சேர்க்க முற்படுவது அறிவுடைமை ஆகாது. அதனால் தாங்கள் எதிர்பார்க்கும் பலனையும் அடைய முடியாது. அடைய முடிவதில்லை என்பதே நடைமுறை உண்மை.


நடைமுறை உண்மைகள் இந்த அறிவியல் பிரிவில் படித்த மாணவர்கள் அனைவரும் டாக்டராகவோ (அ) என்ஜினியராகவோ ஆகவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. சொல்லப் போனால் பிளஸ் டூவிற்குப் பிறகு இவர்களால் பி.ஏ. வகுப்பில் கூட சேர முடிவதில்லை. இன்னும் அப்பட்டமாகக் கூறினால் இப்பிரிவில் சேர்ந்த காரணத்தாலேயே பலர் ப்ளஸ் டூவிலேயே தேர்ச்சி கூட அடைவதில்லை. வெண்மை நிறக் குதிரை தொடர்ந்தாற்போல இரண்டு மூன்று பந்தயங்களில் வெற்றி பெற்று விட்டால் வெண்மைதான் வெற்றி என்று மற்ற நிறத்தையே பார்க்க மறுக்கும் மனநிலையை உருவாக்கிக் கொள்பவர்கள்தான் நமது மக்கள். இயற்பியல், வேதியியல், உயிரியல் கணிதப் பிரிவில் சேர்ந்தாலே போதும் தன் பிள்ளை டாக்டர் (அ) என்ஜினியர்தான் என்று கனவு காண ஆரம்பித்து விடுகின்றனர். இதனால் அந்தப் பாடப் பிரிவு மட்டுமே படிக்க வேண்டிய ஒன்று. மற்றதெல்லாம் தாழ்வானது என எண்ணுகின்றனர். இதற்குக் கல்வித் துறையும் ஒரு காரணம். பிளஸ் டூ தேர்வில் அறிவியல் பாடங்கள் முன்னதாகவே நடத்தப்படுகின்றது. அதுவும் ஒவ்வொரு தேர்விற்கும் இடையிலும் இடைவெளிவிட்டு கால அட்டவணை அமைத்து அதன் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துகின்றது.

மற்ற பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு எதிர்காலமே இல்லையா? சமுதாயம் என்பது டாக்டர், என்ஜினியர், விஞ்ஞானிகள் மட்டுமே கொண்டதல்ல. மக்கள் தொகையில் மிக மிகக் குறைந்த சதவீதத்தினரே இவர்கள். வணிகவியலார், சமூகவியலார் போன்றோர் இவர்களுடன் சேர்ந்தால்தான் முழுமையான சமுதாய முன்னேற்றத்தை நாம் அடைய முடியும். பாடங்களில் அல்ல, அதனைப் படிப்பவர்கள் மனசில்தான் குறைபாடு உள்ளது. ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மதிப்பு சமுதாயத்தில் உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. அறிவியல் பிரிவு, கலைப் பிரிவு இவற்றில் உயர்ந்தது தாழ்ந்தது என்பது எதுவும் இல்லை.

எனவே, தேவையில்லாத முக்கியத்துவம் கொடுத்து அறிவியல் பிரிவில் சேர்த்து தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாழ்படுத்துவதை விட மற்ற பிரிவுகளில் சேர்வது குறித்து ஆலோசித்து முடிவு செய்வது மிகவும் நல்லது. அறிவியல் பிரிவில் சேர்க்கப்பட வேண்டாமென்பது இங்கு வற்புறுத்தப்படவில்லை; அது அறிவுடைமையும் இல்லை. எந்தப் பிரிவு எடுப்பதாயிருந்தாலும் பின்வரும் கருத்துக்களை தீர ஆராய்ந்து பின்னர் முடிவு செய்வது நலம் பயக்கும். பெற்றவர்களுக்கு மட்டுமல்ல, பிள்ளைகளுக்கும், சமுதாயத்திற்கும் சேர்த்தே.

1. பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஒரே காரணத்திற்காக மட்டும் அறிவியல் பிரிவில் சேர்க்க முடிவு செய்யாதீர். பத்தாம் வகுப்பில் அவன் படிக்கும் பாடமானது முதல் வகுப்பு முதல் அவன் கற்று வருவது. தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் என்று மாற்றமில்லாத பாடங்கள். பாடக் கருத்துக்களும் ஏறத்தாழ அப்படித்தான். வகுப்பிற்கேற்ப சற்று ஆழமாகவும் விரிவாகவும் இருக்குமே தவிர முற்றிலும் புதிதாக, அதிகமாக இருக்காது. ஆனால் மேல்நிலைக் கல்விப் பாடத் திட்டம் முற்றிலும் மாறுபட்டது. பத்தாம் வகுப்பில் கணிதத்தில் 100 மதிப்பெண் பெற்ற மாணவர்களில் சிலர் பிளஸ் டூவில் 35 கூட எடுக்க

மங்கையர் மலரும் அம்மி கிச்சன் மிஷினும் இணைந்து நடத்திய போட்டியில் அம்மி கிச்சன் மெஷினைப் பரிசாகப் பெற்ற இருவருக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன—



1. கோயமுத்தூரைச் சார்ந்த திருமதி. பத்மா பரிசு பெறுகிறார். பரிசளிப்பவர் அம்மி கிச்சன் மெஷின் நிறுவன டைரக்டர் டாக்டர் பிரசன்னா வெங்கடேஷ்.



2. உதகமண்டலத்தைச் சார்ந்த திருமதி. மீனா கிருஷ்ணனுக்குப் பரிசளிப்பவர்கள் அம்மி கிச்சன் நிறுவனத்தைச் சார்ந்த எஸ். மோகன்குமார் (உதவி மானேஜர்), பாலாஜி ஜகன்னாதன் (டைரக்டர்), எம். பழனிச்சாமி (மானேஜர், ஐ.ஓ.பி. கோவை.)

முடியாது தோல்வியுற்றது உண்டு. இது ஏதோ விதிவிலக்கான ஒன்றல்ல. பல வருடங்களாக இதுபோன்ற மாணவர்கள் நிறையவே காணப் படுகின்றனர்.

2. பெற்றவர்கள் தங்கள் கனவை, இலட்சியத்தை பிள்ளைகளின் மேல் திணிப்பதை விட்டு விட்டு, பிள்ளைகளின் விருப்பம், இலட்சியம், தகுதி அறிந்து அதற்கேற்ற பிரிவில் அவர்களைச் சேர்ப்பது நல்லது. இதற்காக அவர்களது முன்னாள் ஆசிரியர்களைக் கலந்து மாணவனின் உண்மையான தகுதியைப் பற்றி அறிந்து கொள்வது நல்லது.

3. முடிந்தவரை தங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்ப்பது நல்லது. ஏனெனில், பள்ளிக்குச் சென்று வரும் செயலே அவனது நேரத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது. இதனால் கால விரயம் மட்டுமின்றி களைப்பும் பிள்ளைகளுக்கு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

4. ஆங்கில வழிமுறைக் (English Medium) கல்விதான் உயர்வானது என்ற மனப்பான்மையை உங்கள் மனத்தில் மட்டுமின்றி பிள்ளைகளின் மனதிலும் வளர்க்க முற்படாதீர்கள். தாய்மொழிக் கல்வி (நமக்கு தமிழ்) மாணவர்கள் பாடங்களை எளிதாகப் புரிந்து கொண்டு கற்றுக் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும். மேற்படிப்புகளுக்கு இது மிகவும் அவசியம். மேற்படிப்புகள் அனைத்தும் தமிழ் வழியிலும் கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து வருவதால் ஆங்கிலத்தை விட்டால் நாதியில்லை என்ற நிலை இனி இல்லை. (அதற்காக ஆங்கிலத்தில் புலமை/திறமை இருந்தால் அதை ஒதுக்க வேண்டிய அவசியமில்லை). கடந்த ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்வு முடிவுகளைப் பார்த்தவர்கள் இந்த உண்மையை நன்கு உணர்ந்திருப்பர். தமிழ் வழியில் தேர்வு எழுதியும், தமிழை முக்கியப் பாடமாகக் கொண்ட மாணவர்களும் அதில் வெற்றி பெற்றனர்.

பெற்றவர்கள் நன்கு சிந்தனை செய்து, மேல்நிலைக் கல்வி பாடப் பிரிவை தேர்ந்தெடுக்கும்போது, அந்தப் பாடப் பிரிவின் வளமையையும், சிறப்பையும் மட்டும் கருத்தில் கொள்ளாது, தங்கள் பிள்ளைகளின் நாட்டம், திறன் ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் தருவதே பயனுள்ளதாக இருக்கும்.

— பூங்கோதை கிருஷ்ணராஜ்





யோசியுங்கள்... விளம்பரதாரர்களே...

இன்றைய விளம்பரங்களில் 'பெண்' எப்படியெல்லாம் வியாபாரப் பொருளாகிறாள் என்பதைப் பற்றி எழுதாத பத்திரிகையோ பேசப்படாத பெண்ணுரிமை மேடையோ இல்லை என்றே சொல்லலாம். அரைத்த மாவையே வெண்ணையாக அரைப்பது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல.

ஆனால், இந்த விளம்பரங்கள் சில சிந்தனைகளைத் தூண்டுகின்றன.

"புதிய தலைமுறை வாஷிங் மிஷின்கள்... புதிய தலைமுறை பெண்களுக்காக..." என்கிறது விளம்பரம்.

இப்படி நவநாகரீக மங்கைகளுக்காகவே தயாரிக்கப்படுவதாக மிக்ஸி, க்ரைண்டர் என பல உபகரணங்களைப் பற்றி அலறுகின்றன. அதில் அல்ட்ரா மாடர்னாக பெண்கள் உடையணிந்து (அணியாமல்) மாடலிங் செய்திருப்பார்கள்.

ஆக மொத்தத்தில் புதிய தலைமுறையினரிடம் புதிய தலைமுறை சமையல் உபகரணங்களை விற்க பழைய தந்திரம்.

ஷேவிங் க்ரீமிலிருந்து ஏரோப்ளேன் விளம்பரம் வரை எதில்தான் பெண் உபயோகப்படுத்தப்படவில்லை. இதைக் கண்டிப்பதல்ல இக்கட்டுரையின் குறிக்கோள்.

இது புதிய தலைமுறை உபகரணங்கள். ரொம்ப சரி.

ஆனால், ஏன் இக் கம்பெனியினர் இதை புதிய தலைமுறைப் 'பெண்களுக்கே' பிரத்தியேகமாக அளிக்க வேண்டும்.


நாலு தப்படியெடுத்து வைத்தால் இருபத்தியோராம் நூற்றாண்டில் நுழைந்து விடும் நிலையில் இருக்கிறோம். அடுத்த மில்லென்னியத்தை உலகமே வரவேற்கத் தயாராகிக் கொண்டிருக்கும் நேரம் இது.

இந்த நிலையில் எத்தனை பெண்கள்- புதிய தலைமுறைப் பெண்கள்- வெறும் துவைக்கும் பாவைகளாகவும், அடுப்படி அரசிகளாகவுமே தங்கள் வாழ்க்கையை கழிக்கப் போகிறார்களாம்?


உண்மையில் பெண்ணின் நிலை பல துறைகளில் கொடிகட்டிப் பறக்கும் போதும் ஏனோ நம் விளம்பரத் துறை மட்டும், வீட்டு உபயோகப் பொருட்களை விளம்பரப்படுத்த பெண்களையே குறி வைக்கின்றனவே.



பெண்ணும் இவற்றுடைய இலக்குதான். ஆனால் இன்றைய ஆணும் குடும்ப வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் மனப்பக்குவம் அடைந்ததை ஏனோ இவர்கள் கருத்தில் கொள்ள மறந்து விடுகிறார்கள். குடும்ப ஆரோக்கியம், சாப்பாடு, சுகாதாரம், வீடு ஆகியவை







பெண்களின் ஏகபோகப் பொறுப்பு என்பது போலவே சித்தரிக்கிறார்களே...

"பொம்பளைங்க சமாச்சாரம்" என்று தன் சமையல் எண்ணெயைப் பறைசாற்றிய விளம்பரம் கண்டனத்துக்குள்ளானதால், இன்றைய விளம்பரத்தில் சமையல் எண்ணெயுடன் கணவனே விருந்து சமைத்து அசத்துகிறான் அவர்கள் திருமண நாளில்!

பலே....பலே....

ஆனால் என்றோ ஆண்டுக்கு ஒருமுறை வரும் திருமண நாளன்றோ, பிறந்த நாளன்றோ சமையலறையில் புகுந்து அசத்தும் கணவன் நமக்குப் போதாது.

வேலை செய்யும் பெண்ணின் வீட்டு வேலைகளை தினசரி எந்த பந்தா, அலட்டலும் இல்லாமல் பகிர்ந்து கொள்ளும் ஆண் மகன் தான் நம்பிக்கையளிப்பவனாக இருக்கிறான்.

வயிறும் பிள்ளையுமாக இருக்கும் மனைவிக்கு டீ போட்டுத் தரும் கணவனும் திடீர் விருந்தினருக்கு ஜூஸ் செய்து தரும் கணவனும், மனைவி காலையில் குடிக்க இருக்கும் டீயை வாங்கிக் குடிக்கும் கணவன், மாலையில் களைத்த மனைவிக்கு டீ போட்டுக் கொண்டு வந்து தருவதும் உண்மையிலேயே மனதுக்கு இதமளிக்கிறது. ஒவ்வொரு பெண்ணும் ஏங்குவது அந்த மாதிரியான ஒரு கணவனுக்காகத்தான்.

ஆனால் இப்பேற்பட்ட இதமான ஆதர்ஷ கணவர்கள் அடிக்கடி வருவதில்லை (விளம்பரங்களில் கூட..!)

மலை போல குவிந்த பாத்திரங்களை துலக்கும் பெண்ணுக்கு உதவும் கணவனோ, காலர் அழுக் கைத்தானே தேய்த்தெடுக் கும் ஆண்மகனோ, அழும் பாப்பாவுக்கு பேபி ஃபுட்டை ஊட்டி விடும் அப்பாவோ, நாம் விளம்பரங்களில் சந்திக்கவே சந்திக்காத குணச்சித்திரங்கள்.

ஏன்?

ஆணுக்குச் சமமாக பெண் வெளியே வேலை செய்து சம்பாதித்து குடும்பச் சுமையை சுமக்க உதவும் இக்கால கட்டத்தில் கூட ஏன் விளம்பரக் கதாநாயகன் வீட்டு வேலைகளில் உதவத் தயங்குகிறான்?

உண்மை நிலைதான் என்ன? எல்லா புதிய தலை முறை ஆண்களும் இப்படியேவா இருக்கிறார்கள்?

அதுதான் இல்லை...

அவர்கள் நிறையவே மாறி விட்டார்கள்.

காபி கூடக் கலக்கத் தெரியாத நேற்றைய அப்பாக்களின் மகன்கள் இன்று தன் புதுக் குடித்தனத்தில் மனைவிக்கு அனுசரணையாக பீன்ஸ் நறுக்கித் தருகிறான், பாப்பா அழும் போது கவனமாக ஈரமான ஜட்டியை



மாற்றி விடுகிறான், ஸ்கூலுக்குக் கிளம்பும் அவசர நேரத்தில் மகளுக்கு ஷூலேஸ் கட்டி விடுகிறான்... மனைவி மிக்சியில் சட்னி அரைக்கும் போது இவன் துணிகளை (வெள்ளை, கலர் வாரியாக ரகம் பிரித்து) வாஷிங் மிஷினிலும் போடுகிறான்.

இப்படிப்பட்ட நிஜமான ஹீரோக்கள்தான் டி.வி.யிலும், சினிமாவிலும் பெண்டாட்டிக்கு பயந்த உதவாக்கரைகளாக கேலிச் சித்திரமாக்கப்படுகிறார்கள்.

உண்மையில் மனைவிக்கு வீட்டு வேலையில் கைகொடுக்கும் ஆண் மிகவும் பக்குவப்பட்டவனாக இருக்கிறான். பாங்க், ஆபீஸ் போன்றவைகளில் நல்ல பதவிகளில் இருக்கிறார்கள். பெண்ணை விடத் தாங்கள் உயர்ந்த வர்க்கத்தில் பிறந்த அதிசய ஜீவிகள் என்று எண்ணாமல், மூன்றாவது மனிதர்களின்- ஏன், பல சமயங்களில், குறுகிய மனப்பான்மையுடைய உடன் பிறந்தோர், பெற்றோர்களின்-ஏச்சுக்கும் பேச்சுக்கும் மதிப்புத் தராதவர்களாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட காலத்தில், எதற்காக வாஷிங்மிஷினையும், க்ளீனிங் பவுடரையும், சோப்புக் கட்டியையும், புரதச் சத்து உணவையும் பெண்களையே குறிவைத்து விளம்பரப் படுத்தவேண்டும்?

இன்றைய டி.வி.யுகத்தில் விளம்பரங்கள் மக்களிடையே பெற்றிருக்கும் செல்வாக்கு. 'சக்தி' (SUGGESTIVE POWER) நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். மூன்று நாட்கள் தொடர்ச்சியாக வந்த சோப் விளம்பரம் நம் மனதில் பதியும். ஷாப்பிங் போனவுடன் நம் கைகள் தானாகவே விளம்பரப்படுத்தப்பட்ட சோப்பை எடுக்கும்.

தினசரி கண்ணில் படும் ஆரோக்கிய பானத்தை குழந்தைகள் கூட விரும்பிக் கேட்டு நச்சரிக்க ஆரம்பிப்பார்கள்.

இப்பேற்பட்ட சக்தி வாய்ந்த மீடியம் 'ஆண் பெண் சரிநிகர் சமம்!. 'நம் குடும்பம்- நம் வேலை- இதிலென்ன ஏற்றத் தாழ்வு?' என்ற ரீதியில் விளம்பரங்களை அமைத்தால், மனைவியின் உற்ற தோழனாக கணவன் மாற உதவ முடியும்.

இக்கருத்தை மனதில் கொண்டு அமைக்கப்படும் விளம்பரங்கள் ஒரு மாபெரும் சமுதாய மாற்றத்தையே மிக எளிதாக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல செய்து முடிக்கலாம்.

'இரட்டைச் சுமையை சுமக்கும் பொதிமாடுகளாக இருக்கிறோம்' என்று நொந்து கொள்ளும் பெண்களை நாம் பார்ப்பதே அபூர்வமாகிவிடும்.

யோசியுங்களேன்... விளம்பரதாரர்களே!

— உஷா ஸ்ரீகுமார்


இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள்: உணவே மருந்து கடைசி தேதி :15.6.98

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்



ஒத்திவைப்பு பிரேரணை

மூட்டுவலி...
முதுகுவலி...
ரெட்டை உடம்புடன்
உலவுவதாய் மனசு கனம்
நிழலாய்த் தலைவலி
நிமிர்ந்தால் குனிந்தால்
மூச்சுப் பிடிப்பு
இன்ன பிறவற்றுடன்
அலுவல்... சமையல்...
மையல்... சகலமும்
'அலோபதி எடுத்துக்கோ...'
'நாட்டு மருந்துதான்
நல்லது...'
'பாட்டி வைத்தியம்
பாரேன்...'
'சீக்கிரம் டாக்டர்ட்ட போ...'
எட்டுத் திசையும்
அறிவுரை சொல்ல...
இன்று போகலாமா...?
நாளை போகலாம்.

ஆறு மாசமாய் வலியுடன்
தாம்பத்யம்.

மழைக் காலம்
குழந்தைக்குக் காய்ச்சல் –
கோடை வெயிலாய் எகிற....
ரெண்டு நாளாய்ப்
பரிதவிப்பு. பரபரப்பு
மனச் சோர்வு
சோறு இறங்கவில்லை
கண்ணும் உறங்கவில்லை.
போனை எடு....
டாக்டரைப் பிடி...
லீவு போடு...
ஆட்டோவில் பற...
ஊசி போட்டு
மருந்து வாங்கி...
ஆயிரம் நாமஜெபம்
சொல்லி...
குலதெய்வத்துக்கு



பசங்க பரீட்சை.
விருந்தாளி வருகை
நேரமில்லை
ப்ச்... அனாவசியச்
செலவு
நாட்கள்
கற்பூரமாயின.

வேண்டி...
மஞ்சள் துணி முடிந்து...
இமையோடு இமை
தட்டாமல்
சிசுருஷை.
ஹப்பாடா.
சகலமும் முடிந்தது.
ஜுரமும் பறந்தது.

நீட்டி நிமிர்கையில் –
மூட்டு வலி, முதுகு வலி
என்னைப் பிறாண்ட....
ப்ச்... இருக்கட்டும் போ...
பார்த்துக்கலாம்.

– ஆண்டாள்
பிரியதர்ஷினி

வீம்பு ஒன்று

சப்போட்டா பழங்களுடன், நகர்ந்து கொண்டிருந்த பஸ்ஸில் ஓடி வந்து ஏறிக் கொண்டேன். நவம்பரின் ஜிலுஜிலுத்த குளிரால் சிலிர்த்துப் போய், திரையை இறக்கி விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த பிரேமா, நகர்ந்து நான் உட்கார வசதியாக, ஒதுங்கிக் கொண்டவள் பழங்களை வாங்கிக் கூடையில் போட்டாள்.

''அம்மாவுக்கு சப்போட்டான்னா, ரொம்பப் பிரியம்'' என்றேன்.

''என்ன பிரியமோ?'' குன் கொட்டினாள் பிரேமா.



''ஏன் பிரேமா?''

''அம்மாவுக்கு இந்தப் பழம் பிடிக்குங்கிறீங்க. அம்மாவுக்கு குளிரும்னு டெல்லியிலே இருந்து ஷால் வாங்கிட்டு வரச் சொல்றீங்க. எங்கம்மா, எங்களுக்காக என்னெல்லாம் செய்தாங்கன்னு உருகிப் போறீங்க. ஆனா, அவுங்க உங்களை மதிச்சு, ஒரு மாசம், ரெண்டு மாசம்னு கூட வந்து தங்கறாங்களா? உங்கண்ணன் மேலேதான் பாசமெல்லாம்'' பொருமி தீர்த்தாள் பிரேமா.

அம்மா எங்களுடன் வந்து தங்குவதில்லை என்ற குறை எனக்கே உண்டு. நாங்கள் சென்னையில். அம்மா அண்ணனுடன் திண்டுக்கல்லில். ராத்திரி வண்டி ஏறினால், விடிகாலை, சென்னையில் இறங்கி விடக் கூடிய, சௌகரியமான பிரயாணம்தான். ஆனால் அம்மா ஏனோ வருவதில்லை. வந்தாலும் ஓரிரண்டு நாட்களுக்கு மேல் தங்குவதில்லை.

டி.வி.யுடன், ஞாயிற்றுக்கிழமை பொழுதை கொண்டாடிக் கொண்டிருந்த, அண்ணன் குடும்பம் மகிழ்ச்சியுடன் எங்களை வரவேற்றது.

''குழந்தைகளை கூட்டி வந்திருக்கலாமே'' என்று அம்மா அங்கலாய்த்தாள்.

''ரெண்டு நாள் லீவு அத்தே. கோயம்புத்தூரில் ஒரு கல்யாணத்துக்கு வந்துட்டு, அப்படியே, உங்களையெல்லாம் பார்த்துட்டு போலாம்னு வந்தோம். இதுக்குப் போய் அவுங்களை இழுத்தடிக்க வேணாம்னு, அம்மா வீட்டிலேயே விட்டுட்டு வந்துட்டேன். இதோ சாயந்திரம் கிளம்பணும். லீவுக்குக் கூட்டிட்டு வரேன்'' என்றாள் பிரேமா.

''ஏம்மா, எங்களோட, ஊருக்கு வாயேன். நீயும் அவுங்களை, பார்த்தமாதிரியிருக்கும். குழந்தைகளுக்கும் சந்தோஷமாயிருக்கும். கிட்டத்தட்ட ஒரு வருஷமாகப் போகுதே'' என்றேன் தவிப்பாக.

''எங்கேப்பா, அப்படி நினைச்சா கிளம்பற மாதிரியா

தனலக்ஷ்மி கருப்பையா

இருக்கு'' என்றவள், ''முதலில் சாப்பிடுங்க அப்புறம் பேசலாம்'' என்றவாறு அடுப்படிக்குள் நுழைந்தாள்.


"இட்லி ஊத்த வேண்டாம் கமலா. சங்கருக்கு தோசைதான் பிடிக்கும். நான் வார்க்கிறேன். நீ சட்னி அரை'' என்று உத்தரவிட்டான்.

அடுத்த அரைமணியில் சாப்பாட்டுக் கடை முடிந்து, கிணற்றடிப் பக்கம் போன நான் திடுக்கிட்டேன். அம்பாரம் பாத்திரங்களைக் குவித்துக் கொண்டு, அம்மா, தேய்த்து அலம்பிக் கொண்டிருந்தாள். என் கண்கள் கலங்கின. எனக்கு நினைவு தெரிந்த நாளாய் அம்மா, ஓய்ந்து உட்கார்ந்து பார்த்ததில்லை. ஏதாவது ஒரு காரியத்துக்கு, ஏதாவது ஒரு காரணத்துக்கு ஓடிக் கொண்டே இருப்பாள். அது அன்று. இன்று, இத்தனை நாளைக்குப் பிறகும் அது ஓயவில்லையா? சகல வசதிகளும் நிறைந்தவர்களாய், எங்களை ஆளாக்கியும், அந்த வசதிகளின் அருமை அவளுக்குக் கிட்டவில்லையா? வீடு நிறைந்த குழாய்களும், ஸிங்க்கும், வாஷ்பேசினும் நிறைந்த வீட்டில், நாள் முழுதும் என் மனைவியை உட் கார வைத்து வேலை செய்யும் வேலைக்காரியின் நினைவு வந்தது. அந்த ராஜ கம்பீரம் என் அன்னைக்கு இல்லையா?

''பிரேமா வந்து அம்மாவுக்கு உதவி செய்'' என்று என் ஆணைக்கு கட்டுப்பட்டு, பழக்கமில்லாத வேலையை செய்யப் போன, பிரேமாவை ஒதுக்கி விட்டாள் அம்மா.

''புடைவை பூரா பாழாப் போவும், நீ உன் வேலையைக் கவனி'' அம்மாவின் அதட்டலில், தானாகவே எழுந்து விட்டாள்.

''ஏம்மா, ஒரு வேலைக் காரி வச்சக்கலாமில்





நிமிடத்தில் தட்டை தட்டலாம்!

25 அல்லது 30 தட்டைக்கான உருண்டைகள் எடுத்து மணையின் மீது ஒரு எண்ணெய் தடவிய பிளாஸ்டிக் ஷீட் விரித்து அதில் போதிய இடைவெளியில் உருண்டைகள் வைத்து அதே அளவு எண்ணெய் தடவிய மற்றொரு பிளாஸ்டிக் கவரால் மேலே மூடி ஒரு டபராவால் அழுத்த நிமிடத்தில் 25 அல்லது 30 தட்டைகள் ரெடி. கை வலியே இல்லாமல்.

— லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

லையா?

"எதுக்குப்பா? இங்க எந்தக் கூட்டம் தட்டுக் கெட்டுப் போவது. சுத்தி சுத்தி, அஞ்சு பேரு இதை நாம செய்யக் கூடாதா? நீ போய் ரெஸ்ட் எடு. இனி ராத்திரி பூரா, முழிச்சிக்கிட்டுப் போகணும்." அம்மா, கையை ஊன்றி எழுந்தவள், தேய்த்த பாத்திரங்களுடன், தளர்ந்த நடையில் உள்ளே போனாள்.

படுத்துப் புரண்டு கொண்டிருந்த என் மனம் அலை பாய்ந்தது. மார்க்கெட்டுக்குப் போய், காய்கறி வாங்கிக் கொண்டு வந்த அம்மாவை, மறுபடியும் மாவு மில்லுக்கு விரட்டினாள் அண்ணி. "முதலிலேயே கொடுத்தனுப்பியிருந்தால் ஒரே வேலையாப் போயிருக்குமே" என முனகியபடி புறப்பட்டாள் அம்மா. எனக்குப் பாவமாக இருந்தது இரண்டு சிஸேரியன்களுக்குப் பிறகு, அண்ணி, உடல் பெருத்து, வேலை வெட்டி சுறுசுறுப்பாக, செய்ய முடியாதவளாக இருக்கலாம். ஒரு வேலைக்காரி வைத்துக் கொள்ளலாம் இல்லையா? அதுதான் முடியவில்லை. அண்ணனாவது, இப்படி வேலைகளை மாற்றலாம். எவ்வளவு பெரிய ஆபீஸராய் இருந்தால் என்ன? தன் வீட்டு வேலைகளை தான் செய்வது கேவலமா? அம்மாவை இப்படி அலைய வைப்பது மட்டும் கௌரவமான செயலா?

"சங்கர் தூங்கிட்டியா?" என்றவாறு வந்து, அம்மா அருகில் அமர்ந்து கொண்டாள். நான் வாங்கி வந்த சப்போட்டாப் பழத்தைச் சாப்பிட, அவளுக்கு இப்போது தான் நேரம் கிடைத்தது போலும். உரித்து, ஒரு விள்ளலைப் பிட்டு, வாயில் போட்டு ரசனையுடன் சுவைத்தாள்.

"இந்தப் பழத்துக்கே ஒரு தனி ருசி சங்கர். போன தரம் நீ வாங்கிட்டு வந்தப்போ சாப்பிட்டதுதான். மறுபடியும் இப்ப சாப்பிடறேன்" என்று பூரிப்புடன் சிரித்தாள். நகர்ந்து, அம்மாவின் மடியில் தலை வைத்துக் கொண்டேன். சுவாதீனமாக, அவள் கையிலிருந்த பழத்தில் கொஞ்சம் பிட்டு வாயில் போட்டுக் கொண்டேன். என்னைப் பற்றி, குழந்தைகளைப் பற்றி, என் மாமனார் வீட்டைப் பற்றி, ஏதேதோ கேட்டுக் கொண்டிருந்தாள் அம்மா.

"உடம்பை நல்லா பாத்துக்கோ சங்கர். வயசு நாற்பதாகப் போகுது. சாப்பாட்டில் பத்தியமா இரு. டாக்டர்கிட்டே காட்டிக்கோ. எங்க காலம் மாதிரி இல்லையே. என்னன்னமோ சீக்கு வருது. வயசுக்கும் ஆயுசுக்கும் சம்பந்தமே இல்லையேப்பா."

அம்மா கவலையுடன், என் தலையைக் கோதியவாறு பேசினாள். அம்மாவின் மெலிந்த கைகளை பற்றியவாறு,

"எங்கூட வந்து இரேம்மா. இவ்வளவு வேலை உனக்கு அங்க இல்லை. சொந்த வீடு, கார், எல்லா வசதியும் இருக்கு" என்றேன் பரிவுடன்.

"வராம என்னப்பா? இங்க சலிச்சா அங்க. அங்க சலிச்சா இங்கன்னுதானே என் காலம் போகணும். உன் அண்ணிக்கு கூறு இல்லே எதுக்கெடுத்தாலும் நான் சொல்லணும். நான் செய்யணும். ரெண்டு நாளைக்கு கிராமத்துக்கு போயிட்டு வந்தா, நீங்க இல்லாம நான் திண்டாடிப் போயிட்டேன்னு புலம்பித் தீர்த்திடுறா?" அண்ணி மெல்ல எட்டிப் பார்த்தாள்.

"அத்தை! கொஞ்சம் வந்திட்டுப் போறீங்களா?"

"ஏம்மா..."

"இந்த பாயசத்தை மட்டும் வச்சுக் குடுத்திடுங்க. நான் வச்சா, ஒண்ணு கெட்டியாப் போவும், இல்லேன்னா தண்ணியாப் போவும்" நான் குறுக்கிட்டேன்.

"பிரேமாவைக் கூப்பிட்டு வைக்கச் சொல்லுங்களேன் அண்ணி."

"ஐயய்யோ, உங்கண்ணாவுக்கு உங்கம்மா வச்சாத்தான், பாயஸம் சாப்பிட்ட மாதிரி இருக்கும்பார். கொஞ்சம் சிரமம் பாராம, எந்திரிங்க அத்தே. அப்புறமா வந்து அம்மாவும், மகனும் பேசுவீங்களாம்."

அம்மா முக்கி முனகி எழுந்து போனாள். நாற்பது வயதுக்கு எனக்கே தள்ளாமை தலை காட்டும்போது, எழுபது வயதுக்கு அவளுக்கு இந்த வேலை அதிகம்தான். அதன் பிறகும் அண்ணி சும்மா விடவில்லை

"இந்த முறுக்கு ரெண்டு ஈடு பிழிந்து கொடுத்திங்கன்னா, குழந்தைகளுக்கு ஊருக்குக் கொடுத்து விடலாம்" என்ற போது,

"ஆமாமா, நல்லவேளை ஞாபகப் படுத்தினே" என்று அம்மா சாப்பாட்டுக்குப் பிறகு, முறுக்கடுப்பில் உட்கார்ந்து விட்டாள்.

"என்ன அண்ணி? முறுக்குக்கு இப்ப என்ன அவசரம்? அங்க வேணுங்கிறதை வாங்கிக்கிறோம். அம்மாக்கூட சித்த நேரம் பேச விட மாட்டேங்கறீங்களே" என்றேன் எரிச்சலாக.

"பேசுங்க. பேசுங்க. அப்புறம் அத்தையே, நான்தான் மறந்திட்டேன் நீயாவது சொல்லியிருக்கலாமேன்னு சண்டைக்கு வருவாங்க. அதுதான் சொன்னேன்"



அதெப்படி கல்யாண வீட்டு பீன்ஸ்/கொத்தவரங்காய் பருப்புசிலி மெத்தென்று பூவாக, புட்டாக, உதிர், உதிர் ஆக? காதைக் கொடுங்கள்

¼ கி. து. பருப்பு, ¼ கி. க. பருப்பு 50 கிராம் வர மிளகாய், பெருங்காயம் ஒரு விரல் மஞ்சள், தேவையான உப்பு இவற்றுடன் சன்ன ரவையாக மிஷினில் உடைத்து வைத்துக் கொள்ளுங்கள். தேவையான ரவை எடுத்து வெந்நீர் விட்டுப் பிசிறி ஆவியல் இட்டு உதிருங்கள். சன்னமாக நறுக்கிய வேகவிட்ட பீன்ஸ்/கொத்தவரங்காய் சிறிது எண்ணெயில் தாளிதம் செய்து உதிர்த்த பருப்பு, ரவை சேர்த்து கருவேப்பிலை சேருங்கள்.

– லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

என்றாள் மழுப்பலாக.

பிரேமா அர்த்த புஷ்டியுடன் என்னைப் பார்த்தாள். 'இந்த சுகத்தை விட்டுட்டுத்தான், உங்கம்மாவுக்கு நம்மக் கூட வர முடியலே. நல்லதுக்கு ஏது காலம்?' என்ற எண்ணம் அவள் பார்வையில் தெரிந்தது. முறுக்கு சுட்டு, பேக் பண்ணி, எங்கள் லக்கேஜுடன் சேர்த்து விட்டு, வெறும் மோர் சாதம் மட்டும் சாப்பிட்டுவிட்டு, ஃபேனுக்கடியில் வந்து படுத்துக் கொண்டாள் அம்மா.

"என்னைச் சட்டிக்கிட்டே உட்கார்ந்தாலே, தலையை சுத்துது சங்கர். முன்னெல்லாம் தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன்னாலேயே, பலகார வேலை அமர்க்களப்படும். ஒண்ணும் பண்ணாது. இப்ப, இந்த ஆழாக்கு மாவை பிழியறதுக்குள்ள உஷ் அப்பான்னு ஆயிடுது.

"இன்னும் உனக்கு வயசு திரும்புதாம்மா? இனிமே இந்த வேலையெல்லாம் கம்ப்ளீட்டா அண்ணிக்கிட்டே ஒப்படைச்சிட்டு, ரெஸ்ட் எடு போதும் செய்ததெல்லாம்" என்றேன் அனுதாபத்துடன். வாசல் பக்கம் அண்ணி நகர்வது தெரிந்தது.

"என்ன கமலா?" அம்மா இங்கிருந்தே சப்தமிட்டாள்.


"மணி நாலாச்சே. பால் வாங்கலாம்னு..." அண்ணி முடிப்பதற்குள் அம்மா குறுக்கிட்டாள்.

"தினமும் நான்தானே போவேன். இன்னிக்கு என்ன புதுசா நீ புறப்பட்டுட்டே" அம்மா வாரிச் சுருட்டி எழுந்தாள். அண்ணி, என்னை தர்மசங்கடத்துடன் பார்த்தாள். அண்ணிக்கு கேட்காதவாறு அம்மா சொன்னாள்.

"போய்ட்டு தஸ்ஸு புஸ்ஸுன்னு மூச்சு வாங்கிட்டு வந்து சேருவா. கையை வலிக்குது. காலை வலிக்குதுன்னு அனத்துவா. ஒண்ணுக்கும் துப்பில்லே"

எட்டு மணிக்குத்தான் எங்களுக்கு பஸ். ஆறு மணி சுமாருக்கு, அண்ணனின் ஸ்கூட்டரில் அம்மாவை உட்கார்த்தி வைத்துக் கொண்டு அபிராமி அம்மன் கோவிலுக்குப் புறப்பட்டேன். அம்மனை சேவித்து, பிரகாரத்தைச் சுற்றி, நவக்கிரகத்தை வலம் வந்து, நிம்மதியான மனத்துடன் ஸ்தலத்தின் விருட்ச மேடையில் உட்கார்ந்து கொண்டோம். அம்மா, இனம் புரியா ஆனந்தத்துடன் என் கையைப் பற்றியவாறு அமர்ந்திருந்தாள்.

"இனி ஏப்ரல் மாச லீவுக்குத்தான் வருவியா சங்கர்? நீங்கள்ளாம் எங்கூடவே இருக்



உடல்நிலை சரியில்லாத வயோதிக உறவினர்களை பார்க்கச் செல்லும்போது, உங்கள் குழந்தைகளையும் அழைத்துச் செல்லுங்கள். வாழ்க்கையில் இதுவும் ஒரு பகுதி என்பதை இளமையிலேயே அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். அப்போதுதான் தாத்தா, பாட்டிக்கோ, வயதான பின் உங்களுக்கோ உடல்நலம் குன்றும்போது முகம் சுளிக்காமல் பணிவிடை செய்வார்கள்.

- சியாமளா ராஜகோபால்

கணும்போல தோணுதப்பா. சின்னக் குழந்தைகளா என்னையே சுத்திக்கிட்டிருந்தப்போ, குடும்பப் பொறுப்புகள்ள, கவலைகள்ள நான் அலைஞ்சுக்கிட்டிருந்தேன். இப்ப நான் ஓஞ்சு உட்கார்ந்து, உங்களைத் தேடறப்போ, நீங்க வேலை வேலைன்னு, மூலைக் கொருத்தரா பறந்துக்கிட்டிருக்கீங்க." அம்மாவின் தவிப்பு புரிந்தது.

"அம்மா! எங்கூட வந்து கொஞ்ச நாள் இரும்மா. பிரேமா, அதை ஒரு குறையா நினைக்கிறா அண்ணன் மேலேதான் உனக்குப் பிரியமாம். அதனாலேதான் உனக்கு வர மனசில்லையாம்." அம்மா வாய் விட்டு சிரித்தாள்.


"வித்தியாசம் பார்க்காத மனசு பெத்த தாய் ஒருத்திக்குத்தான் உண்டு சங்கர் என்னோட பாசம், என் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமமாத்தான் இருக்கும். ஏன்? பிரேமா, கமலாவைக்கூட என் பொண்ணுங்களாத்தான் நேசிக்கிறேன். ஏன்னா உங்க சந்தோஷம், அவுங்கக்கிட்டத்தான் இருக்கு! இருக்கிற கொஞ்ச காலமும் யாருக்கும் பாரமில்லாமே போகணும்னு ஆசைப் படறேன் சங்கர். உங்க வீட்டில் வந்து, கையைக் கட்டிக்கிட்டு உக்காந்து இருக்கிறது எனக்குப் பிடிக்கலே. உனக்குத்தான் தெரியுமே! என்னால் ஒரு நிமிஷம்கூட சும்மா இருக்கப் பிடிக்காது. பாவம் கமலா! நான் இல்லேன்னா திண்டாடிப் போவா. மனசைப் போட்டு உழப்பிக்காதே. நீ வந்து, இப்படி என்னைப் பார்த்துட்டுப் போறதே போதும்" வீட்டுக்குப் புறப்பட்டோம்.

வாசலில் ஆட்டோ நின்றிருந்தது. பிரேமாவும் அம்மாவும் ஏதோ பேசிக் கொண்டிருக்க, அடுப்படியுள் இருந்த அண்ணியிடம் சென்றேன். மெல்லிய குரலில், "அண்ணி! நான் சொல்றதை தப்பா எடுத்துக்காதீங்க. உங்களால் முடியாது. ஆனா ஒரு வேலைக்காரி வச்சாவது அம்மாவோட பாரத்தைக் குறைங்க. அவுங்க எங்களுக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டவங்க. இனி இருக்கிற கொஞ்ச காலமும், அவுங்க சுகமா இருக்கணும்னு ஆசைப் படுறேன். என்னை புரிஞ்சுக்குவீங்களா அண்ணி! எங்கக் கூட இருக்க அவுங்க விரும்பலே. உங்கக் கூடாவது, அவுங்க நிம்மதியா இருக்கணும்னு ஆசைப்படறேன்" என் குரலில் உருக்கம், அண்ணியைப் பாதித்திருக்க வேண்டும்.

கண்களில், பரிவு பிரவாகமெடுக்க என்னைப் பார்த்தாள். மெள்ள சிரித்தவள், "அம்மாவுக்கு நான் வேலை ஜாஸ்தி வைக்கிறதா அபிப்பிராயப்படுறீங்க. உண்மை தான். ஆனா, அந்த வேலைகள்தான் அவுங்களை இயக்கம் நிறைந்த ஒரு மனுஷியா உலவ விட்டிருக்குன்னு நம்புவீங்களா? எந்த வயசானவுங்களுமே, தான் மத்தவுங்களுக்கு பாரமா இருக்கோம்கிற நிலையை விரும்பறதில்லே. நல்ல ஆகாரத்தைவிட, நல்ல ஓய்வைவிட, தான் ஒருத்தருக்கு உபகாரமா இருக்கோம்கிற நினைவுதான் அவுங்களுக்கு டானிக். 'என்னால முடியாது. நீங்கதான் செய்யணும். உங்களால்தான் முடியும்'னு நான் சொல்றப்போ, அத்தைக்கு எங்களை சார்ந்து எங்களுக்கு சுமையா இருக்கிற நினைப்பு மறந்துடுது. தன்னைச் சுற்றி பொறுப்புக்கள் கவிழும்போது, இந்த முதுமை தண்டனையா மாறுகிற நிர்ப்பந்தம் தவிர்க்கப்படுது. அதனாலேதான், நான் வேணும்னே அவுங்களுக்கு சில வேலைகளைக் கொடுக்கிறேன். அதே சமயம், அது அவுங்களால் முடியக் கூடியதாங்கிறதையும் ஜாக்கிரதையாப் பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்பட வேண்டாம்'' என்றாள் மென்மையாக.

அண்ணியை, கண்களில் நீர் மல்க கரம் கூப்பி வணங்கினேன். அது விடை பெறுவதற்கு மட்டுமல்ல. என் தாயைச் சுமந்திருக்கும் அந்தத் தாய்மை உள்ளத்திற்கு நன்றி செலுத்தும் விதத்திலும்கூட.

இனிய பயணத்திற்கு இத்தனை இடங்களா இந்தியாவில்?



(சென்ற இதழ் தொடர்ச்சி...)

அந்தமான் நிக்கோபார் தீவுகள்

ஒரு மாறுதல் சுற்றுப் பயணமாக இங்கே சென்று வரலாம். ஆனால் போய் வருவது தான் கஷ்டமானது. அந்தமான் தலைநகரான போர்ட்பிளேயருக்கு எந்தெந்த தேதிகளில் கப்பல் போகிறது என்பதனைச் சென்னையில் உள்ள கப்பல் அலுவலகத்தில் விசாரிக்க வேண்டும். சில குறிப்பிட்ட தேதிகளில் மட்டுமே போவதால் டிக்கெட் கிடைப்பது கஷ்டம். திரும்ப வருவதற்கும் இங்கேயே டிக்கெட் வாங்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் அங்கிருந்து திரும்ப இயலாது. அங்கே டிக்கெட்டே கிடைக்காது. அதிலும் குறிப்பிட்ட தேதிகளில் போர்ட் பிளேயருக்கு கப்பல் வராவிட்டால், அடுத்த கப்பல் வரும் வரை (10 நாட்கள் கூட ஆகலாம்) போர்ட் பிளேயரிலேயே தங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதைத் தாங்கிக் கொள்ள வேண்டும். விமானம் மூலம் சென்னையிலிருந்தும் போய் வரலாம். சென்னையை விட கல்கத்தாவிலிருந்து நிறைய விமான சர்வீஸ்கள் உண்டு. ஆன நடுத்தர மக்களுக்குக் கட்டுப்படியாகாது.

போர்ட் பிளேயர் சென்னையிலிருந்து 1,191 கி.மீ. அங்கு கிட்டத்தட்ட 300 குட்டித் தீவுகள் உள்ளன. மனித நடமாட்டமே இல்லாத தீவுகள் தான் நிறைய உள்ளன. வில் அம்புகளோடு நடமாடும் ஆதிவாசிகள் உள்ள இடங்களும் உண்டு.



போர்ட் பிளேயரில் அவரவர் வசதிக்கேற்ப தங்கவும் சுற்றிப் பார்க்கவும் ஏற்பாடுகள் செய்து தர சில ஏஜென்ஸிகள் உள்ளன. இருந்தாலும் முன்கூட்டியே கீழ்க்கண்ட முகவரியில் சில தகவல்களைப் பெற்றுக் கொண்டு போதல் நலம்.

1. Public Relation Officer,
Andaman & Nicobar Administration
Port Blair.

2. Deputy Director,
Information, Publicity & Travels
Secretariat,
Port Blair.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் 1851 முதல் கைதிகளை இங்குள்ள புகழ்பெற்ற செல்லுலர் ஜெயிலுக்கு அனுப்பி வந்தனர். (அதற்கு முன்னால் ஜாவாவில் உள்ள சுமத்ரா தீவுக்கு அனுப்பி வந்தனர்) 1910 முதல் அரசியல் கைதிகளை மட்டும் அனுப்ப ஆரம்பித்தனர்.

சுந்தரம்

அந்த செல்லுலர் ஜெயில் அவசியம் காண வேண்டிய ஒன்றாகும்.

அந்தமான் சுற்றுப் பயணம் உண்மையிலேயே ஒரு அட்வென்சர் டூர்தான்.

லட்சத் தீவுகள்

கேரள மாநிலத்தில் கொச்சிக்கு மேற்கே சில குட்டித் தீவுகள் உள்ளன. அவைகள்தான் லட்சத் தீவுகள் என்றழைக்கப்படுகின்றன.

லட்சத் தீவுகளுக்கு யாரும் தனியாகப் போய்வர இயலாது. குருப்பாகச் சென்றால் மட்டுமே போய் சுற்றிப் பார்க்க அனுமதி கிடைக்கும்.



நடுத்தர மக்கள் போவது சிறிது கஷ்டம் தான். ஏனெனில் இது மிகவும் காஸ்ட்லியான டூர். கொச்சியிலிருந்து விமானம் அல்லது கப்பல் மூலம் லட்சத் தீவு தலைநகரான கவரட்டி செல்ல வேண்டும். கவரட்டியில் கடற்கரை நகரான பங்காரம் காஸ்ட்லி. போய்ச் சுற்றிக் காண்பித்து விட்டு கப்பலிலேயே தங்க வைத்து விடுவார்கள். கவரொட்டியிலோ, பங்காரத்திலோ தங்கப் போதுமான வசதிகள் இல்லை.

இதுவும் ஒருவகை அட்வென்சர் டூர்தான். வசதி உள்ளவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி குருப்பாகச் செல்லலாம்.

1. Secretary to the Administrator,
Laksha Sweep
Harbour Road
Cochin -3

இந்தியாவுக்கு அருகில் உள்ள நாடுகளான பூட்டானுக்கும், நேப்பாளத்திற்கும் கூட சுற்றுலா செல்லலாம்.

பூட்டான்

பூட்டான் அன்னிய நாடானாலும் இந்தியர் என்றால் விசா தேவையில்லை. தனிப்பட்டவர்கள் செல்ல இயலாது. குருப்பாக டூரிஸ்டுகள் செல்லலாம். அதுவும் Secretary, Embassy of Bhutan, Chanakyapuri - New Delhi எழுதி அனுமதி பெற்றுப் போதல் நலம். டார்ஜிலிங் போகும் குருப் டூரிஸ்டுகள் அப்படியே பக்கத்தில் உள்ள பூட்டானும் சென்று வரலாம். திம்பு தலைநகர். இந்திய எல்லையைத் தாண்டியவுடன் கடுமையான மலைப் பிரதேசப் பயணம். திம்பூர் போய் இறங்கியவுடன் சுற்றிப் பார்க்க அங்கே ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம். மலை சூழ்ந்த பிரதேசம். திபெத்தியக் கலாசாரம். சுற்றுலாவில் ஆர்வம் உள்ளவர்கள் சென்று வரலாம்.

நேப்பாளம்

நீங்கள் காசிக்குச் சென்றால் அப்படியே நேப்பாளமும் சென்று வந்து விடலாம். அல்லது நேப்பாளம்



மட்டும் தனியாகவும் டூர் செல்லலாம். பார்க்க நிறைய இடங்கள் உள்ளன. எப்படிப் போனாலும் இங்கிருந்து போகும் போது காசி வழியாகத்தான் போயாக வேண்டும்.

டெல்லியிலிருந்து வந்தால் அயோத்யா, கோரக்பூர் சனோலி வழியாக நேப்பாளத்திற்குள் செல்லலாம். கல்கத்தா, டார்ஜிலிங் பார்த்து விட்டு அந்த வழியாக வந்தால் சிலிகுரி வழியாகவும் நேப்பாளம் செல்லலாம்.

நீங்கள் காசி வழியாகச் சென்றால் சாரநாத், கயா, புத்தகயா வழியாகவும் இந்திய – நேப்பாள எல்லையை அடையலாம். ஆனால் கோராக்பூர், சனோலி வழியாக செல்வதுதான் நல்லது. விசா தேவையில்லை. இந்தியர் எனற சான்றிதழ் வேண்டும். எல்லைப் பகுதியில் சில செக்கிங் உண்டு. அவற்றை முடித்துக் கொண்டு 12 மணி நேரப் பயணம். காட்மாண்டு வந்தடையலாம். தலைநகரம். நேப்பாள மன்னர் இருக்குமிடம்.

இங்கு ஓடும் பகினாதா நதிக்கரையில் உள்ளது பசுபதிநாதர் கோவில். பசுபதிநாதர், தாமரை இலையில் பள்ளிகொண்டுள்ள விஷ்ணுகோவில் தரிசனம் செய்யலாம். 'நேப்பாளத்தின் வாழும் குழந்தை' தெய்வத்தைக் காணலாம். வெளிநாட்டுச் சாமான்கள் நிறைய விற்பனையாகின்றன. திரும்பும் போது வரிகட்ட முடிந்தோர் வாங்கலாம்.

காட்மாண்டுவிலிருந்து 385 கி.மீ. கிழக்கு நோக்கிப் பயணம் செய்தால் ஜனக்புரியை அடையலாம். ராமர் – சீதை திருமணம் நடந்த இடம் உள்ளது. பார்க்க வேண்டிய இடம். ஜனக மகராஜா அரசாட்சி செய்த இடம்.

காட்மாண்டிவிருந்து திரும்பும் போது பைரவா என்னும் இடத்திற்கருகே ஒரு பாதை பிரியும். சில கி. மீட்டர்கள் பயணம் செய்தால் லும்பினியை அடையலாம். புத்தர் பிறந்த இடம். அவசியம் போய்ப் பாருங்கள். நிறையப் பேருக்கு இது தெரிய வாய்ப்பில்லை.

இந்தக் காட்மாண்டு பயணம் முழுவதும் மலைப்பாதைதான். எங்கு திரும்பினாலும் மலைகள்தான். உலகில் உள்ள மலைச் சிகரங்களில் 25000 அடிக்கு மேல் உள்ள ஆறு மலைச் சிகரங்கள் நேப்பாளத்தில்தான் உள்ளன. அதில் எவரெஸ்டும் அடங்கும்.

காட்மாண்டுவில் இருந்து 200 கி.மீ. மேற்குத் திசையில் பயணம் செய்தால் போக்ராவை வந்தடையலாம். இங்குள்ள பேவா ஏரியும் அதில் பிரதிபலிக்கும் கஞ்சன் ஜங்கா மலைச் சிகரமும் கண்கொள்ளாக் காட்சியாகும். போக்ரா மிக அழகிய இடம். நிறைய பேருக்கு இந்த இடம் தெரியாததால் காட்மாண்டு போய்விட்டு அப்படியே திரும்பி விடுகின்றனர். இயற்கை எழில் கொஞ்சும் இடம் போக்ரா.

போக்ரா முக்திநாத் யாத்திரைக்கு முதல் இடம் ஆகும். சாலக்ராம் – முக்திநாத் யாத்திரை செல்பவர்கள் இங்கிருந்துதான் புறப்பட வேண்டும்.

108 வைஷ்ணவத் திருத்தலங்களுள் 106-வது மற்றும் கடைசி திவ்ய ஷேத்திரம் சாலக்ராம் – முக்திநாத். அதாவது 107 திருப்பாற்கடல், 108 திருப்பரமபதம் இவையிரண்டும் மானிடர்களாகிய நாம் காண இயலாதவை. ஆகவேதான் சாலக்ராம் – முக்திநாத் 106-வது திவ்ய க்ஷேத்திரம் என்றாலும் கடைசி திவ்ய க்ஷேத்திரமாகக் கருதப்படுகிறது.

முதல் திவ்ய க்ஷேத்திரமான ஸ்ரீரங்கத்துக்கு நம்மால் செல்ல முடியும். கடைசி திவ்ய க்ஷேத்திரமான சாலக்ராம் – முக்திநாத்துக்கு எல்லோராலும் செல்ல முடியாது. வாய்ப்புள்ளவர்கள் மட்டுமே செல்ல முடியும்.

காட்மாண்டுவிலிருந்து போக்ரா பஸ் பயணம். பின்பு போக்ராவிலிருந்து ஜமோம் என்ற இடத்திற்கு சார்ட்டர்டு விமானப் பயணம். போக்ராவிலிருந்து ஜீமோம் நடைப் பயணம் அல்லது போனிக் குதிரையிலும் செல்லலாம். ஆனால் அடர்த்தியான மலைப் பிரதேசத்தில் ஒற்றையடிப் பாதையில் உள்ளூர் வாசிகளைத் தவிர நம்மால் போக இயலாது. ஆகவேதான் விமானப் பயணம். 16,000 அடி உயரத்தில் கபிகம்பளி ஆற்றின் வழிப்பாதையிலேயே அன்னபூர்ணா மலைச் சிகரத்திற்கும் தவளகிரி மலைச் சிகரத்திற்கும் இடையில் விமானம் பறந்து ஜமோசம் அடையும். அங்கிருந்து போனிக் குதிரையில் 30 கி.மீ. பயணம். முக்திநாத் வந்தடைய இரண்டு நாட்கள்



ஒரு திருமணப் பத்திரிகை வந்தது. மண்டையைப் போட்டு உடைத்தும் யார் வீட்டுக் கல்யாணம் என்பதே புரியவில்லை. அனுப்புபவர்கள் ஏதாவது ஒரு இடத்தில் இன்னார் அனுப்பியது என்றிருந்தால் புரிந்து கொள்ள முடியும். பொண்ணுக்கு பெரியப்பா பையனின் அத்திம்பேர் எனக் குறிப்பிட்டு எழுதி அனுப்பலாமே!

– என். சித்ரா

உங்களின் கனவு இல்லத்திற்கு

Booking Open

METTUPALAYAM ROAD

Sreevatsa Gardens
COIMBATORE

எழில்மிகு இல்லங்களை உருவாக்கித் தரும் ஸ்ரீவத்ஸா, கோவையில் உங்களுக்காகவே அளிக்கிறது இரண்டு சாய்ஸ் – ஸ்ரீவத்ஸா கார்டன்ஸ் மற்றும் ஸ்ரீவத்ஸா ஹில் வியூ. இங்கு காண்பீர் உங்கள் தேவைக்கேற்ப



Duplex House



Apartments

ஸ்ரீவத்ஸா கார்டன்ஸ்

- ஊட்டி செல்லும் வழியில் கோவை ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில்.
- கிளப்ஹவுஸ், நீச்சல் குளம், சூப்பர் மார்கெட், உடற் பயிற்சி மையம், 24 மணி நேர பாதுகாப்பு.
- 24 ஏக்கர்களில் வில்லா, டுப்ளக்ஸ் வீடுகள் மற்றும் அப்பார்ட்மெண்ட்ஸ்.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் லிட்.

கோயம்புத்தூர்: 8/2, மேட்டுப் பாளையம் ரோடு, கோயம்புத்தூர், 641 043. போன்: 91-0422-437422, 432574, 432184, 441481, ஃபேக்ஸ்: 91-0422-430899, தந்தி: SRIVATSACO
Email: <Sreevatsa.cbe@smy.sprintrpg.ems.vsnl.net.in> Web site: http://www.sreevatsa.com


ஸ்ரீவத்ஸா அளிக்கும் இரண்டு வழிகள்

KOVAIPUDUR


Booking Open

Sreevatsa Hill View
COIMBATORE

வீடுகளை உங்களின் வசதிக்கேற்ப படைப்புகளில். ஆடம்பரத்தை விரும்புவோர்க்கு ஸ்ரீவத்ஸா கார்டன்ஸ். குறைந்த விலையில் நிறைந்த வசதிகளை நாடுவோர்க்கு ஸ்ரீவத்ஸா ஹில் வியூ.



Independent Villas



Row Houses

ஸ்ரீவத்ஸா ஹில் வியூ

- பாலக்காடு செல்லும் வழியில் கோவை ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில்.
- தனிப்பட்ட வீடுகள், வரிசை வீடுகள் மற்றும் அப்பார்ட்மெண்ட்ஸ், 750 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை.
- கோவை ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மீ.ரும் *NH*47 னில் இருந்து 0.75 கி.மீ. தூரம் மட்டுமே.

Architects: **SANKAR & ASSOCIATES**, Coimbatore

Anugrah 2541 / 98A

சென்னை: 7, காமராஜ் பார்க் தெரு, சென்னை 600 013, போன்: 91-44-5953149, 5960270, 5957953.
ஃபேக்ஸ்: 91-44-5950055, 5220192, **மும்பை:** திரு. ஜி.ஜி. பரதன், போன்: 5285716 (அலுவலகம்), ஃபேக்ஸ்: 022-5425356
ஐக்கிய அரபு குடியரசு: திரு. ஹம்சாபிவி, பிரிட்ஜ்வே ரியல் எஸ்டேட், போன்: 04-220555, 04-258000, ஃபேக்ஸ்: 04-270074



வெள்ளை ரவையில் உப்புமா செய்யும்போது, ரவையை வறுத்துக் கொண்டு, புளித் தண்ணீர் அல்லது எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துக் கிளறலாம். கொஞ்சம் பெருங்காயமும் சேர்க்கலாம். வித்தியாசமான சுவையுடன் இருப்பதால் வெள்ளை ரவை உப்புமா பிடிக்காதவர்கள் கூட இதை விரும்பிச் சாப்பிடுவார்கள்!

– சுசீலா பொன்னுசாமி

ஆகும். கடுமையான பயணம். காக்பேனி அல்லது ஜர்காட் வழியாகச் செல்லலாம். திரும்பும்போது இறக்கம். ஆதலால் ஒரே நாளில் சுமோசம் திரும்பி விடலாம்.

முக்திநாத் உயரம் 10,500 அடி. கடுமையான குளிர் இருக்கும். இங்குள்ள கண்டகி நதியில் புனித நீராடலாம். முக்திநாத்திலிருந்து ஒரு கி.மீ. தள்ளிச் சென்றால் கண்டகி ஆற்றில் 'சாலக்ராம்' என்று சொல்லப்படுகிற கிடைத்தற்கரிய பூஜைக்குரிய கற்கள் சிராவண, பத்ர பாத மாதங்களில் கிடைக்கும்.

இந்தக் கற்களை உடைத்துப் பார்த்தால் ஒரு பக்கம் சங்கு வடிவமும் ஒரு பக்கம் சக்கர வடிவமும் இருக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்தப் பூஜைக்குரிய கற்களை வீட்டிற்குக் கொண்டு வந்து தினசரி நியமப்படி ஐந்து கால பூஜை செய்தால் மிகவும் நல்லது. ஆனால் அது இயலாததால் இதனைக் கொண்டு வரும் அன்பர்கள் பெருமான் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்து விடுவார்கள்.

முக்திநாத் கோவிலில் லட்சுமிநாராயணன் நடுவில் வீற்றிருக்க இடப்புறம் சரஸ்வதியும் வலப்புறம் லட்சுமியும் உள்ளனர். இது காணக் கிடைக்காத அற்புதமான தரிசனம்.

போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்தக் காலத்திலேயே கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ராமானுஜர் இங்கு வந்து பாடல்கள் பாடியுள்ள புண்ணியஸ்தலம் இது.

சார்ட்டர்டு விமானத்தில் 16 பேர் போகலாம். ஆகவே குருப்பாகப் போனால்தான் விமானம் ஏற்பாடு பண்ணிக் கொண்டு போக முடியும். போக்ராவிலிருந்து முக்திநாத் போய் திரும்ப போக்ரா திரும்ப விமானச் செலவு, போனிக் குதிரைச் செலவு, தங்குமிடம் எல்லாம் சேர்த்து ஒருவருக்கு ரூ. 5,000 ஆகலாம்.

அல்லது, காட்மாண்டுவிலிருந்தே ஹெலிகாப்டரில் ஒரே நாளில் நேரடியாக முக்திநாத்திற்கே சென்று அன்றே காட்மாண்டு திரும்பி விடலாம். இது சிரமமில்லாத பயணம். ஒருவருக்கு ரூ. 8,000 செலவாகலாம்.

முடிவுரை

மாநிலங்கள் வாரியாக இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான எல்லா இடங்களையும் அதன் விவரங்களையும் நீங்கள் அறியும் பொருட்டு கொடுத்துள்ளோம். ஒரு சில இடங்களும் விட்டுப் போயிருக்கக் கூடும். சுற்றுலாவில் ஆர்வம் உள்ளவர்கள் அவரவர்கள் வசதிக்கேற்ப போய் வரலாம். குருப்பாகச் சென்றால் நல்லது. சில இடங்களை முதலில் தேர்வு செய்து கொள்ளுங்கள். அதற்குப் பக்கத்தில் உள்ள இடம் வரைக்கும் சென்னையிலிருந்து ரயிலில் சென்று பின்பு அங்கு பஸ் ஏற்பாடு செய்து கொண்டு சுற்றிப் பார்த்து விட்டு ரயிலில் சென்னை திரும்புவது தான் சிக்கனமானது.

30 நாள் டூர், 40 நாள் டூர் என்று பஸ்ஸிலேயே சுற்றிப் பார்ப்பவர்களும் உண்டு. ஆனால் மிகச் சிரமமாயிருக்கும். இந்தக் காலத்தில் யாரும் 15 நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக சுற்றுலா செல்ல விரும்புவதில்லை.

ஆகவே வருடத்திற்கு ஒரு டூர் என்று 10 அல்லது 15 நாட்கள் ஒவ்வொரு வருடமும் போய் வரலாம்.


சென்னை, திருச்சி, சேலம், மதுரையில் டூர் நடத்தும் புகழ்பெற்ற கம்பெனிகள் உள்ளன. விசாரித்துக் கொண்டு செல்லலாம். சுற்றுலா வாழ்த்துக்கள்!



தாளிதம் செய்யும் எண்ணெயில் சிறிதளவு உப்பு போட்டுவிட்டு, தாளிதம் செய்தால் கமறல் ஏற்படாமல் இருக்கும். இது என் அத்தையின் அனுபவச் சொற்கள்.

– லீலா தாரா

விஷ வித்துக்கள்




"எட்டு மணியாச்சு கண்ணா. ஸ்கூல் பஸ் போயிடாதா? இன்னும் என்ன பண்றே அங்கே" – கேட்டுக் கொண்டே வேகமாக பெட்ரூமுக்குள் நுழைந்தவள் விக்கித்து நின்றேன். முப்பது ருபாய்க்கும் மேல், செலவழித்து நேற்றுதான் வாங்கி வந்த 'க்ரீம்' ட்யூப் முக்கால்வாசி காலி யாகி படுக்கை மீது கிடந்தது. க்ரீம் முழுவதை யும் முகத்தில் அப்பிக் கொண்டு, ஒருவித பயத்துடன், ஆனால் தீவிர யோசனையுடன், கோமாளி வேஷத்தில் கண்ணாடி முன் என் மகன் கார்த்திக்.

சுறுசுறு என்று கோபம் வர, கண்ணை மூடி, பத்து வரை எண்ணி அதைக் குறைத்துக் கொண்டேன். இப்போது, கோபித்துப் பலனில்லை. கோபப்பட்டால், கருதி கூட்டி அழுகை ஆரம்பிக்கும். ஓய பதினைந்து நிமிஷமாகும். ஸ்கூல் பஸ் போய் விடும். அரக்கப் பரக்க ஆட்டோ. பிடித்து பள்ளிக்கூடத்தை அடையும்போது மணி 8.30 தாண்டி விடும். ப்ரேயர் ஆரம்பித்த பின் உள்ளே போவது அவமானமாக இருக்கும். ஏன் வம்பு? மெதுவாக விசாரித்தால், முகத்தை அலம்பி பஸ்லயே அனுப்பி விடலாம்.

"இங்க வா, கார்த்திக்."

"அடிக்க மாட்டியே."



"மாட்டேன் வா. ஏன் இது மாதிரி செஞ்சே?"

"வந்தும்மா... நான் நான் ரொம்ப கறுப்பா இருக் கேனாம். க்ரீம் போட்டுண்டா நல்ல கலர் ஆயிடு வேனாம்."

"யார் சொன்னது?"

"என் பக்கத்துல டெய்லி உக்காருவாளே சித்ரா, அவ்தான்மா சொன்னா."

திக்கென்றிருந்தது எனக்கு. அவன் செய்த விஷமத்தைப் பார்த்து ஏற்பட்ட கோபத்தைக் காட்டிலும் வேதனையே மிஞ்சி நின்றது. எல்லாப் பத்திரிகைகளும் கட்டம் கட்டி, தலையங்கம் எழுதி, மதவெறியையும், இன வெறியையும், குண்டு கலாச்சாரத்தையம் கண்டித்து வரும் தருணத்தில், சில பேர் ஏன் இவ்வளவு குறுகிய மனதுடையவர்களாய் நடந்து கொள்கிறார்கள்? நான் சித்ரா என்ற குழந்தை பற்றிப் பேசவில்லை. அது ஒரு அம்பு. எய்த பெரியவர்கள் வீட்டில் இருக்கிறார்கள்.

குழந்தை பிறந்த முதல் நாளே இந்த விமர்சனங்களை தொடங்கி' விடுவது நம்மிடையே வழக்கமாகி விட்டது. "நேத்து ரமாவோட குழந்தையைப் போய்ப் பாத்துட்டு வந்தேன். என்னுருண்டைதான் போ. அவா அப்பா கலர் வந்திருக்கக் கூடாதோ? நல்லவேளை பிள்ளையாப் போச்சு."

ஒரு தாயின் மனது இதைக் கேட்க நேர்ந்தால் எவ்வளவு வருந்தும்! எண்ணிப் பார்க்கிறோமா? குழந்தை வளர வளர நம் ஒப்பிடுதல்களும் அதிகரிக்கவே செய் கின்றன.

"பெரியவன் நல்ல இருத்தமான அழகு. சின்னதுக்கு மூக்கையே காணோம்.



வெந்து வதக்கிய ¼ கிலோ உ. கிழங்குடன் ½ கப் தக்காளிச் சாறு எடுத்துச் சேர்த்து கொதிக்கவிட்டு தாளித்ததுடன் பரிமாறவும். சப்பாத்திக்கு அருமையாக இருக்கும்.

— லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

அண்ணாட்டேந்து கொஞ்சம் வாங்கி ஒட்ட வெச்சுக்கோடா'' குழந்தை முன்னிலையிலேயே இதைக் கூறினால், அதன் தன்னம்பிக்கை நசுக்கப்படாதா?

''அம்மா, அந்த இங்க் ப்ளூ கலர் சுடிதார் எடுத்துக்கறேம்மா.''

''போடி, அசடு. உன் நிறத்துக்கு அந்த கலர் சூட் ஆகுமா? ஏதான லைட் கலர் எடுத்துக்கோ. கூட ஆனாலும் தேவலை.''

குழந்தை முகம் கன்டிப் போகும். யாருக்கு வேண்டும் இந்த தாரளம்?

குழந்தைகள் வளர்கிறார்கள். கூடவே நாம் விதைத்த வினைகளும் வளரும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். 25 வயதாகிறது பையனுக்கு. சிவப்புத் தோல் மீது சிறு வயது முதலே அவன் கொண்ட மயக்கம் அவன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் அவனை திசை திருப்புகிறது. வெள்ளை மனதுகள், போட்டியில் பின் தங்கி, தோலின் நிறமே அவனைப் பொறுத்தவரை பிரதானமாகிறது. மணமாகி மருமகள் வீட்டிற்கு வருகிறாள். நிறத்துக்கும், மனத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என காலம் கடந்து உணர்கிறோம். என்ன லாபம்?

நாம் நண்பர்களை, கணவனை, மனைவியை நம் விருப்பப்படி தேர்வு செய்யலாம். நம் பெற்றோரைத் தேர்வு செய்ய முடியுமா? அது போல்தான் நிறமும். எனவே, நிற வேறுபாடுகள் பற்றி விவாதம் செய்வது மனதால் உயர்ந்தவர் செய்யும் செயலல்ல. பிறரைக் கண்டபடி விமர்சிப்பதும், இந்த வகைதான்.

''அம்மா, குண்டு மாமி வந்திருக்கா.''

''யார்டா? கத்தாம மெதுவா பேசித் தொலை.''

''அதாம்மா குட்டையா இருப்பா, தலைமுடியெல்லாம்கூட டை பண்ணிப்பான்னு சொல்லுவியே.''

வந்த பெண்மணியின் காதில் விழுந்தால் எவ்வளவு அசிங்கம்? நம் அனைவருக்கும் ஒரு பெயர் இருக்கும்போது, அதைக் கூறி, பிறரை அடையாளம் காணாமல், அவருடைய புறத் தோற்றத்தை வைத்து ஏன் அடையாளம் காட்ட முயல வேண்டும்? ''உருவு கண்டு எள்ளாமை'' சிறு வயதில் கற்பிக்கப்பட வேண்டாமா?

அதே போல், நம்மால் இயன்றால் ஏதாவது நல்லது செய்வோம். இல்லையெனில், சும்மாவாவது இருக்கலாம் அல்லவா?


''ராதா. என் பெண்ணுக்கு ஒரு நல்ல வரன் வந்திருக்கு. ஃபோட்டோ பாரேன்.''

''ஃபோட்டோ பாக்க நல்லாதான் இருக்கு. ஆனா, உன் பொண்ணு ஒளியாட்டமா இருக்கா. அவளுக்குத் தகுந்த பர்சனாலிடியா பையன்னு பாத்தாத்தானே நல்லா இருக்கும்?''

மனதில் லேசான கர்வம் தலை தூக்கும். நேரில் பார்க்கும்போது, பையனுடைய குணமும், வேலையும் சமூகத்தில் அவனுக்குள்ள அந்தஸ்தும் பின்னுக்குத் தள்ளப்படும். அவன் தலையின் பின்புறம் எட்டணா சைஸில் உள்ள வழுக்கை பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்கப்படும். நல்ல வரன் கை நழுவிப் போகும். இதுதானே நடக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் பக்குவப்படுத்தப் படாத மனங்கள்தான். மனதை பண்படுத்திக் கொள்ளல் அவசியம். நல்ல உணர்வுகளும் சரி. தீய உணர்வுகளும் சரி, தொற்றுநோய் போன்ற 'விஷ வித்துக்கள்' தூவுவதில் யாதொரு பயனும் விளையப் போவதில்லை. நல்ல எண்ணங்களே நம்மையும் நம்மைச் சுற்றியிருப்போரையும் மகிழ்ச்சியாக்கும். வாழ்வில் உயர்த்தும்!

— ரஞ்ஜனி தியாகு


குங்குமப் பூ சொல்லும் சிகப்பழகு ரகசியம் -
அதை உங்கள் சருமம் தெரிந்துகொள்ளட்டும்.
INTRODUCING
fairever
குங்குமப் பூ மற்றும் பால் இரண்டும்
அடங்கிய ஃபேர்னெஸ் கிரீம்.
சிகப்பழகு மேனியின் ரகசியம் இப்போது அனைவருக்குமே தெரிந்துவிட்டது- குங்குமப்பூ. அதில் பாலும் சேர்ந்துவிட்டால் ஒரு சில வாரங்களிலேயே பளபளப்பான சிவந்த மேனியை நீங்கள் பெற்று விடலாம். அது மட்டுமல்ல, புதிய ஃபேரெவர் கிரீமில் wheatgerm oil உள்ளது. இது உங்கள் சருமத்தை இளமைத் தோற்றத்துடனும் புதுப் பொலிவுடனும் வைத்திருக்கும். ஃபேரெவர் கிரீமில் AHA-ஆல்ஃபா ஹைட்ராக்ஸி அமிலங்கள் உள்ளன. இது இயற்கையாகவே
உங்கள் சருமத்தை ஈரத் தன்மையுடன் வைத்திருக்கும். இவ்வாறு புதுப்பொலிவுடன் திகழும் உங்கள் சருமத்தை சூரியனின் தீங்கான ஒளிக்கதிர்களிடமிருந்து ஒரு பிரத்தியேகமான டிரிப்பிள் ஸன்ஸ்க்ரீன் பாதுகாக்கிறது.
எனவே விந்தைகள் புரியும் குங்குமப் பூ மற்றும் பால், உங்களிடம் ஒரு மாற்றத்தை உண்டாக்கட்டும் - உங்கள் தோற்றத்திலும் சரி, உங்கள் வாழ்விலும் சரி...
fairever
fairever
மாற்ற முடியாதது எதுவுமே இல்லை.
FOUNTAINHEAD • 2544 • 99

கல்லிலே கலைவண்ணம் செய்யும் பெண்கள்

கற்சிலைகள் செதுக்கும் தொழிலுக்குப் பெண்களும் வந்து விட்டார்கள். திருவண்ணாமலை மாவட்டம் சேத்பட் அருகில் முடையூர் என்ற கிராமத்தில் பெண்கள் கற்சிலைகள் செதுக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

கடந்த எட்டு தலைமுறைகளாக முடையூர் கிராமத்தில் மாவுக்கல், பச்சைக் கல், கருங்கல், கடப்பா கல் முதலியவற்றில் சிற்பங்கள் செதுக்கும் கலை 150 குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களே செய்து வருகின்றார்கள்.

மாமல்லபுரத்திற்கு நிகராக இங்கு செதுக்கப் படும் சிற்பங்கள் உள்நாடு மற்றும் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

இக் கிராமத்திலுள்ள பெண்கள் கூலி வேலைக்குப் போய் தினமும் ரூ. 10 முதல் ரூ. 20 வரை சம்பாதிப்பார்கள்.

பருவ மழை தவறியதால் விவசாயம் பாதித்தது. கூலி வேலைக்குச் செல்ல முடியாத இக் கிராம ஏழைப் பெண்கள் வறுமையில் வாடினார்கள்.

இக் கிராமப் பெண்களுக்குக் கூலி வேலை தவிர வேறு வேலைகள் தெரியாது. என்ன செய்வது என்று இவர்கள் கஷ்டப்பட்ட வேளையில் இக் கிராமத்தில் செயல்பட்டு வந்த அறிவொளி இயக்கம் மூலம் இக் கிராமப் பெண்களுக்கு விடிவு காலம் பிறந்தது.



இந்த மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அறிவொளி இயக்கம் மூலம் மகளிர்க்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் உதவித் தொகையுடன் நடத்தப்படுகின்றது.

பெண்களுக்கு அவரவர்களுக்கு உள்ள திறமைகள்படி அவரவர்களுக்குத் தெரிந்த தொழிலில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வேலை வாய்ப்புகளுக்கு வழிசெய்வதுதான் மகளிர் திறன் வளர்ப்புப் பயிற்சியாகும்.

அந்த வகையில் இக் கிராமத்தில் சிற்பக் கலைத் தொழில் நடந்து வருகின்றது. ஏன் இக் கிராமப் பெண்களுக்கு சிற்பக் கலையிலேயே பயிற்சிகள் அளிக்கக் கூடாது என்று நினைத்த சேத்பட் அறிவொளி இயக்க வட்டார திட்ட ஒருங்கிணைப்பாளர் குணசேகரன் உடனே தனது திட்டத்தை செயல்படுத்தியும் விட்டார்.

இக் கிராமத்திலுள்ள அறிவொளி அமைப் பாளர் நடராசன் மூலம் 19 முதல் 40 வயதுள்ள 10 பெண்களைத் தேர்வு செய்து சிற்பங்களை அழகுபடுத்தும் கலையில் இரண்டு மாத பயிற்சி அளித்தார். பயிற்சி காலத்தில் ஒவ்வொருவருக்கும் மாதம் முன்னூற்றி ஐம்பது ரூபாய் உதவித் தொகையும் வழங்கினார்.

இங்கு பயிற்சி பெற்ற பெண்கள் தற்போது கூலி வேலைக்குப் போவதில்லை. சிற்பங்களுக்கு டிசைன் எனப்படும் அழகு படுத்தும் வேலைகளை செய்து ஒரு நாளைக்கு ரூ 50 முதல் ரூ. 75 வரை சம்பாதிக்கின்றார்கள்.

— டி. ராஜேஸ்வரி

சந்தித்தேன்


• அரசி • சரோஜா • வசந்தா





• டாக்டர். விஜயா

திருச்சி மங்கையர் மலர் முகவர் ஆறுமுகமும், தஞ்சாவூர் பேங்க் ஆஃப் மதுரையின் மானேஜர் திரு. தேசிகனும் டாக்டர். விஜயாவைப் பற்றிச் சொன்னபோது இத்தனை அருமையான, வித்தியாசமான பெண்மணியைச் சந்திக்கப் போகிறேன் என நினைக்கவே இல்லை.



தஞ்சையில் மகளிர் சிறப்பு மருத்துவராக பணியாற்றிக் கொண்டிருக்கும் டாக்டர் விஜயா தன் மருத்துவ சேவைக்காக திருமணத்தையே மறுத்து விட்டிருக்கிறார். வருகின்ற வருமானத்தையும் ஏராளமான கோயில்களுக்கும், சமூக நற்பணிகளுக்கும் செலவு செய்து வருகிறார். இன்றைய நிலையில் செயற்கைக் கருத்தரிப்பு, ஸ்கேனிங் என அவரவர்கள் லட்சக்கணக்கில் பணம் போட்டு தொழிலை விஸ்தரித்துக் கொண்டிருக்க இவரோ தான் கண் மூடுவதற்குள் சமூகத்திற்கு ஏதேனும் உபயோகமாக செய்ய வேண்டும் என நினைத்ததன் விளைவுதான் முதியோர் இல்லம். இத்தனைக்கும் ஓய்வு ஒழிவில்லாத மருத்துவப் பணி, பல மருத்துவ கூட்டமைப்புகளில் பொறுப்பான பதவிகள் என உழைத்துக் கொண்டேயிருக்கிறார்.

தன் தாயார் சிறு வயதில் தன் பெரும் குடும்பச் சூழ்நிலையிலும் பல அனாதைக் சிறுமிகளுக்கு உதவியதைப் பார்த்திருந்த அவருக்குத் தானும் அப்படிச் செய்ய வேண்டும் என நினைத்தார். அதற்காகத்தான் ஏழை முதியவர்கள் இலவசமாகத் தங்கும் விடுதி கட்டத் தீர்மானித்தார். அவருடைய நல்ல மனதுக்கு ஏராளமானவர்கள் வலிய வந்து உதவி செய்திருக்கிறார்கள்.

• லலிதா • சாருலதா



• கமலம் • பாலாஜி • சிவபாலன்

இனிமையான சுபாவமும், அற்புதமான விருந்தோம்பலும், நட்பும் அன்புமாகப் பழகும் குணமுமாக இருக்கும் டாக்டர் விஜயா பழகிய சில தினங்களில் நம்மையே கவர்ந்து விட்டபோது அங்கேயே இருப்பவர்கள் அவரிடம் ஈடுபாடு காட்டுவதில் வியப்பே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

சென்ற மாதம் டாக்டர் விஜயா முதியோர் இல்லத்தின் திட்டப்பணி

• விஜயா • சுந்தரவதனி



சகோதரிகளை



துவக்க விழா நடந்தது. அச்சமயம் திருச்சி டாக்டர் நரேந்திரன், ஸ்ரீரங்கம் பள்ளித் தலைமையாசிரியை அலமேலு போன்றோரெல்லாம் அவ்விழாவிற்கு வந்து டாக்டரைப் பாராட்டிப் பேசினார்கள். அச்சமயம் விஜயாவின் நெருக்கமானவர்கள் முதியோர் இல்லம் என்பது நமது கலாசாரத்திற்குச் சரியா? என ஆரம்பித்தார்கள். அது அப்படியே ஒரு சுவாரஸ்யமான உரையாடலாகவே பிற்பாடு மாறி விட்டது...

– மஞ்சுளா ரமேஷ்

வேதா ஸ்ரீநிவாசன் : முதியோரின் பங்கு குடும்பத்தில் அதிகம். இளைஞர்களுக்கு வழிகாட்டிகளாகவும் பழம்பெரும் கலாச்சாரத்தை வழிவழியாகத் தருகின்ற கடமையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். தாத்தா - பாட்டியோடு வளர்வதால்தான் குழந்தைகளுக்கு அன்னியோன்யமும் பாசமும் புரிபடுகிறது.



மாமியார் – மருமகள் பிரச்னையை எடுத்துக் கொண்டால், இரு தரப்பிலுமே உரிமைப் பிரச்னை காரணம் என்கிறார்கள். ஆனாலும், இந்தியக் குடும்பங்களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை பல அனுசரிப்புகளுடன் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இன்றைய முதியோர் இல்லங்களுக்கான முக்கியக் காரணம் – சின்னக் குடும்பம். ஓரிரு குழந்தைகள் – அவர்களும் வெளிநாட்டில் குடியேற, பெற்றோர் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆளாகிறார்கள். பாதுகாப்பும் தனிமையும் முதியோர் இல்லங்களை நாடச் செய்கின்றன. முதியோர் பலர் ஓரிடத்தில் தங்கியிருப்பது, பொழுதுபோக்க மட்டுமல்லாமல் நல்ல துணையாகவும் இருக்கிறது.

வசதியுள்ள பலர் வீட்டில் தனிமையில் தவிக்கிறார்கள்.





• மீனா • விஜயலட்சுமி • குமுதா • வேதா

அவர்களுக்கு முதியோர் இல்லங்கள் நன்மை தரும். வசதியற்றவர்களுக்கு இலவச இல்லங்கள் தேவை. இதனால், உறவுகள் முறிவதாகக் கூறிவிட முடியாது.



சிவபாலன்
(கல்லூரி மாணவர்) :
கணவன் - மனைவிக்குள் பிரச்னை வரும்போது, அவர்கள் கோபத்தைக் குழந்தைகள் மேல் காட்டுவார்கள். அப்போது, குழந்தைகளுடைய அடைக்கலம் தாத்தா - பாட்டி தான். பெரியவர்களும் பேரக் குழந்தைகளுக்குமிடையேயான ஆழமான பிணைப்பும், பெற்றோர்க்கும் குழந்தைகளுக்குமிடையிலான புரிந்து கொள்ளும் மனப்பாங்கும், முதியவர்கள் வீட்டிலிருந்தால்தான் வளரும். அவர்களைக் கட்டாயம் உடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

மஞ்சுளா ரமேஷ் :
முன்பு போல், பாட்டிகள் பேரர்களுக்கு, இதிகாச - புராணக் கதைகள் சொல்வது குறைந்து, இருவருக்கும் தொலைக்காட்சியே பிரதானமாகி விட்டதுபோல் தோன்றுகிறதே?

டாக்டர் வசந்தா ராமமூர்த்தி :
இது உண்மைதான். இந்த நிலையில், சிறுவர்களைச் சிறந்த சேனல்களை - டிஸ்கவரி போல் தேர்ந்தெடுக்கச் செய்யும் முதியவர்களுமுண்டு. சிறியவர்களை நல்வழிப் படுத்துதல் முதியோர் கடமையென்றால், முதியோர் வழிநடப்பது சிறியவர்கள் கடமை.

டாக்டர் சுந்தரவதனி :
இதிகாச புராணங்களையெல்லாம் கேட்க இன்றைய குழந்தைகளும் தயாராயில்லை, பாட்டிகளும் அவர்களை 'போர்' அடிக்க வேண்டாமென்று சொல்வதில்லை. ஆனால், அவை கட்டாயம் சொல்லப்பட வேண்டும். நம் பண்பாடு, கூட்டுக் குடும்பத்தின் நன்மைகள் பற்றிச் சொல்ல வேண்டும். குழந்தைகளும் நழுவாமல்



கேட்க வேண்டும்.

இன்றைய அவசர வாழ்க்கையில், பொருள், படிப்பு, பாசம் எல்லாம் இருந்தாலும் பெரியவர்களைக் கவனிக்க நேரம் கிடைப்பதில்லை. இந்த நிலையில், முதியோர் இல்லங்களில் தம் வயதை ஒத்தவர்களோடு இருக்கையில், அவர்கள் கலகலப்பாக இருப்பார்கள். வீட்டில் தனியாகத் தொலைக்காட்சி முன் இருப்பதை விட அங்கே மகிழ்ச்சி கிடைக்கும். நினைத்தபோது முதியோர் இல்லங்களில் இருந்து விட்டு, சிறிது நாட்களில் திரும்பி விடலாம்.


குமுதா (கல்லூரி மாணவி) :
என்னைப் பொறுத்தவரை, பெரியவர்கள் சிறியவர்களை அனுசரித்துப் போவதில்லை. அவர்களுடைய கருத்துக்களை அதிகமாகப் பேரக் குழந்தைகள் மேல் திணிக்கிறார்கள். உதாரணத்திற்கு, சாமி கும்பிடுவதில் கூட ஒரு வழிமுறை தருகிறார்கள். இளையவர்கள், தியானம், ஒருமுகப்படுத்தல் என்று பரந்த நோக்கில் போகும்போது, தடுத்துக் குறை கூறுகிறார்கள். ஆனால், முதியவர்கள் படித்தவர்களாக இருக்கும் பட்சத்தில் இந்தத் தலையீடு வருவதில்லை.

விஜயலட்சுமி :
முதியவர்களும் பேரக் குழந்தைகளுக்கு மிடையே சிறந்த பாலமாகப் பெற்றோர் இருக்க வேண்டும். அவர்களைப் பற்றிய குறை களைக் குழந்தைகளிடம் சொல்லக் கூடாது, தவறுகளைச் சமுதாயம் சீக்கிரமாகச் சொல்லிக் கொடுக்கும். நாம் நல்லவற்றையே சொல்ல வேண்டும். குடும்ப விசேஷங்களின் போது, பெரியவர்களுடைய ஆசிகளை வாங்கச் செய்ய வேண்டும். பெரியவர்களும் ஒதுங்கிக் கொள்ளக் கூடாது.

இருதரப்பிலும் பொறுமை குறைகின்ற காரணத்தால்தான் முதியோர் இல்லங்கள் அதிகமாகி விட்டன. இன்றைய முதியவர்களுக்கு முதியோர் இல்லங்கள் தேவை. நாளைய தலைமுறையினர் அதற்கு அவசியமில்லாமல் செய்ய வேண்டும்.

டாக்டர். விஜயா :
முதலில், முதியோர் இல்லம் கட்டுவது குறித்து, என் குடும்பத்தாரே எதிர்ப்பு சொன்னார்கள். முதியோர் இல்லம் என்றாலே மாமியார் - மருமகள் சண்டையால்தான் என்கிற எண்ணத்தில் எனக்கு உடன்பாடில்லை. சில தரப்பினருக்கு இந்த இல்லங்கள் உண்

ஆசையா இருக்கு ஆனா...



"மத்தவங்களைப் போல மடமடன்னு இங்கிலீஷ்ல பேசணும்னு ஆசையாத் தான் இருக்கு. ஆனா... ஏதாவது தப்பா பேசிடுவோமோங்கற பயத்துனால வாயிலேருந்து வார்த்தை வெளியே வர மாட்டேங்குது"

நீண்ட நாட்களாக உங்களிடமுள்ள இப்பிரச்சினைக்கு இன்றே, இப்பொழுதே முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். உளவியல் அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ள விவேகானந்தாவின் ஹைபவர் இங்லிலீஷ் கோர்ஸில் சேர்ந்து தயக்க மின்றி, தைரியமாகப் பேசப் பயிற்சி பெறுங்கள்.

மூன்றே மாதங்களில் உங்களிடம் ஏற்படும் மகத்தான மாற்றத்தைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள் !

விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸ்

LEVEL - 1 (அடிப்படை ஆங்கிலம்) ABCD யிலிருந்து தொடங்கி ஆங்கில வார்த்தைகளை எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 175/- மட்டுமே.

LEVEL - 2 (இலக்கணப் பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையாகப் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.225/- மட்டுமே.

LEVEL - 3 (ஸ்போக்கன் இங்கிலீஷ்) தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 250/- மட்டுமே.

LEVEL - 2&3 இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 375/- மட்டும் செலுத்தினால் போதும்.

LEVEL - 1,2&3 மூன்று பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ. 525/- மட்டும் செலுத்தினால் போதும்.

முன் பணம் அனுப்ப வேண்டியதில்லை. அருகிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்களை V.P.P.யில் அனுப்புகிறோம்.

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர விரும்புகிறேன். எனக்குப் பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறேன். (தேவையான கட்டத்திற்குள் ✓ குறியிடவும்)

LEVEL-1 ☐	பெயர் : ....
LEVEL-2 ☐	முகவரி : ....
LEVEL-3 ☐	....
LEVEL-2&3 ☐	....
LEVEL-1,2&3 ☐	.... பின்கோடு ....

17

VIVEKANANDA INSTITUTE

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.

MML

[illegible] சென்னை 9, வெட்லி ரோடு, தி. நகர், சென்னை - 17 ★ 18, ராமசாமி தெரு, சண்முகம் ரோடு, மேற்கு தாம்பரம், சென்னை - 45 ★ 30, மேடவாக்கம் டாங்க் ரோடு, (E.S.I. ஆஸ்பத்திரி அருகில்) கீழ்ப்பாக்கம், சென்னை - 10 திருச்சி சேஷா டவர்ஸ், 23c/5, கீழசிந்தாமணி, (E.R. ஸ்கூல் எதிரில்) திருச்சி - 2 சேலம் சென்ட்ரல் ... (மேம்பாலம் அருகில்) 77, ஓமலூர் மெயின் ரோடு, சேலம் - 1 வேலூர் 9, ... தெரு, ... ஆஸ்பத்திரி அருகில், வேலூர் - 1 தஞ்சாவூர் 1263/1, தெற்கு வீதி, (... மாடியில்) தஞ்சாவூர் - 9 ஈரோடு 611, பிரப் ரோடு (டெலிபோன் பவன் அருகில்) ஈரோடு - 1 கோயம்புத்தூர் ஸ்ரீ கிருஷ்ணா டவர்ஸ், 515, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர் - 18. பாண்டிச்சேரி 326, அம்பலத்தாடையர் மடத்து வீதி (அண்ணா சாலை அருகில்) பாண்டிச்சேரி - 1 மதுரை 26 A, கண்ணாம்புக்காரத் தெரு, (கூடலழகர் பெருமாள் கோவில் அருகில்) மதுரை - 1 திருப்பூர் K.P.N. காலனி முதல் தெரு, ... ரோடு, திருப்பூர் - 1. ஹைதராபாத் 5A ... ஹைதராபாத் - 2. திண்டுக்கல் 7, E.V.R. சாலை, 80 அடி ரோடு, மேற்கு அசோக் நகர், திண்டுக்கல் - 1.



மையிலேயே தேவைப்படுகின்றன. மாமியார் - மருமகள் பிரச்னைகளெல்லாம் இல்லாத அனாதைப் பாட்டிகள், பிள்ளைகள் இருந்தும் கவனிப்பாரற்றவர்கள், விதவைகள் போன்றவர்களுக்கெல்லாம் தனிமையிலிருந்து விடுதலை தந்து காப்பாற்றும் பணியை இவ்வில்லம் செய்ய,

வசதியற்றவர்கள் என்பதோடு துணையற்றவர்களாக இருப்பவர்களுக்கும் உதவும் பொருட்டே இந்த முதியோர் இல்லத்தை நாங்கள் கட்டி வருகிறோம்.

அரசி (முதியோர் இல்லமொன்றில் பணிபுரிபவர்) :

சிறு சிறு விஷயங்களில் - காலையில் சீக்கிரம் எழுந்து, குளித்தபின் கடமைகளைச் செய்வதிலிருந்து, மாமியாருக்கு நேரத்தில் உணவளிப்பது வரை, வீடுகளில் சண்டைகள் பெருகி வருகின்றன. மருமகளும் அனுசரித்துப் போவதில்லை. மாமியாரும் அனுசரிப்பதில்லை. பொறுக்க முடியாத இன்றைய மாமியார்கள், முதியோர் இல்லங்களில் இருப்பதே மேல் என்று நினைக்கத் தொடங்கி விட்டார்கள். ஒருவரையொருவர் அனுசரிக்காமல் இருப்பதுதான் இன்றைய முதியோர் இல்லப் பெருக்கத்திற்குக் காரணம்.

மீனா :

இன்று குடும்பத்தில் இருவரும் வேலைக்குப் போகும் பட்சத்தில், பெரியவர்களைக் கவனிக்க முடிவதில்லை. முதியவர்களுக்கு அந்த வயதான காலத்தில் தேவைப்படுவது பரிவுதானேயொழிய பணமல்ல. ஆனால், குடும்பத்தை நடத்துபவர்களுக்குப் பணம் அவசியமாகிறது. பணியிருந்து கவனிக்க நேரமில்லாத போது, முதியோர் இல்லங்களில் அவர்களை விட்டு விடுவதே மேல்.

விஜயலட்சுமி :

முதியவர்கள் தாமாகவே, தம்மிடம் சேமித்த பணம் இருக்கையில், முதியோர் இல்லத்தில் பணத்தைக் கட்டிச் சுதந்திரமாகக் கடைசி காலத்தைக் கழிக்க நினைத்தால், அந்தச் சுதந்திரத்தை அவர்களுக்கு அளித்து விட வேண்டும். முதியவர்களும், தாமாகவே இல்லத்தை நாடிச் சென்றால், பிள்ளைகளைக் குறைகூறக் கூடாது.

இன்னொரு முக்கியமான விஷயம், முதிய தம்பதி யிடையிலான அன்னியோன்யத்தைத் தவறாக நினைக்காமல், வசதியிருப்பின் தனியறை அளிக்க வேண்டும். மொத்தத்தில், யாருக்கு எது அமைதியோ, அவர்களைச் சுதந்திரமாக முடிவெடுக்க விட்டு விட வேண்டும்.

டாக்டர். சுந்தரவதனி :

முதியோரின் உளவியல் பிரச்னைகளையும் நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். முடிந்த வரை, அவர்களைத் திருப்திப்படுத்த முயல வேண்டும். முதியோர் இல்லங்கள், அவர்களின் கடைசிக் காலத்தில் துக்கங்களில்லாமல், கூடுமானவரையில் அமைதியாய் இருக்க உதவுகின்றன.

உண்மையில், குடும்பத்தில் இருக்கையில் அவர்களுக்குத் தம் குறைகளே பிரதானமாகத் தெரிகிறது. முதியோர் இல்லத்தில், மற்றவர் குறைகளைக் கேட்கையில், தம் நிலையே தேவலை என்று நினைப்பதால் சிறிது நிம்மதியும் கிடைக்கிறது.


குமுதா :

இளையதலைமுறை மீது எடுத்தேன் கவிழ்த்தேன் என குறைகூறிக் கொண்டே இருக்கிறார்கள். நாங்கள் நல்லவற்றைத்தான் எடுத்துக் கொள்கிறோம். இளைஞர்களிடம் வெளிப்படையாகப் பேசி, தீர ஆலோசித்தால், பல பிரச்னைகளை எளிதாக தீர்த்துக் கொள்ள முடியும். நம் குடும்பங்களில் மனம் விட்டுப் பேசுவது என்பதே இருப்பதில்லை.



சிவபாலன் :

பேசித் தீர்ப்பது மிக அவசியம். எனக்கு தியானத்தில் ஈடுபாடுள்ளது என்றால், அதன் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் நன்மையையும் விளக்க வேண்டும். அதே நேரத்தில், பண்டிகைகளிலெல்லாம் அவர்களோடு சேர்ந்து வழிபட வேண்டும்; தவறில்லை. அவர்கள் எவ்வளவோ நமக்காக விட்டுக் கொடுக்கையில், நாம் ஓரிரு விஷயங்களிலாவது பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ள வேண்டும்.




டாக்டர் வசந்தா ராமமூர்த்தி :

இன்றைய நிலையில் ஒவ்வொரு கால கட்டம் எனப் பார்க்கையில் இது 'முதியோர் இல்ல' காலகட்டம் போல் தெரிகிறது. அந்த அளவிற்கு, இல்லங்களின் எண்ணிக்கை பெருகி விட்டது. இப்படியே போனால், வியாபாரமாகி விடும் அபாயம் உண்டு. தேவை என்ற நிலை மாறி பாஷனாகவே மாறி வருகிறது. இப்படிப் பெருகி வரும் காலத்தில், முதியோர் இல்லங்கள் தேவையா என்பதை விட, அவற்றை நிர்வகிப்பது எப்படி என்பதுதான் இனிவரும் பிரச்னையாகி விடும்.

சரோஜா :

இந்தப் பிரச்னை சிறிதாவது குறைய, குடும்பமென்னும் அமைப்பு குலையாதிருக்க முதியோரும், பிள்ளைகளும், மருமகள்களும், குழந்தைகளும் மனம் திறந்து பேச வேண்டும்.



• தயாராகிக் கொண்டிருக்கும் முதியோர் இல்லம்

ஒருவரையொருவர் விட்டுக் கொடுக்காமல் மனத்தில் தாங்கிக் கொள்வது மிக அவசியம்.

கமலம் :

வயதானவர்களுக்கும் ஒரு நேரம் இல்லையென்றால் ஒரு நேரம் சலித்துத்தான் போகிறது. மெஷின் போல பல ஆண்டுகளாக வேலை செய்து கொண்டேயிருக்கிறோம். சிறியவர்கள் எங்கேயாவது வெளியே போகும் போது 'அம்மா நான் போறேன்' என்று கூட சொல்லக் கூடாது? நம்மை அலட்சியப் படுத்துகிறார்களே என கோபம் வரும். உடம்பு முடியாமல் இருக்கும்போது இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாகும். ஆனாலும் அதற்காகக் குடும்பத்தை விட்டு ஓடி விட முடியுமா என்ன? அது ரொம்ப தப்பு.

லதா :

குடும்பம் என்று வரும்போது பெரியவர்கள் ரொம்ப அவசியம் தேவை. அவர்கள் வழி காட்டும்போது நமக்குப் பலவும் எளிதாகச் செய்ய முடிகிறது. சிறு சிறு சலிப்புக்களையெல்லாம் பெரிதாக மனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது. குடும்பம் என்றால் அப்படி இப்படித்தான் இருக்கும்.

லலிதா :

முந்தைய தலைமுறைக்கும் இந்தத் தலைமுறைக்கும் நிறைய 'ஜெனரேஷன் கேப்' இருக்கிறது. சமையல், ருசி, உடை, சிந்தனை என எல்லாவற்றிலும். அதற்காக ஒருவருக்கொருவர் பயந்து கொண்டு எங்கே போய் விட முடியும்? ஒருவர் கோபப்படும்போது இன்னொருவர் விட்டுக் கொடுத்துப் போக வேண்டியதுதான்.

மஞ்சுளா ரமேஷ் :

பெண் வேலைக்குப் போவது, சுரிதார் போடுவது இதுபோல முதியோர் இல்லம் என்பதும் இன்றைய நிலையில் தேவையா எனும் கட்டத்தைத் தாண்டி அவசியம் எனும் நிலைக்கு வந்து விட்டது. ஆனால் அங்கே போகின்றவர்கள் அங்கேயாவது போய் நிம்மதியாய் இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய வேண்டுகோள். குழந்தைகள் அங்கங்கே சிதறி விட பாதுகாப்பு வேண்டிச் செல்பவர்கள், குடும்பம் வெறுத்துச் செல்பவர்கள் எனப் பல நிலைகளில் இருக்கலாம்.

முதியோர் இல்லம் போவதே ஏதோ ஒரு தகாத பாபம் அதைச் செய்கிறோம் என்ற அளவுக்கு மீறிய தன்னிரக்கம் ஏற்படும் போது தான் ஏற்கெனவே இருக்கும் ப்ரச்னைகள் இன்னும் பெரிதாகின்றன. முதிய உடம்பு இன்னும் பல நோய்களினால் பாதிக்கப்படுகிறது. நமக்குப் பிடிக்காத ஒன்றை விட்டு நாம் விலகி விடுவது இல்லையா? அதைப் போல 'எனக்கு வேண்டாம் இந்த சம்சார பந்தம்' என அமைதியாக முதியோர் இல்லங்களில் வாழலாம். தங்களுக்குப் பிடித்தமான முறையில் பொழுதைக் கழிக்கலாம். ஏதோ ஒரு கட்டாயத்தினால்தான் இங்கு 'தள்ளப்பட்டு விட்டதாக' நினைக்க வேண்டாமே! மீதி வாழ்வை அமைதியாக வாழ தனக்குக் கிடைத்த ஒரு அருமையான வாய்ப்பாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

வாழ்க்கை என்பதே மகிழ்வோடு இருக்கத்தான் கொடுக்கப்பட்டது. ஏன் அதைச் சிக்கலாக்கிக் கொள்ள வேண்டும்? யார் எங்கிருந்தாலும் நிம்மதியாக வாழலாமே!

தொகுப்பு : **சுப்புலட்சுமி**

படங்கள் : **ராஜு நாராயண்**



• மார்ச் '98 இதழில் பரிசு பெற்ற விஜயராணி உடன் முருகேசன், சிவகுமார் (சக்தி சோயாஸ்)

சோயாவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுக்குறிப்புகளில் சிறந்தவற்றிற்கு சக்தி சோயா பைட் நிறுவனம் ரூ. 1000/- பரிசாக அளித்து வருகிறது. அந்த வகையில் இம்மாதம் பரிசு பெறும் சிறந்த சமையல் குறிப்பு –

சேர்த்து ஊறவைக்கவும். மறுநாள் காலை சோயாவை மீண்டும் அலம்பி க்கரில் வேக விடவும். சோடா சேர்த் திருப்பதால் மிக மிருதுவாக வெந்து விடும். வெந்த சோயா ஒரு ஸ்பூன், ஒரு வெங்காயம், ஒரு தக்காளி இவற்றை மிக்ஸியில் அரைத்து விழுது தயாரித்துக் கொள்ளவும்.

பிறகு வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு தாளித்து நறுக்கிய இன்னொரு வெங்காயம், ப. மிளகாய் நறுக்கியது, தக்காளி எல்லாவற்றையும் நன்கு வதக்கிக் கொண்டு அரைத்த பேஸ்ட் சேர்த்து நன்கு வதக்கவும். விழுதைச் சுற்றி எண்ணெய் கசியும் சமயம் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து இரண்டு நிமிஷம் வதக்கி ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு நன்கு கொதிக்க விடவும். இதற்கு வெந்த சோயாவில் வடித்த நீரைப் பயன்படுத்தலாம்.

சோயா சோலே, சோயா ஸீப்!

முதல் பரிசு ரூ. 1000/-

சோயா சோலே

தேவையான பொருட்கள்:

சோயா பைட் – 100 கிராம்
பெரிய வெங்காயம் – 2
தக்காளி பெரியது – 2
எலுமிச்சம்பழம் – 1 மூடி
ப. மிளகாய் – 4
பொடியாக நறுக்கிய கொத்தமல்லி – 4 ஸ்பூன்
பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை – 1 ஸ்பூன்
இஞ்சி பூண்டு விழுது – 1 ஸ்பூன்
வெல்லம் பொடித்தது – 1 ஸ்பூன்
சிறுசிறு துண்டங்களாக நறுக்கிய பனீர் அல்லது துருவிய சீஸ் – ½ கப்
ஆப்ப சோடா – 1 சிட்டிகை
ரிபைண்ட் ஆயில் (அ) நல்லெண்ணைய் – 4 ஸ்பூன்
நெய் – 1 ஸ்பூன்
உப்பு – தேவைக்கேற்ப

செய்முறை :

முதல் நாள் இரவு சோயா 'பைட்'டை அலம்பி ஒரு சிட்டிகை ஆப்ப சோடா

தேவையான அளவு உப்பு சேர்த்து வெந்த சோயாவை சேர்த்து ஐந்து நிமிடங்கள் கொதித்ததும் இறக்குங்கள்.

நெய்யில் வறுத்த பனீர் துண்டுகள் அல்லது துருவிய சீஸ், ப. கொத்தமல்லி, கறிவேப்பிலை இவற்றை 'டாப்பிங்' செய்வதற்குப் பயன்படுத்துங்கள். சோயா சோலே நன்கு ஆறியதும் வெல்லத்தூள் சேர்த்து எலுமிச்சம்பழம் பிழியவும்.

குறிப்பு : சீஸ், பனீருக்குப் பதிலாக காரா பூந்தி, அப்பளாம், சிப்ஸ் போன்றவற்றையும் உபயோகிக்கலாம்.

கிரேவி திக்காக இருப்பதற்காகத்தான் வெந்த சோயாவை சேர்த்து அரைக்கிறோம். இதற்குப் பதிலாக கார்ன் பிளவர் அல்லது அரிசி மாவு போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

சப்பாத்தி பூரிக்குத் தொட்டுக் கொள்ள



ஏப்ரல் '98 முதல் பரிசு பெற்ற தீபா, குடும்பத்தினர்.

பரிசுக்குரிய குறிப்புகளைத்
தேர்ந்தெடுத்தவர் - சாந்தா இராமானுஜம்

மட்டுமல்லாது, கொஞ்சம் கெட்டியாகச் செய்தால் மாலை நேர டிபனுக்கு சூடான டீயுடன் சாப்பிட மிக ருசியான சத்து மிக்க உணவு இது.

– சி. அலமேலு, சென்னை - 92.

ஆறுதல் பரிசு

சோயாபீன் ஸூப்

தேவையான பொருட்கள் :

சோயா பைட் - 1 கப்
வெங்காயம் – 1 (பொடியாக நறுக்கியது)
இஞ்சி – 1 டேபிள் ஸ்பூன் (நறுக்கியது)
பட்டை இலை – ஒன்று
குடைமிளகாய்
– ஒன்று (பொடியாக நறுக்கியது)
பூண்டு
– 1 டீஸ்பூன் (பொடியாக நறுக்கியது)
ஜீரகம் – 1 டீஸ்பூன்
வெண்ணெய் – 1 டீஸ்பூன்
மிளகுப் பொடி – ½ டீஸ்பூன்
எலுமிச்சம்பழம் – ஒன்று
உப்பு – தேவைக்கேற்ப

செய்முறை :

சோயா 'பைட்'டை தண்ணீரில் 10 மணி நேரம் ஊற வைத்து ப்ரெஷர் குக்கரில் வேக வைக்கவும். வெந்த சோயாவுடன் இஞ்சியை சேர்த்து மிக்ஸியில் நைஸாக அரைக்கவும். வாணலியில் வெண்ணெயைப் போட்டு உருகியதும் ஜீரகத்தை போடவும். பின் பட்டை இலை, வெங்காயம் சேர்த்து வதக்கி பின் குடை மிளகாயைப் போட்டு வதக்கவும். அரைத்த சோயா விழுது, இஞ்சி விழுதைச் சேர்த்து உப்பு, மிளகுப் பொடி போட்டுத் தேவையான அளவு தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடவும். கொதிக்கும் பொழுது வரும் நுரையை கரண்டியால் எடுத்து விடவும். பட்டை இலையையும் எடுத்து விடவும். பின் எலுமிச்சைச் சாறு சேர்த்து ஸூப் கிண்ணங்களில் ஊற்றி சூடாகப் பரிமாறவும்.

– கீதா சர்மா, மும்பை - 71.

• ஏப்ரல் '98 ஆறுதல் பரிசு பெற்ற அம்புஜா தாமோதரன்.



'சோயா பைட்'டின் சமையல் போட்டி

மங்கையர் மலரும் 'சோயா பைட்'டும் இணைந்து வழங்கும் சமையல் போட்டி –


சோயாவின் சிறப்பை உணரச் செய்யும் வகையில் ஒவ்வொரு மாதமும் இச் சமையல் போட்டி அமையும். அந்த வகையில் சோயாவை அடிப்படையாகக் கொண்ட சமையல் குறிப்புகளை (சோயா பைட் (அ) சோயா மாவு (அ) சோயா) மங்கையர் மலருக்கு எழுதியனுப்புங்கள்.

மிகச் சிறந்த சமையல் குறிப்பிற்கு,


ரூ. 1000/-

பரிசாக வழங்கப்படும்

இண்டர்நெட் சமையல்!



தினமும் காலையில் எழுந்தால் என்ன டிபன் செய்வது? என்ன சமையல் செய்வது என்று மண்டையைப் போட்டுக் குடைந்து கொள்வது இல்லத்தரசிகளின் பிரச்சினை. சமையல் செய்வது கூட கஷ்டமில்லை. என்ன சமையல் செய்வது என்பதுதான் பிரச்சினை. கணவரிடமோ, குழந்தைகளிடமோ கேட்டால் இதற்குத் தீர்வு கிடைக்காது.




ஆனால் இந்த 21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நமக்கு இதற்கும் இண்டர்நெட் பதில் சொல்லும்! இந்தத் தலைமுறைக்கேற்றவாறு புதுப்புது சமையல்கள் செய்ய வேண்டுமா? கலோரி குறைந்த உணவு வேண்டுமா? குழந்தைகளின் பிறந்தநாள் பார்ட்டிக்கு என்ன சமையல் செய்வது என யோசனை வேண்டுமா? பட்டனை தொட்டு, கேள்விக் கணைகளை தொடுத்தால் துல்லியமாக விடைத்தரக் காத்திருக்கின்றது.

இண்டர்நெட்டுக்கும் சமையலுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கின்றீர்களா? இண்டர்நெட்டில் இல்லாத விஷயங்களே இல்லை. தொழில், வியாபாரம், படிப்பு மாத்திரமின்றி சமையல் பற்றியும் நம்மைப்போன்ற இல்லத்தரசிகளுக்கு வேண்டிய பல தகவல்களைத் தரக் காத்திருக்கிறது இண்டர் நெட்.

சமையல் (cookery) என்னும் வார்த்தையை இண்டர் நெட்டிலுள்ள தேடும் உபகரணத்தில் (search engine) டைப் செய்தவுடன் அதற்கு சம்பந்தப்பட்ட தகவல்கள் யாவையும் வரிசையாக தெரிவிக்கின்றது. நம் விருப்பம் சமையல் குறிப்பு எனில் 'ரெசிப்பி' என்னும் வார்த்தைகளை 'கிளிக்' செய்ய வேண்டும். இப்பொழுது அகர வரிசையில் நீண்ட பட்டியல் தயார். இந்தப் பட்டியலில் ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு, கோவா, மஹாராஷ்டிரா கர்நாடகா, பீஹாரி, காஷ்மீரி, குஜராத்தி (லாட்டரி சீட்டுகளல்ல) வெஜிடேரியன், நான் வெஜிடேரியன் எனப் பல மாநிலங்களின் உணவு வகைகள், சப்பாத்தி வகைகள், சப்ஜி, குருமா போன்ற வகைகள், பிரியாணி, கலந்த சாதங்கள், நான் (Naan) இனிப்பு, ஐஸ்கிரீம் என நீ...ண்ண்ண்ட இந்தப் பட்டியல் நாக்கில் நீர் சுரக்க வைக்கிறது. உதாரணமாக நம் தேர்வு ஆந்திரா என்றால் இதில் 40 அல்லது 45 புகழ் பெற்ற சமையல் குறிப்புகள் உள்ளன.

இதைத்தவிர பிரபல சமையல் நிபுணர்களும், சமையல் புத்தகங்கள் பிரசுரித்தவர்களும் webe site எனும் அவர்களின் பிரத்தியேக இடத்திற்கு நாம் சென்று (computer -ல்) அவர்களின் சமையல் குறிப்புகளை, அதன் புகைப்படத்துடன் பார்த்து, தேவையெனில் பிரிண்டரில் பிரிண்ட்டும் செய்து கொள்ளலாம். இண்டர்நெட்டில் நமக்குத் தேவையானவற்றை தேடுவதும் மிகச் சுலபம். சம்பந்தப்பட்ட வார்த்தைகளை, உதாரணத்திற்கு "டோக்ளா" என்னும் குஜராத்தி டிபன் செய்ய வேண்டுமெனில், இந்த வார்த்தையை டைப்





செய்தவுடன், இதன் சமையல் குறிப்பு கம்ப்யூட்டர் திரையில் நொடியில் வருகின்றது.

பன்னாட்டு சமையல் குறிப்புகளுக்கும், இண்டர்நெட்டில் குறைவில்லை. நியூஸிலாந்திலிருந்து ஒரு ஆந்திரப் பெண்மணி "அம்மா" என்னும் பெயரில் நூற்றுக்கணக்கான சமையல் குறிப்புகளை பதித்துள்ளார். ஹோட்டல்களில் "இன்றைய ஸ்பெஷல்" என்று போர்டு பார்த்திருக்கிறோம். இண்டர்நெட்டில் இதைப் போல் "இந்த வாரச் சமையல் குறிப்பு" என்று "ரவாக்கேசரி" குறிப்பு கொடுத்திருந்தார்கள். நம் பேரையும் பதிவு செய்து கொண்டு நம் சமையல் குறிப்புகளையும், இந்த வார சமையல் குறிப்பு என்று பதித்து உலகறியச் செய்யலாமே!

'சுலபமாக வரன்'தேட

திருமணங்கள் ஸ்வர்கத்தில் மட்டுமல்ல இண்டர்நெட்டிலும் நிச்சயிக்கப்படுகின்றன. "Matrimonial" எனும் பகுதிக்குச் சென்று நீங்கள் தேடும் வரனைப் பற்றிய விவரங்களைக் கொடுத்தால், நாம் கேட்ட தகுதிகளுக்குத் தகுந்தபடி பெரிய வரன் பட்டியல் வருகின்றது. இதில் சந்தாதாரர்கள் வரனைப் பற்றிய தகுதிகளை பதிவு செய்து கொள்ளலாம். சந்தா தொகை பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் தொகையைவிடக் குறைவுதான். வரனைப் பற்றிய முழு விவரங்களை, E.mail address, தொலை பேசி எண் மற்றும் பல தகவல்களை அறியலாம். எல்லாம் எண்ணி சில நொடிகளில் நடந்து விடுகின்றன.

நம் குழந்தைகளுக்கு summer home work கொடுத்து உள்ளனரா? அதையும் நாம் internet மூலமாக சொல்லித்தரலாம். என் சைக்ளோபீடியாவில் உள்ள Animal kingdom பற்றித் தெரிய வேண்டுமென்றால், நாம் வாசக சாலைக்குச் சென்று புத்தகம் தேடி எடுத்து, பக்கங்களைப் புரட்டி நமக்கு வேண்டிய விவரங்களை எழுதிக் கொள்ள வேண்டுமெனில் நாம் எத்தனை நேரம் செலவிட வேண்டும்? இண்டர்நெட்டில் பட்டனை தொட்டவுடன் நமக்கு வேண்டிய குறிப்புகள் தயார். பிரிண்டரில் பிரிண்ட்டும் நொடியில் வந்து விடுகின்றது.

இது மாத்திரமா? விடுமுறையில் நாம் எங்கெங்கு செல்லலாம். எங்கு தங்கலாம், எந்த மாதிரி உணவு வகைகள் கிடைக்கும், என்னென்ன அந்த ஊரில் பார்க்கலாம், எந்தெந்த 'ட்ராவல்ஸ்' உள்ளன, எத்தனை நாட்கள் சுற்றுலா? எவ்வளவு செலவாகும் என்ற விவரங்களை அறிய Travel என்கின்ற web button ஐ தட்டி விட்டால் நமக்கு எல்லா விவரங்களையும் பட்டியலிட்டு சொல்லி விடும். அதிலேயே நாம் செல்வதற்கு வேண்டிய டிக்கெட்டுகளையும் முன் பதிவு செய்து கொள்ளலாம்.

பயணத்திற்கு மாத்திரமல்ல, சினிமா டிக்கட்டுகளையும், டென்னிஸ் மேட்ச், கிரிக்கெட் மேட்சுக்குக் கூட டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கம்ப்யூட்டர் விளையாட்டுகளில் பொழுதைக் கழிப்பது, அதுவும் இந்த கோடை காலத்தில், நமக்கு எவ்வளவு நிம்மதி.

கம்ப்யூட்டர் என்றால் நமக்கென்ன அதில் இருக்கின்றது. அலுவலகங்களில் வேலை செய்பவர்களுக்கும், பள்ளி, கல்லூரிகளுக்கு செல்பவர்களும் மட்டும்தான் இதனால் உபயோகம் என்ற காலம் போய் இல்லத்தரசிகளுக்கும் உபயோகமாகவும் அரட்டை அடிக்கவும் செய்யலாம். அரட்டையா? கம்ப்யூட்டரிலா? ஆம். இதன் மூலம் அரட்டை அடிக்கவும் செய்யலாம். chat room என்னும் பட்டனை தட்டினால் சமையல் சம்பந்தப்பட்ட விஷயங்கள், மற்றும் நமது சந்தேகங்கள் இவற்றைப் பற்றி அரட்டை அடிக்கலாம். அதாவது நீங்கள் சொன்னபடி எப்படி செய்வது என்று கேட்கலாம். இதற்கு உலகில் எந்த மூலையில் உள்ள எவரேனும் அந்தப் பகுதியில் பதில் தரலாம். இப்படிப் பலர் எழுப்பும் வினாக்களுக்கு, மற்றும்

வெங்காய வடகம் உபயோகித்து, சட்னி போன்றவற்றை தாளிப்பவர்கள் இப்போது, ரொம்ப குறைவு. இது, தனியான மணம் கொடுக்கும். தாளிக்கும் வடகத்தை அவ்வப்போது, கொஞ்சமாக, நாமே தயாரித்து வைத்துக் கொள்ளலாம். ஒரு கால் கிலோ சின்ன வெங்காயத்தை உரித்து, பொடிப் பொடியாக நறுக்கிக் கொண்டு, ஒரு கருவேப் பிலை கொத்தை உருவி, இலைகளை பொடிசாக கிள்ளி வெங்காயத்துடன் கலந்து, அத்துடன் 50 கிராம் கடுகு, 50 கிராம் உளுத்தம் பருப்பு (உடைத்த பருப்பாய் இருந்தால் நல்லது) இவை களையும் கலந்து, பிசைந்து, ஒரு தட்டில் வைத்து, வெயில் காய வைத்து, காய்ந்ததும், அதை ஒரு டப்பா அல்லது பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இட்லி, தோசைக்கான தேங்காய் சட்னிக்கு இதைப் போட்டு தாளித்தால், சட்னி நல்ல ருசி, வாசனையுடன் இருக்கும்.

இதனை பருப்பு, கீரை மசியல், புளிக் குழம்பு இவற்றுக்கும் தாளிக்கலாம். வித்தியாசமான நல்ல மணம் இருக்கும்.

இந்த வடகத்தில் ருசியான துவையலும் பண்ணலாம். வாணலியில், ஒரு சின்ன ஸ்பூன் எண்ணெய் விட்டு, இரண்டு டேபிள் ஸ்பூன் வடகத்தை, எண்ணெயில் போட்டு, கடுகு வெடித்து வாசனை வரும் வரை (கருகாமல்) வறுத்து எடுத்துக் கொண்டு, அத்துடன் சிறிது உளுத்தம் பருப்பு, இரண்டு மிளகாய் வற்றலையும் லேசான முறுகலில் வறுத்துக் கொண்டு ஒரு தேங்காய் கீற்றை, பொடிப் பொடியாய் நறுக்கி அதையும் எண்ணெயில் வதக்கிக் கொண்டு, எல்லாவற்றையும் ஒன்றாக, சேர்த்து கூடத் திட்டமாக புளி, உப்பு, வெள்ளைப் பூண்டு பல் இவற்றையும் வைத்து, துவையலாக அரைத்து வைத்துக் கொண்டால், அருமையான வாசனையுடன், இட்லி, தோசைக்கு தொட்டுக் கொண்டால், அதிகமாகவே இரண்டு இட்லி இழுக்கும்.



— ஆதிலக்ஷ்மி

சம்பவங்கள், இதற்கு வந்துள்ள பதில்கள் அதாவது அரட்டைகள் திரையில் காணலாம். இதில் கிண்டலும் உண்டு. உதாரணமாக சொன்னபடி எப்படி செய்வது என்று ஒருவர் கேட்க, முன்பின் தெரியாத ஒருவர் நான் பதில் சொல்லுகின்றேன் என்று கடலைமாவு 1½ கப், சர்க்கரை 3 கப், பச்சை மிளகாய் 8, எண்ணெய் 4 கப் என்று வரிசையாகச் சொல்லி, எல்லாவற்றையும் கலந்து உங்கள் தலையில் கொட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லும் விஷமிகளும் தங்கள் பெயருடன் தெரிவிப்பவர்களும் உள்ளனர்.

வெளிநாட்டில், உள்ள நம் உறவினர்களுக்கோ குழந்தைகளுக்கோ E.mail மூலமாக நம்முடைய உள்ளூர்த் தொலைபேசி கட்டணத்திலேயே பல பக்கங்கள் கடிதம் எழுதி அனுப்பலாம். எழுதின சில நொடிகளிலேயே அவர்களுக்கு நம்முடைய கடிதம் சேர்ந்து விடும். நாம் கடிதம் எழுதி, போஸ்ட் ஆபீஸ் சென்று எடை பார்த்து, ஸ்டாம்பு ஒட்டி தபாலில் சேர்த்து 15 நாட்கள் கழித்து அவர்களுக்குச் சேர்ந்ததா இல்லையா என தவிக்கும் காலமெல்லாம் மலையேறி விட்டது.

இதற்கெல்லாம் தேவையானது முதலில் ஒரு கம்ப்யூட்டர். முன்பு வீட்டிற்கொரு வானொலி, வீட்டிற்கொரு தொலைகாட்சிப் பெட்டி என்றது போய், தற்போது வீட்டிற்கொரு கம்ப்யூட்டர் என்ற காலம் வந்து விட்டது. இந்த Internet connection வேண்டுமென்றால், நாம் 100மணி நேரம் அல்லது 1 வருடம். இரண்டில் எது சீக்கிரம் முடிகின்றதோ அதற்கு 3000/- ரூபாய் பணம் கட்ட வேண்டும். சாதாரணமாக 1லிருந்து 3 வாரத்திற்குள் கிடைத்துவிடும். VSNL என்னும் Videsh Sanchar Nigam Ltd நம்முடைய இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த நிறுவனத்திற்கு, நாம் இந்தப் பணத்தைக் கட்ட வேண்டும்.

நீங்கள் படிப்பவரோ, வேலை செய்பவரோ, தொழில் செய்பவரோ, திருமணத்திற்கு வரன் தேடுபவரோ, இல்லத்தரசியோ யாராக இருந்தாலும், உங்களுக்கு இந்த இண்டர்நெட் உபயோகமுள்ளது.

தற்போது 2வது வகுப்பிலிருந்து குழந்தைகளுக்குக் கம்ப்யூட்டர் பாடமாக வந்து படிக்க ஆரம்பித்து விட்டனர். இனிமேல் இதைப் பற்றித் தெரிந்து கொண்டு நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று அசட்டையாக இல்லாது, நாமும் 21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்க உள்ளோம். எத்தனையோ விதங்களில் நாம் நம்மை இக்காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக் கொண்டுள்ளோம். அதைப் போன்று இண்டர் நெட்டையும் அறிந்து கொள்ளலாமே!

- சாந்தா இராமானுஜம்



உற்சாகம் கொள்ள ஒரு தொடர்

அதிக வேகமான வாழ்க்கை, குழந்தைகளின் அதீதமான படிப்பு, நிறைய தேவைகள் உள்ள இல்லறம். இப்படிப் பல காரணங்களினால் இன்றைக்கு ஒவ்வொருவரும் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இதனால் எப்போதும் கோபம், படபடப்பு, வெறுப்பு ஏற்படுகிறது. செய்யும் தொழிலுக்காக முகத்தில் புன்னகையை அணிந்து கொண்டாலும் மனதில் எப்போதும் உளைச்சலுடனே வாழ்கிறோம்.

குறிப்பாக இந்தத் தன்மை பெண்களை மிகவும் பாதிக்கிறது. அவர்களின் உடல் நலம், மன நலம் சீர்கெட்டும் போகிறது. இது குடும்பத்தையும் பாதிக்கிறது. ஆனால் 'இந்த மன உளைச்சல் எனப்படும் டென்ஷனை நாம் வெல்ல முடியும். எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் நாம் அமைதியாக நிலை குலையாமல் நின்று வெற்றிகரமாக வாழ முடியும்' என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஆனால் அதுதான் உண்மை.

அதற்கு நாம் வெளியே எங்கும் போக வேண்டாம். நமக்குள்ளேயே இருக்கும் மகாசக்தியை வழிப்படுத்திக் கொண்டாலே போதும். இப்படிச் சொல்வதால் இது ஏதோ பக்திக் கட்டுரையோ, மனோதத்துவக் கட்டுரையோ அல்ல. சில உண்மைகளை உங்களுக்கு எடுத்துக் கூறி உங்களை வெற்றியடையச் செய்யபோகும் கட்டுரை அவ்வளவுதான்.

வாழ்வில் சில நுணுக்கங்களைப் புரிந்து கொண்டு விட்டாலே போதும், எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இருந்தும் மீளலாம். பிரச்னைக்குரிய மாமியாரா, மருமகளா, கணவரா, ஆபீஸா... 'நோ ப்ராப்ளம்' என கையாட்டிக் கொண்டே போகலாம்.

அது எப்படி...?

பார்க்கலாம்... வாருங்கள்...

எந்தக் காலத்திலும் இன்றிருப்பது போல் மருத்துவ நிலையங்களும், மருந்துக் கடைகளும் இருந்ததில்லை. இத்தனை மருத்துவர்கள் இருந்ததில்லை. இத்தனை நோயாளிகளும் இருந்ததில்லை. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கே வேலையில்லாமல் போய்விட்டது. இந்தத் தொடர், வாசகர்களாகிய உங்கள் மன உளைச்சலைத் தவிர்த்து, அதன் மூலம் சீரான உடல் நலத்தையும் தரக்கூடிய விதத்தில் அமையும். ஏனெனில் வியாதி என்பதே மனதால் ஏற்பட்டு, நம்மைச் சுற்றியுள்ள சக்திப் படலத்தைப் பாதித்து, அதன் புற வெளிப்பாடாக நம் உடலில் நோய் அறிகுறிகளைத் தோற்றுவிக்கிறது. ஆகவே மனதை நல்ல சீரான முறையில் வைத்துக் கொள்ளப் பழகினால் மறைந்திருக்கும் மனோ சக்தியையும் வெளிப்படுத்தி நம்மை நாமே உடல், பொருள் ரீதியாக உயர்த்திக் கொள்ள

பிரச்னையா... நோ ப்ராப்ளம்

எஸ்.ஜி. ஜெயராமன்

முடியும்.

மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் டென்ஷன் ஏற்படுத்தும் பாதிப்புகளைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். டென்ஷன் என்ற இந்த முகமறியாத எதிரியை ஜெயிக்க, நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, டென்ஷனே இல்லாமல் செய்து கொள்ள நாம் தயார்ப்படுத்திக் கொள்வோம்.

நமது அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும் குறுக்கீடுகள், தடங்கல்கள், நமது எதிர்பார்ப்புகள் நிறைவேறாது போதல் போன்ற நிகழ்ச்சிகள் நமக்குக் கோபத்தை உண்டு பண்ணுகின்றன. இந்தக் கோபத்தை அப்படியே அடக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மனதை பாதித்து, மன இறுக்கத்தை அதாவது டென்ஷனை உண்டு பண்ணுகிறது. உதாரணமாக வேலைக்குச் செல்லும் பெண்களை எடுத்துக் கொள்வோம். வேலைக்குச் சென்று திரும்பும் பிரயாண சமயத்திலும், வேலை செய்யும் இடத்தில் சக மனிதர்கள், மேலதிகாரிகள் இவர்களுடைய நடத்தையாலும் சில சமயம் கோபமும், எரிச்சலும் ஏற்படலாம்; இதை வெளியே காட்டிக் கொள்ள முடியாது. வீட்டிலும் அநுசரணையான கணவன்மாராக இல்லாமல் மனைவி தலையில் எல்லா சுமையையும் ஏற்றிவிட்டு, விட்டேத்தியாக உலவும் ஆண்களுக்கு வாழ்க்கைப் பட்ட துரதிருஷ்டசாலிகள், தங்கள் மன வேதனையைத் தங்களுக்குள்ளேயே வைத்து புழுங்கிக் கொண்டிருப்பார்கள்.

வீட்டிலிருக்கும் பெண்களுக்கு வேலைக்குச் சென்று திரும்பும் அலைக்கழிப்பு இல்லை என்றாலும், வளர்ந்து வரும் பிள்ளைகள் சகவாச தோஷத்தினால் வித்தியாசமாக நடக்க முற்படுவதால், பொறுப்பற்ற கணவன்மாரால், மற்ற இதர குடும்ப சூழ்நிலைகளால் மனப்புழுக்கம் ஏற்பட்டு அவதிப்படுவார்கள். இங்கும் வெளியேறாது 'உள்ளுக்குள்ளேயே' தங்கி விடும் கோபம், ஏமாற்றம், எரிச்சல் என்று டென்ஷன் இவர்களின் நிதானத்தன்மையை இழக்கச் செய்யும். டென்ஷனிலிருக்கும் போது அற்ப விஷயங்கள் கூட விஸ்வ ரூபமெடுத்து மனதைப் பெரிதும் பாதிக்கும்.

டென்ஷன் நமது உடலில் ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு, நாம் நமது மூளையின் செயல்பாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரண நிலையில் அதாவது நாம் விழித்திருந்து செய்யும் செயல்களான நடத்தல், பேசுதல், கேட்டல், எழுதுதல், உண்ணுதல் என்று ஐம்புலன்களால் காரியங்கள் செய்து கொண்டிருக்கும் போது நமது மூளை ஒரு வினாடிக்கு 13 அதிர்வுகளோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

குரலை உயர்த்திப் பேசும் போது இந்த அதிர்வு வினாடிக்கு 14 லிருந்து 16 ஆக உயரும்.

சூடான வாதப் பிரதி வாதங்கள், சண்டை என்ற நிலையில் இது வினாடிக்கு 17 லிருந்து 20 ஆகிறது.

மிகவும் டென்ஷனாயிருக்கும் போதும், மனக் குழப்பத்திலிருக்கும் போதும் 21 லிருந்து 32 அதிர்வுகளாகி, 32 அதிர்வுகளைத் தாண்டும் போது பைத்தியம் என்ற நிலை ஏற்படும்.

ஆக உணர்ச்சி வசப்படும்போது மூளையின் அதிர்வுகள் அதிகரிக்கும் போது ரத்த அழுத்தம் அதிகமாகிறது; நெஞ்சு வேகமாகத் துடிக்க ஆரம்பிக்கிறது; பேச்சு குளறுபடியாகிறது. உடல் முழுவதும் 'ஜில்'லென்று ஒரு உஷ்ணம் பரவுகிறது. உடல் நடுக்கம் ஏற்படுகிறது. மொத்தத்தில் சம நிலை தவறுகிறது.

இந்த சமயங்களில் மனப்புழுக்கத்தை வெளிக்காட்ட முடியாமல் உள்ளேயே வைத்து மறுகும் நிலையில் இந்தக் கெடு பலன்கள் இன்னும் தீவிரமாக இருக்கும். உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு பி.பி., சர்க்கரை வியாதி, ஆஸ்துமா ஏற்படுகிறது.

ஆக, டென்ஷன் என்ற நமது எதிரியை ஜெயித்துக் காட்ட முதல் படி நிதானத்தைக் கடைப்பிடித்தல் அல்லது நிதான மிழக்காமலிருத்தல் முக்கியமானது. இது எப்படி சாத்தியம்? மூளை அதிர்வுகள் வினாடிக்கு 13-ஐத் தாண்டாமல் பார்த்துக் கொள்வதன் மூலம். இது எப்படி சாத்தியம்?

நான்கு தாரக மந்திரங்கள் நமக்கு உதவத் தயாராயுள்ளன.

1. இந்தக் கணம் அல்லது நிகழ்வு தவிர்க்க முடியாதது.

2. எதிர் பார்ப்புகளைத் தவிர்த்தல் ஏமாற்றத்தைத் தவிர்த்தல்.

3. நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு நாமும் ஒரு வகையில் பொறுப்பு.

4. கசப்பான அநுபவங்களையும் இனிய அநுபவங்களாக மாற்றிக் கொள்ளலாம்.

மேலே சொன்ன நான்கு தாரக மந்திரங்களும் நமக்கு அன்றாட வாழ்க்கையில் எவ்விதம் உதவக் கூடும்? சில உதாரணங்களைப்

மேசை வழிய
கோப்புகள்...
விரல் நுனியில்
சிகரெட்டுடன்
வராண்டாவில்
ஊழியர்கள்...

— பத்மினி சுரேஷ்

பார்க்கலாம்.

சம்பவம் 1 : ஒரு வேலை நாளின் காலை நேர வேலை மும்முரத்தில் இருக்கிறீர்கள். மிக்ஸியில் எதையாவது அரைத்துக் கொண்டிருக்கிறீர்கள். திடீரென்று மின்சாரம் தடைப்பட்டு, 'மிக்ஸி' நின்று விடுகிறது. 'சனியன் பிடித்த கரண்ட் இப்படிக் கழுத்தறுக்கிறதே' என்று ஆத்திரம் வருகிறது. திரும்ப கரண்ட் வருமோ வராதோ என்ற சந்தேகத்தில் 'சற்றுப் பொறுத்துப் பார்க்கலாமா? கரண்ட் வரா விட்டால் என்ன செய்வது?' என்றெல்லாம் குழம்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

உங்கள் எதிரி டென்ஷன், உங்களுக்குள் பிரவேசிக்கத் தயாராயிருப்பவர், உங்களின் இந்தக் குழம்பிய மனநிலையைப் பயன்படுத்தி, 'சடக்' கென்று உள்ளே நுழைந்து விடுகிறார். இப்போது உங்கள் நிலைமை கஷ்டம்தான்.

'பவர் கட்'டினால் மிக்ஸி நின்று விட்டதா? நிதானியுங்கள் மூக்கு வழியே நன்றாக மூச்சை உள்ளுக்கிழுத்து வாய் வழியே வெளி விடுங்கள். நான்கைந்து முறை இவ்வாறு செய்யுங்கள். 10லிருந்து 1 வரை இறங்கு வரிசையாக, கண்களை மூடிக் கொண்டு மனதிற்குள் நிதானமாக எண்ணுங்கள். இப்போது உணருங்கள்.

1. இந்தக் கணம் தவிர்க்க முடியாதது (மிக்ஸி நின்று போனது).

2. மின்சாரம் தடையில்லாமல் தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்க்காமல் இருந்திருந்தால் இந்த ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொண்டிருக்கலாம்.

3. இது மாதிரி சந்தர்ப்பங்களில் நிலை குலையாமலிருக்க பழகிக் கொள்ளாமலிருந்த வகையில் இந்த ஏமாற்றம் ஆத்திரம் ஆகியவற்றிற்கு நானும் ஒரு வகையில் பொறுப்பு.

4. மிக்ஸியில் பாதி அரைபட்ட நிலையிலுள்ள சங்கதியோடு வேறு எதையாவது சேர்த்து ஒரு சுவையான புது அயிட்டம் உண்டு பண்ணுங்களேன்! இம்மாதிரி அசந்தர்ப்பங்களை நல்ல சந்தர்ப்பங்களாக மாற்றிய துணுக்குச் செய்திகள், உபயோகமான 'டிப்ஸ்'. பல பெண்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன! உங்கள் அநுபவத்தையும் எழுதி, அது அச்சேறினால் உங்களுக்கு மகிழ்ச்சிதானே! இப்போது கோபத்திற்குப் பதிலாக ஒரு ஆக்க பூர்வமான உணர்வு உங்களை ஆட்கொண்டிருப்பதை உணர முடிகிறதா?

சம்பவம் 2 : கணவர் குழந்தைகளோடு நன்றாகப் பேசப்படும் ஒரு திரைப்படத்தைப் பார்க்கச் செல்கிறீர்கள். வழியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கி தியேட்டருக்கு 'லேட்'டாகப் போய் படம் பார்க்க முடியாமல் போய் விடுகிறது. ஏமாற்றம், கோபம் ஏற்படுகிறதா? சம்பவம் 1ஐ நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

1. இந்த நிகழ்வு தவிர்க்க முடியாதது.

தோட்டத்தில்
காதலர்கள்...
பூக்கள்
சினிமா
பார்த்தன....

— பத்மினி சுரேஷ்

2. போக்குவரத்தில் நெரிசல் இருக்காது என்று எதிர்பார்த்ததைத் தவிர்த்திருக்கலாம்.

3. வீட்டை விட்டு இன்னும் கூட சற்று முன்னால் புறப்பட்டிருக்கலாம். அவ்வாறு செய்யாதது, இந்த ஏமாற்றத்திற்கு என்னையும் பொறுப்பாக்குகிறது.

4. சினிமாவிற்குச் செலவழிக்கவிருந்த பணத்தில் நல்ல ஒரு ஓட்டலுக்குச் சென்று, சுவையான உணவு வகைகளைச் சாப்பிட்டு மகிழுங்கள். மகிழ்ச்சியோடு வீடு திரும்புங்கள். டென்ஷனுக்கு 'டாடா' சொல்லுங்கள்!

சம்பவம் 3 : உங்கள் அண்டை வீட்டுக்காரர்கள் எப்படிப்பட்டவர்கள்? அதுவும் உங்கள் மிக அடுத்த அண்டை வீட்டுப் பெண்மணி எப்படி? நல்ல மாதிரியா? பிரச்னை இல்லை. ஆனால் சில சமயங்களில் அகம்பாவிகள், கர்விகள், பொறாமைக் குணம் பிடித்தவர்கள் என்று அண்டை அயலார் வாய்த்து விடுவது உண்டு. இவர்களுக்காக நீங்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்க முடியாது. அப்படியே போனாலும் புதிய இடத்தில் நிலைமை இதைவிட மோசமாயிருக்கலாம். ஆகவே உங்கள் மனது நோகும்படியோ அல்லது கோபமடையும் படியோ அண்டை வீட்டுப் பெண்மணியோடு ஒரு உரசல் ஏற்பட்டு விட்டதா? ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. இந்தக் கணம் தவிர்க்க முடியாதது.

2. அடுத்த வீட்டுப் பெண் நல்ல குணம் படைத்தவளாயிருப்பாள் என்று எதிர்பார்க்காமலிருந்திருக்கலாம்.

3. ஒருவருடைய உண்மையான சுபாவத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாத நிலையில் யதார்த்தமாகப் பழகப் போய் ஏமாற்றத்தை வரவழைத்துக் கொண்டதில் என் பங்குமுள்ளது. அந்த வகையில் இந்த நிகழ்விற்கு நானும் பொறுப்பாளியாகிறேன்.

4. இந்தக் கசப்பான அநுபவம் உங்களுக்கு இனி வருங்காலத்தில் மனிதர்களை எச்சரிக்கையுடன் எடை போடக் கற்றுக் கொடுக்குமல்லவா? இனி வரும் அநுபவங்கள் இனிமையானவையாக இருக்க இந்தக் கசப்பான நிகழ்ச்சி அடி கோலுகிறதுதானே!

சம்பவம் 4 : கணவன் மனைவிக்கிடையே



குழந்தைகளுக்கு பால் ஜவ்வரிசியில் கஞ்சி போட்டு கொடுத்தால் மிகவும் நல்லது. ஆனால் பால் ஜவ்வரிசி முன்பு போல் கிடைப்பது இல்லை. நைலான் ஜவ்வரிசியை எண்ணெய் விடாமல் வறுத்து, மிக்ஸியில் திரித்து கஞ்சி போட்டுக் கொடுக்கலாம்.

— பி. ஜானகி

யான பிரச்னைகளுக்கும் இந்த விதிகள் பொருந்தும். இன்னும் சொல்லப் போனால் இவ்விதிகளைக் கடைப்பிடித்து அதிசயத்தக்க மாறுதல்கள் குடும்பத்தில் தம்பதியருக்கிடையே ஏற்பட்டு அமைதியும் ஆனந்தமும் அடைந்தவர்கள் அநேகம். கணவன் மனைவிக்கிடையே பரஸ்பர ஒற்றுமையோ அல்லது ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையோ உள்ள குடும்பங்களில் இந்த விதிகள் அருமையாகச் செயல்படுகின்றன.

மனைவியிடம் குறைகாணும் கணவன்மார்கள், தங்களது உணர்வுகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் கணவர்களால் உதாசினப்படுத்தப்படுவதாக எண்ணி குமைந்து கொண்டிருக்கும் மனைவிமார்கள் - இவர்கள் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்துப் போகும் மனநிலை இவ்விதிகளால் ஏற்படும். இது அநுபவத்தில் கண்ட உண்மை.

எதனால் கணவன் மனைவியிடையே பிரச்னை ஏற்படுகிறது? எதிர்பார்ப்பினால். கணவன் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று மனைவியோ அல்லது மனைவி இவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்று கணவனோ எதிர்பார்த்து, அவரவர் எதிர்பார்ப்புகளுக்கிணங்க ஏதொன்றும் நடைபெறாதபோது முதலில் ஏமாற்றமும், தொடர்ந்து ஆத்திரமும் டென்ஷனில் கொண்டு போய் விட, அமைதி விடை பெற்றுக் கொள்கிறது. இந்த இடத்தில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

ஆணும், பெண்ணும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய இரு விஷயங்களல்ல. ஆணுக்குப் பெண் உயர்ந்தவள் என்றோ பெண்ணுக்கு ஆண் உயர்ந்தவன் என்றோ பேசுவது அபத்தம். இரண்டு விஷயங்களை ஒப்பிட்டுப் பேச அவற்றிற்கிடையே பொதுவான அம்சங்கள் என்று எவையாவது இருக்க வேண்டும். ஜான் ரஸ்கின் என்ற அறிஞர் ஒரு முறை கூறினார் : "ஆணுக்குப் பெண் உயர்வு, பெண்ணுக்கு ஆண் உயர்வு என்று பேசுவது அபத்தம். ஒருவரிடமிருப்பது மற்றவரிடத்தில் இல்லை. ஒருவர் மற்றவரை பூர்த்தி செய்து மற்றவரால் பூர்த்தியாகிறார்."

கணவன் மனைவியருக்கிடையே பிரச்னை வரும்போது 'இந்தக் கணம் தவிர்க்க முடியாதது. நடந்த நிகழ்ச்சிக்கு நானும் ஒரு வகையில் பொறுப்பு, எதிர்பார்ப்புகள் இல்லையெனில் ஏமாற்றங்களும் இல்லை' என்ற விதிகளை நினைவுபடுத்திக் கொண்டால், கசப்பு இனிப்பாகி முடிவு நன்றாக அமையும். உள்ளதை உள்ளபடி ஏற்றுக் கொள்ளுங்கள். டென்ஷன் ஏமாந்து போகட்டும்!

இதுவரை நீங்கள் படித்த விஷயங்களை கீழ்க்கண்டவாறு தொகுத்து வழங்கியுள்ளேன்.

1. அவசர அவசரமாக வாழ வேண்டிய இந்த கால கட்டத்தில் ஒவ்வொரு நிமிடமும் டென்ஷனை ஏற்படுத்தும் வல்லமை பெற்றுள்ளது.

2. எப்போதும் உணர்ச்சி வசப்பட்டு கோபப்படுவதால் நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்கிறோம்.

3. கோபம், பதட்டம் இவை நமது மூளை இயல்பான நிலையில் செயல்படும்போது அதிரும் வேகத்தை பலமடங்கு உயர்த்தி, மோசமான உடல், மன பாதிப்புகளை உண்டு பண்ணுகின்றன.

4. இவற்றை வெல்வதற்கு முதல்படி நமது மூளை அதிர்வு வேகத்தை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது. மூச்சை மூக்கு வழியே உள்ளிழுத்து, வாய் வழியே வெளியேற்றுதல், இறங்கு வரிசையில் எண்ணுதல் ஆகிய உத்திகளைக் கையாண்டு உடனடியாக மூளை அதிர்வை சமநிலைப்படுத்துதல்.

5. தொடர்ந்து மூளை சம நிலையில் இயங்கவும், யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, உள்ளதை உள்ளபடி உணர்ந்து செயல்படவும் நான்கு விதிகளைக் கடைப்பிடித்து நன்மை அடைதல்.

டென்ஷனை வென்றாகி விட்டது. எந்த இக்கட்டான சூழ்நிலையையும், நிலை தடுமாறாமல் இருந்து, சமாளிக்கத் தயாராகி விட்டோம். நல்லது. ஆனால் இது மட்டும் போதுமா?

படிப்படியாக நமக்குள்ளேயே மறைந்திருக்கும் உள் மன ஆற்றலை வெறிப்படுத்தி, கையாளக் கற்று டென்ஷன் என்ற ஒன்றே இல்லாத வாழ்க்கையை வாழப் பழகிக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அதற்கான வழி முறைகளை இப்போது பார்க்கலாம்.

ஆனால் அதற்கு முன் மனித மனம், மனித மூளை இவற்றிடையே உள்ள தொடர்பு, இவை செயல்படும் விதம், மூளையை ஆளுகை செய்யும் மனதை நமது ஆளுகைக்குட்படுத்துவது எவ்வாறு என்பதை முதலில் தெரிந்து கொள்வோம். அத்துடன் உள்மன ஆற்றலைக் கொண்டு, நாம் நினைப்பதை எப்படி சாதித்துக் கொள்வது என்பதையும் கற்றுக் கொள்வோம்.

(தொடரும்)

எந்தக் கல்யாணம் செல்லுபடியாகும்?



புல்லும் பூவுமாய் தூர தூரக் கட்டிய இரு மாலைகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டு வகிட்டில் குங்குமம் இட்டுக் கொண்டு புடவைத் தலைப்பைப் போர்த்திக் கொண்டால் 'கல்யாணம்' முடிந்து விட்டது என்று நம் புதிய தலைமுறைப் பெண்கள் நம்பக்கூடிய அபாயம் இருக்கிறது. (ஹிந்திப் படங்களில் அப்படித்தானே வருகிறது?)

கல்யாணத்துக்குப் 'புனிதம்' தம்பதிகள் வாழப் போகிற வகையில் வரும். கல்யாணத்துக்குச் 'செல்லுபடி' அது நடத்தப்படுகிற விதத்தில் கிடைக்கும்.

கல்யாணத்துக்கு 'புனிதத்துவம்' நிலைநாட்டப் படுகிறதோ இல்லையோ 'சட்டபூர்வமான அங்கீகரிப்பு' பெறப்படுவது மிக முக்கியமல்லவா?

அக்னி சாட்சியாக ஓங்கி ஒலிக்கிற மந்திர உச்சாடன பலத்தோடு சப்தபதி செய்வித்து அத்தனைக்கும் மேலே 'தாலி'யும் கட்டி இந்து திருமணங்களை நடத்துகிறார்கள். ஊராரும் உறவினரும் கூட இருந்து சமூக அங்கீகரிப்பு தருகிறார்கள்.



அப்படியே அந்தந்த மதங்களில் அதனதன் சடங்குகள் மீறப்படாமல் திருமணங்கள் நடத்தப்படுகின்றன. சீர்திருத்தத் திருமணங்கள் தலைவர்கள் முன் நடக்கின்றன. இவையெல்லாவற்றையும் சமூகம் ஏற்கிறது. சட்டம் ஏற்கிறதா? ஒரு பிரச்னை என்று வந்தால் ஒரு 'முரண்பாடு' நேர்ந்தால் எத்தனை புரோகிதர், கல்யாணத்துக்கு வந்த உற்றார், உறவினர் கோர்ட் ஏறி சாட்சியம் சொல்ல வருவார்கள்? அவற்றுள்ளும் எத்தனை சாட்சியங்கள் சட்டத்துக்கு முன் நிற்கும்?

இப்போது 1998ம் வருடத்தில் கடந்த நாலு மாதங்களுக்குள் இறந்து போன ஒவ்வொரு கடைநிலை ஊழியருக்கும் குறைந்தபட்சமாக மூன்று சம்சாரங்களாவது வீடியோ, ஃபோட்டோ சகித இந்து திருமண சம்பிரதாய சாட்சியங்களோடு 'குடும்ப பென்ஷன்' மற்றும் 'கடைசி ஊதிய ஆதாயங்கள்' கோரி வந்தனர். எந்தக் கல்யாணத்தைச் சட்டபூர்வமானதாகக் கொள்வது? மூன்று கல்யாணங்களுமே பத்திரிகை அடிக்கப்பட்டுச் செய்யப்பட்டவை. கிறித்துவ மதத் திருமணத்திலாவது ஓரளவு கட்டுப்பாடு ஒழுங்கிருக்கிறது. திருமணம் செய்வித்த பாதிரியார் சாட்சி சொல்ல வாய்ப்பிருக்கிறது. பிற சம்பிரதாயங்களைப் பற்றிச் சொல்லவே முடிவதில்லை.

பெரும்புள்ளிகள் 'சட்ட அங்கீகரிப்பு' குறித்துக் கவலைப்படுவதில்லை. சட்டபூர்வமில்லாத அவர்களின் உறவுகள் மிக எளிதாக சமூக அங்கீகரிப்பைப் பெற்று விடுகின்றன. சட்டம் அவர்கள் பணத்துக்குள் உருவமிழந்து தன்மையிழந்து விடுகிறது.

'ஆயிரங்காலத்துப் பயிர்' என்கிற திருமணத்தை மேற்கொள்கிற இளம்பெண்கள் வரவிருக்கிற தலைமுறைகளுக்கு பதில் சொல்ல வேண்டியவர்களாகிறார்கள்.

இந்தப் பொறுப்பைப் பற்றி இளம்பெண்கள்

எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கிறார்கள்? 'சட்டபூர்வம்' பெறாமல் தத்தளிக்கக்கூடிய திருமணங்களைக் 'காப்பாற்றிவிட' நாம் அக்கறை எடுத்துக் கொண்டு அவற்றை 'ரெகுலரைஸ்' செய்வது முக்கியமில்லையா?

இந்து சம்பிரதாயப்படி திருமணம் முடிந்து வெளிநாடு போகிறான் ஒருத்தன் என்று வைத்துக் கொள்ளலாம். அங்கும் ஒரு பெண்ணை முன்போ, பின்போ திருமணம் ஏதோ ஒருமுறையில் செய்கிறான் என்று வைத்துக் கொள்ளலாம். அதில் வாரிசும் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம். எந்தக் கல்யாணம் செல்லும் என்பதைக் கோர்ட் தீர்மானம் செய்யும்போது அந்தத் தீர்மானம் சம்பந்தப்பட்டவர்களின் 'லாஜிக்' மற்றும் 'நியாய உணர்வை' மதிக்கும் வகையில் இருக்காது.

சமீபத்தில் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட பெண்ணின் அதிகாரபூர்வமான கல்யாணம் 'கண்டு கொள்ள'ப்படவில்லை. காரணம் அவள் இந்தியாவிலிருந்து 'மாணவர் விசா' எடுத்து கணவனுடன் போயிருந்தாள். திருமண உறவு காட்டப்படவில்லை விசாவில்.

திருமணம் 'பதிவுசெய்யப்பட்டு விட்டால்' சரிதானே! என்று கேட்கலாம். முறைப்படி 'நோட்டீஸ்' ஒரு மாதத்துக்கு முன் கொடுக்கப்பட்டு 'பதிவு நாள்' குறிக்கப்பட்டு பின் பதிவுசெய்யப்பட வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அதிகம் படிக்கப்படுகிற செய்தித்தாள் மற்றும் சஞ்சிகைகளில் 'திருமண முன் அறிவிப்பு' வருவது நல்லது. அதுவும் 'சட்டபூர்வம்' சேர்க்கும்.

'நோடரி பப்ளிக்' என்ற அதிகாரிகள் முன் நடந்த அல்லது அவர் கையொப்பமிட்ட திருமணச் சான்றிதழ் எவ்வளவு தூரம் செல்லும்? செல்லவே செல்லாது என்பதுதான் அதிர்ச்சியான உண்மை. ஒரு 'ஒப்புதல் வாக்கு மூலம்' அதாவது 'Affidavit'க்கு எத்தனை சக்தியோ அவ்வளவே இதற்கும். ஒரு நோட்டரி திருமணத்துக்கு மிகக் குறைந்தபட்ச தாம்பத்திய உரிமையான 'ஜீவனாம்சம்' கூட 'வழக்கு' என்று வரும்பட்சத்தில் மறுக்கப்பட்டு விடும் அபாயம் இருக்கிறது. சட்ட அமைப்பின் மூக்கின் கீழ் நடக்கும் நோட்டரி திருமணமே 'சட்ட பூர்வம்' பெறாதது என்றால் போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டர் தலைமை அவசரத் திருமணங்களைப் பற்றி என்ன சொல்வது? நோட்டரி திருமணம்தான் பின்னே நோட்டீஸை செய்யப்படுவது எதற்காம்?

பல வருடம் ஒன்றாய் வாழ்ந்த ஒரு தம்பதி சட்டதிட்ட கட்டாயங்களுக்காக உதாரணத்துக்கு பாஸ்போர்ட் விசாவுக்காக நோட்டரி பப்ளிக் முன் கையொப்பமிட்டு திருமணச் சான்று பெறலாம். அவ்வளவே நோட்டரி திருமணத்தின் முக்கியத்துவம்.

இந்தச் சான்றிதழ் மூலம் 'கல்யாணத்தின்' மற்ற பிற அந்தஸ்துகளைப் பெற முடியாது. காதலர்கள் விழுந்தடித்துக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷன் முன் போய் நிற்பதையும் இனிமேலாவது தவிர்க்கலாம்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் கணவன் மனைவி ஆவதற்கு 'சட்ட அங்கீகாரம்' கிடையாது. போஸ்ட் மாஸ்டர் முன்னிலையில் உயில் எழுதினால் எப்படியோ அப்படித்தான். 'போஸ்ட் மார்ட்டம்' ரிப்போர்ட்டில் டாக்டர் கையொப்பம் வேண்டுமே ஒழிய ஒரு பெரிய சமூக ஊழியர் கையொப்பம் போட்டால் எப்படி? அப்படியேதான்.

உன் பாவாடை உழைக்குமா, ஐம்பது ரூபாய் ரவிக்கைத் துணி சாயம் போகுமா, ரெண்டாயிரம் ரூபாய் பட்டுப் புடவை பத்து வருடமாவது வருமா, ரெண்டு பவுன் செயின் ஆயுசு காலத்துக்கு அறுகாமல் இருக்குமா என்று பொறுமையாக யோசித்து அலசி அலசி ஆராய்ந்து வாங்கும் பெண்கள் விலை மதிப்பேயில்லாத ஆயுள் கால ஒப்பந்தத்துக்கு, இல்லை, இல்லை, தலைமுறைகளுக்கு ஊடாடிப் பாயப் போகிற திருமண உறவை 'ஆச்சப் போச்சென்று' முடிவெடுத்து மேலே பூசிக் கொண்டு விதியைக் குற்றம் சொல்வது ஆச்சரியத்தில் ஆச்சர்யம்.

முழுசாக சுயசிந்தனையோடு திருமணம் முடிவு செய்யப்பட வேண்டும். தம்பதிகளுக்கு மனப்பொருத்தம் இருக்க வேண்டும். திருமணத்துக்குப் பின் அந்த உறவை மிகவும் புனிதமாக மதித்து எந்தக் கால கட்டத்திலும் 'திருமணம் தாண்டிய' உறவுக்குப் பணியாத மனஉறுதியும் வேண்டும்.


— மாலதி



உங்கள் குழந்தை விரல் சூப்புகிறதா? ஹோமியோபதி மருத்துவ முறையில் வீரியப் படுத்தப்பட்ட சாப்பாட்டு உப்பை அரை அவுன்ஸ் வெந்நீரில் இரண்டு சொட்டுக்கள் விட்டு சில வாரங்கள் உள்ளுக்குக் கொடுத்து வந்தால் விரல் சூப்பும் பழக்கத்தைத் தானே விட்டுவிடும். அருகில் இருக்கும் சிறந்த ஹோமியோபதி மருத்துவரை அணுகுங்கள்.

— புஷ்பா பழனி

12 கல்யாணி




அழகான பச்சைப் புல்வெளி. அதன் ஓரத்திலே கண்ணை உறுத்தாத மூங்கில் வேலி. புல்வெளியின் நடுவிலே பூத்துக் குலுங்கும் பூந்தோட்டம். மஞ்சள், சிவப்பு ஊதா, ரோஸ் எனக் காற்றில் கண்சிமிட்டிச் சுழலும் வண்ணப் பூக்கள் அதில் வட்டமாய் சுற்றிச் சுற்றித் திளைக்கும் வண்ணத்துப் பூச்சி. மெல்லத் தழுவும் இதமான காற்று. வெள்ளிக் கீற்றாய் அளவாய்ப் பெய்து பயிர் நனைக்கும் மழை. அதில் சிலிர்த்துச் சிரிக்கும் பறவைகள். அந்த இடத்திலேயே ஒரு இனிமை. காற்றில் நாசி தழுவும் செயற்கையற்ற மணம். தொட்டதெல்லாம் பரிணமிக்கும் செழிப்பு. படர்ந்து விழுந்த கொடியைத் தழுவித் தூக்கி நிறுத்தும் கம்பீரமான மரம். இது தான் அழகு. இதில்தான் பாதுகாப்பு. இது தருவதுதான் இன்பம். இங்கேதான் குடும்பம்.

பேயாய் ஒரு சூறைக் காற்று. எரிக்கும் வெட்டாய் ஒரு மின்னல். சின்னப் பொறியிலிருந்து எழும் நெருப்பாய் படர்ந்த காட்டுத் தீ. பூமி பிளந்து எழுந்த தீக்கங்குகள் எங்கே தொடங்கியது, எப்படிப் பரவியது என்று புரியு முன்னரே விறுவிறுவெனப் படர்ந்து, அந்தப் பிரதேசமே கருகிய சுடுகாடாய்... அழகுக்கும், இனிமைக்கும், வளர்ச்சிக்கும் இங்கே இனி இடமில்லை என்பது போல் காந்தித் தீய்ந்து, வற்றி, சோகமாய் மடிந்து கிடந்த கோலம். காற்றில் கூடத் தீ வாசம். பச்சைப் புல்லிலும் காய்ந்து மடிந்த செடிகளிலும் கூடப் பிண வாடை.

தேடித் தேடிப் பார்த்துக் கட்டிய வீடு பூகம்பத்தில் வீழ்ந்து விட்டது.

வேஷங்கள்



பார்த் துப் பார்த்து நட்டு, உரமிட்டு வளர்த்த செடிகள் கருகி விட்டன. ஒரே கேள்வி "என் பெண்ணைப் பற்றி, பெற்றவன் எனக்கில்லாத அக்கறை உங்களுக்கென்ன?" என்று சீதா கேட்ட கேள்வி யில் அஸ்திவாரமே ஆடி விட்டது.

கடந்த ஒரு வாரமாக இந்தக் குடும்பத்தில் பேச்சில்லை, சிரிப்பில்லை, சந்தோஷமில்லை. அலாதியான அமைதியுடனிருக்கும் சாம்ப சிவத்தின் முகத்தில் ஒரு முகமூடியாய் சோக ரேகை படர்ந்தது. திடீரென்று அவர் நடை தளர்ந்தது. கம்பீரமான நிமிர்ந்த முதுகு கூனியது. அவர் பார்வை எங்கோ வெறித்தது. இத்தனை நாள் வாழ்க்கையின் வெறுமை திடீரென்று புரிந்தது. இந்தத் தாக்கத்தில் அவர் மேல் விழுந்த அடி மிகவும் பலமாக இருந்தது.

அவர் முகத்தைப் பார்க்கும்போதே சீதா கோபத்தில் குமுறினாள். ஏதோ ஒரு உள் அர்த்தத்துடன் நல்லவர் போல் என்னிடம் வேஷம் போட்டு, என்னைக் கலி யாணம் செய்து கொண்டதுடன் என் குழந்தையையும் என்னிடமிருந்து பிரிக்கிறார் என்ற எண்ணம் அவளிடம் தீவிரமாகப் படர்ந்திருந்தது.


வழக்கம் போல் சாம்பசிவன் காலை உணவு தயார் செய்தார். ஆனால் அதிகாலையில் எழுந்து பீச்சுக்குப் போகலாமா என்று தீபா விரல் பற்றிய போது பதில் கூறாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவள் அவர் ஷூவை எடுத்து வந்த போது 'வேண்டாம்' என்று தலை யசைத்து விட்டு தன் அலுவலக வேலையில் மனம் பதியாமல் முகம் மறைத்தார்.

"வாக்கிங் போலாம் வாங்க..." என்று தீபா அவர் கையைப் பற்றி இழுத்தாள். அவர் மெல்லத் தவிர்த்தார். "அம்மா, அப்பா கிளம்ப மாட்டேங்கறார்" என்று தூங்கும் சீதாவை முதுகிலடித்து எழுப்பினாள். "அப்பா வாங்க" என்று கையையும், காலையும் உதைத்துக் கொண்டு தரை யில் உட்கார்ந்து அழுதாள்.

பத்திரகாளியாய்த் தலைவிரித்தபடி படுக்கை யிலிருந்து எழுந்து வந்த சீதா குழந்தையின் முதுகில் படார் படார் என நாலு அறை விட்டாள். "உதைச் சேன்னா தெரியும் சனியனே. போடி உள்ளே" என்று அழும் குழந்தையைத் தரதரவென இழுத் தாள்.

"ஒன்றும் புரியாத குழந்தையை இப்படிச் சித்ரவதை செய்யாதே" என்று சாம்பசிவனுக்கு வாய் வரை வந்தது. தீபாவை அணைத்து

உஷா சுப்ரமணியன்



. பாகற்காய் பொரியல் செய்யும் பொழுது கேரட், வெங்காயம் துருவிப் போட்டு, நிறைய கருவேப்பிலை போட்டுச் செய்தால் கசப்பே தெரியாது.

– மாலினி

ஆறுதல் சொல்ல மனம் விழைந்தது. ஆனால் தன்னை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார். அவள் பெற்ற குழந்தையைத் தானே அடிக்கிறாள். அவளைத் தடுக்க அவருக்கு என்ன உரிமை இருக்கு? முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சீதா தானே தீபாவைத் தரதரவெனப் பள்ளிக்கு இழுத்துச் சென்றாள். "நீங்க அழைச்சிட்டு வரல்லைன்னா ஒண்ணும் படிப்பு நின்னு போயிடாது" என்கிற தோரணையில் மாலையிலும் பள்ளி வாசலில் நின்றாள். "அம்மா, அப்பா வரல்லை?" என்று ஆவலாகக் கேட்கும் குழந்தையை கொடூரமாக விழித்துப் பார்த்தாள்.

சாம்பசிவன் எங்கேயோ வெளியே சென்று வந்தார். பெட்டிகளை நிரப்பினார். அமெரிக்காவுக்கும், கானடாவுக்கும் செல்ல வேண்டிய சாமான்களை அனுப்புவதற்காக ஓயாமல் அலைந்து கொண்டிருந்தார். சீதா ஒரு அலட்சியத்துடனும், வெற்றிக் களிப்புடனும் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அலட்சியமாக அவள் மேஜையில் எறிந்து விட்டுச் செல்லும் சாப்பாட்டை சாம்பசிவன் நிதானமாக எடுத்துச் சாப்பிட்டார்.

மௌனம் அங்கே பாலமாக இல்லை. மெல்லக் கவிழ்க்கும் புதைமணலாக மாறியிருந்தது. இதில் யார், யார் விழுந்து மடியப் போகிறார்கள் என்று இப்போது புரியவில்லை.

ஆனால் தீபா மாறியிருந்தாள். "ஸ்வீட் கேர்ள்" என்று பள்ளியிலும், வெளியிலும் நல்ல பெயர் வாங்கியிருந்தவள் இப்போது கையில் கிடைத்த சாமான்களை வீசிக் கடத்தினாள். எதற்கெடுத்தாலும் உரத்த குரலெடுத்துக் கத்தி கவனத்தை ஈர்த்தாள். பிடிவாதம் பிடித்தாள். அசட்டு சேஷ்டைகள்

செய்தாள். நாலே நாளில் இப்படி ஒரு மாறுபாடா?

எத்தனை நாள் இந்த ஆங்காரம். எல்லாம் தன்னால் வழிக்கு வருவாள் என்று சீதா அவன் பிடிவாதத்தைத் தன் கோபத்தால் சந்தித்தாள்.

இரட்டைக் கட்டிலின் இரு ஓரங்களிலும் அவர்கள் படுத்தனர். சீதா நிதானமாய் உறங்கினாள். விட்டத்தை வெறித்தபடி சாம்பசிவன் சிந்தனையில் கிடக்கலானார். "இந்த சீதா மேல் எப்படிப்பட்ட அன்பு வைத்தேன். பாசத்தை அள்ளித் தந்தேன். தன் அன்பு மகளுக்கு வழிகாட்டி, அவளை வாழ்வில் முன்னுக்குக் கொண்டு வரும் தந்தையின் கனிவுடன், அனுபவக் கதவுகளைத் திறந்து வைத்தேன். நமக்கு ஒரு குழந்தை போதும் என்றேன். என்றாவது ஒருநாள் ஒரு அபலைக்கு வாழ்வளிக்கிறேன் என்கிற பாணியில் நான் நினைத்திருக்கிறேனா... இல்லையே... நாற்பது வயது வரை தனியே வாழ்ந்த என் வாழ்க்கைக்கு உயிரூட்ட வந்தவள் என்றுதானே எண்ணினேன். எனக்கென்று ஒரு குடும்பம். பெறாத ஒரு குழந்தை என்று பெருமைப்பட்ட என்னை எப்படிச் சீதாவால் இப்படிக் கேவலப்படுத்த முடிந்தது?

இவ்வளவு ஆனபிறகும் என்னால் சீதாவை வெறுக்க முடியவில்லையே. அவளுக்கு எடுத்துக் கூறிப் புரியவைக்க வேண்டும் என்றுதானே மனம் விழைகிறது. இரவு முழுவதும் உறக்கமில்லாமல் புரண்டு, புரண்டு படுத்து காலை வேளைகளில் அவர் கண்கள் சிவந்தன. தலை 'கிர்'ரென்று சுற்றியது. அப்படியும் முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருந்ததால் வெளியே செல்வது தவிர்க்க முடியாததாகியிருந்தது.

தொலைபேசி அடித்தது. சீதாதான் எடுத்தாள். மறுபுறத்தில் கீதா. "ஹாய் சீதா... என்ன சாம் பேக்கிங் எல்லாம் முடிச்சுட்டாரா... எனக்கு என்னவெல்லாம் அனுப்பறே? கட்டாயம் க்ராண்ட் ஸ்வீட் முறுக்கும் லட்டுவும் அனுப்பி விடு. சீதா நீயும் வந்திருந்தால் மிகவும் ஜாலியாக இருந்திருக்கும். எங்கே தீபாக்குட்டி கூப்பிடறயா?"

சீதா அழைக்கு முன்பே அருகே நின்றிருந்த தீபா போனைப் பிடுங்கினாள். "ஹலோ பெரியம்மா..."

"தீபாக்குட்டி, உனக்காகத்தான் நாங்க எல்லாம் காத்திருக்கோம். பெட்டியெல்லாம் 'பாக்' செய்திட்டயா?"

"பெரிம்மா... அம்மா என்னை போகக் கூடாதுனாட்டாங்க. நீங்க சொல்லுங்க பெரியம்மா."

"உனக்கு ப்ரீ டிக்கெட் கிடைக்குதுன்னு உங்கப்பா சொன்னாரே. அவரைக் கூப்பிடு."

காபி, டிபன், சைவ உணவு, தங்குமிடம் உள்பட சுற்றுலாக்கள்.

* **KASI-BOMBAY**-மதுரா-ஆக்ரா-ஜெய்ப்பூர்-டெல்லி-ஹரித்துவார்-ரிஷிகேசம்-சகஸ்த்ரதாரா-டேராடூன்-அயோத்யா-காசி-கயா-திரிவேணி-பம்பாய். 23.6.98 முதல் 18 நாட்கள் ரயில் சுற்றுலா. ரூ. 4590.
* **KASI-DARJEELING**-திரிவேணி-காசி-டார்ஜிலிங்-கல்கத்தா-பூரி-கோனார்க்-புவனேஸ்வர். 23.6.98முதல் 12 நாட்கள் ரயில் சுற்றுலா. ரூ. 3290.
* **KEDARNATH-BADRINATH**-மதுரா-ஆக்ரா-டெல்லி-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-கேதார்நாத்-பத்ரிநாத்- அயோத்தியா-காசி-கயா-திரிவேணி. 12.7.98 முதல் 18 நாட்கள் ரயில் சுற்றுலா. ரூ. 4990.
* **AMARNATH-VAISHNOVIDEVE**-டெல்லி)-குருசேத்ரா-அமிர்தசரஸ்-ஜம்மு-ஸ்ரீநகர்-அமர்நாத்-வைஷ்ணவி-துர்க்காஜி-மகாலட்சுமி-மகாகாளீஸ்வரி-சாமுண்டாதேவி- காங்ரா தேவி-ஜுவாலாமுகி-சிந்துபூரணி-மான்சாதேவி-பக்ரா நங்கல்-சண்டிகார். 28.8.98 முதல் 20 நாட்கள். ரயில் கட்டணம், பஸ்கட்டம் & ஜம்முவிலிருந்து ஸ்ரீநகர்(காஷ்மீர்)விமானக் கட்டணம் உள்பட ரூ. 7090.
* **GOA-BOMBAY**-சுப்ரமண்யா-தர்மஸ்தலம்-ஸ்ரீமூகாம்பிகை-முருகேஸ்வரம்-கோவா-பம்பாய்-நாசிக் பஞ்சவடி-ஷீரடி-எல்லோரா-மந்த்ராலயம்-மகாநந்தி-ஸ்ரீசைலம்-அகோபிலம்-திருவண்ணாமலை. 15.9.98 முதல் 16 நாட்கள் டீலக்ஸ் பஸ் சுற்றுலா. ரூ. 3490.

குமரன் டிராவல்ஸ்

20, வடக்கு சித்திரைவீதி, மதுரை - 625001. போன்: 621519 * 623863.



ஹெர்பல் ஹேர் ஆயில் ← → ஹெர்பல் ஷாம்பு

ஆரோக்கியமான கூந்தலுக்கு ....எரிகா மட்டுமே

A Quality Product from:
DALE CARE, Pondicherry - 605 013.

Available at all leading
Medical Shops and General Stores
in Tamil Nadu & Pondicherry

"பெரிம்மா, அம்மா, அப்பாவைக் கன்னா பின்னான்னு திட்டிட்டாங்க. அப்பா என்னை ஸ்கூலுக்குக் கூட அழைச்சிட்டுப் போறதில்லை."

மறுபுறம் கேட்டுக் கொண்டிருந்த கீதா திடுக்கிட்டாள். தங்கை வாழ்க்கை அமைதியாகச் சென்று கொண்டிருக்கிறது என்று நினைத்தது போக என்ன புதிதாக...

சீதா தொலைபேசியை வெடுக்கெனப் பிடுங்கினாள். "அவ ஏதாவது சொல்லுவா. அதெல்லம் கேட்டுக்காதே. உனக்கு வேண்டிய சாமானெல்லாம் அனுப்பறேன். ஆனா தீபா இப்ப வரல்லை. அப்புறம் என் கூட வருவா. என்ன 'வெச்சிடட்டா?"

பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவில் இருந்தாலும் கீதாவுக்கு விவரம் புரிந்தது. சீதா குரலெடுத்துக் கத்தி, சண்டை போட்டு அவளே பார்த்ததில்லை. ரமேஷ் அவளைக் கொடுமைப்படுத்திய காலத்தில் கூட, "நீ இப்படித் தழைந்து போனால் அவன் அப்படித் தான் இருப்பான். அடிக்க வந்தால், திருப்பி நாலு போடு. அவன் அனாவசியமாகக் கத்தினால் நீ திருப்பிக் கத்து" என்று இவள் எடுத்துக் கூறியும் கூட, "என்னால அதெல்லாம் முடியாதுக்கா. இரண்டு கை தட்டினா சத்தம்தான்" என்று கூறியவள் இன்று சாம்பசிவனுடன் சண்டையிடுகிறாளா?

சாம்பசிவன் ஏதாவது தவறு செய்திருப்பாரா? போன வாரம் பேசிய போது கூட சீதாவுடன் பாக்டரிகளுக்குப் போனது, சீதா மசால் தோசை செய்தது என்று மனைவியைப் பற்றி எவ்வளவு அருமையாகவும், பெருமையாகவும் பேசிக் கொண்டிருந்தார். ஒருகால் கணவன், மனைவிக்குள் தோன்றும் சாதாரணச் சண்டையை நான் குழந்தையின் பேச்சைக் கேட்டுப் பெரிதாக எண்ணுகிறேனோ... தீபா ஏன் இலவச டிக்கெட் கிடைத்தும் வரவில்லை. அவசரமாக ஈமெயிலில் ஏன் தீபாவை அழைத்து வரவில்லை ஸாம். எதுவும் பிரச்னையில்லையே என்று கேட்டாள். சாம்பசிவனிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. தன் தங்கை வாழ்வில் ஏதோ பெரிய குழப்பம் தோன்றியுள்ளது என்று கீதாவுக்குப் புரிந்தது. அதோடு ஒரு பயமும் எழுந்தது. பிரச்னை என்னவென்று புரியாத நிலையிலும், தவறு யார் மீது என்று விளங்காத போதும், பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டிய அவசியம் புரிந்தது.

வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்குப் பலம் தரும் விஷயங்கள் இரண்டு. கல்வி அறிவும், பொருளாதார வலுவும், பொருளாதாரம் பலமாக இருந்தால் பட்டமும், தகுதியும் இல்லாமல் இருந்தால் கூடச் சமாளித்து விட முடியும். ஆனால் அந்தப் பலம் இல்லாத போது பெண்ணுக்கு ஒரே பலம் கல்விதான். உடல் உழைப்பை மட்டும் நம்பிப் பெண் வாழும் போது. அவள் பலவிதங்களில் வஞ்சிக்கப்படக் கூடிய சாத்யக்கூறுகள் உண்டு. அதே பெண் கல்வித் தகுதியுடன் சமூகத்தை எதிர்நோக்கும் போது எதிராளி மிரண்டு விடுவாள்.

ஒரு காலகட்டத்தில் பெண்ணின் மிகப் பெரிய சொத்தாகக் கருதப்பட்டது அழகு. இன்றைய சமூக அமைப்பில் அழகு மட்டும் உடைய பெண் அதை மூலதனமாக்க விரும்பினால் பெரும்பாலும் தவறான வழிகளில் தான் செல்ல நேரிடுகிறது.


சீதாவுக்குத் தகுதி என்று பார்த்தால் கல்வி, பணம் ஏன் அழகு கூட இல்லை. நடுத்தர

வாழைத்தண்டு என்றால் பொதுவாக இல்லத்தரசிகளுக்கு அலர்ஜிதான்! காரணம், நறுக்குவதிலுள்ள அவஸ்தைதான்! இனிமேல், வாழைத்தண்டு வாங்கினால், மெல்லிய வில்லைகளாக்கி மோர் கலந்த நீரில் போட்டு விடுங்கள். பின்னர் நாலைந்து வில்லைகளாக சேர்த்து எடுத்து, ஒன்றாக பிடித்துக் கொண்டு, 'சிப்ஸ்' கட்டையில் 'பரபர'வென சீவி விடுங்கள். மிக எளிதாக, வேலை முடியும். மெலிதாக ஒரே சீராக குச்சி குச்சியாக மிக அழகாக இருக்கும். சாப்பிடுபவர்கள், இவ்வளவு அழகாக யார் நறுக்கியது என ஆச்சர்யப்படுவார்கள்.

– எஸ். பட்டம்மா



நம் வீடுகளில் முக்கால்வாசிப் பேர் துளசிச் செடி, மணி ப்ளான்ட் போன்ற செடிகளை தொட்டிகளில் வைத்திருப்போம். சில சமயங்கள் ஒரு வாரம் வரை ஏதாவது அவசரமான வெளியூர் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் நாம் திரும்பும் வரை செடிகள் வாடாமல் பாதுகாக்க கடைகளில் நாம் பொம்மை செய்யப் பயன்படுத்தும் பெரிய ஸ்பாஞ்ச் வாங்கி அவற்றை நிறைய நீரில் முக்கி தொட்டியில் செடியின் பக்கமாக வைத்து விட்டுச் சென்றால் செடிகள் வாடாமல் பாதுகாக்கப்படும். நாமும் கவலையில்லாமல் ஊருக்குப் போய்விட்டு வரலாம்.



வர்க்க வாழ்க்கைக்குப் பழகி விட்டவளால் செங்கல் தூக்க முடியாது. செய்யத் தெரிந்த ஒரே தொழில் சமையல்தான். அதுவும் நாலு வீடு செய்தால்தான் குடும்பம் நடத்திக் குழந்தை வளர்க்க முடியும். அதற்கான சாமர்த்தியமும் அவளிடம் இல்லை. இப்படிப் பட்ட பெண்கள் பிறரைச் சார்ந்து வாழ வேண்டியது அவசியமாகிறது. அதனாலேயே அவர்கள் தங்கள் நிலை உணர்ந்து, பல விஷயங்களிலும் விட்டுக் கொடுத்துக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இந்தியப் பெண்கள் இத்தனை நாள் அடக்கமாக வாழ்ந்ததன் காரணமே இதுதான். இதை சீதா உணர்ந்து, சாம்பசிவன் மேல் ஏதாவது தவறு இருந்தாலும் விட்டுக் கொடுத்துத்தான் செல்ல வேண்டும். இவள் முறுக்கிக் கொண்டு, சாம்ப சிவன் உதறி விட்டுச் சென்றால் நடுத்தெருவுக் குத்தான் மறுபடியும் வர வேண்டும். சீதாவுக்கு இதை எப்படிப் புரியவைப்பது?

"லோகு... தெர் ஈஸ் ஸம் ப்ராப்ளம்" சீதா கணவனை அழைத்தாள். "பெரிதாக எதுவும் இருக்காது சீதா. நானும், நீயும் அவ்வப்போது சண்டை போடவில்லையா அது மாதிரிதான் இருக்கும். சின்னக் குழந்தை அப்பாவும், அம்மாவும் சண்டை போட்டாங்க என்று கூறினால் அதைப் பெரிசா எடுத்துக்காதே'' என்றார்.

"இல்லை, லோகு... என் உள் மனது எச்சரிக்கை செய்யறது... சாம் நல்லவர்தான். அவர் சீதா மேல உண்மையான அன்பு வெச்சிருக்கார். அதுவும் எனக்குத் தெரியும். ஆனா, அவங்க வீட்டவங்க ஏதாவது ஏத்திக் குடுக்க சான்ஸ் இருக்கு."

"என்ன சீதா... சாம் பிறர் பேச்சைக் கேட்டுட்டு நடக்கற ஆசாமியில்லை. வெரி ஸ்ட்ராங் மேன்..."

"அதுவே பயம்தானே. வேற ஏதாவது அவருக்கு சும்மா படிச்ச, அழகான பெண்ணோட சகவாசம்."

"சீதா, பெண்கள் ஏனிப்படி உம்முனு மூச்சு விடுவதுக்குள்ள, சூறாவளின்னே கற்பனை செய்துக்கறீங்களோ புரியவில்லை. அப்படி நிஜமாலுமே உனக்கு பயமா இருந்தா, சாம்பசிவன் மெட்ராஸ்லேயிருந்து கிளம்பின பிறகு உன் தங்கைகிட்ட தனியாப் பேசு. சாம் இங்கே வந்த பிறகு நாம இந்தப் பிரச்னையைத் தீர்க்க முயலலாம்."

சாம்பசிவன் பெட்டியில் சாமான்களைச் சரிபார்த்தார். பாஸ்போர்ட், விஸா எல்லாம் தயார் செய்தார். அவர் முகத்தில் நிரந்தரமாக ஏறியிருந்த சோகத்தில் எந்த மாறுதலுமில்லை. "சீதா, எனக்கு ப்ளைட்டுக்கு நேரமாகிறது. கிளம்புகிறேன். டாக்ஸி வரும். நீங்க வருவதனால் ஏர்போர்ட்டுக்கு வரலாம். இந்தா ஐயாயிரம் ரூபாய் காஷ் இருக்கு. இது ரெண்டும் செக் புக். கம்பெனி அகவுண்ட், சொந்த அகவுண்ட் எல்லாமே ஜாயிண்ட் அகவுண்டாகத்தான் இருக்கு. நீ பணம் ட்ரா பண்ணிக்க முடியும். இதில் என்னோட டூர் ப்ரோக்ராம் எங்கே தங்குவேன் போன்ற விவரங்கள் இருக்கு. நான் போயிட்டு வர்றேன். நேற்று திருவான்மியூர் போய் முத்துராகவிடம் சொல்லிவிட்டு வந்திருக்கேன். அவர் வொய்ப் வந்து பார்த்துப்பாங்க. நான் கிளம்பறேன். பை... பை... தீபா..." இயந்திரமாகப் பேசினார்.

சீதா திடீரெனக் குற்ற உணர்வால் உந்தப் பட்டவளாக, "போயிட்டு வாங்க. சாமி விபூதி இட்டுட்டீங்களா? போன் பண்ணுங்க'' என்றாள்.

சாதாரண நாளாக இருந்தால், ''நான் அம்பத்தூர் போயிட்டு வரேம்மா" என்பதைக் கூட ஒரு அணைப்புடனும், உரசலுடனும், கன்னத்தில் முத்தத்துடனும் கூறும் வழக்க

முடையவர், இன்று ஆறடி தள்ளி நின்று பேசினார்.

"அப்பா, நாங்க ஏர்போர்டுக்கு வர்றோம்பா. "தீபா ஓடிச் சென்று அவரை அணைத்தாள். சட்டென சாம்பசிவனின் கண் கலங்கியது.,

"இருங்க, நானும் வர்றேன். புடவை மாத்திக்கிட்டு வந்துட்டேன்..." சீதா அவசரமாக உள்ளே சென்றாள்.

"அப்பா, அடுத்த தரம் நீங்க அமெரிக்கா போகிறப்ப என்னையும் கூட்டிட்டுப் போவீங்களா?" தீபா அவரை அணைத்தபடி கேட்டாள். "பெரியம்மா வரச் சொன்னாங்க..."

"கட்டாயம் உங்கம்மாவோட நீயும் வருவே..."

புடவை மாற்றியபடி வந்த சீதாவின் காதில் இது விழவும், அவள் ஒரு நிமிடம் திகைத்து நின்றாள். எந்த அளவுக்குத்தான் சாம்பசிவத்தின் மனதைப் புண்படுத்தியிருக்கிறோம் என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனாலும், நடந்த விஷயங்களை எப்படி சரி செய்வது என்பது அவள் அறிவுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

ஒரு கனமான மௌனத்துடன் மூவரும் விமான நிலையத்துக்குச் சென்றனர். அந்தப் புதுச்சூழல் தீபாவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சாதாரணமான நாட்களில் சாம்பு தானும் அவளுடன் ஒரு குழந்தையாவே மாறிவிடுவார். அவர் தானாக ஏற்படுத்திக் கொண்டிருந்த இடைவெளி சீதாவை பாதித்தது உண்மைதான்.

கையசைத்து விட்டு அவர் வரிசையில் நிற்கச் சென்றபோது "போயிட்டு வர்றேன். நீங்க கிளம்புங்க" என்றார். சீதா சுற்றுமுற்றும் பார்த்தாள். இன்றுதான் அவள் வாழ்வில் முதன்முறையாக விமான நிலையத்தைப் பார்க்கிறாள். அவள் வாழ்க்கையில் இத்தகைய ஒரு அனுபவம் கிடைக்க வாய்ப்பே இருந்திருக்காது. அங்கே குழுமியிருந்த மேல்தட்டு மக்களிடையே தானும் நிற்பது பெருமையாக இருந்தது. யார் கண்டார்கள், இன்று வழியனுப்ப வந்தவள், அடுத்த ஆண்டு அவளே ப்ளேனில் வெளிநாடு செல்லலாம். ஒரு நிலையை அடைந்த பிறகு தோன்றும் மிதப்பும், அகங்காரமும் அவள் மனதை நிறைத்தது.

டாக்ஸியில் வீடு திரும்புவதும் சுகமான அனுபவம்தான். வழிநெடுக தீபா சளசளவெனப் பேசிக் கொண்டு வந்தாள். சீதா கார் கண்ணாடி வழியே வெளியே தெரிந்த உலகை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தப் பெரிய பெரிய பிரம்மாண்டக் கட்டிடங்கள் அவளுக்கு இப்போது பிரமிப்பூட்டவில்லை. எல்லாமே பழகிய இடமாகத் தெரிந்தது.

வீட்டுக்குள் நுழையும்போதே தொலைபேசி அடித்தது. கீதா... இவள் எதற்கு மறுபடியும் அழைக்கிறாள். "சீதா, சாம் கிளம்பிவிட்டாரா?"

"ம்..."

"சீதா... உன்னிடம் தனியாகப் பேச வேணும்னுதான் போன் செய்தேன். உனக்கும் சாமுக்கும் ஏதாவது பிரச்னையா?"

சீதாவுக்குச் சட்டெனக் கோபம் வந்தது. "சாம், சாம்னு உரிமை கொண்டாடிட்டு... ஆமா... புருஷன், பெஞ்சாதிக்குள்ள ஆயிரம் பிரச்னையிருக்கும்."

கீதா திடுக்கிட்டாள். பேசுவது சீதாவா... பேச்சில் தொனித்த அலட்சியம் திகைக்க வைத்தது. "புருஷன், பெண்சாதி பிரச்னையாய் இருக்கலாம் சீதா. ஆனா, நீ மனசைத் திறந்து பேச உனக்கு இன்னிக்கு இருக்கிறது நான் ஒருத்திதான். சாம்பசிவன் தப்பு செய்தாலும் கேக்கக்கூடியவர் லோகு அத்தான் மட்டும்தான். அதனாலதான் நான் உரிமையாக் கேட்கறேன். அதோட என் தங்கையை எனக்குத் தெரியும். உன்னைப் போல ஒரு அப்பாவியை நான் பார்த்ததில்லை. உனக்கு எதுவும் தப்பா ஆகிவிடக் கூடாதுன்னு இத்தனை தூரத்திலிருந்து கவலைப்படறேன். புரியுதா?"

கீதாவின் நெகிழ்ந்த குரல் சீதாவைத் தொட்டது. சாம்பசிவன் தன்னைத் திருமணம் செய்து கொண்டதில் ஏதோ சூது இருக்கிறது என்பது தொட்டு, வெளியிடங்களில் பெண்களுடன் அவர் கைகுலுக்கிப் பேசுவது, தீபாவை அவர் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்ல, அவளுக்குத் தெரியாமல் சதி செய்து ஏற்பாடு செய்தது என்று எல்லாவற்றையும் சீற்றத்துடன் வெடித்தாள். "நீயே சொல்லு



முளைக் கீரையை ஆய்ந்து
அலம்பி சிறிது நெய் ஊற்றி வதக்கி,
அத்துடன் உளுத்தம் பருப்பு, மிளகாய்
இரண்டையும் வறுத்து வைத்து
உப்பு, புளி, பெருங்காயம்
சேர்த்து துவையல் அரைத்தால்
சாதத்தில் பிசைந்து சாப்பிட
ருசியாக இருக்கும்.
– வசந்தி

மஞ்சள் காமாலை நோய் வந்தால்தான், நாம் கீழாநெல்லிக் கீரையை தேடி ஓடுவோம். நம்மில் சிலர் வீடுகளில் தானாகக் கூட கீழாநெல்லி முளைத்தபடி இருக்கும். அக்கீரையை நாம் தைலம் தயாரிக்கவோ, அரைத்து குடிக்கவோ கூட வேண்டாம். வாரம் இருமுறை நாம் தினசரி சமைக்கும் கீரை மசியல் (அ) பொரியலுடன், இந்த கீழாநெல்லிக் கீரையையும் உருவி சேர்த்து கலந்து செய்து விடுங்கள். (புளி சேர்க்காமல்) இதுபோல் வாரம் ஒருமுறையாவது இக் கீரையை சேர்த்துக் கொண்டால், மஞ்சள் காமாலை நோய் வரும் என்ற பயமே இல்லை.

– பாலா



கீதா, பெண் குழந்தையைத் தனியா யார் கூடவாவது இத்தனை தூரம் அனுப்ப முடியுமா? அது சரியா?"

"சீதா, அவர் யாரோ இல்லை. என்னிக்கு நீ அவரைக் கல்யாணம் கட்டிக்கிட்டயோ, அன்னையிலிருந்து அவர்தானே தீபாவுக்கு அப்பா. பெற்றவரை நம்பிப் பெண்ணை அனுப்பறதில் என்ன தப்பு.. அதுவும் எங்க வீட்டுக்குத்தானே அழைச்சு வரார். நீ அப்படியெல்லாம் அவரிடம் பேசியிருக்கக் கூடாது. சீதா தீபா அவர் மகள்னு நீயும் நம்பணும். உன்னை ரமேஷ் மனைவின்னா அவர் நினைக்கிறார். அது போலத்தானே இதுவும்..."

"கீதா.. நீயும் அவர் பக்கம் சேர்ந்துட்டுப் பேசறே. எல்லோருமா அவர் பக்கம் சேர்ந்துக்குங்க. என்னைத் தனியா விட்டுடுங்க." சீதா கபகபவென அழத்துவங்க, கீதா அவளைச் சமாதானப்படுத்தினாள். "அசடு... நீதான் எங்கள் எல்லோருக்கும் நெருக்கமானவ. உன்னைத் தவிர எனக்கு யாரு சொல்லு. நான் சாம்பசிவனிடம் எதுவும் பேச மாட்டேன். அவராகப் பேசினாலும் உனக்கு அனுசரணையாகத்தான் பேசுவேன் கவலைப் படாதே. என் சமத்துத் தங்கையில்லையா அழுகையை நிறுத்திட்டு, சிரி பார்க்கலாம்..." கீதா தொலைபேசியை வைத்து விட்டுக் கணவன் பக்கம் திரும்பினாள்.

"லோகு, சீதா மிகவும் கன்ப்யூஸ்டாக இருக்கா. காரணமே இல்லாம, இமோஷனலாகக் கத்துகிறாள். கோபப்படுகிறாள்."

"கஷ்டப்பட்ட காலத்திலெல்லாம் பயந்துட்டு கம்மாயிருந்தா... இன்னிக்கு சந்தோஷமா வாழ வேண்டிய சமயத்தில் இப்படி வாழ்வைக் குழப்பிக்கிறா. இந்த லேடீஸே இப்படித்தான்."

"லோகு, இதுதானே வேணாங்கறது. ஒரு பெண் ஏதாவது சிறிய தப்பு செஞ்சாக் கூட, லேடீஸே இப்படித்தான்னு ஜெனரலைஸ் பண்றது. அவ கஷ்டப்பட்ட காலத்திலே அவளுக்கு வேற வழியில்லை. இன்னைக்கு, சாம்பசிவன் அவ வாழ்க்கையிலே கௌரவம், அந்தஸ்து, அனுபவம் எல்லாம் தந்திருக்கார். கஷ்டத்திலேயே இருந்து, சிறுமைப்பட்டே பழகியவள் மனசுலே தான் இதுக்கெல்லாம் அருகதை உடையவள்தானா என்ற பயம் வந்திருக்கு. டோட்டால் இன்செக்யூரிடி. அதனாலதான் தனிமைப்படுத்தப்பட்டு விடுவோம்கற பயம். தன் குழந்தையைத் தன்னிடமிருந்து பிரித்து விடுவாரோ என்கிற பயம். வெளியிடங்களில் பார்க்கிற தன்னை விடச் சிறந்த பெண்கள் கணவனைப் பறித்து விடுவாங்களோ என்ற பயம். இப்போதான் கணவனைப் புடவைத் தலைப்பிலே முடிஞ்சுக்கணும்னு புரிஞ்சுக்காம, அவர் மேலயே பாயறா."

லோகு சிரித்தார். "கீதா, நீ பேசாம ஒரு கவுன்சிலராயிடு. பெரிய சைகாலஜிஸ்ட் மாதிரி உன் தங்கையை அனலைஸ் பண்ணியிருக்கே."

"இதோ பாருங்க, நான் சைகாலஜிஸ்டும் இல்லை. கவுன்சிலரும் இல்லை. ஆனா, என் அசட்டுத் தங்கை குழப்பத்துல வாழ்க்கையைக் கெடுத்துக்காம இருக்க ஏதாவது வழி செய்யணும்கற அக்கறை இருக்கு."

"சாம் வரட்டும், பார்க்கலாம்..." என்றார் லோகு.


(தொடரும்)

பயனுள்ள

எக்ஸ்சேஞ் சலுகை!

ஆம். மணியான வாய்ப்பு! உங்களது பழைய மிக்ஸி/கியாஸ் ஸ்டவ் (அது எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், எந்தப் பெயரைக் கொண்டிருந்தாலும், எத்தகைய நிலைமையில் இருந்தாலும் சரி) அதைக் கொடுத்து, அதற்கு பதிலாகப் புத்தம் புதிய பட்டர்ஃபிளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கியாஸ் ஸ்டவ் அல்லது பட்டர்ஃபிளை மிக்ஸர் கிரைண்டர் ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள். இதற்காக, அதிக பட்ச சில்லரை விலையின் மீது ரூ.650/– சேமியுங்கள்.





பழைய மிக்ஸர் கிரைண்டர் (எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், எந்தப் பெயரைக் கொண்டிருந்தாலும், எத்தகைய நிலைமையில் இருந்தாலும்)	அதற்கு	புத்தம் புதிய பட்டர்ஃபிளை மிக்ஸர் கிரைண்டர் அல்லது புத்தம் புதிய பட்டர்ஃபிளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கியாஸ் ஸ்டவ்
பழைய கியாஸ் ஸ்டவ் (எந்தத் தயாரிப்பாக இருந்தாலும், எந்தப் பெயரைக் கொண்டிருந்தாலும், எத்தகைய நிலைமையில் இருந்தாலும்)	அதற்கு	புத்தம் புதிய பட்டர்ஃபிளை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கியாஸ் ஸ்டவ் அல்லது புத்தம் புதிய பட்டர்ஃபிளை மிக்ஸர் கிரைண்டர்

முந்துங்கள்!

இச் சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே.

எல்லா பட்டர்ஃபிளை டீலர்களிடமும் கிடைக்கும்.

சேமியுங்கள்

ரூ.650*

* இந்த வாய்ப்பு குறிப்பிட்ட மாடல்களுக்கு தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் அதிக பட்ச சில்லரை விலைக்கு மட்டுமே பொருந்தும்.

பட்டர்ஃபிளை

Good for a lifetime

தூக்கம் வரவில்லை.

இந்தியாவை விட்டு வந்து இரண்டு மாசமாகி விட்டது. இன்னமும் ஊர் ஞாபகம் போகவில்லை. 'ஹோம் சிக்' என்று, அறையில் உடன் தங்கி இருக்கும் ஜென்னியும் எலிசாவும் கேலி செய்கிறார்கள்.

''பிடிவாதம் பிடித்துக் கொண்டு வந்தது நான்! பின் ஏன் மனம், ஊரையும், அம்மா அப்பாவையும் நினைத்துக் கொண்டு முரண்டுகிறது? அன்பான உறவினர்கள், அருமைத் தோழிகள்- அவர்களுடன் கழித்த அந்த ஆனந்தமான நாட்களை எண்ணி ஏங்குகிறது?

இந்நேரம் அம்மா பம்பரம் போல் சுற்றிக் கொண்டிருப்பாள். சாரு-மது-இருவருக்கும் காலை உணவு தயாரித்து, மதியத்துக்கும் சாப்பாடு கட்டணும். அப்பாவும் அம்மாவும் காலையில் சாப்பாடு. கையில் டிபன்-எல்லாம் முடித்துக் கொண்டு அரக்கப்பரக்க ஓடணும்.

எட்டரைக்கெல்லாம் இருவரும் கிளம்ப, அம்மாவை ஆபீசில் இறக்கிவிட்டு அப்பா போவார். அவருக்கு பத்து மணிக்குத்தான் ஆபீஸ். அம்மா நினைவு வந்ததும் நெஞ்சு பொங்கியெழ, 'அம்மா!' என்று அனிச்சையாக முனகியது வாய்.

காலை உதைத்துக் கொண்டு அடம் பிடித்து அழும் குழந்தை போல் ஏங்கியது மனம்- 'அ-ம்-மா- உன் கை வளையாய் ஆக மாட்டேனா?' மெல்லிய குரலில் 'ஹம்'மியபடி, மனப்பாரத்தைக் குறைக்க எண்ணி ஜன்னலருகே போய் நின்றாள்.

கனத்த திரையைக் கொஞ்சம் ஒதுக்கி, வெளியே பார்வையை வீசினாள். இண்டு, இடுக்கு இல்லாமல் அடைக்கப்பட்ட ஜன்னல். ஹீட்டர் மூலம் இதமாய்ப் பரவும் உஷ்ணம். இத்தனையும் மீறி குளிரில் உடல் உறைந்து விட்டது போல் ஒரு பிரமை.

படுக்கையிலிருந்து 'கம்ஃபர்டரை' எடுத்து உடலில் போர்த்திக் கொண்டாள். அம்மாவைக் கட்டிக் கொள்வது போல் இதமாக இருந்தது.

பனி விழ ஆரம்பித்து விட்டது. இம்முறை சீக்கிரமே வந்து விட்டதாகச் சொல்கிறார்கள். மேலிருந்து யாரோ, பூப்பூவாய்த் திருகின தேங்காயைத் தூவுவது போல், உதிர்ந்து கொண்டிருக்கும் பனி. இப்படி உதிரும் பனியைக்



வந்தே மாதரம்

கோதா பார்த்தசாரதி

குவித்து அப்பா அம்மாவுடன், சாருவும் அவளும் 'ஸ்னோமேன்' செய்தது-

ஒரு மொத்தை உடம்பு. சிறியதாய் ஒரு தலை. குந்து மணிக் கண்கள். காதுகளாக நீண்ட இலைகள்- கையும் காலும் குச்சிகள் இப்போது கூட பழைய ஆல்பத்தில் அவர்கள் 'ஸ்னோமே'னுடன் எடுத்துக் கொண்ட போட்டோ இருக்கும்- காலையில் அப்பாவுடன் போட்டியாய், வீட்டு வாசலில் உறைந்து கிடக்கும் பனியை, ஷவலால் ஓரமாகத் தள்ளுவார்கள்.

கார்மேல் மூடியிருக்கும் பனியை வழித்தெறிந்து விட்டு, உள்ளே போய் கார் ஹீட்டரைப் போட்டுவிட்டு ஓடி வருவாள் நீரு- அப்போதுதான் அப்பா கிளம்பும் போது காரைக் கிளப்ப முடியும். ரோடில் உறைந்து கிடக்கும் பனியை ஒரு லாரி வந்து உப்பைத் தூவி இளக்கி, தன் ராட்சதக் கைகளால் ஒதுக்கும்.

தெரு முழுதும் பனிச்சென்று கழுவி விட்டது போலாகிவிடும். ஸ்கூல் பக்கத்திலே



பிறர் விஷயங்களில் எப்பொழுதுமே தலையிடாமலிருப்பது நல்லது. மனிதர்கள் பிறர் விஷயங்களில் கண்டபடி தலையிடுகின்றனர். கேட்காவிட்டாலும் கூடத் தங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிற பழக்கம்தான் இதற்குக் காரணம். எது சரியானது என்னும் ஞானம் உனக்கு இருந்தபோதிலும் கூட மிக அரிதாகவே தலையிடுவது அறிவுடைய செயலாக இருக்கும்.

– ஸ்ரீ அன்னை

தகவல் : ஆர். பார்த்திபன்



யேதான்- அருகில் இருக்கும் குழந்தைகளுக்குக் கண்டிப்பாக இடம் தந்தேயாக வேண்டும். அட்மிஷன் கஷ்டம் இல்லை. ஸ்கூல் பஸ்ஸுக்கு தெரு முனையில் போய் ஏற வேண்டும்.

ஸ்கூலில் இருந்து வரும் போது, ஒரு முறை கடும் பனி. இரண்டே அடியில் வீடு. உறைந்த பனியில் சறுக்கி விளையாடுவது அவனுக்குப் பிடிக்கும். அப்படி சறுக்கும்போது ஷூ மாட்டிக் கொண்டு, பனி உடைந்து ஷூவுக்குள் புகுந்து கொள்ள, விறைத்துப் போய் ஒரே வலி, வேதனை.

மேரியின் தோளில் சாய்ந்தபடி வீட்டுக்கு வந்து துள்ளித் துடித்ததும், பாட்டி வெந்நீரில் காலை முக்கி ஷூவைக் கழட்டி தைலம் தேய்த்துவிட, பாட்டியின் மடியில் காலைப் போட்டபடி தூங்கியதெல்லாம், இப்போதும் நினைத்தால் சிரிப்பு வருகிறது...

கதவை மூடிவிட்டு படுக்கையில் அமர்ந்தான்.

குளிர்பழக ஆரம்பித்தால் சரியாகிவிடும். பத்து வருட சென்னை வாழ்க்கை குளிருக்கு பயப்படுகிறது. உலையை மடியில் கட்டிக் கொண்டது போல் அனலாய் எரியும் சென்னை. டிசம்பரில் மட்டும்தான் குளிர். இங்கிருந்து போன புதிதில் ஏசி ரூமுக்குள்ளேயே வாசம்!

சென்னையில் இன்னொரு மிகப் பெரிய கஷ்டம்- கொசு! எதற்கும் அசராமல் ஒரு ரவுண்டு படையெடுப்பு- உடம்பு முழுதும் சிவந்து துடித்து விடும்.

வந்து ரெண்டு மாசம் ஆகல்லை. அதற்குள் மனம் ஏன் செக்கு மாடாய்ச் சென்னையைச் சுற்றி வருகிறது? அவனுக்குள் இயற்கையின் அந்த அற்புத மாற்றம் நிகழ்ந்த போதே, அம்மா ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அது ஆரம்பித்தது-கிறிஸ்துமஸின் போதுதான்!

தலை முகம் எல்லாம் மூடிய தொப்பி -ஓவர்கோட்-கைகளில் கிளவுஸ்-காலில் ஸ்னோ பூட்ஸ்-இவ்வளவுடன் 'மேசீஸ்' கடையின் அலங்காரத்தைப் பார்க்கக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

'இதுதான் கடைசி கிறிஸ்துமஸ்' என்று ஆரம்பித்தாள் அம்மா. சுற்றிலும் வண்ண விளக்குகள். ஆங்காங்கே சில வீடுகளில் கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து அழகான பொம்மைகளாக வைத்திருந்தனர்-

திரும்பும்போது காரில் - "இந்த வருஷம் இந்தியா போயிடலாம்னு பார்க்கிறேன்" என்றாள் அம்மா.

"போன வருஷம்தானே போனோம் - அடுத்த வருஷம் பார்க்கலாம்."

"லீவுக்கு இல்லை ராஜன்-பர்மனன்டாக-"

"ஜானு -ஆர் யூ கிரேசி? தூக்கத்தில் பேத்தறியா?"

"இல்லை ராஜன். இப்பதான் விழிப்பு வந்திருக்கு. நிதானமாக யோசனை பண்ணித்தான் சொல்றேன்."

"திடீர்னு என்ன ஆச்சு ஜானு?"

"திடீர்னு இல்லை. இரண்டு மாசமா ஒவ்வொரு நிமிஷமும் அலசி ஆராய்ந்து செய்த முடிவுதான். நம்ம நீரு பெரியவன் ஆனதிலிருந்து ஒரு பயம்."

"அவ்வளவு சுலபமா செட்டில் ஆயிட முடியுமா, ஜானு?"

"மனசு வைச்சா முடியாததில்லை- முடியணும். விசுவுக்கு எழுதி அவனும் பசங்களுக்கு ஸ்கூல் அட்மிஷனுக்கு ஏற்பாடு பண்றேன்னான்."

நீரு என்ற பெயர் கேட்டதும் அரைத் தூக்கத்தில் இருந்து நன்றாக விழிப்பு வந்து விட்டது நீருவுக்கு.

"அம்மா, நாம இந்தியா போறமா? அங்கே நான் படிக்கணுமா? எனக்கு மெட்ராஸ் பிடிக்கல்லை. 'வேண்டாம்மா!'' அழுவது போல் சொன்னான் நீரு.

"நீரஜா!'' அம்மாவின் குரல் ஓங்கி

ஒலித்தது.

அம்மா ரொம்ப கோபமாக இருக்கும் சமயம் மட்டுமே அப்படிக் கூப்பிடுவாள்.

தமிழ்நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் தமிழ்ப் பண்பை மறக்காத அம்மா-மம்மி, டாடி என்று கூப்பிட்டால் கோபம் வரும். கலாச்சாரத்தை மறக்காமல் பேஸ்மெண்டில் பூஜை அறை. நிலைப்படியில் கோலம்.

மாதம் தவறாமல் கொண்டாடும் பண்டிகைகள். ஞாயிறு கோயில்- இதுதான் அங்குள்ள மெஜாரிடி அமெரிக்க வாழ் இந்தியர்கள். போற்றி வளர்க்க வேண்டிய பெண் குழந்தையை டேடிங் அனுப்ப எப்படி மனம் ஒப்பும்- அது இன்று புரிகிறது. அன்று புரியாமல் இரவு அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டு அழுதாள் நீரு.

"நீருக்கண்ணா- அம்மா எது சொன்னாலும் உன் நன்மைக்குத்தான்னு நம்பிக்கை இருக்கில்லையா உனக்கு? அப்படி இருந்தா நான் சொல்றதைக் கேளு!"

மடியில் படுத்தபடி விசும்பும் நீருவின் தலையைக் கோதியபடி அம்மா- பட்டென்று சூடாக எதுவோ கன்னத்தில் விழ, நிமிர்ந்து பார்த்தாள்-அம்மாவின் கண்களில் ததும்பும் கண்ணீர்- எதற்குமே அழுது பார்த்திராத அம்மா! அவள் கண்ணீருக்குக் காரணம் நானா?- நீரு கலங்கினாள்.

"அழாதே! மா- நீ சொல்றபடி கேக்கறேன்- நீதான் எனக்கு வேணும்!" இறுக்கிக் கட்டிக் கொண்டது அந்தப் பன்னிரண்டு வயசுக் குழந்தை!

"நீரு! என் தவிப்பு இப்ப உனக்குப் புரியாதுடா. இன்னும் கொஞ்சம் வயசு போகணும். அம்மா உன்னைப் பத்தி எவ்வளவோ கனவு வெச்சிருக்கேன்டா!"

மென்மையாக நெற்றியில் முத்தமிட்ட அம்மாவின் கண்கள் அவளையும் தாண்டி தொலைவில் வெறித்தன.

மறுபேச்சில்லாமல் மூட்டை கட்டிக் கொண்டு இந்தியா வந்தாயிற்று. அவளத்தனை உயரம் டெடிபேர் (கரடி பொம்மை) உடன் வந்த அவளை எல்லாரும் ஏனோ விநோதமாகப் பார்த்தார்கள். வருஷம் ஒருமுறை வந்து பழகின உறவினர்கள்தான். புதிதல்ல.

இருந்தாலும் பிறந்தது முதல் பழகிய நண்பர்கள்-புதிதாக வாங்கிய வீடு. மனதில் அடிவண்டலாய்த் தங்கி விட்ட பழைய நினைவுகள்- எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு படிப்பு, பாட்டு, டான்ஸ் என்று முழுகிவிட்டதில் காலம் நிற்காமல் பறந்தது.

ஆரம்பத்தில் யாருடன் ஆசையாக நெருங்கிப் பழகினாலும் 'அமெரிக்கா' என்று ஒரு தயக்கம். ஒதுக்கம். கொஞ்ச நாளாகத்தான் நெருங்கிய சிநேகம். சித்தி- பெரியம்மா -மாமா-அத்தை என்று உறவும் நெருக்கமாயிற்று. மீண்டும் பிரிவு-இப்போது அங்கு விட்டு வந்த வருத்தம் கவிந்து கொள்கிறது.

"நீரு- இங்கெல்லாம் காலேஜ் அட்மிஷன் ரொம்பக் கஷ்டம். அதுவும் நம்மை மாதிரி எஃப்சிக்கு சென்ட் பர்சென்ட் வாங்கினாலும் சான்ஸ் இல்லை. நீ வேணா அமெரிக்கா போக பரீட்சை எழுது. எது இஷ்டமோ படிக்கலாம்'' என்றார் அப்பா. நீருவுக்கு சந்தோஷம் தாங்கவில்லை.

பாஸ் பண்ணி நல்ல யுனிவர்சிடியிலிருந்து அட்மிஷனும் கிடைத்தபோது பெருமையாக இருந்தது. அப்பாவும் அவளும் துள்ளிக் குதித்தபடி போக ஏற்பாடுகள் செய்கையில் அம்மா அமைதியாக இருந்தாள். ஒருவேளை நான் மறுபடி அமெரிக்கா போவது பிடிக்கவில்லையோ?

'தப்பு செய்துட்டோமா? நான் நெருங்க நெருங்க, எனக்கே கஷ்டமா இருக்கே. அம்மாவின் மௌனம்- பிரியணுமேனு வருத்தமா? வேர்களை வெட்டிவிட்ட பின்னும் கொடி அங்கேயே மீண்டும் தாவுகிறதே என்றா?'

நீருவுக்கு வருத்தம் தாங்கவில்லை. வாய் விட்டே கேட்டு விட்டாள். அம்மா பெருமூச் செறிந்தாள். இப்போது கண்களில் கண்ணீர் இல்லை.

"நீரு , நீ இப்ப வளர்ந்த பெண். உனக்கு நல்லது கெட்டது தெரியும். உங்கிட்ட எனக்கு நம்பிக்கை இருக்கு. தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால் தோழன் என்பார்கள். பெண் குழந்தைகளும் அப்படித்தான். இப்பக் கூட உன்னைப் பிரியணுமேங்கிற வருத்தம்தான். எப்

நீங்கள் வாழ விரும்புகிறீர்களா,
வாழ விரும்பினால் நேரத்தை
வீணடிக்க வேண்டாம். ஏனெனில்
வாழ்க்கை நேரத்தால் ஆனது.
– பெஞ்சமின் பிராங்ளின்
தகவல் : ஆர். பார்த்திபன்

படியும் இன்னொரு வீட்டுக்கு போறவதானே? இப்ப கல்யாணத்துக்கு முன்னாடியே வெளி நாட்டுல படிக்கிறேன்னு போறே! கிளை களைப் பரப்பி எத்தனை உயரத்துக்குப் போனாலும் உன் வேர்கள் இந்திய மண்ணில் தான்னு புரிஞ்சுக்கிட்டா போதும். நீ புரிஞ் சுப்பேங்கிற நம்பிக்கை இருக்கு!"

தெளிந்த மனதுடன் கிளம்பி வந்தாயிற்று. பின் ஏன் இந்தக் கலக்கம்? நேற்று சாம் (சாமிநாதன்) அங்கிள் வீட்டுக்குப் போகும் வழியில் ஷீலு கேட்ட கேள்வியா?

ஊரிலிருந்து வந்த ராமுத் தாத்தாவின் உணர்ச்சிமயமான பேச்சா?

தாத்தாவுடன்தான் நீரு முதலில் வருவதாக இருந்தது. ஆனால் தாத்தா அடுத்த மாதம் தான் வர முடியும் என்றதால் நீரு தனியாகவே கிளம்ப வேண்டியதாயிற்று.

"காலேஜ் செப்டம்பரில் திறந்துடுவா. தனி என்ன தனி? நீரு என்ன இன்னும் சின்னக் குழந்தையா? ஏர் இந்தியா பிளைட் முழுக்க நம் ஊர்க்காரங்கதான். லீவ் முடிஞ்சு ஊர் திரும்பறவங்க. அங்கே சாம் வந்து கூட்டிண்டு போவான். கொஞ்ச நாள் ஊரைச் சுத்தி காண்பிச்சுட்டு, அப்புறம் அவனே பாஸ்டன் போய் காலேஜில் விட்டுட்டு வருவான்'' என்றார் அப்பா.

"உண்மைதான் – ஷீலுவும், மகாவும் என் வரவை ஆவலோடு எதிர்பார்ப்பதாகவும், ஒரு மாசம் முன்பு வந்தால் எல்லாருமாக வெளியே போய் வரலாம் என்றும் அங்கிள் எழுதியிருந்தார். கூடவே மகாவும் ஷீலுவும். இந்தியா வந்த புதிதில் ஒரு லீவுக்குப் போனது எதுவுமே நினைவில் இல்லை.

அதனால் முன்னதாகவே போய், திட்ட மிட்டபடி நியூயார்க், வாஷிங்டன், நயாகரா, பிளாரிடா, சான்பிரான்சிஸ்கோ, கிராண்ட் கன்யான், லாஸ் ஏஞ்ஜல்ஸ், ஹாலிவுட் என்று ஒரு இடம் பாக்கி வைக்காமல் சுற்றினார்கள். காலேஜ் திறந்ததும் மகாவையும் நீருவையும் கொண்டு சேர்த்து விட்டுப் போனார் சாமிநாதன்.

ஷீலு உள்ளூர் ஸ்கூலில் படித்துக் கொண் டிருந்தாள். வார முடிவில் கார் வரும் – காரு டன் ஷீலுவும் வருவாள். மகாவும் அவளும் போய்த் திரும்புவார்கள். போன வாரம் ஊரிலிருந்து தாத்தா வந்திருப்பதாக ஷீலு வந்தாள். அந்த வாரம் வேலை இருந்ததால் நீருவுக்குப் போக முடியவில்லை.

இந்த வாரம் மகா சிநேகிதனுடன் போய் விட்டாள் – என்றாலும் காருடன் ஷீலுவும் வந்தது. தாத்தாவையும், தாத்தாவிடம் அம்மா கொடுத்து விட்டிருக்கும் பார்சலையும் பார்க்க ஆவலுடன் இருந்த நீரு கிளம்பினாள்.

காரில் வரும்போது எப்பவும் சலங்கை குலுங்குவது போல் சிரித்துப் பேசிக் கொண்டு வரும் ஷீலு அன்று எதுவுமே பேசாமல் வந்தது ஆச்சரியமாக இருந்தது.

''என்ன ஆச்சு ஷீலு! ஏன் பேசவே மாட்டேங்கிறே?''

"ப்ச" என்று அலுத்துக் கொண்ட ஷீலு "நீரு, நானும் தாத்தாவோட ஊருக்குப் போயி டலாம்னு இருக்கேன். இன்ஃபாக்ட். நான் தான் தாத்தாவை வரச் சொல்லியே எழுதி னேன்" என்றாள்.

"அப்படியா? ஆச்சரியமா இருக்கே!"

"யா– நீரு– கொஞ்ச நாளா மம்மி ரொம்பத் திட்டறா. எப்பவும் சந்தேகமா பார்க்கறா– பிரண்ட்ஸ் வீட்டுக்குப் போனா கூட, 'ஏன் லேட்?' அப்படியிப்படி–னு நூறு கேள்வி கேக்கறா!"

நீருவுக்கு வியப்பாக இருந்தது.

''ஷீலு, ஆண்ட்டி உன் மம்மிதானே? அவங்க உன் நல்லதுக்குத்தானே எதுவும் சொல்வாங்க? அதுக்கு வருத்தப்படலாமா?'

ஆறுதலாய் முதுகில் தட்டிக் கொடுத்தாள் நீரு.

அதிலேயே உடைந்து போனவளாய், நீருவின் தோளில் சாய்ந்து விம்மியழத் தொடங்கினாள் ஷீலு.

"காம் டவுன் ஷீலு! எதுவாயிருந்தாலும் மனசு விட்டுப் பேசு. ஆண்ட்டிகிட்ட நான் பேசி ஏதாவது செய்ய முடியுமா, பார்க்க லாம்."

முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந் தாள்.

"சொல்றேன் நீரு. தாத்தா மாதிரி நீயும் புரிஞ்சுப்பே. தாத்தா என்னைக் கூட்டிண்டு போற பேச்சை எடுத்ததும் மம்மிக்கு ரொம்ப



மாங்காய் தொக்கு செய்யும் போது, நெல்லிக் காய் அளவு வெல்லம் சேர்த்துக் கிளறுங்கள். சுவை கூடும்.

- என். சுந்தரி

கோபம். அப்பா எதுவுமே பேசல்லை."

ராமுத் தாத்தா போன வாரம் வந்தார். போன வாரம் கொஞ்சம் வேலை இருந்தது. போக முடியவில்லை. அம்மா ஏதாவது அனுப்பி இருப்பாள். அவர் வருகைக்கே இவள்தான் காரணமா?

"வீ நீரு! நான் யாரு? அமெரிக்கனா? இந்தியனா?"

நீரு அதிர்ந்தாள். ஆயிரக்கணக்கான அமெரிக்க வாழ் இந்தியர்களின் வாரிசுகளின் நெஞ்சில் மோதிக் கொண்டிருக்கும் மில்லியன் டாலர் கேள்வி இது!

"ஆமா நீரு. நா யாரு, என் இடம் எதுன்னே புரியல்லை. மம்மி, டாடி தங்களை மாத்திக்க விரும்பல்லை. இத்தனை நாளா ஏதோ இங்கியே பிறந்து வளர்ந்த மாதிரி, இந்த நாகரிகத்திலேயே மூழ்கிட்டு, இப்ப திடீர்னு என்னை மட்டும் அங்கே போகாதே, இங்கே நிக்காதே, இவனோட பேசாதேங்கிறா. நேத்து வரை பிரண்ட்ஸா பழகினவங்களோட இன்னிக்கு ஏன் பேசக் கூடாது?"

மூக்கு விடைக்க கண்கள் ததும்ப, குமுறும் வீனுவைப் பார்க்க பாவமாக இருந்தது நீருவுக்கு. அவளை விட ரொம்ப சின்னவள் வீனு. இந்தக் குழந்தையின் மனதில் இத்தனை பாரமா? அவளிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது?


"வீனு! அவங்க உன் அம்மா இல்லையா? என்னதான் அமெரிக்கக் கலாசாரத்தில் மூழ்கி இருந்தாலும் தமிழ்ப் பண்பாடு அவங்க மனசிலே இருக்கே? எந்த இந்தியத்தாய் மகளை டேட்டிங் அனுப்ப சம்மதிப்பாள்?"

"தெரியும் நீரு! உங்கம்மா பணம், நல்ல வேலை, தன் சௌகர்யம் எதையுமே நினைச்சுப் பார்க்கல்லை. உன் வருங்காலம் மட்டும் தான் அவங்க கவலையா இருந்ததுனு தாத்தா சொன்னார். ஆனா இவங்களுக்கு? கைநிறைய டாலரில் சம்பளம். படிப்புனு வந்து நல்ல வேலை. சௌகர்யமான வாழ்க்கைனு இங்கேயே ஊறிப்போயிட்டாங்க.

'என்னை தாத்தாவோட அனுப்பவும் யோசனை. இங்கே மத்தவாளுக்கு நடுவில நான் வித்யாசமா-நா மட்டுமில்லை நீரு- என்னை மாதிரி எத்தனையோ பேர்-ரெண்டுங்கெட்டானாக ஃபீல் பண்ணிகிட்டிருக்கோம். நா முடிவு பண்ணிட்டேன். தாத்தாதான் எப்படியாவது பேசி, அழைச்சுண்டு போகணும்."

"இந்தியா போனால் இன்னும் கட்டுப்பாடு இருக்குமே!"

"பரவாயில்லை நீரு! அங்கேயும் அமெரிக்க நாகரிகம் பரவிண்டிருக்குனு தெரியும். ஆனா மெஜாரிடி அதுவா இருக்காதே! பாட்டி என்னை சரியா 'கைட்' பண்ணுவா!"



என் மகள் கிண்டிய ரவை உப்புமா பாதி வெந்தும், வேகாததுமாக இருந்தது. அதை கொழுக்கட்டையாக பிடித்து இட்லி தட்டில் வேகவைத்து 'ரவா கொழுக்கட்டை' என்று பெயர் சூட்டிப் பரிமாறினேன்.

– பி. ஜானகி

வீடு வந்து விட்டது. வீடு போய்ச் சேரும்வரை விசும்பிக்கொண்டிருந்த வீனுவை அவளால் சமாதானம் செய்ய முடியவில்லை.

அன்று இரவு, சாப்பாட்டுக்குப்பின், அம்மா கொடுத்த பார்சலைக் கொடுத்தார் தாத்தா. அம்மா சில தின்பண்டங்களுடன் லெட்டரும் அனுப்பி இருந்தாள். பட்சணங்களைவிட இனிக்கும் விஷயம் கடிதம்தான். அம்மாவின் கடிதமே கதைபோல் இருக்கும்.

அவ்வளவு அழகாக எழுதுவாள். அது அம்மாவுக்குக் கைவந்த கலை. நீருவுக்கு லெட்டர் எழுதவே சோம்பல். இனிமேல்தான் பழகிக் கொள்ள வேண்டும். கடிதத்தைப் பிரித்தாள். சில வீட்டு விஷயங்கள்-ஊர் நடப்புகள், அரசியல், சினிமா எதையும் விட்டு வைக்காமல் எழுதியிருந்தாள்.

ஒரு சகி-தோழியின் லெட்டரைப் படிப்பதைப் போல், அப்படி எழுத அம்மாவினால்தான் முடியும்.

"நீரு. இவ்வளவு நாள் ஊர் சுற்றிக் கொண்டிருந்ததால் போன், இ.மெய்ல் என்று பேசிக் கொண்டிருந்தாய். எப்போதாவது குரலைக் கேட்க வேண்டும் போல் இருந்தால், நானும் போன் பண்றேன். நீயும் பண்ணு. ஆனால் மாதம் ஒரு முறையாவது ஒரு நீண்ட கடிதம். எல்லாவற்றையும் பற்றி எழுது.

நீ ஒரு நீண்ட கடிதம் எழுதினால் உன்னையே நேரில் பார்ப்பதுபோல் இருக்கும். உன்னைப் பார்க்கணும்போல இருந்தால் உன் கடிதத்தை எடுத்துப் படிப்பேன். எழுதுவாயா நீரு?"

எழுதறேம்மா: கண்டிப்பா எழுதுவேன். 'டார்மு'க்குப் போனதும் இதுதான் முதல் வேலை!...



தொந்தி விழுந்துள்ள ஆணும் பெண்ணும் ஒவ்வொரு நாளும் வாழைத் தண்டைப் பருப்புப் போடாமல் சமைத்துச் சாப்பிட்டு வந்தால் தொந்தி கரையும். வாழைத் தண்டைச் சமைத்துண்ணும் நாட்களில் தயிரையும், மோரையும் கண்டிப்பாக நீக்கவும். வெந்நீர் அருந்தி வரவும்.

– பா. குணா

டி.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்த சாமினாதன், அவர் மனைவி சுமதி இருவரும் எழுந்தனர்.

''குட் நைட் 'பா-குட் நைட் நீரு! ஷீலு ரூம்லே உன் பெட்டெல்லாம் ரெடி. ஷீலு அப்பவே தூங்கிட்டா. நீயும்...''

''சாமி- டெல்லியில் நடந்த சுதந்திர தின விழாவை டேப் பண்ணிகிட்டு வந்திருக்கேன். முடிஞ்சா சனிக் கிழமை பாக்கலாம்னியே'' என்றார் தாத்தா தயங்கியபடி.

''பி.பி.சி.யில நிறையப் பாத்தாச்சுப்பா. தூக்கம் வரது'' அங்கிள் நழுவ, பின்னால் சுமதி ஆண்ட்டி. ஒட்ட வெட்டின முடி. உடம்பெல்லாம் தெரிய சீ-த்ரு நைட்டி. நுனி நாக்கில் லாகவமாகப் புரளும் ஆங்கிலம், இவளை ஏதோ ஒரு கிராமத்திலிருந்து வந்த பெண் என்றால் யாரும் நம்ப மாட்டார்கள்.

பாவம், தாத்தா! அவரும் சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவர். ஐம்பதாவது சுதந்திர தின விழாவில் கௌரவிக்க, அவரை அரசாங்கம் அனுப்பி வைத்தது. அதனால் தான் அவரால் என் கூட வர முடியவில்லை என்று அம்மா சொல்லியிருந்தாள். அந்த நிகழ்ச்சியைத் தன் மகன், மருமகளுடன் பார்க்க வேண்டும் என எவ்வளவு ஆசையாக டேப் பண்ணிகிட்டு வந்திருப்பார்?

இந்த அங்கிள்தான் கிரிக்கெட் பார்க்கிற நேரத்திலே கொஞ்சம் ஒதுக்கி இதைப் பார்க்கக் கூடாதா?

''தாத்தா உங்களுக்கு தூக்கம் வரல லைன்னா, நாம பார்க்கலாமா?''

''ஓ'' என்று தாத்தா உற்சாகத்துடன் தலையசைக்க டேப்பைப் போட்டாள். பத்து நிமிஷம் கூட இல்லை. கூட வந்திருந்த தியாகிகளில் தன் சிநேகிதர்களைக் காட்டி மகிழ்ந்தார். நாடு சுதந்திரம் பெற்ற அன்றும் மனைவியுடன், மகனுடன், நள்ளிரவில் கொடியேற்றும் வைபவத்துக்கு வந்ததைச் சொன்னார்.

''பிரிட்டிஷ் கொடியை இறக்கி நம்ம மணிக்கொடியைப் பறக்கவிட எத்தனைபேர் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள், தெரியுமா? அன்று உண்மையிலேயே அது நடந்த போது, என் கண்களை என்னால் நம்பவே முடியலை. அழுதேன். சிரித்தேன். ஏன், என்னையே கிள்ளிக் கூடப் பார்த்துக் கொண்டேன்!''

தாத்தா பழைய நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் உற்சாகத்தில் இருந்தார்- ஜனவரி 1ம் தேதி விடிய விடியக் கண் விழித்து ஆடுபவர்களால் இதைக் கேட்க முடியல்லையா?

''தாத்தா, உங்களுக்குக் கஷ்டமில்லைன்னா, நம் சுதந்திரத்துக்காக உங்க போராட்டத்தைப் பத்தி சொல்லுங்களேன்.''

''அந்தக் காலத்து இளைஞர்கள் எல்லாருக்குள்ளும் அந்த சுதந்திரக் கனல் இருந்தது. அதை விசிறிவிட்டது நம் இந்திய தலைவர்களும், கவிஞர்களும். பள்ளியில் படிக்கும் போதே அப்பாவுக்குத் தெரியாமல் கூட்டங்களுக்குப் போய் வருவேன். அப்பா பெரிய மிராசுதார். நான் கழித்துப் பிறந்த ஒரு பிள்ளையும் உருப்படியா இல்லையேன்னு வருத்தம்.

என் சிநேகிதன் அப்பா பெரிய போராட்ட வீரர். தென்னாட்டுக்கு வரும் எந்தத் தலைவர்களும், இவர் வீட்டில் தங்காமல் போனதில்லை. அதனால் காந்திஜி, நேரு போன்ற எல்லாத் தலைவர்களையும் பார்க்கவும் சேவை செய்யவும் பாக்கியம் கிடைத்தது. 'வெயிட்டிங் ஃபார் மகாத்மா' படிச்சிருக்கியாம்மா நீ?

அது மாதிரி சுதந்திரம் கிடைச்சப்பறம் தான் கல்யாணம்னு, நான் மட்டும் அல்ல, எத்தனையோ இளைஞர்கள். ஆனால் எங்கம்மா உடல்நிலை மோசமாக இருந்ததால் வீட்டுக்குள் பூட்டியே என் கல்யாணத்தை முடித்து விட்டார் அப்பா. அந்தக் கோபத்தில் அம்மா போன பிறகு என் சிநேகிதன் தியாகுவுடன் ஓடிப் போனேன்.

சிரமப்பட்டு நேதாஜியின் ராணுவத்தில் சேர்ந்து கொண்டோம். பிரிட்டிஷ்காரர்களை தோற்கடித்து, இந்திய மண்ணில் இறங்கி விட்டோம். கடும் மழையில் பிரிட்டிஷாரிடம் மாட்டிக் கொண்டோம். நெஞ்சில் குண்டு பட்டு தியாகு மரணப் போராட்டத்தில் இருந்ததால் தயங்கின எனக்குக் காலில் குண்டு பாய்ந்தது.

பிரிட்டிஷ் ராணுவத்திடம் யுத்தக் கைதியாக பிடிபட்டு, நான் பட்டபாடு

சொல்ல முடியாது. யுத்தம் முடிந்து, எங்களைத் திருப்பி அனுப்பினார்கள். நான் உயிரோடு இருக்கிறேனா என்றே தெரியாத நிலை. நான் போகுமுன், கர்ப்பமாக இருந்த என் மனைவிக்கு சாமிநாதன் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தான்.

என் மனைவிக்கு என்னைப் பிரிந்ததில் வருத்தமே தவிர, விடுதலை ராணுவத்தில் சேர்ந்தது பெருமைதான். அப்பாவுக்கும் பின்ளை நாட்டுக்காக ஏதோ பண்ணியிருக்கானே என்ற சந்தோஷம். வெள்ளைக்காரனிடம் பட்ட அடி தேற வெகு நாளாயிற்று. பெண் குழந்தை வேணும்னு என் மனைவிக்கு ஆசை.

ஆனால் இனி எந்தக் குழந்தைக்கும் தகப்பனாக முடியாதபடி, இடுப்பின் கீழ், பிரிட்டிஷ் ராணுவத்திடம் வாங்கிய உதை பண்ணி விட்டது. தியாகி என்று அரசாங்கம் கொடுத்த எந்தச் சலுகையையும் நான் மறுக்கவில்லை. பாரத மாதா எனக்களித்த பரிசு என்று பெருமைப்பட்டேன்.

இப்ப என் மனைவி வரமுடியல்லை. நான் மட்டும் போய்க் கலந்து கொண்டேன். சாமிக்கு இந்தியான்னாலே நல்ல அபிப்ராயம் இல்லை. லஞ்சம், ஊழல்ம்பான். வளர்ந்து வர எந்த நாட்டிலும் இது சகஜம்தானே? படிக்க வந்தவன், இங்கேயே படிச்சுட்டிருந்த சுமதியைக் கல்யாணம் பண்ணிண்டு தங்கிட்டான்.

எத்தனையோ தரம் 'ஊருக்கு வந்து விடு. நீ படிச்ச படிப்பு, நம் நாட்டுக்குத்தான் பயன் படணும்'னு எவ்வளவோ சொன்னேன். இந்தப் போக பூமியை விட்டு வர அவர்களுக்கு மனசில்லை. நானும் இல்லாமல், தன்னந்தனியா இவனை வளர்த்து ஆளாக்கின அம்மா படுத்த படுக்கையா இருக்கா- இப்ப வும் வரமனசில்லை.

ஷீலு லெட்டர் கிடைச்சது. அவ கஷ்டம் எனக்குப் புரிஞ்சு கிளம்பி வந்தேன். வீட்டுக்கு ஒரு வயசான பெத்தவா இப்படி அனாதையா இருக்கற-நம் நாட்டிலும் முதியோர் இல்லம் பெருகிண்டு வர, காரணம் புரியுதா? குடும்பத்துல மட்டுமில்லை. பாரத மாதாவே இப்ப அப்படித்தான் இருக்கா.

வெள்ளைக்காரன் ஆட்சியே தேவலைனு பொறுப்பில்லாம சொல்றவங்களை நிக்கவச்சு சுடணும் போல ஆத்திரம் வரும். இது ஞானபூமி நீரும்மா. பிரேமானந்தா- போகானந்தா என்று நாளுக்கொரு போலிச் சாமியார் பிடிபடும்போது கூடவா என்று நினைக்கிறாயா?

காஞ்சி முனிவரும், ரமணர், ராமகிருஷ்ணர்-விவேகானந்தர் போன்ற மகான்களும் பிறந்து ஆன்மிகம் பரப்பிய பூமியம்மா இது! இல்லாவிட்டால் இங்குதான் அமைதி கிட்டுவதாக இவ்வளவு வெளிநாட்டினர் வருவார்களா? நல்லது, கெட்டது எங்கும் இருக்கும்.

ராமன் வாழ்ந்த பூமியில்தானே ராவணனும் இருந்தான்? அரக்கர்கள் எந்த நாளிலும் இருப்பார்கள். அவர்களிடமிருந்து நம் நாட்டைக் காக்க வேண்டிய பொறுப்பு உங்களைப் போன்ற இளைஞர்களிடம்தான் இருக்கிறது. சென்ற தலைமுறைக்கு சொல்லி அலுத்து விட்டேன்.

உங்கள் தலைமுறையாவது என் பேச்சைக் கேட்குமா?

பாரத நாடு பழம் பெரும் நாடு-நீரதன் புதல்வர். இந்நினைவகற்றாதீர்!

வாழ்க என் பாரதநாடு-வளர்க அப் புண்ணிய பூமி-ஜெய்ஹிந்த்! வந்தேமாதரம்!"

..."ஜெய்ஹிந்த்! வந்தே மாதரம்!" தாத்தா எழுந்து நின்று கூவினார். உணர்ச்சி மிகுதியில் அவர் உடல் ஆடிக் கொண்டிருந்தது. அவர் கைகளைப் பிடித்து அவரை அமைதிப்படுத்தி படுக்க வைத்தேன்-ஆனால், அம்மா, அவர் ஆவேசம் என்னில் தொற்றிக் கொண்டது போல், இன்று முழுதும் நான் தூங்கவில்லை. அந்த ஆவேசத்தை உன்னிடம் இறக்கி வைக்கவே இக்கடிதம்.

அம்மா, நான் விட்டு வந்த தாய்த் திருநாட்டின் மதிப்பை இப்போது நன்றாகப் புரிந்து கொண்டேன் அம்மா. புத்தனுக்கு போதி மரத்தடியில் ஞானம் கிடைத்தது போல், சாம் அங்கிள் வீட்டு லிவிங் ரூமில், எனக்கும் தாத்தா மூலம் கிடைத்தது.

என் இடத்தை நிரப்ப ஷீலு வருகிறாள். என்னை மாதிரி அவளுக்கும் தோழியாக, வழிகாட்டியாக இருப்பாயா? பாவம், சிறு பெண். குழம்பிப்போய் இருக்கிறாள். ஆனால் நான் இப்போது தெளிந்து விட்டேன் மா. நான் ஒரு இந்தியன். நாலு திசையும் கிளை பரப்பி, எத்தனை உயரம் வளர்ந்தாலும், என் வேர்கள் இந்திய மண்ணில்தான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஆயிரக்கணக்கான தியாகிகள் ரத்தம் சிந்தி, உயிர் கொடுத்துப் பெற்ற நம் தாய்த்திருநாட்டுக்கே என் சேவை பயன்பட வேண்டும். 'சென்றிடுவீர் எட்டு திக்கும்- கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!' என்ற பாரதியின் வாக்குப்படி, நான் கற்றதை வைத்து, என் நாட்டை மேம்படச் செய்ய மீண்டும் வருவேன்.

அதற்கு உன் ஆசியை வேண்டுகிறேன். வந்தே மாதரம்!

அன்பு முத்தங்களுடன்

உன் நீரு.

கடிதத்தை ஒட்டி விலாசம் எழுதியதும், மனம் லேசானது.

முயன்றால் முடியும்!

கையடக்கப் பதிப்பாக வந்துள்ள மன ஆற்றலை ஊக்குவிக்கும் நூல். ஆசிரியர்- லேனா தமிழ்வாணன்.

பக் - 128, விலை ரூ. 13.00

மூளைக்கு வேலை கொடுங்கள்

நிறைய புதிர்ச் சித்திரங்கள். சிறுவர் பெரியவர் அனைவருக்கும் பொழுது போகும். தொகுப்பு - மு. அப்பாஸ் மந்திரி.

பக் - 116, விலை ரூ. 22.00

(இவ்விரண்டும் - மணிமேகலை பிரசுரம், த.பெ. எண்: 1447, 4. தணி காசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017)

அலையும் ஆசையும்

நிதர்சனமான உண்மைகளைக் கூறும் சிறுகதைத் தொகுப்பு. ஆசிரியர் - எஸ். முத்துராமன்

பக் - 120,

விலை ரூ. 22.00

வெள்ளை நிறத்தொரு பூனை...

ப. புகழேந்தியின் வித்தியாசமான சிறுகதைகள். தலைப்பைப் போல சிறுகதை நடையும் கம்பீரம்.

பக் - 132,

விலை ரூ. 30.00

(இரண்டும் - செண்பகா பதிப்பகம், 7. போயஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.)



கூழாங்கற்களால் கோபுரம்

ஈரோடு இராமநாதன் எழுதிய கவிதைத் தொகுப்பு. கூர்மையான சிந்தனைச் சிதறல்கள்...

தராசு

'உயர்ந்தவன்
எடை குறைந்தவன்!'

பக் - 96, விலை ரூ. 20.00

(பதிப்பு-ஜானகிராம், பி.17, ரோகிணி பிளாட்ஸ், 124, மூவரசம் பேட்டை மெயின் ரோடு, மடிப்பாக்கம், சென்னை - 600 091)

குழந்தைகளுக்குப் பரமார்த்த குரு கதைகள்

ஓவியர் ராமுவின் படங்களுடன் பேராசிரியர் எ. சோதி தொகுத்துள்ள பாரம்பரியக் கதைகள்.

பக் - 128, விலை ரூ. 30.00

குழந்தைகளுக்கு மரியாதைராமன் கதைகள்

இதுவும் பேராசிரியர் எ. சோதி தொகுத்தவை.

பக் - 128, விலை ரூ. 30.00

(இரண்டும்-சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடி யிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.)

பி.ஆர். சுந்தரம் ஸ்தபதியாரின் மனையடி சாஸ்திரம்

ஆசிரியர் கோமல் தமிழமுதன். படங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

பக் - 160,

விலை ரூ. 60.00

(விநாயகா பப்ளிகேஷன்ஸ், 21/1 கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014)

பெண்களின் இயற்கை அழகு மேம்பட யோசனைகள்

நடைமுறை சாத்தியமான நல்ல யோசனைகள். ஆசிரியர் இந்திரா சுப்ரமணியம்.

பக் - 172, விலை ரூ. 35.00

செல்ல குழந்தைகளுக்குச் சூட்ட அருமையான பெயர்கள்

தொகுப்பு - ப. ராஜலக்ஷ்மி.

பக் - 128, விலை ரூ. 25.00

(இரண்டும் - விசாலாட்சி நிலையம், 53. கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014)

சிறப்பான வாழ்வு பெற சிறந்த மந்திரங்கள்

ஒவ்வொரு பிரச்னையையும் விரிவாக அலசி அதற்கான மந்திரங்கள் என விளக்கியிருப்பது புதுமையான போக்கு. தொகுப்பு - சு. சாந்தி முருகேஷ்.

பக் - 96, விலை ரூ. 15.00

(கவிதா பப்ளிகேஷன்ஸ், 8 முத்து கிருஷ்ணன் தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017)

ஜய ஜய சங்கர

ஆதிசங்கரரின் திவ்விய வரலாறு. முப்பத்திரண்டு ஆண்டுகள் இந்த மண்ணுலகில் வாழ்ந்து அத்வைதம் போதித்த மகான் சங்கரரின் அற்புதமான வாழ்க்கை வரலாற்றை ரா! கணபதி பக்தியில் தோய்த்துப் படைத்துள்ளார்.

பக் - 256, விலை ரூ. 36.00

(திவ்ய வித்யா டிரஸ்ட், 106/1, ஹபிபுல்லா சாலை, தி. நகர், சென்னை - 600 017)

Take a hint!

இல்லத்துக்கான யோசனைகள், ஆங்கிலத்தில். ஆசிரியர்-ஜெயந்திமதன்.

பக் - 72, விலை ரூ. 60.00

(பதிப்பு - East west books (Madras) Pvt Ltd, 62A, Ormes Road, Kilpauk, Chennai - 600 010)

சுமங்கலி

சிறுகதைத் தொகுப்பு. ஆசிரியர் கமலா சுப்ரமணியம்.

பக் - 62,

(பி.கே. சுப்ரமணியம், B/42, கோமதி நகர், லக்னோ - 226010.)

சூரியத்துளிகள்

கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் கவி முகில். ஒவ்வொரு கவிதைக்கும் வண்ணப் படங்கள்.

'வேட்டி நெய்து கொடுத்தோம்
கூலியாகக் கிடைத்தது
கோவணம்.'

பக் - 96, விலை ரூ. 100

(கவியரசன் பதிப்பகம், மேடவாக்கம் முதன்மை சாலை, வாணுவம்பேட்டை, சென்னை - 600 091)

ஸ்ரீ அம்மன் வழிபடும் முறைகளும் ஸ்லோகங்களும்

ஆசிரியர் ஸ்வாமி அபயானந்தாஜி தாஸ். கையடக்கப் பதிப்பு.

பக் - 128, விலை ரூ. 10.00

குடும்ப சமையல்

பாகம் - 1, பக் - 128, விலை ரூ. 25.00
பாகம் - 2, பக் - 112 விலை ரூ. 20.00
பாகம் - 3, பக் - 120 விலை ரூ. 25.00

சாதம் முதல் வடகம் வரை ஸ்வீட், டிபன் என நிறைய வகைகளை மூன்று பாகங்களில் கூறியிருப்பவர் பானுமதி நரசிம்மன்.

(நான்கும் பதிப்பு- இலக்குமி நிலையம், 53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014)

மூலிகைகளின் மருத்துவப் பயன்கள்

நிறைய நோய்களுக்கு வைத்தியமாக மூலிகைகளைப் பயன்படுத்தும் முறைகள். ஆசிரியர் - டாக்டர் சின்னசாமி.

பக் - 152, விலை ரூ. 30.00

வாழ்க்கை ஒரு வசந்தம்

மனோதைர்யத்திற்கு மெர்வின் எழுதிய நூல்.


ஜிங்லர்ஸ்
உங்கள் அருமைக் குழந்தையின் பட்டு மேனிக்கு இதமான, விசேஷ மெத்தை.



உங்கள் குழந்தைக்கு சிறப்பான கவனம் தேவை. இதை மனதில் கொண்டு, முழு ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்ட ஜிங்லர்ஸ் மெத்தையை உங்கள் குழந்தைக்கு அளிக்கிறோம். மென்மையான ஜிங்லர்ஸ் குழந்தை-மெத்தை பல ஒப்பற்ற சிறப்பம்சங்கள் கொண்டது.



- எளிதில் துவைக்கலாம், விரைவில் உலரும்
- சர்வதேச தொழில் நுட்பம்
- மென்மையான பாலிஃபைபர் கொண்ட உட்புறம்
- 100% பருத்தியினாலான மேல்பாகம்
- காற்றுப்புகும் அமைப்பு உள்ளதால் வெப்ப எரிச்சல், தடிப்பு ஏற்பட வாய்ப்பே இல்லை
- உட்புறம் ஈரத்தினால் கெட்டியாகாமல் மென்மையாக இருக்கும்
- பல அளவுகளில், மனதிற்கினிய வண்ணங்களில் கிடைக்கிறது.



ஜிங்லர்ஸ்-உங்கள் அரவணைப்புக்கு ஈடான அழகிய மெத்தை.

Jinglers

India's first real washable baby bed




Mfrs. Utility Textiles,
P.B. No.6858
Chennai - 600 040 Ph : 6211974

Distributor for Mayiladuthurai, Thanjavur, Nagapattinam, Thiruvarur, Pattukkottai, Pudukottai, Mannargudi, Trichy, Cuddalore, Chidambaram, Neyveli :
M/s. SIBI Agencies, OA/3, Durgaiamman Koil Street, Senthangudi, Mayiladuthurai - 609 001 Phone : 26142

Available at :
CHENNAI : ● ***T. Nagar*** : Naidu Hall; Ratna Stores; Witco; Murugan Dresses; New Burma Fancy Stores; Krishna Thulasi; Flora; ***Mylapore*** : Vitan Departmental Stores; Trishla Apparels; Garments Centre; London Stores ● ***Purasaiwalkam*** : London Stores; Ayisha The Upstairs; Libas; Naidu Hall, Sahiras Readywear; Baby's World; Twinkle ● ***Kilpauk*** : Mummy Daddy ● ***Kodambakkam*** : Sekar Dresses ● ***Anna Nagar*** : Naidu Hall; Witco; Sharaz; Yeses Super Market ● ***Tambaram*** : Lucky Apparels; Lucky Dresses; Roja Departmental Stores ● ***Egmore*** : Fashions ● ***Padi*** : Seematti ● ***Aminjikarai*** : Shabnam; Alankar Silk Palace ● ***Mount Road*** : London Stroes, Kiddies Corner ● Old Washermenpet: Shopping Singapore ● ***Parrys*** : Novelty gift Palace ● ***Adyar*** : Super Shoppe ● **COIMBATORE** : Saravana's; Sri Land; Grand Bazzar; Ganapathy Bed Mart; Shoba; Small Wonders; Jack & Jill ● **SALEM** : Milan; Aunty Uncle; five Star Readymades; Royal Home Decors; Ramyaa Esteem; Ramya shopping Plaza; Ramya; Princy furniture Hall ● **ERODE** : Bharani Readymades; Nandini Sarees and Readymades; Sri Krishna silks; Santhi Dresses ● **OOTY** : ***Coonoor*** : Yogesh Garments ● **KRISHNAGIRI** : New Rani Dresses ● **MADURAI** : M.S.P. Raja Enterprises; Milan; Daddy Mummy; Remuki; Kiddy's Corner; Shabnam Agencies; Benzers; Balaji Readymades; Roopmilan; Rahimas; Rainbow Readymades; Designs; Sathyam; Alankar Traders ● **DINDIGUL** : Priya; Shabnam; Singapore Plaza; Sivalakshmi Readymades ● **RAMNAD** : Mummy Daddy; India Readymades; Designs; Faridas ● **TIRUVELVELI** : Pothy's Garments, Roopam Readymades; R.M.K.V ● **TUTICORIN** : Students Readymade Emporium, Jasmine Readymades; Milan ● **PONDICHERRY** : Shabnam; Kiddys Centre, Ega Entrerprises; J.C.R. Baby Needs; Crowns; Shalimar; Jaya Emporium.

ஸ்கூல் வாசலில் தவம் கிடக்கும் பெற்றோர்கள்



"சாப்பாட்டு வேளைகளில்...

கடும் வெயிலில் குடையை எடுத்து வரக் கூட மறந்து குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்க சாப்பாட்டை எடுத்து வந்து, பள்ளியின் கேட்டுக்கு வெளியே வியர்வை சிந்த நிற்கும் அந்தந்தப் பள்ளிகளின் குழந்தைகளின் பெற்றோர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. உயர்தர வகுப்பினர் வீட்டுப் பிள்ளைகளுக்கு சாப்பாடு காரில் வரும், வேலையாள் உள்ளே போய்க் கொடுத்துவிட்டு சாப்பிட்டு முடியும் வரைக் காத்திருந்து, கேரியரை எடுத்துப் போவார். ஆனால் மத்தியதர வகுப்பினரின் குழந்தைகள் எல்லார் வீட்டிலுமா சமையல் காலையிலேயே ஆகிவிடுகிறது? அரக்கப் பரக்க, இருப்பதைப் போட்டு பள்ளிகளுக்குக் குழந்தைகளை அனுப்பி விட்டு, பின்னர் மார்க்கெட்டுக்குப் போய் காய்கறி, இத்யாதி வாங்கி வந்து சமைத்து, குழந்தைகளுக்கு மத்தியான வெயில் நேரத்தில் பள்ளிகளுக்குக் கொண்டு சென்று கொடுத்து வரும் எத்தனையோ தாய்மார்கள் வெயிலில் நிற்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இவர்களுக்காக ஒரு ஷாமியானா அல்லது பந்தல் போட்டுத் தரலாமே! ஆயிரக்கணக்கில் தங்கள் குழந்தைகளுக்காகக் கொட்டித் தரும் இவர்களுக்கு இது கூடவா செய்யக் கூடாது?

— வி. வெங்கடசுப்ரமணியன்.

பக் – 176, விலை ரூ. 35.00

(இரண்டும் – குமரன் பதிப்பகம், 2. முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார், தி. நகர், சென்னை – 600 017)

கருணைக் கதைகள்

என்.ஸி. ரங்கஸ்வாமி ஆங்கிலத்தில் எழுதிய சின்னஞ் சிறு கதைகளைத் தமிழில் அளித்திருப்பவர் வையவன்.

பக் – 136,

(அன்பளிப்பு –என்.ஸி. அனந்தாச்சாரி கிருத்திகா, 2 ஸ்ரீராம் நகர், தெற்குத் தெரு, சென்னை – 600 018.)

நர்மதா அனுபவ கைரேகைக் களஞ்சியம்

படங்களுடன் எளிய முறையில் கைரேகை பற்றி எழுதியிருப்பவர் கே.எஸ். பதஞ்சலி ஐயர்.

பக் – 160, விலை ரூ.32.00

மகாபாரதம் கதை வசனம்

தமிழில் தந்திருப்பவர் எம். நாராயண வேலுப் பிள்ளை.

பக் – 192, விலை ரூ. 35.00

(இரண்டும் – நர்மதா பதிப்பகம், 6/7 ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை – 600 017)

உடுதசா பல நிர்ணயம்

தசாபுத்திகளும் பலன்களும் எழுதியவர் தமிழுரை –கடலங்குடி நடேச சாஸ்திரிகள். தொகுப்பு – கே.என். சரஸ்வதி.

பக் – 442, விலை ரூ. 90.00

ப்ரம்ஹ ஸூத்ர சாங்கர பாஷ்யம்

வேதாந்த ஆர்வம் உள்ளவர்கள் படித்து ஆனந்திக்கத் தக்கது. தமிழுரை– நடேச சாஸ்திரிகள்.

பக் – 144, விலை ரூ.350/-


(இரண்டும் கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38 நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை – 600 017.)

காஞ்சி பரமாச்சாரியார் – ஒரு ஆன்மீக, மானுட உறவு

எம்.ஒய். கோர்ப்படே எழுதிய நூலின் தமிழாக்கம். ஆசிரியர் பரமாச்சார்யாருடன் தனக்கு ஏற்பட்ட ஆன்மீக அனுபவங் களைக் கூறியிருக்கிறார். கர்நாடகாவில் ஸ்வாமிகள் புனித யாத்திரை வந்தபோது அவருடனான நிகழ்வுகளைப் பதித்துள் ளார். அருமையான அச்சுப் பதிப்பு, பெரிய அளவில்.

பக் – 292, விலை ரூ. 225.00

(பிரசுரம்– வித்யாரண்ய வித்யாபீட அறக்கட்டளை, ஷாஸ்பெட் – 583 201. கர்நாடகா.)



கையளவு மனசில் கடலளவு ஆசை!

ஜூன் மாதம்... எங்கு பார்த்தாலும் ரிக்ஷாக்கள். தம் எடையை விட இரண்டு மடங்கு அதிகமான புத்தகங்களைச் சுமந்து செல்லும் பிஞ்சுகள். சில சந்தோஷ முகங்கள் - பயத்தோடு விழிக்கும் முகங்கள் - துருதுருவென்று வம்புக்காய்க் காத்திருக்கும் முகங்கள் - இந்தக் காட்சியைக் காண்பதே தனி மகிழ்ச்சிதான்.

ஆனால்... இத்தனையும் தாண்டி, சற்று உற்றுப் பார்த்தால், ஏக்கத்தோடு ஓரமாய் நிற்கும் ஏழை முகங்கள்... அந்த முகங்களின் பின்னிருக்கும் மனது என்ன நினைக்கிறது? எதைப் பார்க்கிறது?

அந்த மனங்களைச் சந்தித்தபோது...

ஜகன்னாத் :

கடற்கரையில் சோன் பாப்படி விற்கும் சிறுவன். வயதைக் கேட்டால், பதினொன்று அல்லது பன்னிரண்டு இருக்கலாம் என்ற சந்தேகமான பதில். தமிழ் தெரியாது. இந்தி மட்டுமே தெரியும்.

"அம்மா கிடையாது... இறந்து போயிடுச்சு. அப்பா ஹைதராபாத் கிட்டே கிராமத்துல பால்காரர். பணமில்லை, அதான் இங்க வேலை செய்யறேன்."

"ஸ்கூலுக்குப் போயிருக்கியா?" என்றவுடன் சட்டென்று வாடிப் போனது முகம்.

"போகணும்னு ஆசைதான். ஆனா அதெல்லாம் நடக்காது," என்றவன், "என்னைக் கூப்பிட்டு யாரு படிக்க வைப்பாங்க? நான் இப்படித்தான் இருக்கணும்" என்று சோகமாகிப் போனான்.

"பெரியவனானா ஏதோ ஒரு வேலை செஞ்சு பிழைச்சுக்கணும். அவ்வளவுதான். எனக்குன்னு எதுவும் கிடையாது. யாரும் கிடையாது" என்ற போது அவன் கண்களில் நீர்.

சக்திவேலும் அலெக்ஸாண்டரும் கொஞ்சம் வித்தியாசமானவர்கள். மெக்கானிக் கடையில் வேலை.


பதினோரு வயதான சக்திவேல், இரண்டாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டான். காரணம் -

"படிக்கப் புடிச்சிருந்துது. ஆனா இங்கிலீசுதான் வரவேயில்லை. எப்பவும் டீச்சர்கிட்டே திட்டு, அடிதான். இங்கிலீசு க்ளாசுல உக்காரவே பிடிக்கலை. வெறுப்பாயிடுச்சு ஸ்கூலு. நின்னுட்டேன்," என்று சொன்னாலும்,

"இப்பக் கூட ஸ்கூலுக்குப் பசங்க போறதைப் பார்த்தா ஆசை ஆசையா இருக்கும். நம்மனால முடியலியேன்னு கஷ்டமா இருக்கும்" என்றான் ஏக்கத்துடன்.


தைரியமூட்ட நினைத்து,

"விடாம படி. படிக்கப் படிக்கத்தானா வந்துடும்," என்றபோது, "ம்ஹூம். இங்கிலீசுதான் கஷ்டம். வராது. அதான் முடிவு பண்ணிட்டேன். இங்க மெக்கானிக் கடையில வேலை பார்த்து, நானும் பின்னாடி பெரிசா கடை வைப்



இட்லி மாவில் உளுந்த மாவு அதிகமாகி விட்டால் இட்லி சிப்பி சிப்பியாகப் போகும் அதனால் சிறிது ரவையைக் கலந்து கால் மணி நேரம் ஊறிய பிறகு இட்லி ஊற்றிப் பாருங்கள். இட்லி நல்ல மிருதுவாக இருக்கும்.

— பி. ஜானகி



பேன். நிறைய சம்பாதிச்சு, அம்மா அப்பாவைக் காப்பாத்துவேன்," திட்டவட்டமாக வந்தது பதில்.

அவன் நண்பன் அலெக்ஸாண்டருக்குப் பதினைந்து வயது. ஏழாவதுடன் படிப்பை நிறுத்தி விட்டான். காரணம் – அதே 'இங்கிலீசு'.

"என்ன பண்ணினாலும் இங்கிலீசு மட்டும் வரவேயில்லை. நான் மட்டும் படிச்சிட்டிருந்தேன்னா இப்போ பத்தாங்கிளாஸ் போகணும். எல்லாப் பாடத்துக்கும் டீச்சர்கிட்டே ட்யூஷன் உண்டு. ஆனா இங்கிலீசுல மட்டும் என் பேரு கூட எழுதத் தெரியாது. கொஞ்ச நாள் முன்னாடிதான் ஒருத்தர் சொல்லிக் கொடுத்துப் பேரை மட்டும் எழுதுறேன்."

சற்று யோசித்தான். "இப்ப அம்மாகிட்ட சொல்லியிருக்கேன். திரும்பவும் ஸ்கூல்ல சேர்க்கச் சொல்லி, ஆனா எட்டாங்கிளாஸ் தான் போகணும். இங்கிலீசு மட்டும் யாராவது ரொம்ப நேரம் சொல்லிக் கொடுத்தா நல்லா படிச்சிருவேன்" என்றான். அவன் தன்னம்பிக்கை நம்மை அசந்து போக வைக்கிறது.

"பெரியவனானா என்னவா ஆகணும்னு ஆசை?" என்றதும், சட்டென்று சொன்னான் "பாங்க்ல வேலை செய்யணும்."

கல்லூரி மாணவர்கள், தங்கள் விடுமுறையில் வேலைக்குச் சென்று சம்பாதித்துப் பொழுதுபோக்குவது இன்று அதிகரித்து வருகிறது.

வருங்காலத்திற்காகக் கல்வி கற்றுக் கொண்டே நிகழ் காலத்திற்காக உழைக்கிறார்கள் இருவர்...

செந்தில்குமாருக்குப் பதினான்கு வயது. கோடை விடுமுறைக்கு அத்தை வீட்டுக்கு வந்தவன், தையல் கடையில் வேலை செய்கிறான்.

"பத்தாவது போறேன். வந்த இடத்திலே, நல்லதா ஏதாவது செய்வோமேன்னு டெய்லர்கிட்டே வேலை பார்க்கறேன்," என்று சொல்லும் இவன் அப்பாவும் தையல் கடை வைத்திருக்கிறார்.

"அப்பாவைப் பார்த்துத் தைக்க ஆர்வம் வந்துருச்சு. பின்னாடி, நிறைய புதுப்புது டிசைன்ல தச்சு நல்லா பேரெடுக்கணும். செய்யற தொழில்ல பெரிய ஆளா வரணும்"

"அப்போ படிப்பு...?" என்று கேட்டால்,

"படிப்பை விட மாட்டேன். படிச்சாத்தானே மதிப்பு. படிச்சுட்டே டெய்லரிங்ல நிறைய விஷயம் சைடில கத்துப்பேன். அதுக்காகத்தான் இங்கே லீவுல வேலை செய்யறேன்," குரலில் உறுதி தெரிகிறது.

பதினொரு வயது கோமதிக்குக் காலையில் பள்ளிக்குச் சென்று மாலை திரும்பி வந்து, அம்மாவோடு சேர்ந்து பூ கட்டி, கடற்கரையில் விற்ற பின், ஒன்பது மணிக்கு மேல் படிப்பு.

"கஷ்டமாயில்லையா உனக்கு?" என்றால், பெரிய மனுஷி போல் "என்ன செய்யறது.. இப்பக் கஷ்டப்பட்டாத்தானே பின்னால நல்லா இருக்கலாம்" என்றாள்.

"சில நேரம் வருத்தமாயிருக்கும். பூ வித்துட்டு வந்த உடனே காலெல்லாம் வலிக்கும். 'ஏம்மா இப்படி என்னை அனுப்பறே... படிக்க வேண்டாமான்னு' ரொம்ப அழுதுடுவேன். ஆனாலும், படிக்கறதை மட்டும் விடவே மாட்டேன். எப்பவும் முதல் மூணு ராங்குக்குள்ளே வந்துருவேன்," என்றாள் பெருமை பொங்க.

"நிறைய படிச்சு என்னவாகணும்?"

"இப்படியே என்னைப் படிக்க வச்சு எல்லாம் நல்லபடியா நடந்தா டாக்டரா வரணும்னு ஆசை," பொறுப்புடன் வந்தது பதில்.

இவர்களுடைய ஏக்கமும், துன்பமும், உடல் வருத்தமும் நம்மை அனுதாபப்பட வைக்கலாம். ஆனால் இவர்களிடம் நிறைந்திருப்பது வைராக்கியம், வாழ்ந்தே ஆக வேண்டுமென்கிற வெறி. என்றாவது ஒருநாள் தங்கள் கனவுகள் கரையேறும் என்ற இவர்களின் தன்னம்பிக்கை – நாமெல்லாம் கற்க வேண்டிய பாடம்.

பேட்டி : மு. சுப்புலட்சுமி

தகவல் பலகை

ஆந்திராவில் கர்னூலை சென்டராக வைத்துக் கொண்டு பல புண்ணிய ஸ்தலங்களைப் பார்க்கலாம். (வெயில்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்!)

- கர்னூலில் இருந்து

மந்திராலயம் - 90 கி.மீ (மேற்கு)

மஹா நந்தி - 90 கி.மீ (கிழக்கு)

ஸ்ரீசைலம் - 130 கி.மீ (கிழக்கு)

ஆலம்பூர் - 18 கி.மீ (வடக்கு)

மாகண்டி போன்ற சிவஸ்தலங்களும் இங்குதான் உள்ளன.

- என். ஜெயஸ்ரீ.

வேண்டுதல் நிறைவேற்றும் மண் அகல்



வேலூரில் ஜலகண்டேஸ்வரர் கோவிலில் 2-வது கோபுர பிரகாரத்தில் நந்தி அருகே ஒரு பலி பீடம் உள்ளது. இது சக்தி வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. இந்த பீடத்தின் மேல் ஒரு சிறு மண் அகல் வைத்து உள்ளனர். இந்தக் காரியம் நிறைவேறுமா? என்று வேண்டுதல் செய்து மண் அகல் மீது வலது கையை வைக்க வேண்டும். அந்த அகல் சுற்றினால் வேண்டுதல் நிறைவேறுவதாக அசையாத நம்பிக்கை பக்தர்களிடத்திலேயே உள்ளது. மண் அகல் சுற்றுவது அதிசயம்தான். எங்கள் வீட்டில் திருமணம் நடப்பதற்குப் பல தடங்கல்கள் ஏற்பட்டன. நாங்கள் மண் அகல் மீது கையை நிறைவேறுமா என்று எண்ணி கை வைத்தோம். உடனே மண் அகல் சுற்றியது. என் சகோதரியின் திருமணம் நல்லபடியாக நடந்தேறியது.

வேலூர்க் கோட்டை ஜலகண்டேசுவரர் கோவிலில் சிற்பக் கலை செறிந்த திருக்கல்யாண மண்டபத்தில் நவநீத கிருஷ்ணனைப் போல அழகிய குழந்தை வடிவிலே விநாயகர் விளங்குகிறார். இவரை வேண்டினால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

- விசாலாட்சி.



வடுவூர் ராமர்

வடுவூர் ராமர் வரப் பிரசாதி அவர் வில்லில் இருக்கும் அம்பால் 48 நாட்கள் தலையில் தொட்ட மாத்திரத்தில் மனநோய் நீங்கும் என்பது உறுதி.

தஞ்சாவூரில் இருந்து மன்னார்குடிக்குச் சென்று நேர்வழிப் பேருந்து தடத்தில் உள்ளது வடுவூர். தஞ்சையில் இருந்து 24 கி.மீ கிழக்கிலும், மன்னார்குடியில் இருந்து 14 கி.மீ மேற்கிலும் உள்ளது. சோழ வளநாட்டில் ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப் பட்ட திவ்விய தேசங்கள் 40 ஆகும். அதில் வடுவூரும் ஒன்று.

ஸ்ரீகோதண்டராமர் திருக்கோயில்; மூலவர் ஸ்ரீகோதண்டராமர் (ஸ்ரீ சீதா பிராட்டி லக்ஷ்மணர், ஹனுமார் சமேதராய் திருக் கல்யாண கோலத்தில் விளங்குகிறார்)

உத்ஸவர் அதே திருக்கோலத்தில் (மேலே சொன்ன) காட்சியளிக்கிறார். சீதா பிராட்டிக்குத் தனி சந்நிதியில்லை.

விமானம் - புஷ்பகவிமானம்

தீர்த்தம் - ஸரயூபுஷ்கரணி


தலத்தின் பெயர் - வகுளாரண்யம், பாஸ்கர க்ஷேத்திரம், தட்சிண அயோத்தி என்னும் திருப் பெயர்களும் உண்டு.

தலவிருட்சம் - வகுள மரம் (மகிழ மரம்)

தலவகை - அபிமானஸ்தலம்

பாஞ்சராத்ர ஆகமம் அனுஷ்டிக்கப் படுகிறது.

ஆற்றில் கிடைத்த காளி!



தஞ்சை அரசர் ஓர் ஏகாதசி அன்று வித்துவான்களுக்கு மான்யமாக வழங்கப்பட்ட ஊர் இது. இதனை ஏகாதசி கிராமம் எனவும் அழைப்பர்.

— சித்ரா ரவீந்தர்.

சென்னையில் இப்போது மயிலாப்பூரில் சாய்பாபா கோவில் அருகே உள்ள அலமேலு மங்காபுரம் ஆஞ்சநேயர் கோவில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கோபுரம் ஏதும் இல்லாமல், கொட்டகைகூட இல்லாமல் இருந்தது. நாங்கள் சென்னை வரும்போதெல்லாம் அந்த ஆஞ்சநேயரை தரிசிப்பது வழக்கம். திடீரென்று ஒருநாள் இரவு என் கணவரின் கனவில் வந்து இரு சகோதரர்கள் (நாங்கள் இன்றுவரை அவர்களை ராமர், லட்சுமணர் என்றே நினைக்கிறோம்) பிராமண ரூபமாக பூணூல் தரித்து திருமண் இட்டுக் கொண்டு நீங்களெல்லாம் சேர்ந்து உதவி செய்தால் நான் ஆஞ்சநேயருக்குக் கோபுரம் கட்ட முடியும் என்று சொன்னார்கள். அதன்படி மறு வாரமே அப்போது எங்களால் இயன்ற ரூ 1001/-ஐ கோயிலில் சமர்ப்பித்தோம். சிறிது நாட்களிலேயே கோவில் கோபுரப் பணிகள் ஆரம்பித்து சுற்றுப் பிரகாரத்தில் விநாயகர் சந்நிதி, ராமர் சந்நிதி தோன்றின. எப்போதும் எங்களுக்கு அந்த ஆஞ்சநேயர் ஏதாவது துணையிட்டுக் கொண்டேதான் உள்ளார்.

— ஜெயலெட்சுமி சுந்தரராஜன்.

குமரி அன்னை

இந்தியாவின் 'தென் முனை'யாக விளங்கும் 'கன்யாகுமரி'யைப் பற்றி அறியாதவர்கள் குறைவாகவே இருக்கும். ஆனால் 'கன்யாகுமரி மாவட்டம்' என தமிழ் நாட்டின் பாகமாக இருக்கும், இந்தச் சின்ன மாவட்டத்தின் பெருமைகள் அதிகம். 'நாஞ்சில் நாடு' என அறியப்படும். திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் 'ஆரல்வாய் மொழி' எனும் சின்ன ஊர் வரும் போது, உங்களுக்கே அந்த பச்சைப் பசேல் என்ற தென்னங்காடுகளிலிருந்து வரும் தென்றல் உங்களை வரவேற்கும். அதுதான் மாவட்டத்தின் ஆரம்பம்.

பருவமழை இரண்டுமே ஏற்று வாங்கும் பூமி. பின் செழிப்பிற்குக் கேட்கவா வேண்டும். நெல் வயல்கள் கண்ணுக்குக் குளிமை ஊட்டும். கேரளாவிலிருந்து பிரிந்தாலும் அதே பருவநிலை, செழிப்பு இரண்டுமே உண்டு. குமரி அன்னையின் ஆலயம் தவிர, ஸ்தாணு மாலையர் என்னும் 'சுசிந்தரம்' சிவன் கோவில்,





தலைநகர் 'நாகர் கோவிலின்' அழகிய நாகரின் ஆலயம் எல்லாம் பார்க்க வேண்டிய இடங்கள் ஆகும்.

சுசிந்தரம் அருகில் 'மயிலாடி' என்னும் சிறிய ஊரில் செய்யும் 'கல் கொத்து வேலை' புகழ் பெற்றதாகும். இங்கேயிருந்து கல்லில் செய்த பிள்ளையார், நடராஜர் சிற்பங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

'தக்கலை' எனும் ஊரின் அடுத்து உள்ள 'பத்மனாபபுரம் கொட்டாரம்' கேரள பாணியில் உள்ள பார்க்க வேண்டிய இடம். பின் கன்யாகுமரியை பற்றி நான் சொல்ல வேண்டியதே இல்லை. மூன்று கடல்களின் சங்கமம். இவை எல்லாவற்றினையும் அடக்கி ஆளும் 'குமரி அன்னை', விவேகானந்தரின் நினைவாலயம், சூரியனின் உதயமும், அஸ்தமனமும் இவை எல்லாம் குமரி மாவட்டத்துக்குக்

கிடைத்த பரிசாகும். ஏதோ 'டூர்' போட்டு வந்தோம் என்று கன்யாகுமரியை மட்டும் பார்த்துவிட்டு ஒரே நாளில் போகாமல் 2, 3 நாட்கள் இருந்து செழிப்பான இந்த பூமியைப் பார்த்துவிட்டு, பசுமையான நினைவுகளுடன் திரும்புங்கள்.

– லக்ஷ்மி ஹரிஹரன்.

காவிரி நதியில் கிடைத்த காளி – கொடுமுடி மருதகாளி

ஈரோடு, கொடுமுடியில் அக்கம்பக்கத்தில் சிவன்-விஷ்ணு ஆலயங்கள் அமைந்து சைவ, வைணவ, மத ஒற்றுமைக்கு ஓர் ஆலயமாகத் திகழும், பாடல் பெற்ற ஆலயம். எதிரே சுமார் 2 கி.மீ அகலம் உள்ள காவிரி நதி. ஆற்றங் கரையில் கணபதி, முருகன் ஆலயங்களில் தோஷ பரிகாரங்கள், தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்களின் நீராடல் என மிகவும் பிஸியான காவிரி நதி.

மிகவும் பகுத்தறிவுவாதியான எனது நண்பர் திரு. எம்.எஸ். பாரதி ஆற்றில் இறங்கி குளிக்க, முழுகும்போது, தட்டுப்பட்டதை தூக்க முடியாமல் தூக்கிப் பார்த்தால் 8 கைகள் உடைய 3 அடி உயர காளிதேவியின் கருங்கல் சிலை. அன்று ஸோமவார அமாவாசை. அன்னை காளியின் ஆலயம் தன்னிடத்தில்



கேழ்வரகை மிஷினில் நைஸாக அரைத்துச் சலித்து, கஞ்சி வைத்து, இறக்கியவுடன், வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிப் போட்டு மூடவும். ஆறியவுடன் மோர், உப்புப் போட்டுக் குடித்தால், உடல் சூடு தணியும். உடம்புக்கு ஏழைகளின் A.C பஸ்ஸிலும்,ஸ்கூட்டரிலும் பயணம் செய்து, ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு இது ஒரு சிறந்த உணவு. காலை டிபனுக்குப் பதில் சாப்பிடலாம். வாய், வயிற்றுப் புண் வராமல் தடுக்கும்.

– ஆர். பார்வதி

அமைவதற்காகவே (சுமார் 100 ஆண்டுகள்) பல்லாண்டுகளாக வளர்ந்திருப்பது போல கரையோரத்திலே, இரு கைகளாலும் அணைக்க முடியாத அளவு பருத்த மருதமரம். மருத மரத்தை வெட்டினால் (பாலுக்குப் பதில் பிசினுக்குப் பதிலாக) சிவப்பு நிற ரத்தம் போல திரவமே வடியும்.

உடனே இது ஊரெல்லாம் பரவி, ஊர் மக்களெல்லாம் திரண்டு, கொடுமுடி சிவலாய குருக்கள்களும் உடனிருந்து, பகுத்தறிவாளர் ஆக இருந்து திடீரென காளி பக்தர் ஆகி விட்ட எனது நண்பர் பாரதியின் கரங்களிலேயே காளி சிலையை - ஸ்ரீ மருத காளி என்ற பெயரில் - அந்த மருத மரத்தடியில் ஆலயம் அமைத்து கும்பாபிஷேகமும் செய்து வைத்து விட்டு வந்தேன். சுமார் பனிரெண்டு ஆண்டுகளாகின்றன. பாரதி எல்லாவற்றையும் துறந்து காளி கோயில் பூசாரியாகவே பணி புரிகிறார்.

அதிசயங்கள் அற்புதங்கள் பல நடைபெற்று விட்ட அந்த ஸ்ரீ மருத காளி ஆலயம் இன்றும் கொடுமுடி (கரூர்) காவிரிக் கரையில், பக்தர்கள் பல்லாயிரக்கணக்கானோருக்கு பரிகாரங்கள் பல அருளி, இன்றும் மிகச் சிறப்பாக விளங்குகிறது.

- தண்டபாணி ஸ்வாமி.

சாந்த நரசிம்மர்!

செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் (பஸ்ஸில் 3.75 தந்து பழயசீவரம் என கேட்டால் கோவில் அருகில் பஸ் நிறுத்தம்) உள்ளது பழைய சீவரம்.

நரசிம்மர் என்றாலே கோபாவேசமாக நினைத்து பயப்படுவர் பலர். ஆனால் சாந்தமும், அழகும் சேர்ந்து ஸ்ரீ அழகிய நரசிம்மராக பார்க்க சேவிக்க பதினாயிரம் கண் நமக்கு வேண்டும். நாம் வேண்டும் வரத்தை உடனே தரும் வரப் பிரசாதியானவர். மூன்று நதிகளில் ஒன்று, சங்கமமாகும் இடத்தில் 'அத்தி முனிவருக்கு' பிரத்யட்க்ஷமாகி தேடி வரும் பக்தர்களுக் கெல்லாம் திவ்ய ஸ்வரூபமாகக் காட்சியும் தந்து, குறைகளை களைந்திடும் குணசீல ஸ்தலமாகவே இந்த ஸ்தலத்தை நான் நினைக்கிறேன்.

கூப்பிட்ட குரலுக்கு குழந்தை பிரஹலதானுக்கு ஓடி வந்து காட்சி தந்து, இரண்ய வதம் செய்த அந்த நரசிம்மர்,

பிராட்டி (தாயார்) வந்து பக்கத்தில் மடியிலே அமர்ந்ததும் உடனே கோபம் தணிந்து சாந்தமூர்த்தியாக லக்ஷ்மி சமேதராக காட்சி தருவதை கண்டு விட்ட பின் நாம் பிறவி எடுத்த பயனையே அடைந்து

விட்டதாக திருப்தி ஏற்படுகிறது. இதை பலரும் உணரலாம். என்றால் ஒருமுறை இத்திருத்தலம் சென்று தரிசித்து வந்தால் உண்மை விளங்கும்.

—என். ஆர். ருக்மணி.

மைந்தனைக் காத்த அஞ்சுவட்டத்தம்மன்!

நாகப்பட்டினத்திற்கு மேற்கே பத்து கல் தொலைவிலும் திருவாரூருக்குக் கிழக்கே இருபது கல் தொலைவிலும் அமைந்துள்ளது கீழ் வேளூர் (கீவளூர்) என்ற ஊர்.

முருகன் சூரபதுமனாகிய அசுரர்களை அழித்து தேவர்களுக்கு நேர்ந்திருந்த துன்பங்களை நீக்கி அருளினார். அசுரர்களைக் கொன்றதனாலே, முருகன் அந்த கொலை பாதகங்களாகிய வீரகத்திகள் சூழ, அதையறிந்த முருகன் திருச்செந்தூரில் அமர்ந்து சிவபெருமானை பூஜித்துவர, சிவபெருமான் தோன்றி,

"முருகா, வடதிசையில் மிக மகத்துவமும், எமக்கு மிகவும் விருப்பமும் உடைய 'தக்ஷிண பத்ரிவனம்' என்று அழைக்கப்படும் கீவளூர் சென்று எம்மை நோக்கி பூஜித்து வருவாயானால் உன்னைத் தொடர்ந்த பாபம் விலகும்" எனக் கூறினார்.

முருகன் சிவபூஜையைத் தொடங்கும் முன்னால் நவலிங்க பூஜையும், துவார லிங்க பூஜையும் செய்ய விரும்பி, கீவளூர் அருகிலுள்ள கோவில் கடம்பனூர், ஆழியூர், இளங்கடம்பனூர், பெருங் கடம்பனூர், கடம்பரவாழ்க்கை, வல்ல மங்கலம், பட்ட மங்கலம், சொட்டால் வண்ணம், ஒதியத்தூர் என்ற ஒன்பது ஊர்களில் அம்மையப்பனை பிரதிஷ்டை செய்து பூஜையை முடித்துக் கொண்டு கீவளூர் எழுந்தருளி கீழ்வாயிலால் வந்து ஆதி எலந்தை விருட்சத்தை அணுகி, அதன் கீழ் சுத்த சுயம்புவாய், ஜோதி வடிவமாய் சிவலிங்கப் பெருமானைக் கண்டு வணங்கினார்.

பிறகு லிங்கத்தின் அருகில் அக்னி பாகத்தில் தவம் செய்ய ஒரு இடம் அமைத்துக் கொண்டு தவம் புரியலானார். இவர் தவத்தைத் தடுக்க வீரகத்திகள் இடையூறுகள் செய்வதைத் தடுக்க, தனது அன்னையை நோக்கி வேண்டினார். வனமுலை நாயகி (சுந்தர குசாம்பாள்) தன் புதல்வரின் கஷ்டத்தைப் போக்க வீரகத்திகளுங்கண்டு நடுங்கக் கூடிய கோர ரூபத்தை எடுத்து (பத்ரகாளி) ஆகாயம், நான்கு திசை ஆக ஐந்திடத்திலும் பரவி அருள் புரிந்தார். வீரகத்திகள் விலகி ஓடின. ஐந்திசைக் காத்தலால் "அஞ்சு வட்டத்தம்மன்" என திருநாமம் கொண்டு வேண்டுவோர்க்கு எல்லாம்



வெண்ணெயை பல நாட்கள், கெடாமல் இருக்க, குளிர் சாதனப் பெட்டியில் வைக்கிறோம். கு.சா.பெ. வசதி இல்லாதவர்களுக்கு ஒரு யோசனை:

ஒரு அகன்ற பாத்திரத்தில், தண்ணீரை விட்டு அதில் வெண்ணெயைப் போட்டு, விரல்களால் அலசி, அதிலுள்ள மோர்ப் புளிப்பு அகன்றதும் ஒரு எவர்சில்வர் அல்லது 'பிளாஸ்டிக்' பாத்திரத்தில் சுத்தமான குளிர்ந்த தண்ணீரை ஊற்றி, அதில் வெண்ணெயை உருட்டி, தண்ணீரில் முழுகும்படி போட்டு, ஒரு தட்டினால் மூடி வைத்து விட வேண்டும். (தட்டை அழுத்தி இறுக்கமாக மூடக் கூடாது.) தினசரி தண்ணீரை மாற்றி விட வேண்டும். இப்படிச் செய்தால், பல நாட்களுக்கு வெண்ணெய் வாசனை மாறாமல் இருக்கும். கெட்டியாகவும் இருக்கும்.

—ஆதிலக்ஷ்மி.

வரம் தந்து அருள் புரியும் காட்சியைக் காண கண் கோடி வேண்டும்.

கீவளூர் பதினெட்டு ஆகமங்கள் கொண்ட கோயிலாகும். பதினெட்டு படிகள் ஏறி அட்சயலிங்க ஸ்வாமியை தரிசனம் செய்ய வேண்டும்.

"கேடிலியை நாடுவோர் கேடிலாரே" என்னும் அட்சயலிங்க ஸ்வாமியை "கேடிலியப்பா" என்றும் அழைப்பார்கள். முருகனுக்கு முப்பத்தி எட்டு ஆண்டுகளாக சந்தனக் காப்பு நடைபெற்று வருகிறது.

— ஜெயசுந்தரம்.

மத ஒற்றுமைக்கு பூவராக மூர்த்தி!

மதவெறி காரணமாக நம் நாட்டில் தற்பொழுது ஆங்காங்கே வெடிகுண்டுகள் வெடிப்பதும், பல உயிர்கள் பலியாவதும்தான் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கிறது. இச் சமயத்தில், இந்து முகம்மதியர்களின் ஒற்றுமைக்கும், எம் மதமும் சம்மதம் என்ற கருத்துக்கும், எல்லாம் ஒருவனே என்ற கோட்பாட்டிற்கும் சான்றாக விளங்கும் ஸ்ரீமுஷ்ணம் என்ற திருத்தலத்தைப் பற்றி அனைவரும் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

ஸ்வயம் வியக்தமான எட்டு க்ஷேத்



புது வடகங்கள் போட்ட பின் – போன வருடம் போட்ட பழைய அரிசி வடகங்கள், தூள்கள் இவைகளை என்ன செய்வது?

தேவையான அளவு எடுத்து, மூழ்குமளவு கொதிநீர் விட்டு மூடி விடுங்கள். பதினைந்து நிமிடம் கழித்து, நீரை சுத்தமாக வடித்துவிட்டு, மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றினால், கூழாகி விடும். இதில் சிறிதளவு மோர் கலந்து வாணலியில் நல்லெண்ணை விட்டு, கடுகு, காயம், கறிவேப்பிலை, மிளகாய் வற்றல் (அ) மோர் மிளகாய் தாளித்து – மோர் கலந்த கூழைக் கொட்டி உப்பு காரம் சரி பார்த்து கைக்கு ஒட்டாமல் கிளறி எடுங்கள். மோர்க் களி டிபனுக்காயிற்று!

– எஸ். பட்டம்மா

திரங்களில் ஒன்றான ஸ்ரீமுஷ்ணம் தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் ஜங்ஷனிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

இரண்யாட்சன் பூமியைப் பாதாளத்துக்குக் கொண்டு போய் வைத்தபோது, பகவான் வராஹ அவதாரம் எடுத்து பாதாள லோகம் சென்று அசுரனைக் கொன்று பூமியை மீட்டு வந்தார். இரண்யாட்சனின் மகள் ஜில்லிகா, முன் ஜென்மத்தின் புண்ணிய பலனால் முக்திக்கு வழி தேடி பெருமாளை நோக்கிக் கடும் தவம் புரிந்தாள். ஜில்லிகையின் மகனான தண்டகன் அன்னவரையும் கொடுமைப் படுத்தினான். ஜில்லிகை தவம் புரிந்தவனத்தில் தேவர்களுக்கும், தண்டகனுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அசுரனை வெல்ல முடியாத தேவர்கள் வராகப் பெருமாளை வேண்டினர். வராகப் பெருமானின் கோபத்தின் வேகத்தால் அசுரன் மாண்டான். ஜில்லிகை வராகப் பெருமானை வணங்கி அசுரனுக்கு நற்கதி அருள வேண்டினாள். அவளது பிரார்த்தனை பலித்தது. அன்று முதல் அவள் பெயரால் ஜில்லிகா வனம் எனப்பட்டது. அதுவே ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரம்.

கோபுரம் மேற்கு முகமாக அமைந்துள்ளது ஆனந்த பாவமுடன் தமது இரு திருக்கரங்களையும் இடுப்பின் மீது வைத்தபடி, மேற்கு பார்த்தபடி திருமேனியும், திருமுகம் தெற்கு திசையை நோக்கியும், கருணை முகத்துடன் காட்சி தருகிறார் ஸ்ரீ வராஹ மூர்த்தி. தாயார் பெயர் அம்புஜவல்லி.

தாயாரின் சந்நிதியும், உற்சவ மண்டபமும், வேணு கோபாலன், விஷ்வக் சேனர், ஸ்ரீராமர், ஹனுமார், ஸ்ரீலட்சுமி நாராயணன், அச்வத்த நாராயணன், வேதாந்த தேசிகன், ஸ்ரீநிவாசன் போன்றவர்களின் சந்நிதிகளும் உள்ளன.

இத்தலத்தில் சன்னிதி கொண்டிருக்கும் ஸ்ரீனிவாசப் பெருமாளையும், அவரது திருவடிகளையும் தரிசித்த பின்னரே, பூவராகனை தரிசிப்பது தொன்று தொட்டு வரும் சம்பிரதாயமாகும்.

இங்கு வருடந்தோறும் நடக்கும் பிரதான உற்சவங்களும் பஞ்சபர்வாதிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தென்கலை, வடகலை வைணவர்களும், மத்வ மதத்தைச் சார்ந்தவர்களும் எவ்வித வித்தியாசமுமின்றி வேதபாராயணம் செய்து வருகின்றனர்.

இங்கு மாசி பிரம்மோற்சவத்தில் பூவராக சுவாமி தீர்த்தவாரிக்குக் கிழக்கு சமுத்திரத்திற்கு எழுந்தருளும்போது கைக்கால் கிராமத்தில் உள்ளே நுழைந்து ஊர்வலமாக வருவது வழக்கம். இங்கு பெரும்பாலும் முகம்மதியர்களே வசித்து வருகின்றனர். ஆதி நவாப் ஹாஸரத் ரஹ்மத்துல்லாவின் கல்லறையும் சமாதியும் மசூதியும் இங்கு இருக்கின்றன. சுவாமி இங்கு வருகின்றபோது, மசூதியின் மேற்புறம் வாசல் எதிரில் நிறுத்தி மரியாதைகள் செய்து தீபாராதனை தட்டை, எரியும் கற்பூரத்துடனும் சுவாமிக்கு சாத்திய மாலையுடனும், மங்கள வாத்தியங்கள் முழுங்க மசூதிக்குள் எடுத்துச் சென்று அங்குள்ள காஜியார் சமாதியின் மேல் மாலையை அணிவித்து, கற்பூரத்துடன் மேலும் கற்பூரம் சேர்த்து அது அணையும்வரை வணங்கி வழிபடுவார்கள்.

சுவாமி மறுமுறையும் தீபாராதனை செய்வித்து எரியும் கற்பூரத்துடனும், சுவாமியின் பிரசாதங்களுடனும், தட்டை நவாப் அரண்மனைக்குள் எடுத்துச் சென்று, அங்கு பட்டாசாலையில் உள்ள அலமாரியில் தட்டு வைக்கப்படுகின்றது. பின்பு அரண்மனை வாசலில் நின்று கொண்டிருக்கும் நவாப் சந்ததியினர் விடை கொடுத்த பிறகு சுவாமி கிள்ளை மண்டபத்திற்கு எழுந்தருளி, அன்று இரவு புஷ்பப் பல்லக்கில் அலங்காரமுடன் வாண வேடிக்கைகள், மேள வாத்தியங்கள் முழங்க, மசூதி அரண்மனை வரை வருகின்ற அற்புதக் காட்சி எங்கும் காணப்படாததாக மாமூலாக நடந்து வருகின்றது. ஆதி நவாப் பூவராகப் பெருமானுக்கு ஏராளமான மான்யங்கள் ஏற்படுத்தி இருப்பதால் இவ்வுற்சவம் சாஸ்வதமாக நடைபெற்று வருகிறது.

– என். ராஜலட்சுமி.

இதோ 15 மாதங்களிலேயே உங்களிடம் உள்ள தங்கத்தின் அளவை அதிகரிக்க எளிய வழி...



அத்துடன் 100 சவரன் தங்கமும் வெல்லலாம்.

பிரின்ஸ்

Save-in-Gold Scheme*

நவீன டிசைன்களில் நேர்த்தியான தங்க நகைகள் வாங்க ஓர் பொன்னான வாய்ப்பு! அத்துடன் **100 சவரன்** தங்கமும் வெல்லலாம்.

- 15 மாதங்களுக்கு மாதம்தோறும் ரூ.300/- (அல்லது அதன் பெருக்கல் தொகையிலோ) செலுத்துங்கள்.
- கூடுதலாக விஷேச போனஸ் பெற்றிடுங்கள்.
- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 5 சவரன் பரிசுடன் கூடிய 100 சவரன் தங்கம் வென்றிடுங்கள்.

இன்னும் எதற்காகக் காத்திருக்கிறீர்கள்? பொன்னை நாடும் பயணம் புறப்படலாமே!

முந்துங்கள் விரைந்து செயல்படுவோர்க்குப் பரிசு -

ஒரு வெள்ளி நாணயம் சில நாட்களுக்கு மட்டுமே.

PRINCE®
JEWELLERY

பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. Ph : 4346783, 4347493, 4363137/38
10.00 மணி முதல் 8.00 மணி வரை. (உணவு இடைவேளை கிடையாது)
ஞாயிறு விடுமுறை

ஷோரூம் சென்னையில் மட்டுமே

** விதி முறைகளும் திருத்தங்களும் ஏற்கப்படக் கூடியவை*

முந்துங்கள்! குறைவான உறுப்பினர்களே சேர்க்கப் படுகிறார்கள்

FORTUNE-CH/947/98



ஜூன் வந்தாச்சு மழலைப் பட்டாளங்கள் முதன் முதலாய் தன் பிஞ்சுப் பாதம் பதிய பள்ளிக்குக் காலடி எடுத்து வைக்கும் நேரமல்லவா இது? பட்டாம் பூச்சிகளாய் வீட்டைச் சுற்றித் துள்ளித் திரிந்த இந்த இளம் குருத்துக்கள் பள்ளிக்குச் செல்ல தயாராகி விட்டன. தான் ஸ்கூலுக்குச் செல்லப் போவது குறித்த அந்த மழலைகளின் மனசுக்குள் கிடக்கும் எண்ணம் என்ன? இதோ அவர்களே பொழிந்து தள்ளுகிறார்கள்....

• கோமதி



• சூர்யா


நாங்க ஸ்கூலுக்குப் போகப் போறோமே!

ஆதித்யா:

"ஜூன் மந்த்லேயிருந்து நான் ஸ்கூலுக்குப் போகப்போறேனே. யூனிபார்ம், டை ஷூ எல்லாம் வாங்கியாச்சே. பாட்ச்ல எம் போட்டோ கூட இருக்கு. எல்லாம் போட்டுண்டு ஸ்கூலுக்கு ரிக்ஷாவுல அழாமல் போவேனே.

ஸ்கூல்ல நிறைய பொம்மை தருவான்னு மம்மி சொன்னாங்க. அங்க என்னை மாதிரியே குட்டி பசங்க நிறையபேர் இருப்பாங்க அவங்களோட ஜாலியா பிளே பண்ணுவேன். ஏ.பி.சி. எல்லாம் எழுதுவேன்.

ம்... எனக்கு என்ன விளையாட பிடிக்கும் தெரியுமா? கிரிக்கெட் சிக்ஸரெல்லாம் அடிப்பேன். ஷோ கேஸ் கண்ணாடி நான் சிக்ஸர் அடிச்சுதான் உடைஞ்சுப் போச்சி வெளில போக ரொம்பப் பிடிக்குமே. ட்ரெயின் பார்க்க தாத்தாவோட



• சுமதி


சுவினிங்ல போவேன். இன்னம் கார் ஆ... ஏரோப்பிளேன்னா ரொம்ப ஆசை. நம்ம எல்லாரும் ஒரு நாளைக்கு போலாம்மாம்மா, பாட்டி போலாமா'' என்கிறது குழந்தை.


• வத்சலா

நான் பெரியவனா ஆனப்புறம் டாக்டரா ஆயிடுவேன் பாப்பாவுக்கெல்லாம் வலிக்காம ஊசி போடுவேன். என்னோட தம்பி பாப்பாவோட கன்னத்தை நைசா கிள்ளிடுவேன். ஹி..ஹி...''

பாட்டியிடம் அவனது விஷமம் பற்றிக் கேட்ட போது, "அய்யோ இவன் லூட்டி தாங்கலை. கிருஷ்ணர் போல மண்ணுல இஷ்டம் ஜாஸ்தி. குரோட்டன்ஸ் வளர்க்க ஜாடியில் மண் வாங்கி கொஞ்சம் வச்சிருந்தேன் கொஞ்சம் செடியும் வாங்கியிருந்தேன் இரண்டு நிமிஷம் கிச்சன் பக்கம் போயிட்டு வரதுக்குள்ளே தலையிலே மண்ணை கொட்டிண்டு குரோட்டன்ஸை பிச்சு தலையிலே போட்டுண்டு டான்ஸ் ஆடிண்டு உள்ளே வந்தானே பார்க்கணும். "நான் கிருஷ்ணா நீங்கள்லாம் கூட கொஞ்சம் மண்ணை போட்டுக் கோங்கோ'' என எல்லார் தலையிலும் மண்ணைப் போட ஒரே கலாட்டா.''

• ஆதித்யா



வத்சலா:

"எனக்கு ஸ்கூல்ல அட்மிஷன் கிடைச்சாச்சு, என்னோட ஸ்கூல் பிரின்ஸ்பால் கேட்ட கேள்விக்கு டக் டக்னு ஆன்சர் சொல்லிட்டேன். சாக்லேட் கூட குட் கேர்ள்னு சொல்லி கொடுத்தா.

நான் ஸ்கூலுக்குப் போக புது பேக் வாங்கியாச்சு ஜோரா தோள்ல மாட்டிண்டு போவேன் பாத்திங்களா கலர் பாக்ஸ் எனக்குத்தான். நான் நிறைய ட்ராயிங்க்ஸ் போடப்போறேன் ஸ்கூல போயி. ஸ்கூலுக்குப் போனா நிறைய ப்ரெண்ட்ஸ் கிடைப்பாளே நான் ரொம்ப ஜாலியா விளையாடிட்டு வருவேன் ஸ்கூலுக்கு சமத்தா போவேனே.


• சித்தார்த்

எனக்கு பாட்டுன்னா பிடிக்கும். வந்தே மாதரம்... அச்சமில்லை அச்சமில்லை....''

என்று வரிசையாக தேச பக்தி, பாரதியார் பாடலை பாடுவது கேட்டு பாராட்டாது இருக்க முடியவில்லை 'அம்மா நீ பாடு நான் ராகம் சொல்றேன்' என அம்மா பாடலைப் பாட டக் டக் என ராகம் கண்டு பிடிக்கிறாள் இந்த குட்டிப் பெண்.

எனக்கு நிறைய... கதை தெரியும். வள்ளிக் கதை ஆண்டாள் கதை, மஹா பாரதம், ராமாயணம் எல்லாம் சொல்லுவேனே. அப்புறம்... எனக்கு வானத்துல இருக்கற நிலாவை ரொம்பப் பிடிக்கும். பாட்டி அம்மால்லாம் எனக்கு அதைக் காமிச்சுதான் சாதம் ஊட்டுவா எனக்கு. கேரட் அல்வா ரொம்பப் பிடிக்கும்.''



"குறும்புத்தனம், விஷமம் எதுவும் செய்யமாட்டா, பேச்சுலதான் வாலு" என்று பெண்ணுக்கு சான்றிதழ் தந்தார் வத்சலா அம்மா.

"எல்லார்கிட்டேயும் மரியாதையா பேசணும். 'டி' எல்லாம் சொல்லக் கூடாது"ன்னு சொல்லிக் கொடுத்தார் அவளோட அப்பா. பாலைக்குடி வத்சலா என நான் 2,3 முறை சொல்ல. இப்போதான் அப்பா 'டி' சொல்லக் கூடாதுன்னு சொன்னார். உடனேயே பாலைக் கு...டி...ன்னு நீ 'டி'ன்னு சொல்லாமான்னு என்னை மடக்கினாள் வத்சலா" என்கிறார் மேலும்.

சூர்யா:

உள்ளே நுழையும் போது வாசலில் சைக்கிளை ஜாலியாக ஓட்டிக் கொண்டிருந்தான். மெல்ல தனது பிஞ்சுக் கால்கள் பதிய அம்மாவிடம் தாய் மொழி தெலுங்கு என்பதால் வீட்டுக்கு யாரோ வந்திருக்காங்க என்று தெலுங்கில் சொல்லிவிட்டு தனது சைக்கிள் ஓட்டத்தைத் தொடர்கிறான்.

ஸ்கூலுக்கு போகப்போறியா என்றதுதான் தாமதம் அப்படி ஒரு உத்வேகம்!

ஒரு நிமிஷம் என்று மடமடவென சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு "நான் வைச்சிருக்கற ரைம்ஸ் புக், A B C D புக் எல்லாம் காமிக்கறேன் என்று வரிசையாய் 2,3 புக்கை காண்பித்து ஆங்கிலத்தில் அத்தனையும் ஒப்பிக்கிறான் பென்சிலை எடுத்து கிறுக்கித் தள்ளுகிறான்.

ஸ்கூல்ல ஜீன்ஸ் பேண்ட் போட்டுக்க விடமாட்டாங்களா? என்கிறான் ஏக்கமாய். புது பேக் ஷூ எல்லாம் வாங்கியாச்சு. வாலுத்தனம் பண்ணமாத்தேன். படிப்பே ஜோரா எழுதுவேன்.

அப்புறம் கிரிக்கெட் விளையாடப் போறேன். பெரியவனாகி ம்... எனக்கு ஸ்வீட் புடிக்கும் ஜிலேபிதான் பேவரிட் நான் பெரியவனா ஆனப்புறம் நிறைய ரூபா கொடுத்து அம்பாசிதர் கார் வாங்கி அம்மா, அப்பா, எல்லாரையும் அதிலே ஏத்திப்பேன். எங்க மிஸ்ஸை கூட கூட்டிட்டு போவேனே!

சித்தார்த்:

விளையாட்டுத்தனம் மாறாது அங்கும் இங்கும் ஓடிக் கொண்டே அழகாய் பதில் சொல்கிறான் குழந்தை.

"என் பிரண்ட் அரவிந்தோட நானும் ஸ்கூலுக்கு போகப் போறேன். அம்மா ஸ்கூலுக்கு மார்னிங் போய்ட்டு மத்தியானமே வந்துடலாம் இல்லே என கேட்டுக் கொள்கிறான். எனக்கு நடந்தா சத்தம் வர பூட்ஸ் இப்பக் கூட பிடிக்கும் ஆனா ஸ்கூலுக்கு அதெல்லாம் போட்டுக் கூடாதுன்னு மம்மி சொன்னாங்க. அதனால சத்தாத பிளாக் ஷூ வாங்கிட்டேன். உடனே அதை போட்டு நடந்து காண்பிக்கிறான்.

"ஒன் டூ த்ரீ சொல்லத் தெரியுமா" என்று கேட்டால் "மம்மி நான் கரெக்டா சொல்வேன் தானே உங்களுக்குத் தெரியாதா" என நம்மை மடக்குகிறான் சுட்டிப் பையன்.

மம்மி நான் விளையாடறேனே. கிரிக்கெட் பாட் எடுத்துக் கொண்டு அப்பா பால் போடு சூப்பரா ஷாட் வைச்சு அடிக்கிறேன் பார் என்கிறான்.

கொஞ்சம் உம்மாச்சிக்கு ஸ்லோகம் சொல்லுவேன். நான் பெரியவனா ஆனப்புறம் அம்மா நீ சொல்லு நான் என்ன ஆவேன்? அம்மாவை துணைக்கு அழைக்கிறான்.

"முதல்ல நீ பெரியவனாகு. அதுக்கப்புறம் உனக்குப் புடிச்ச மாதிரி வேலைக்குப் போகலாம் சரியா?" என அம்மா சொல்ல பெரிய சந்தோஷம்.

சரி என சிரிக்கிறான். எனக்கு அப்பா அம்மா பாட்டி சித்தப்பா எல்லாரையும் புடிக்கும். பாட்டிக் கூட என் பிரண்டுதான் இல்லபாட்டி என பாட்டியை கழுத்தைப் பிடித்து கட்டிக் கொள்கிறான் குட்டி சித்தார்த்.

தொகுப்பு: பா. சுஜா

படங்கள்: ரா

இம்மாத

பொருள் : வாழை

முதல் பரிசு ரூ. 300/-



• லக்ஷ்மி ஸ்ரீனிவாஸ்



• எஸ். பட்டம்மா



• சாந்தி



• நா. ராஜேஸ்வரி

வாழைக்காய் பின்னல் அடை!

தேவையான பொருட்கள் :
வாழைக்காய் – 2,
கடலை மாவு – 2 கப்,
அரிசி மாவு – 2 கப்,
சோடா உப்பு – சிட்டிகை,
ஓமம் – சிறிது,
உப்பு – ருசிக்கு,
டால்டா – 100 கிராம்,
வெங்காயம் – 2 பெரியது,
இஞ்சி – 1 துண்டு,
பச்சை மிளகாய் – 4,
கொத்துமல்லி – 1 கட்டு.

செய்முறை :
வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமல்லி பொடியாக நறுக்கி கொத்துமல்லி தழையைத் தவிர, மீதியை டால்டாவில் நன்றாக வதக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். வாழைக் காயை குக்கரில் வேகவிட்டு, தோல் உரித்து, 'சீவியில்' சீவி வைக்கவும். இத்துடன் கடலை மாவு, அரிசி மாவு, சிறிது சோடா உப்பு, ஓமம், ருசிக்கு உப்பு சேர்த்து கெட்டியாக பிசைந்து கொள்ள வேண்டும். இந்த மாவை தேன்குழல் அச்சில் போட்டு, அடுப்பில் தோசைக் கல்லை ('நான்ஸ்டிக்' பேன் இருந்தால் நல்லது) மெல்லிய தீயில், மேலே சிறிது எண்ணெய் தடவி, மாவை கெட்டியாக இடைவெளி விடாமல் பிழியவும். மேலே வெங்காயக் கலவையைத் தூவி, மறுபடியும் அச்சில் மாவு போட்டு அதன் மேல் பிழியவும். சுற்றி எண்ணெய் வார்த்து இட்லி மூடியால் மூடி விடவும். அடுப்பு 'சிம்'மில் இருக்கட்டும். பிறகு மெதுவாக அடை கலையாமல் திருப்பிப் போட்டு மூடி விடவும். கரகரப்பாக வெந்ததும் எடுத்து சூடாகப் பரிமாறவும். இதற்கு தக்காளிச் சட்னி மிகவும் பொருத்தம்.

– லக்ஷ்மி ஸ்ரீனிவாஸ்,
சென்னை – 89.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

ஸாண்ட்விச் வடை

தேவையான பொருட்கள்:
கனியாத கெட்டியான நேந்திரன் வாழைப்பழம் – 1,
பால்கோவா – 100 கி,
வெள்ளை உளுத்தம் பருப்பு – 150 கிராம்,
சீனி – அரை கிலோ,
ஜிலேபி பவுடர் – சிறிதளவு,
ரோஸ் எஸன்ஸ் – சில துளிகள்,
மிக மெலிதாக சீவிய முந்திரி – சிறு கைப்பிடி,
பொரிக்க ரீஃபைண்ட் ஆயில் அல்லது டால்டா.

செய்முறை :
வாழைப் பழத்தை தோலுரித்து அதிக கனமில்லாத வில்லைகளாக நறுக்கி, ஒரு வில்லையின் மேல் சிறிது கோவாவை தடவி இன்னொரு வில்லையால் மூடவும். இதே போல் எல்லா வில்லைகளையும் செய்து கொள்க.
சுத்தம் செய்த உ. பருப்பை கழுவி அரை மணிக்கு அதிகமாக ஊற வைக்காமல், ஒரு கல் உப்பு சேர்த்து



இல்லத்தரசி

மெதுவுடைக்கு அரைப்பது போல, அதிகம் தண்ணீர் சேர்க்காமல் பஞ்சாக அரைத்துக் கொள்க.

சீனியில் தண்ணீர் விட்டு கரைத்து கொதிக்க வைத்து, கையில் பிசுக்கு தட்டியதும் (பாகு விழவேண்டாம்) ஜிலேபி பவுடர் எஸன்ஸ் சேர்த்து இறக்கி, ஆறாமலிருக்க அடுப்பின் அருகிலேயே வைத்துக் கொள்க.

கையில் எண்ணெய் தொட்டுக் கொண்டு எண்ணெய் தடவிய வாழை இலையில் கொஞ் சமாக மாவை வைத்து அதன் மேல், கோவா தடவிய, ஒரு இரட்டை வாழை வில்லையை வைத்து மேலே இன்னும் சிறிது மாவால் மூடி வடையாக தட்டவும்.


வாணலியில் எண்ணெய் வைத்து, தட்டில் வடைகளைப் போட்டு வடை சுடுவது போலவே, நிதானமாக எரியும் அடுப்பில் (எண்ணெய் புகையாமல் பார்த்துக் கொள்க) அதிகம் சிவக்காமல் சுட்டு, பாகில் போட்டு, அடிவரை அமுக்கி விடவும். (இல்லாவிட் டால் ஜீராவில் சரியாக ஊறாது.) அடுத்த ஈடு வடைகளைப் போடும் போது, முதலில் போட் டவைகளை எடுத்து தாம்பாளத்தில் வைத்து, சிறிது முந்திரி சீவலை சமமாக தூவி அழகு படுத்தவும். இதே போல மீதி வடைகளையும் பொரித்தெடுத்து ஜீராவில் ஊறவைத்து அழகுபடுத்தவும்.

– எஸ். பட்டம்மா, திருச்சி - 6.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

வாழைப்பூ சாப்ஸ்

தேவையான பொருட்கள் :
உருளைக் கிழங்கு - ½ கிலோ,
ப்ரெட் - 2 சிலைஸ்,



எந்த அல்வா செய்தாலும் ஒரு கைப்பிடி ஜவ்வரிசியை ஊறவைத்து அரைத்துக் கலந்து செய்தால் அல்வா கிளற சுலபமாக இருக்கும்.
– வசந்தி ரவிச்சந்திரன்.

ப்ரெட் தூள் அல்லது மெல்லிய
ரவை - 4 டேபிள் ஸ்பூன்,
தேவையான உப்புப் பொடி,
பச்சை மிளகாய் - 2 (அ) 3,
இஞ்சி,
பூண்டு - 4 (பல்),
சாப்ஸ்களை பொரிக்க சுமார்
200 கிராம் ரீபைண்ட் ஆயில்.
வாழைப்பூ -1,
மஞ்சள் பொடி - ¼ டீஸ்பூன்,
மிளகாய்ப் பொடி - 1 டீஸ்பூன்,
கரம் மசாலாப் பொடி - ½ டீஸ்பூன்,
பெருங்காயப் பொடி - ¼ டீஸ்பூன்,
சீரகம் - ½ டீஸ்பூன்,
பச்சை மிளகாய் - 2,
உப்பு - தேவைக்கேற்ப,
சர்க்கரை - 1 டீஸ்பூன்.
கொத்துமல்லி ஆய்ந்து, சுத்தம் செய்து பொடியாக நறுக்கியது - 1 சிறிய கட்டு,
எலுமிச்சம் பழம் - 1 சிறியது,
கறியை வதக்க -
சுமார் அரை கப் எண்ணெய்.

செய்முறை :

உருளைக் கிழங்கை நன்றாக வேகவைத்து, தோல் நீக்கி, சூட்டோடு நன்றாக மசிக்கவும். ப்ரெட்டை தண்ணீரில் நனைத்து, உடன் பிழிந்து நீரை எடுத்து விடவும். ப. மிளகாய், இஞ்சி, பூண்டு, உப்பு இவைகளை மிக்ஸியில் நன்றாக அரைத்து, மசித்த உருளைக் கிழங்கு, ப்ரெட், அரைத்த ப. மிளகாய் முதலியவற்றை விழுதுடன் சேர்த்து மிக்ஸியில் ஒரு தரம் ஓட்டி அரைத்து, ஒரு தட்டில் எடுத்து மூடி வைக்கவும்.

வாழைப்பூவை வழக்கம் போல பொடி யாக நறுக்கி, ஒரு கரண்டி மோர் சேர்த்த தண்ணீரில் பத்து நிமிஷம் வைத்திருந்து பிறகு நன்றாகக் கழுவி, உப்பு சேர்த்து பிரஷர் குக்கரில் வேகவைக்க வேண்டும்.

வாணலியை அடுப்பில் ஏற்றி, எண்ணெய் விட்டு, காய்ந்ததும் சீரகம், பெருங்காயப் பொடி, மஞ்சள் பொடி, பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், காரப் பொடி, கரம் மசாலா, கடைசியில் சர்க்கரையையும் சேர்த்து, வேக வைத்த வாழைப்பூவை வடித்து, சேர்த்து 10 நிமிடங்கள் நன்றாக வதக்க வேண்டும். பிறகு அடுப்பிலிருந்து இறக்கி, கொத்துமல்லி, எலுமிச்சம் சாறு சேர்த்து நன்றாகக் கிளறி சற்று ஆறவைக்கவும்.

உருளைக்கிழங்கு கலவையை சிறு உருண் டைகளாக உருட்டி, ஒவ்வொரு உருண்டை யிலும் ஒரு சொப்பு செய்து, அதனுள் வாழைப்பூ கலவையை (சுமார் ஒரு டேபிள் ஸ்பூன்) வைத்து நன்றாக மூடி, ப்ரெட் க்ரம்ஸ்

> மதிக்க வேண்டியவர்களை மதிக்காமல், மதிக்கத் தகாதவர்களை எங்கே மதிக்கிறார்களோ அங்கே பஞ்சம், பயம், மரணம் மூன்றும் வந்து சேரும்.
> - பஞ்சதந்திரம்
> தகவல் : ஆர். பிரகாசம்.

அல்லது ரவையில் புரட்டி, நன்றாகக் காய்ந்த எண்ணெயில் பொரித்து எடுக்க வேண்டும். டொமட்டோ சாஸ்ஸுடன் நல்ல ருசியான, சத்தான டிபன் இது. வாழைப்பூவை சாதாரணமாக விரும்பாதவர்கள் கூட இதை விரும்பி, ரசித்து சாப்பிடுவார்கள்.

– வசந்தி சந்தானம், பெங்களூர் – 11.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

வாழைப்பழ சாக்லேட்

தேவையான பொருட்கள் :

கனிந்த வாழைப்பழம் – 10,
பால் பௌடர் - 100 கிராம்,
சர்க்கரை – 150 கிராம்,
கொக்கோ பௌடர் – 25 கிராம்,
வெண்ணெய் (அ) டால்டா – 100 கிராம்,
நைசாக சீவிய முந்திரி, பிஸ்தா – 20 கிராம்.

செய்முறை :

பால் பௌடர், கொக்கோ பௌடர் இவற்றைத் தனித்தனியே சலித்து வைத்துக் கொள்ளுங்கள். எந்த வாழைப்பழமானாலும் பரவாயில்லை. மிக்ஸியில் நைசாக அடித்து எடுங்கள். முந்திரி, பிஸ்தா தூளை நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

ஸ்டவ்வில் நான்-ஸ்டிக் பாத்திரம், அல்லது வேறு கனமான, தட்டையான, வாயகன்ற பாத்திரத்தை வைத்து, வாழைப்பழக் கூழ், சர்க்கரை இவற்றைச் சேர்த்துக் கிளறுங்கள். மிதமான தீ போதும். சுருண்டு வந்தபின் பால் பௌடரைத் தூவி, வெண்ணெயைச் சிறிது சிறிதாக விட்டுக் கைவிடாமல் கிளறுங்கள். பிறகு கொக்கோ பவுடரையும் பரவலாகத் தூவி எல்லா வெண்ணெயையும் போட்டுக் கிளறுங்கள். கையில் ஒட்டாத பதம் வந்தவுடன் சிறிது இளகலாகவே இறக்கி விடுங்கள். வெண்ணெய் தடவிய தட்டில கொட்டிச் சமமாக்கி, வறுத்த முந்திரி, பிஸ்தாவைப் பரவலாகத் தூவுங்கள். ஆறியபின் சாக்லேட் வில்லைகளாகத் துண்டு போடுங்கள்.

சாக்லேட் பதம் வருமா என்று சந்தேகமா? கவலையை விடுங்கள். இன்னும் இறுகலாகக் கிளறி இறக்கி, சிறு கோலியளவு உருண்டைகளாக உருட்டி வாழைப்பழ டாஃபி செய்யுங்கள். மிக அருமையாக இருக்கும்.

– நா. ராஜேஸ்வரி, மதுரை – 14.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

வாழைப் பூ தோசை

தேவையான பொருட்கள் :

வாழைப் பூ - 1,
அரிசி – ½ கிலோ,
உளுந்து – 100,
வெங்காயம் – ¼ கிலோ,
ப. மிளகாய் – 5,
கருவேப்பிலை ஒரு ஆர்க்கு,
உப்பு – தேவையான அளவு,
க. எண்ணெய் – ¼ லிட்டர்,
இஞ்சி – சிறு துண்டு,
ப. கொ. மல்லி - 1 கட்டு.

செய்முறை :

வாழைப்பூவை வேகவைக்கவும். அரிசி உளுந்து ஊறவைத்து சுத்தம் செய்து அரைக்கவும். வாழைப்பூ சேர்த்து அரைக்கவும். உப்பையும் சேர்க்கவும். வெங்காயம், ப. மிளகாய் இஞ்சி, கருவேப்பிலை, கொ. மல்லி இலை ஆகியவற்றை அரியவும், பின் எண்ணெயில் வதக்கி அரைத்து வைத்த மாவில் சேர்க்கவும் தோசைக் கல்லில் எண்ணெய் ஊற்றி தோசையாக ஊற்றி முறுகலாக எடுக்க வேண்டும்.

– வ. ராணி, குடவாசல்.

"பிரச்சனைகள் தீர" -அதிர்ஷ்டக் கல் இலவசம்



* தமிழகத்தின் சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கைரேகையை 1970லேயே ஆராய்ந்து 1977ல் ஆட்சியை பிடித்து 1987ல் மரணம் அடைவார் என்று துல்லியமாக கணித்து தமிழக பத்திரிகைகளால் பாராட்டப்பட்டவர்.
* லட்சுமி கடாச்சியம், தொழில் விருத்தி அடைய, கடன் தொல்லை நீங்க, உங்களுடைய ராசி எண், அதிர்ஷ்டக் கல், வியாபார ஸ்தாபனத்தில் உட்காரும் திசை, பீரோதிசை போன்றவற்றை அறியலாம்.

* தொழில் தடை, வியாபாரத்தில் நஷ்டம், குழந்தை பாக்யமின்மை கணவன் மனைவி பிரிவு, திருமணம் தடைபடுதல், காரியத்தடை போன்ற பிரச்சனனகளுக்கு வெற்றிகரமாக தீர்வு கண்டு வருகிறார்.

ஆதாரம்: தினகரன், தினமணி, தின பூமி, மெட்ராஸ் டைம்ஸ்

* வாஸ்து சாஸ்திரப்படி தங்கள் வீடுகளை அமைக்க அணுகுங்கள்.

தங்களது ராசிக்கும் ரேகைக்கும் எற்ற அதிர்ஷ்டக் கல் இலவசமாக கொடுக்கப்படும்.

⇒ எங்களது சிறப்பு அதிர்ஷ்டக் கல் உபயோகிப்பதன் மூலம் மனஸ்தாபம், எதிர்புகள் மறையும், மேலதிகாரிகளின் தயவு இதனால் உத்யோக உயர்வு, காதலில் வெற்றி, வியாபாரத்தில் வெற்றி, வழக்குகளில் வெற்றி ஏற்படும்.

தங்களது மகனுக்கு அல்லது மகளுக்கு எந்த ராசி, எந்த நட்சத்திரத்தில், எந்த பெயரில் வரன் அமையும் என்பதை உடனடியாக தெரிந்து கொள்ளலாம்.


⇒ உங்களுக்கும், கம்பெனிகளுக்கும், கடைகளுக்கும் மிகவும் ராசியான பெயர் அமைத்து கொடுக்கப்படும்.உங்கள் பிரச்சனைகளுக்கு கண்டிப்பாக கியாரண்டியாக தீர்வுகள் காணப்படும்.

ஜோதிட மேதை அ.கணேசேன்

19-A, முதல் தெரு, வாத்தியார் தோட்டம்,
ரங்கராஜபுரம், சென்னை - 600 024.

STD - 044 - PH : 595 2715 & 595 7371

FAX :+91 - 44 - 4819 115 E- MAIL : KANNASSAN@HOTMAIL.COM



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ. 500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ. 1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ. 750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 300/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ. 1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

வருமான வரி விலக்கு (Section 80 G) உண்டு



இந்த மாதம் எப்படி?


மேஷ ராசி :



அசுவினி, பரணி, கிருத்திகை 1 -ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் சுபநிகழ்ச்சி, சுப விரயம் என நல்லதொரு நிலை உண்டு. அதே சமயம் கண்ணில் சிறு கோளாறு வந்து நீங்கும். பணியில் உள்ள அனைத்துத் துறையினர்க்கும் ஏதாவது ஒருவகையில் பண நஷ்டம் ஏற்படலாம். செவ்வாய் கூட மாத ஆரம்பத்தில் சில சங்கடங்களை ஏற்படுத்தலாம். அரசாங்கத்தாருடன் மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். திருட்டு பயமும், நெருப்புப் பயமும் ஏற்படலாம். சனி, செவ்வாய் இருவருமே சங்கடங்களுக்குக் காரணமாகலாம். எனினும் மாதத்தின் பிற்பகுதியில் அனைத்தும் சரியாகிவிடும். மாதத்தின் மூன்றாவது வாரத்தில் அரசுத் துறையின் மூலம் ஆதாயம் உண்டு. சம்பள உயர்வோ, அதன் காரணமாகக் கணிசமானதொரு தொகையோ கிடைக்கும். கோர்ட் விவகாரத்தில் உங்களுக்கு வெற்றி உண்டு. கேது மாதம் பூராவும் தனலாபத்தையும், முருகனது அருளைப் பெறும் வாய்ப்பினையும் தருகிறார். குரு 11-ம் இடத்திலிருந்து வக்ர கதியில் முன்னோக்கி தனது ராசிக்கு வருவதால், ஓரளவுக்கு அனுகூலமாக இருக்கும். குறிப்பாக உங்கள் குழந்தைகளின் மேற்படிப்புக்காக உபரியாகச் செலவிட வேண்டி இருக்கும். ஆனால் எதிர்பார்த்த தொழில் அல்லது மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கலாம். எனினும் வித்யாகாரகனாகிய புதன் சரியாகச் சஞ்சரிக்காததால் இந்த இராசிக் குழந்தைகளின் கல்வி விஷயமாகச் சில சோதனைகளைத் தாங்க வேண்டி வரும். எனவே நவக்கிரகங்களுக்கு உரிய சாந்திகள் செய்யலாம். ராகு தந்தையின் வழி உறவினரின் உடல்நிலை பாதிக்கக் காரணமாகி அதனால் உங்களுக்கு வீண் செலவு ஏற்படும். அதனால் குபேர பூஜை அல்லது வைபவலக்ஷ்மி பூஜையை எளிமையாக வீட்டில் நடத்தலாம். ரிஷபாருடராக சிவபெருமான் உமை முதலானவருடன் காட்சி அளிக்கும் படத்தை வைத்து, கோளறு பதிகத்தைப் பொருளுணர்ந்து பாடி கற்பூர நீராஞ்சனம் காட்டி மனதார வணங்குங்கள். நல்லதே நடக்கும்.

ரிஷப ராசி :




கிருத்திகை 2, 3, 4 – ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 – ஆம் பாதங்கள்.

யோககாரனாகிய சனி நீச்சம் பெற்றதால் உங்களது அன்றாட யோக பாவங்கள் பங்கமடையுமோ எனக் கவலை வேண்டாம். ஏனெனில் உங்கள் ராசிநாதனாகிய சுக்கிரன் மாத ஆரம்பத்தில் தனலாபம் தரும் நிலையிலும், பிற்பகுதியில் சுகத்தை அருளும் சூழ்நிலையிலும் இருப்பதால் 12-ம் இடத்தில் உள்ள நீச்சச் சனியால் ஏற்பட இருக்கும் பலவிதப் பிரச்னைகளும் உங்களை பாதிக்காது. அத்துடன் 11-ம் இடத்தில் உள்ள ஏகாதசி பிரகஸ்பதி எனும் நிலையில் சஞ்சரிக்கின்ற குரு இந்த மாதத்தில் ஏற்படுகின்ற எல்லாப் பிரச்னைகளையும் சமாளிக்கத் தகுந்த சக்தியை, அல்லது ஏதோ ஒரு விதத்தில் உதவியைத் தந்து உங்களைக் காத்திடுவார். தாயாரின் உடல் நிலையைக் கவனிப்பது நல்லது. புதன் கூட சற்றும் உதவாத நிலையில் இருப்பதுடன் வீண் அபவாதம், நாணயக் குறைவு, ஞாபகமறதி மற்றும் பண நஷ்டத்தை ஏற்படுத்தும் நிலையில்தான் இருக்கிறார். வசதி படைத்தவர்கள் ஸ்ரீ சுதர்ஸன ஹோமம் ஒன்றை இந்த மாதத்தில் செய்வதுடன் வைணவத் தலயாத்திரை ஒன்றை மேற்

ஜூன் '98


கொள்ளலாம். மற்றவர்கள் ஸ்ரீ துர்க்கை, சனி, செவ்வாய், சூரியன் இவர்களுக்காக சேர்ந்தாற் போல ஒருவாரம் தொடர்ச்சியாக ஸ்ரீ விநா யகர், முருகன், துர்க்கை மற்றும் நவக்கிரகங் களுக்கு அர்ச்சனை செய்யலாம். கடைசி நாள் 9 விளக்குகளை நவக்கிரக சன்னதியில் ஏற்றி வைக்கலாம். ஆழ்ந்த நம்பிக்கையுடன் கூடிய பக்தியோடு இதைச் செய்தால் எவ்வளவு தாழ்ந்த நிலையிலிருந்தாலும் உயர்ந்த நிலைக்கு வருவீர்கள். அனைத்துத் துறையினரும் இந்த மாதம் சற்று நிதி, வாக்கு, நடத்தை, நட்பு விஷயங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. புதனைத் திருப்திபடுத்த ஏதேனும் ஏழை மாணவர்களுக்கு உங்களால் முடிந்த அளவிற்கு சீருடை, மற்ற சாதனங்களை வாங் கித் தரலாம். வசதி படைத்தவர்கள் ஏழைக் குழந்தைகளுக்கு உதவும் கல்வி டிரஸ்டுகளுக்கு கணிசமான தொகையை அனுப்பலாம். இது ஒரு உபயோககரமான பரிகாரமாகும். மற்றபடி எந்தவித புது முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டாம்.



மிதுன ராசி:


மிருகசீரிஷம் 3, 4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ஆம் பாதங் கள்.

நல்லதொரு மாதமாகும். சுக்கிரன், சனி ஆகியவர்கள் உதவும் நிலை. சனி நீச்சமானா லும் கெடுதல் செய்ய மாட்டார். மற்றபடி குடும்பத்திலிருந்து குரு அதாவது 9ம் இடத்தி லிருந்து 10ம் இடத்திற்கு வக்கிரம் பெற்று ஆட்சி வீட்டிற்கு வந்திருப்பதாலும் சுமுகமான சூழ்நிலை எத்துறையினர்க்கும் உண்டாகும். அத்துடன் 3ல் உள்ள ராகுவால் தனலாபம். உத்தியோக உயர்வு எடுத்த காரியத்தில் வெற்றி இவைகளைத் தரும் நிலையில் உள்ளார். மாதத்தின் பிற்பகுதியில் புதனால் ஒரு புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். படத்துறை யினர்க்கும் மாணவர்களுக்கும் நல்லதொரு காலகட்டம். வங்கிப் பணியாளர்களுக்கும், C.A., M.B.A. மாணவர்களுக்கும் அவர்கள் எழுதிய தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். மற்ற படி கேதுவும், செவ்வாயும், சூரியனும் சில சங்கடங்களை அரசியல்வாதிகளுக்கும், மத வாதிகளுக்கும் தோற்றுவிக்கலாம். ஹயக்கிரீ வர் படம் கிடைத்தால் அதை வைத்து, ஸ்தோத்திரம் கூறி ஆராதித்தால் அனைத்து சிரமங்களும் நீங்கலாம். மொத்தத்தில் நல்ல தொரு முன்னேற்றத்தைத் தருகின்ற மாத மாகும். உங்களுக்குகந்த முறையில் சனிப் பெயர்ச்சி ஏற்பட்டுள்ளதால் சிரமங்கள் குறையும். பதவி மாற்றமும், இட மாற்றமும் ஏற்ற முறையில் அமையும்.



எனக்கு இட்லி பொடிக்கு நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிட்டால் உடம்புக்கு ஒத்துக்காது. அதனால் ஒருநாள் இட்லிப் பொடியுடன் சிறிது ரசம் ஊற்றிக் குழைத்துச் சாப்பிட்டேன். காரச் சட்னி போன்ற சுவையுடன் இருந்தது. படு சூப்பர்.


— குரு ஜோதி



கடக ராசி:

புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.


அஷ்டமத்திலிருந்து குரு 9ம் இடத்திற்கு வந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால் கெடுபலன்கள் குறை யலாம். மாணவர்களுக்கு அவர்கள் முயற்சி செய்த கல்லூரிகளில் இடம் கிடைக்கும். புதன் கல்விக்குக் காரகன். நல்ல நிலையில் சஞ்சரிப்பதால் இந்த இராசிக் குழந்தை களுடைய கல்வியைப் பற்றிய எந்தப் பிரச் சனையும் ஏற்பட நியாயமில்லை. அது போலவே குடும்ப சுகத்திற்கும், அரசுத் துறை யில் பணிபுரிபவர்களுக்கும் எந்தப் பிரச் சனையும் ஏற்படாது. மாதத்தின் பிற்பகுதியில் 12ல் ஆட்சியிலிருக்கும் புதன் விரயத்தைத் தடுத்து இலாபத்தைக் கொடுப்பார். ராகுவும் கேதுவும் சில சங்கடங்களை ஏற்படுத்தலாம். குறிப்பாக வயிறு, கண் இவை பாதிக்கப் படலாம். விருந்துண்ண திருமண மண்டபத்திற் குச் சென்று சற்று கூடுதலாக நாக்குக்கும் வயிறுக்கும் வேலை கொடுத்து அதன் காரண மாக மருந்துண்ண மருத்துவமனைக்குப் போகாதவாறு பார்த்துக் கொள்ளவும். ஒரு முக்கியமானதொரு முயற்சியில் இதுவரை தோல்வியையே சந்தித்த நீங்கள் இந்த மாதத்தில் அதில் வெற்றிவாகை சூட இருக் கிறீர்கள். அது திரைப்படத் துறையாகவும் இருக்கலாம். அல்லது விளையாட்டுத் துறை யாகவும் இருக்கலாம். எனவே தைரியமாக



கோடையில் செடிகொடி மரத்திற்கு நீர் வார்க்கையில் வேருக்குத்தான் நாம் தண்ணீர் விடுவோம். அதற்குப் பதில் இலை, கிளையின் மீது பீய்ச்சி அடித்து ஊற்ற இலை கிளையின் தூசுகள் மறைந்து குளுமையான காற்று வீசும். மரமும் பச்சை பசேல் என இருக்கும்.

– லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

முன்னேறிச் செல்லுங்கள் கட்டாயம் வெல்லுவீர்கள். உங்கள் ராசி நாதனின் அதிதேவதை பரமேஸ்வரியானதால் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஸ்தோத்திரத்தைப் படியுங்கள்.



சிம்ம ராசி:

மகம், பூரம், உத்திரம் 1–ஆம் பாதம்.


அஷ்டமத்துச் சனியால் இதுவரை இருந்த சில சிக்கல் கள் சீரடையும் நிலை. 9,10க்குடையவர்கள் மாதத்தின் முதற்பகுதியில் பரிவர்த்தனை பெற்று சஞ்சரிப்பதால் தொழில் சம்பந்தப் பட்ட பிரச்னைகளும், தனதான்ய தடங்கல் கள் அனைத்தும் சீராக வேண்டும். எனவே 9ல் உள்ள நீச்சம் பெற்ற சனி பரிவர்த்தனை பெற்றுள்ள சுக்கிரனுடன் சம்பந்தப்படும் காலத்தில் கெடுபலனை ஒரு போதும் தர மாட்டார். அதே சமயம் மாதம் பூராவும் சூரியனும், புதனும் சேர்ந்தே புத ஆதித்தாய யோகத்தைத் தருவதாலும், இதுவரை இருந்து வந்த தேக்கநிலையும், இறுக்கமானதொரு சூழ்நிலையும் மாறி மனதுக்குத் தெம்பும், செய்யுந் தொழிலில் படிப்படியாக இலாபத்தையும் தரும் நிலையும் உண்டாகும். மாதத்தின் பிற்பகுதியில் புதனும், செவ்வாயும், சூரியனும் கூட உதவும் நிலையில் உள்ளதால் எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், அரசுப் பணியாளர், மருத்துவத் துறையினர் ஆகிய அனைவருக்குமே தனலாபமோ, பணியில் பதவி உயர்வோ கிடைக்கும். தற்போது உங்களுக்குத் தேவையானது எப்பொழுதும் எங்கும் உங்களுக்குக் கைகொடுக்கின்ற மனோ தைரியமும், அச்சமின்மையும் தான் என்பதை மறவாதீர்கள். இது சமயம் உங்களைச் சிலர் புகழத்தக்க வகையில் சில அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். ஆனால் புகழ்ச்சிக்கு மயங்கி உங்களது மனதில் உள்ளதை வெளிப்படுத்துவீர்களேயானால் பிறகு இகழ்ச்சிக்கு ஆளாகும் சூழ்நிலை உருவாகும். ராகுவும் கேதுவும் அத்தகைய நிலையில் சஞ்சரிக்கிறார்கள். அதனால் சிம்மவாஹினிக்கு அர்ச்சனை செய்யுங்கள். கூடவே கணபதியையும் வழிபடுங்கள்.



கன்னி ராசி:

உத்திரம் 2,3,4–ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2–ஆம் பாதங்கள்.

முதல் மூன்று வாரங்களில் சுக்கிரனின் சஞ்சாரம் மற்றும் குருவின் மீன ராசிப் பிரவேசம் ஆகியவை பலவிதங்களிலும் எல்லாத்துறையினர்க்கும் ஏற்றமுடையதாகவும் உள்ளன. பிறகு கூட ஆட்சிக்குச் செல்லும் சுக்கிரன் வீடு வாங்கும் யோகத்தை உண்டாக்கலாம். பயன்படுத்திக் கொள்ளுங்கள். கேது கொடுக்கும் நிலையில் தான் இருக்கிறார். ராகு இடப் பெயர்ச்சிக்குக் காரணமாகலாம். தன நஷ்டத்தையும் உண்டாக்கலாம். அஷ்டமத்தில் சனி நீச்சம் பெற்றதால் கெடு பலன்கள் குறையும். மாதத்தின் பிற்பகுதியில் புதனும் சூரியனும் அரசியல்வாதிகளுக்குப் பதவி ஆதாயம் தர இருக்கிறார் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அரசுப் பணியாளர்கள், மற்றும் நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்குப் பதவி உயர்வோ கூடுதல் வருமானமோ கிடைக்கும். 9ல் உள்ள செவ்வாய் பரிவர்த்தனம் பெற்றாலும் அதிகம் உதவும் நிலையில் இல்லை. தலைவலி மற்றும் இரத்தக் கடுப்பு, இரத்த அழுத்தம் என ஏதோ ஒரு விதத்தில் மருத்துவருக்குப் பணத்தைக் கொடுக்கும்படி செய்யும். 10ல் புதன் ஆட்சியில் அமரும் மாதத்தின் மத்திம பாகத்தில் நீங்கள் மாணவராக இருந்து தொழிற் பயிற்சி, மருத்துவம் மற்றும் மின்சாரத் துறை சம்பந்தமான மேற்படிப்பிற்கு முயற்சி செய்



ஸ்டிக்கர் பொட்டு ஒட்டிய இடம் எல்லாம் 'பிசுக் பிசுக்'கென்று பின்னர் அழுக்கு சேர்ந்து விடும். அந்த இடத்தில் ஒரு துணியில் சில துளி மண்ணெண்ணெய் விட்டுத் துடைத்தால் பளிச்சென்று ஆகிவிடும். கறை இருந்த இடமே தெரியாது.

- தேவிகா அசோகன்


இருந்தால் கட்டாயம் இடம் கிடைக்கும். விரும்பும் இடத்திலேயே படிக்க அனுமதி கிடைக்கும. ஹயக்கிரீவரை ஆராதியுங்கள். ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாற்றி பிரார்த்தனை செய்யுங்கள். இது எல்லோருக்கும் பொருந்தும்.



துலா ராசி :

சித்திரை 3,4,-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2,3-ஆம் பாதங்கள்.


முதல் இரண்டு வாரங்களில் குடும்பத்தில் சிறு சிறு சலசலப்புகள் தோன்றி அடங்கும். எதிர்பார்க்கும் பணம் எப்படியும் மாதத்தின் கடைசியில் கிடைத்து விடும். ராகு மாதம் பூராவும் உதவும் நிலையில் உள்ளதால் குடும்ப செலவிற்கோ அல்லது ஏதேனும் பொருள் வாங்கவோ பணத் தட்டுப்பாடு இருக்காது. ஒரு விதத்தில் மன உளைச்சலையும், உடல் அலைச்சலையும் தரலாம். மற்ற கிரகங்கள் உதவும் நிலையில் இல்லை. எனவே சும்மா இருப்பதே சுகம் என்று எதிலும் தலையிடாமல் அன்றாடப் பணிகளைக் கவனித்து வருவதே நல்லது எனத் தோன்றுகிறது. குரு ஆட்சியில் இருப்பதால் குழந்தைகளின் படிப்பு விஷயமாக 'எடுக்கும் எந்த முயற்சியிலும் வெற்றி உண்டு. மாதத்தின் கடைசி இருவாரங்களில் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது தனியாரிடமிருந்தோ உங்களுக்கு ஒரு கணிசமான தொகை வந்து சேர சுக்கிரன் காரணமாகலாம். கனகதாரா ஸ்தோத்திரத்தை நாட்கள் தொடர்ந்து மாலை 6.30 மணியிலிருந்து 7.30க்குள் படிக்கவும் அது சமயம் வெளிவாயிற்படியில் இரு பக்கமும் கார்த்திகை அகல் தீபம் ஏற்றி வையுங்கள்.



விருச்சிக ராசி:

விசாகம் 4-ஆம் பாதம் அனுஷம், கேட்டை.

இந்த இராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு ஏற்பட்ட சனி பெயர்ச்சி உதவும் நிலையில்தான் உள்ளது வக்கிர குருவும் உதவும் நிலை எனவே குழந்தைகளின் கல்வி சம்பந்தமான பிரச்னைகள் அதிகம் இருக்க நியாயமில்லை. மேற்படிப்புக்கான நுழைவுத் தேர்வுகளில் நல்லதொரு மதிப்பெண் எடுத்து விரும்பிய கல்லூரியிலோ, அல்லது பாடத்திலோ இடம் கிடைத்துவிடும். குருவும் சனியும் நன்கு அமைந்திருப்பதால் எதிர்பார்த்ததற்குக் கூடுதலான செலவினம் ஏற்படாது என நம்பலாம். வங்கி, மற்றும் நிதி நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு இதுவரை இருந்த எந்தக் குழப்பமும் சரியாகிவிடும். எதிர்பார்த்த மாறுதலும் கிடைக்கும். வெளிநாட்டு வியாபாரத் தொடர்புடையவர்கள் சற்று எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. இதர கிரகங்கள் எவருமே உதவும் நிலையில் இல்லை. குடும்பத்தில் குழப்பத்தைச் சுக்கிரன் உண்டாக்கலாம். அதற்கு ஒரு பெண் காரணமாகலாம். அது உங்கள் மகனின் பிரச்னையாகக் கூட இருக்கலாம். மாதக் கடைசியில் புதனால் எதிர்பாராத தனலாபமும், தாய்வழி மாமனாரின் உதவிகளும் கிடைக்கலாம். வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரத்திற்குச் சென்று அங்குள்ள இறைவனை தரிசனம் செய்யுங்கள். தே[கம்] சம்பந்தமான விஷயமும் மற்றுமுள்ள மனப்பிராந்தியும் பயமும் குறையும். புத்திரதோஷம் நீங்கும்.




தனுசு ராசி:

மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் எத்துறையினர்க்கும் எம்முயற்சியிலும் வெற்றி ஏற்படும் வாய்ப்பு உண்டு. இறையருளும் உண்டு அரசுத் துறையில் உள்ளவர்களுக்கு ஆதாயம் தரும் மாதம். வங்கித் துறை, மின்சாரத்துறை, மற்றும் போக்குவரத்துத் துறையினர்க்கு எதிர்பார்த்த இனத்தில் இலாபம் உண்டு. ஒரு சுபகாரியம் கைகூடிவரும். அது திருமணமாகவும் இருக்க

லாம். புதுமனைப் புகுவிழா போன்றும் அமையலாம். எனினும் மாதத்தின் பிற்பகுதியில் சிறு சிறு பிரச்னைகள் தலைதூக்கலாம். அதனால் கைப்பொருள் இழக்க நேரிடலாம். உடல்நிலை கூட, எதிர்பாராத அலைச்சல் காரணமாகப் பாதிக்கப்படலாம். அரசியல்வாதிகளுக்குப் பதவி லாபம் உண்டு. எதிர்பாராத விதத்தில் அமைச்சராகும் தகுதி கூட ஏற்படலாம். முயற்சியும் தேவை. கணவன் மனைவிக்கு இடையே உத்தியோகம் காரணமாகவோ அல்லது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நடக்காததாலோ மனக் குழப்பம் ஏற்பட்டு சரியாகலாம். எந்தச் சமயத்திலும் பொறுமையுடனிருப்பது நல்லது. மந்தாரலய மகானை மனதார வேண்டுங்கள். எதையும் சமாளிக்கும் திறனை அவர் தருவார். அபேக்ஷித பிரதாதன்யோ, ஸ்ரீ ராகவேந்திரான் வித்யதே! என்று கேட்பவர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதில் நிகரற்றவர் அவர். எனவே அவரை ஆராதியுங்கள்.



மகர ராசி:

உத்திராடம் 2,3,4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 -ஆம் பாதங்கள்.

சுக்கிரனைத் தவிர மற்றவர்கள் உதவிடும் நிலை மிகவும் குறைவு. சூரியன் மாதத்தின் பிற்பகுதியிலும், புதன் முற்பகுதியிலும் பல இனங்களில் உதவிடும் நிலையும் உண்டு. மற்றபடி அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதமே. ரிஷபத்தின் மேல் அமர்ந்து அம்பிகையுடன் அருள்பாலிக்கும் பரமனைப் பற்றிய கோளறு பதிகத்தை, மேற்கண்ட பரமனின் படத்தை வைத்துப் பக்தியுடன் பொருளுணர்ந்து பிரார்த்தித்துக் கொள்பவர்களை அவர் தமது அருளாசியால் ரட்சித்துக் காப்பார் கவலை வேண்டாம். இந்த மாதம் புது முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப் போடுங்களேன். கூடிய மட்டும் சிக்கனத்தைக் கடைபிடிப்பது அவசியம். எதிலும் சற்று எச்சரிக்கையும் அதே சமயம் மற்றவர்களின் வம்புக்குப் போகாமலும் இருப்பது நல்லது. ஏனெனில் பிறர் இகழ்ச்சிக்கு ஆளாகும் வண்ணம் சில கிரகங்களின் சஞ்சாரங்கள் அமைந்துள்ளன. வீட்டிலுள்ள பொருளும் சரி கையிலுள்ள பொருள்களும் சரி கவனமுடன் காப்பாற்றப் படவேண்டிய நிலை. கந்தர்சஷ்டி கவசமோ, சனீஸ்வர ஸ்தோத்திரமோ கூட சொல்லுவது நல்லது.



கடந்த இதழில் வந்திருந்த தேங்காய் எண்ணெய் தயாரிப்பு மிகச் சுலபமாகவும் நேர்த்தியாகவும் இருந்தது. எண்ணெய் எடுத்த பின் கீழ்தங்கிய வண்டலுடன் சற்று காரப் பொடியும் உப்பும் சேர்த்ததில் தோசையுடன் தொட்டுக் கொள்ள தேங்காய்ப் பொடி சட்னியும் கிடைத்தது.

- சுகுணா



கும்ப ராசி :

அவிட்டம் 3, 4 - ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதல் மூன்று பாதங்கள்.

ஓரளவுக்கு நிம்மதியைத் தருகின்ற மாதம். வக்கிர குரு உதவுகிறாரோ இல்லையோ, உபத்திரவத்தைத் தர மாட்டார். அதற்குப் பதிலாக சனியும் சுக்கிரனும் உதவும் நிலையில் உள்ளதால் சுபநிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு உள்ளது. சனிப்பெயர்ச்சியைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள், பெயரும் நாட்களைப் பற்றிய பஞ்சாங்கங்களுக்குள்ள வித்தியாசங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்களுக்குப் பாதகமாக ஏதாவது போட்டிருந்தால் அதைப் பற்றிக் கவலையும்படாதீர்கள். சாதகமாகப் போட்டிருந்தால் நிம்மதிப் பெருமூச்சுவிட்டு விட்டு அன்றாடப் பணிகளைப் பாருங்கள். ஏனெனில் மொத்தமுள்ள 9 கிரகங்களின் ஆதிக்கங்களில் பல உங்களுக்குச் சாதகமாக உள்ளன. சனி 3-ல் இருப்பதும் சாதகமானது. எனவே இழந்ததையெல்லாம் மீண்டும் பெற இருக்கிறீர்கள். முக்கியமாக எதை இழந்தாலும் மீண்டும் பெறலாம். ஆனால் மனநிம்மதி இருக்கிறதே அதை இழந்தால் மீண்டும் மன நிறைவு ஏற்பட்டாலும், மறுபடியும் என்ன ஏற்பட்டு விடுமோ என்ற கவலையும் இருக்குமல்லவா? அதனால் உங்களைப் பொறுத்த மட்டில் கடந்த 7 ஆண்டு கால கஷ்டங்கள் அது எந்த உருவத்தில் வந்திருந்தாலும் நீங்கும் காலகட்டம். மீண்டும் அத்தகைய நிலை வராது கவலை வேண்டாம். புத்திரர்களால் மனநிம்மதியும் கூடவே அவர்களது கல்வி சம்பந்தமான முன்னேற்றத்திற்குரிய மனமகிழ்ச்சியும் உண்டாகும் அளவுக்கு சூழ்நிலை தெரிகிறது. மற்ற எந்தத் துறையில் எப்படி


மாதம் ஒரு மந்திரம்

கங்கையின் மைந்தரும் சந்தனு மகாராஜனின் ஸத்புத்திரருமான பீஷ்மப் பிதாமகர் குருக்ஷேத்திரத்தில் பகவானை அடையும் சமயத்தில் அவரிடம் தர்மபுத்திரர், எல்லோரும் எச்சமயத்திலும் எளிதில் அடையக்கூடிய தர்மத்தைப் பற்றிக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் எனவும் அதனால் பிதாமகர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா முதல் பிரம்மாதி தேவர்களும், ராஜ ரிஷிகளும் கேட்டுக் கொண்டிருக்க தருமருக்கு உபதேசித்தார் எனவும் கூறுவர். சாஸ்திரங்களில் மகாபாவங்களையும் கடன் முதல் ரோகங்கள் வரை உள்ள பல கஷ்டங்களையும் நீக்கவல்லது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமமே எனக் கூறப்பட்டுள்ளது. மற்றும் இதைப் பாராயணம் செய்பவர்களுக்கு புத்ரலாபம், கீர்த்தி, ஆரோக்யமும் உண்டாகும் என்பர். அப்படிப்பட்ட ஹரியின் ஆயிரம் நாமங்களை வேதங்களிடமிருந்து ஸ்ரீ வியாஸர் தொகுத்து தனக்கு உபதேசித்ததாகக் கூறுகின்ற பீஷ்மர், இதை ஒரு ஜபவேள்வியாகவே உலகுக்குத் தந்துள்ளார் என ஸ்ரீ ஆதி சங்கரரும், ஸ்ரீ பராசர பட்டரும் கூறியுள்ளனர். மேற்படி ஸ்தோத்திரத்திலிருந்து கீழே காணும் இரண்டு அடிகளை மட்டும் படித்தாலே ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை முழுவதும் படித்ததால் பெறுகின்றப் பலனைப் பெற முடியுமென ஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதர் போன்ற வேதவிற்பனர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

வாஸனாத் வாஸுதேவஸ்ய வாஸிதம் புவனத்ரயம்!
ஸர்வ பூத நிவாஸோஸி வாஸுதேவ நமோஸ்துதே!!

வாஸுதேவனே தங்களுடைய வாஸத்தால் புவனங்கள் அனைத்தும் என்றென்றும் நிலை பெற்று நிற்கின்றன. தாங்கள் ஐம்பூதங்களிடத்தும் வாஸம் செய்கிறீர்கள். அப்படிப்பட்ட வாஸுதேவராகிய தங்களுக்கு நமஸ்காரங்கள் என்பது இதன் கருத்தாகும். இதன் மூலம் அகிலங்கள் அனைத்திலும் மற்றும் ஐம்பூதங்களிலும் நீக்கமற நின்று வாஸம் செய்கின்ற வாஸுதேவனைத் தஞ்சம் அடைந்தவர்களை நாள் என் செய்யும் கோள் என் செய்யும்! அது மட்டுமல்ல அவைகள் நமக்கு அனுசரணையாகவே அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.


— ஜெயலட்சுமி கிருஷ்ணன்



போண்டா செய்தால் பெரியதாக இருக்கும். உட்புறம் வெந்ததும், வேகாததுமாக இருக்கும். அதனால் ஸ்பூனால் சிறிது சிறிதாக மாவை எடுத்து போண்டா செய்தேன். சுவையாக இருந்ததுடன், வெந்து கரகரவென்று இருந்தது. மாவும் கையில் ஒட்டாமல் வேஸ்டாகாமல் இருக்கும்.

— என். கல்பனா

இருப்பினும் உங்களது நிலை நன்றாகவே அமையும். புது முயற்சியைத் தொடங்குங்கள். வெற்றி உண்டு. ஒரு சனிக்கிழமை சனீஸ்வர பகவானுக்கு அர்ச்சனை செய்து ஏழைகள், குறிப்பாக முடமானவர்களுக்கு உதவுங்கள். நீங்கள் உயர் அதிகாரியானால் ஒரு முடவருக்கு வேலை வாங்கித் தாருங்கள் அது போதும்.





மீன ராசி :

பூரட்டாதி 4 – ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

வக்ர கதியில் உங்கள் ராசிக்கு குரு வரும் போது மனநிம்மதி ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரம், உத்தியோகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள ஆண் பெண்களுக்கு முன்னேற்றம் உண்டு. இராகுவால் எதிர்பாராத பிரயாணம், அல்லது தனலாபம் ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கும் இடமுண்டு. சுக்கிரன் மாதம் பூராவும் குடும்ப சுகத்திற்கும் பொருளாதார நிலையில் மேம்பாட்டுக்கும் உதவுகிறார். கவலை வேண்டாம். மாதக் கடைசியில் புதன் மருத்துவக் கல்லூரியில் சேர முயற்சிக்கும் மாணவர்களுக்கு வெற்றி பெற அருள்பாலிக்கிறார். கண், வயிறு இவை பாதிக்கப்படலாம். பிரயாணத்தின் போதும், இரவு நேரங்களிலும் சற்று எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. திருடு மற்றும் ஏமாறுதல் ஆகியவைகளுக்கு இடமுண்டு. குழந்தைகளின் கல்வி நலன் நன்கு அமையும். ஏழை எளிய மாணவர்க்கும் முடமான சிறுவர்களுக்கும் தொண்டு செய்யும் நிறுவனங்களுக்கும் உங்களால் முடிந்ததை வழங்குங்கள். அனைத்தும் நல்ல நிலையிலேயே அமையும்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்







கை கொடுக்கும் கூழ்

தலைப்பைப் பார்த்தவுடன் ஏதோ அந்தக் காலத்துக் கூழோ என பயந்து விடாதீர்கள். சமையலறையில் சில கூழ்களைத் தயாரித்து வைத்துக் கொண்டால் நீங்கள் ஊருக்குப் போனாலும், திடீர் விருந்தினர் வந்தாலும் திண்டாடவே வேண்டாம். 'கை கொடுக்கும் தோழி'யாகச் செயல்படும் இவற்றைப் பார்க்கலாமா?



சாம்பார் கூழ்

தேவையான பொருள்கள்:

புளிக்கூழ்

புளி - ½ கிலோ
உப்பு - 50 கிராம் (அ) தேவையானது
மஞ்சள் பொடி - 2 தே. கரண்டி

பொடி

தனியா - 150 கிராம்
கடலைப் பருப்பு - 100 கிராம்
மிளகாய் 6 (அ) 8
பெருங்காயம் 1 பெரிய துண்டு
வெந்தியம் 1 மேஜை கரண்டி


தாளிப்பு

கடுகு - 1½ கரண்டி
மிளகாய் - 5
வெந்தயம் - ½ மே. கரண்டி
எண்ணெய் 3 பெரிய கரண்டி

செய்முறை

புளியைச் சிறிது ஊற வைத்து, தேவையான அளவு கொஞ்சமாக தண்ணீர் விட்டு நன்றாகக் கரைத்துக் கொள்ள வேண்டும். புளிக் கூழ் நன்றாகக் கெட்டியாக இருக்க வேண்டும். இந்தக் கூழை அடுப்பில் வைத்துத் தண்ணீர் கண்டும் வரை கொதிக்க வைத்துக் கெட்டியானதும் இறக்கி வைக்க வேண்டும். புளி கொதிக்கும்போதே மஞ்சள் பொடியையும், உப்பையும் சேர்க்க வேண்டும். புளி கொதித்துக் கொண்டிருக்கும்போதே, பொடிக்குத் தேவையான தனியா, கடலைப் பருப்பு, மிளகாய், வெந்தயம் இவைகளை எண்ணெய் விட்டு வறுத்துக் கொள்ள வேண்டும். இது சிறிது ஆறியதும் மிக்ஸியில் பொடி செய்து கொள்ள வேண்டும். இந்தப் பொடியைக் கொதித்து இறக்கி வைத்துள்ள புளியில் கலந்து விட வேண்டும்.

கடைசியாக 3 கரண்டி எண்ணெயில் கடுகு, மிளகாய், வெந்தியம், கறிவேப்பிலை இவற்றைத் தாளித்து எண்ணெயுடன் புளிக் கூழுடன் சேர்த்துக் கலந்து விட்டால் 'சாம்பார் கூழ்' தயார். இதைச் சுத்தமான பாட்டிலில் நிரப்பி பிரிஜ்ஜில் வைக்க வேண்டும். இதில் தேவையானால் கொப்பரைத் தூளை வறுத்து சேர்த்துக் கொள்ளலாம். காரம் அதிகமாக தேவைப்பட்டால் மிளகாய் 2 அல்லது 3 வறுத்துக் கொள்ளலாம்.





உபயோகிக்கும் முறை

அரை ஆழாக்குப் பருப்பை வேக வைத்து நன்றாக மசித்துக் கொள்ளவும். தேவையான காயையும் வேக வைத்து பருப்புடன் கலந்து கொள்ளவும். சாம்பார்க் கூழ் 1 அல்லது 1½ கரண்டி எடுத்து வெந்நீரில் (சிறிதளவு) கரைத்து பருப்புடன் கலந்து விடவும். சாம்பார் கெட்டியாக இருந்தால் தேவையான அளவு வெந்நீர் கலக்கவும்.

வத்தல் குழம்பு கூழ்

தேவையான பொருட்கள்

புளிக்கூழ்

புளி - ½ கிலோ
உப்பு - 50 கிராம் (அ) தேவையானது
மஞ்சள் பொடி - 2 தே. கரண்டி

பொடி

தனியா - 150 கிராம்
துவரம் பருப்பு - 75 கிராம்
கடலைப் பருப்பு - 50 கிராம்
மிளகு - 1 மே. கரண்டி
வெந்தயம் - 1 மே. கரண்டி
பெருங்காயம் - 1 பெரிய துண்டு
மிளகாய் (சிகப்பு) - 8 அ 10
எண்ணெய் - 4 கரண்டி

தாளிப்பு

கடுகு - 1½ கரண்டி
வெந்தயம் - 1 தே. கரண்டி
மிளகாய் (சிகப்பு) - 5
கறிவேப்பிலை - சிறிது
வத்தல் (மணத் தக்காளி, கண்டைக்காய் கொத்தவரங்காய் ஏதேனும் ஒன்று) - 25 கிராம்


செய்முறை

சாம்பார் கூழுக்குச் சொன்னதுபோல் புளியைக் கெட்டியாகக் கரைத்து மஞ்சள் பொடி, உப்பு சேர்த்து கொதிக்க வைத்து கெட்டியானதும் இறக்கி வைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு தாளிப்பதற்கான சாமான்களை போட்டு தாளித்ததும் அதே எண்ணெயில் வத்தலையும் வறுத்து புளிக் கூழுடன் சேர்க்கவும். பொடி செய்வதற்கான சாமான்களையும் முன் சொன்னதுபோல் எண்ணெயில் பொன் நிறமாக வறுத்து, ஆறியதும் மிக்ஸியில் பொடி செய்து புளிக் கூழுடன் கலக்கவும். புளி கொதித்து முடியும் சற்று முன் ஒரு எலுமிச்சை பழ அளவு வெல்லத்தைப் போட்டு சேர்ந்து கொதித்து கெட்டியானதும் இறக்கவும். பொடி, தாளிப்பு, வற்றல் இவைகளைச் சேர்த்துக் கலந்து பாட்டில்களில் போட்டு பிரிஜ்ஜில் வைக்கவும்.

தேவையானபோது, போதுமான அளவு கூழுடன் தண்ணீர் விட்டுக் கலக்க மணக்கும் வத்தல் குழம்பு நொடியில் தயார்.

பருப்பு ரஸம் அல்லது மிளகு ரஸம்

சாம்பார், வத்தல் குழம்பிற்கு சொன்னது போல் ½ கிலோ புளியுடன் புளிக்கூழ் செய்து கொள்ளவும். 2 கரண்டி சீரகம், 2 கரண்டி மிளகை பச்சையாக வறுக்காமல் பொடி செய்து கொள்ளவும். ½ கப் நெய்யில் 2 கரண்டி கடுகு, 5 அ 6 மிளகாய் வற்றல், கறிவேப்பிலை 2 அல்லது 3 தே. கரண்டி, பெருங்காயத் தூள் இவற்றைப் போட்டு தாளித்து புளிக் கூழுடன் கலக்கவும். மிளகு சீரகப் பொடியையும் சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும். தேவையான போது பருப்போ அல்லது வெறும் பருப்புத் தண்ணீரோ கலக்க ரஸம் ரெடி!!!



இது திருமண சீசன். உள்ளூரில் வேலை பார்க்கும் வரன் அமைந்து திருமணம் நடந்து முடிந்தால்கூட வெளிநாட்டில் வேலை கிடைத்து செல்லக்கூடிய நேரம் வரலாம். அப்படி செல்ல நேரிடும் பொழுது குடும்பத்துடன் செல்ல உங்கள் திருமணப் பத்திரிக்கை அவசியம் தேவைப்படும். அதனால் திருமணம் முடிந்தவுடன் மற்ற பொருட்களைப் பத்திரப்படுத்துங்கள். ஒரு பத்திரிகையை கண்ணாடி போட்டு வீட்டில் மாட்டி விடுங்கள். அவசரத் தேவைக்கு உதவுவதுடன், உங்கள் குழந்தைகள் பெரியவர்களானாலும்கூட உங்கள் திருமணப் பத்திரிகையை பார்த்து மகிழ்வார்கள்.

— ஆர். பாலா

தக்காளி ரஸம்

தக்காளிக் கூழ் (Pulp)

தக்காளி - 1 கிலோ
மஞ்சள் பொடி - 2 தே. கரண்டி
உப்பு - 50 கிராம் (அ) தேவையானது

பொடி

தனியா - 2 மே. கரண்டி
துவரம் பருப்பு - 1 மே. கரண்டி
பெருங்காயம் - 1 பெரிய துண்டு
மிளகாய் வத்தல் - 5 அ 6



(சீவிய/துண்டுகளாக்கிய) முந்திரி கொஞ்சம், சுத்தம் செய்த கிஸ்மிஸ், சிறு பிரட் துண்டுகள்– இவைகளைத் தனித்தனியே பொரித்து பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு லஞ்ச்–பாக்ஸ் கொடுத் தனுப்பும்போது கலந்த சாதத்தின் மேலாக இவை களில் சிறிது எடுத்துத் தூவி வையுங்கள். குழந்தை கள் மதியம் சாப்பிட பாக்ஸை திறந்ததுமே கவர்ச்சியாகக் காட்சியளிக்கும் உங்கள் தயாரிப்பு, பசியைத் தூண்டும். ருசித்துச் சாப்பிடுவார்கள்.

— எஸ். பட்டம்மா

வெந்தியம் – ½ தே. கரண்டி
நெய் – 2 கரண்டி
மிளகு – ½ மே. கரண்டி
சீரகம் – 1 மே. கரண்டி

தாளிப்பு
கடுகு – 1 கரண்டி
மிளகாய் – 4
கறிவேப்பிலை – சிறிது

செய்முறை

புளிக்கூழ் செய்ததுபோல், தக்காளியை அலம்பி மிக்ஸியில் தண்ணீர் விடாமல் அரைத்து கொதிக்க வைத்து கெட்டியான பல்ப் தயாரித்துக் கொள்ளவும். உப்பு, மஞ்சள் பொடி சேர்த்துக் கொதிக்க வைத்து கெட்டியானதும் இறக்கிக் கொள்ளவும். பொடிக்கான சாமான்களை நெய்யில் பொன் நிறமாக வறுத்துக் கொண்டு (மிளகு, சீரகம் மட்டும் வறுக்காமல் பச்சையாகவே) பொடி செய்து தக்காளி பல்ப்பில் சேர்க்கவும். மீதி நெய்யில் கடுகு மிளகாய் தாளித்து கலந்து விடவும். தேவையானால் 2 எலுமிச்சை பழத்தை பிழிந்து (நன்றாக ஆறின பல்ப்பில்) கலக்கவும்.

தேவையானபோது சிறிதளவு பல்ப்பில் தண்ணீர் கலந்து பச்சை கொத்தமல்லி தழை சேர்த்து மணக்கும் தக்காளி ரஸம் சாப்பிடலாம்.

குறிப்பு: புளிக் கூழ் மற்றும் தக்காளி பல்ப் எல்லாமே நன்கு கொதித்து அல்வா போன்ற பதத்திற்கு வர வேண்டும்.

இந்தக் கூழ் வகைகளைக் கொண்டு மேலும் பல உணவுகளை தயாரிக்கலாம்.

சாம்பார் சாதம்: அரிசி, பருப்பு, கறி காய்களைத் தேவையான அளவு வேக வைத்து சாம்பார்க் களியைச் சேர்த்து, சிறிது கரம் மசாலாப் பொடியோ அல்லது லவங்கம், பட்டை ஏலக்காய் இவற்றைப் பொடி செய்து போட்டு நொடியில் தயாரிக்கலாம்.

சாம்பார் அவல்: அவலை ஊற வைத்து, சாம்பார்க் களி சேர்க்கவும்.

சாம்பார் சேவை: சேவை செய்து சாம்பார்க் களி சேர்த்து சாம்பார் சேவை செய்யலாம்.

தக்காளி கிரேவி

இனி வடநாட்டு உணவுக்குப் போவோம்.

தேவையான சாமான்
தக்காளி 1 கிலோ
இஞ்சி 1 பெரிய துண்டு
பச்சை மிளகாய் 5 அல்லது 6
வெங்காயம் 4
சர்க்கரை 1 மே. கரண்டி
உப்பு தேவையானது

பொடி
மிளகு
தனியா
சீரகம்
மசாலாப் பொடி

செய்முறை

தக்காளியை இஞ்சி, பச்சை மிளகாயுடன் அரைத்து உப்பு சேர்த்து கொதிக்க வைத்துக் கெட்டியானதும் இறக்கவும். மிளகு, சீரகம் தனியா இவற்றைப் பொடி செய்து மசாலாப் பொடியுடன் தக்காளி பல்ப்பில் சேர்க்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு வெங்காயத்தைச் சிறிதாக வெட்டிக் கொண்டு வதக்கவும். நன்றாக வதங்கியதும் சிறிது சக்கரை சேர்த்து தக்காளி பல்புடன் நன்றாகக் கலக்கவும்.

பருப்பை வேக வைத்து தக்காளி கிரேவியைக் கலந்தால் சப்பாத்திக்கு 'தால்' ரெடி. முழுகடலை, முழு பயறு இவற்றையும் வேக வைத்து தக்காளி கிரேவியுடன் கலக்க தால் தயார்!!! கறிகாய் (பீன்ஸ், காரட், பட்டாணி) இவைகளை வேக வைத்து த.கிரேவியுடன் கலந்தால் சூடான 'சப்ஜி' யுடன் சப்பாத்தி சாப்பிடலாம்.

மாதத்தில் ஒருநாள் சில மணி நேரம் செலவழித்து இவற்றைத் தயாரித்து வைத்துக் கொண்டால், நினைத்தால் விதம் விதமான சாப்பாட்டுடன், நேரம், சிரமம் எல்லாமே மிச்சம்.

- விஜயா கணபதிராவ்

ஜனனம்

"கத்திரி வெய்யில் அக்கா தாங்க முடியல்லை. சரியான நேரத்துல பிரசவம் மாட்டிக்குது'' என்றபடி தன் பெரிய வயிற்றைக் கையால் தட வியவாறு உள்ளே வந்து உட்கார்ந்தாள் சாந்தா.


''அது சரி. உன் குழந்தையை நீ பெத்துக் கறதுக்கு இந்த அலட்டு அலட்டறியே. உனக் குத்தான் வேற வழி இல்லை. உன் ப்ரசவத் துக்காக நான் இந்த மெட்ராஸ் வெய்யில்ல வந்து வோல் படறேனே. அது தெரியலை யாக்கும் உனக்கு. இரு. குடிக்க ஏதானு கொண்டு வரேன்'' என்றபடி எழுந்து போனாள் சத்யா.

''என்னடி. செக் அப் முடிஞ்சுதா? என்ன சொன்னா டாக்டர்? எப்பப் பிறக்குமாம்? நான் இன்னும் ஏதும் ரெடி பண்ணிக்கலை. குடுத்த டைமுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கா?'' என்று கேட்டுக் கொண்டு சமையலறையில்' இருந்து வெளிப்பட்ட அம்மா கவலையுடன் அங்கலாய்த்தாள். ''ஈஸ்வரா நல்லபடி இந்தப் பொண்ணு பெத்துப் பொழைக்கணும். பொறுக்கா சரீரம். முன் குத்தினாலே தாங்காது. எப்போ வலி வருமோ? என்ன பண்ணப் போறியோ.''

"ஸ்... சும்மா அலட்டிக்காதே அம்மா. பி.பி எகிறும். வலியும் வேதனையும் படறதெல்லாம் உங்க காலம். இப்ப எல்லாம் கத்திதான். ரெண்டு இஞ்சுக்கு வயித்துல ஒரு கோடு போட்டா, பெட்டிலேந்து சாமானை எடுக்கறாப்ல குழந்தையை எடுத்துக் கைல குடுத்துட்டுப் போறா. என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாருக் கும் சிசேரியன்தான். ஆபரேஷன்னா பயந்த காலம் போச்சும்மா. இப்பொ அதான் தேவ லைன்னு ஆயிடுத்து. எல் லாம் ஸயின்ஸ்மா ஸயின்ஸ்'' - சாந்தா.


சத்யா மூன்று கோப் பைகளில் குளிர் பானத் துடன் வந்தவள் சிடு சிடுத்தாள். "சும்மா கிடக்க மாட்டே? கிழவி மாதிரி பேசறதுல சளைக்க மாட் டியே. ஆபரேஷனாம், ஸயின்சாம். ரொம்பத் தெரியும் உனக்கு. ஸயின்ஸ் என்னடி செய் யும்? நமக்கு மேல ஒரு சக்தி. அவன் இல் லாம ஓர் அணுவும் அசையாது. மகப்பேறு மகாதேவனுக்குக் கூடத் தெரியாதுன்னு பெரியவர்கள் சொல்றதெல்லாம் பொய் இல்லை, சாந்தா. எப்பவும் சிசேரியன் தியானம். நீ ஏம்மா இவ பேசறதெல்லாம் கேட்டுட்டு எதுவும் சொல்லாம இருக்கே? வாய்ல நாலு தட்டுத் தட்டாமல்.''

அம்மா ஒரு அப்பாவி. "நான் என்ன சொல்ல? ஒரே வயித்துல பிறந்தவான்னு



பேருதான். ரெண்டு பேரும் ரெண்டு துருவமா இருந்தா நான் உங்க பேச்சையெல்லாம் ஒரு காதுல வாங்கி மறு காதுல விடறது தவிர எதுவும் செய்ய முடியாது. அது விஞ்ஞானமோ, மெய் ஞானமோ, எல்லாம் நல்லபடி நடந்தா சரி தான்'' என்றபடி உள்ளே போய் விட்டாள். பழைய காலத்து மனுஷி.

நாட்கள் நகர, வீடே ஒரு வித எதிர் பார்ப்பில் இருந்தது, சாந்தா தவிர. அவள் ஆபரேஷனுக்குத் தயாராக இருந்தாள். சாதாரணமாக பிரசவம் ஆகலாம் என்ற ஆசைகூட இல்லை அவளிடம். அன்று





மோர் குழம்பு வைப்பதற்கு மோரில் புளிப்பே இல்லை. இப்பொழுது மாங்காய் சீசன். ஆதலால் தேங்காயுடன் மாங்காயையும் சேர்த்து அரைத்து மோருடன் கலந்தேன். மோர்க் குழம்பு வித்தியாசமான சுவையுடன் இருக்கிறதே என்று என் கணவர் பாராட்டு கிடைத்தது.

– பி. ஜானகி

டாக்டருடன் கடைசி சந்திப்பு. பரிசோதித்த டாக்டர் கூறி விட்டாள்.

"சுத்தமாக வயிறு இறங்கவில்லை. ஹெட் ஃபிக்ஸ் ஆகல்லை. நார்மலா பிரசவம் ஆகற வாய்ப்பு இல் லைம்மா. தலைப் பிரசவம் வேறு. நாங்க கொடுத்த டைம் நெருங்கி யாச்சு. ரிஸ்க் எடுப்பது முடியாது. நான் இன்னும் இரண்டு நாள் அதிக வேலை ஏதும் இல்லாமல் இருப்பேன். இப்பகூட குழந்தை வெளில வரத் தயார். எப்ப வந்து அட்மிட் ஆறேன்னு எனக்கு சாயந்திரம் உன் அக்காவை வந்து சொல்லச் சொல். உங்களுக்கு ஏதான குறிப்பிட்ட நான் நட்சத்திரத்துல குழந்தை வேண்டுமானால், வீட்டுல கலந்து பேசிட்டு வரலாம். ஆனால் நாலு நாள்தான் தருவேன். அதுக்கு மேல வெயிட் செஞ்சா, குழந்தைக்கும் சரி, உனக்கும் சரி, நல்லதில்லை."

வீடு திரும்பும்போது, சாந்தா கேட்டாள். "என்ன சத்யாக்கா! மஹாதேவனுக்கும் தெரியாத மகப்பேறு பற்றி மங்களம் டாக்டர் துல்லியமா சொல்லிட்டா பார்த்தாயா? அதான் ஸயின்ஸ்."

சத்யா ஏதும் பேசவில்லை. அம்மா வருத்தமானாள். பதட்டப் பட்டாள். உடனே வீட்டு ஜோசியரை போனில் கூப்பிட்டாள்.

"பாலு மாமா, பொண்ணுக்குத் தலைப் பிரசவம். டாக்டர் ஆபரேஷன்னுட்டா. நட்சத்திரம் எது தேவலை. பாத்து சொன்னா அப்பொ குழந்தையை எடுத்துடலாம். இன்னும் நாலு நாளுக்குள் பண்ணிடணும்னு சொல்லிட்டா."

"பையனா, பொண்ணா தெரியுமா?"

"ஓ! ஸ்கேன் பாத்தாச்சு. பொண்ணு."

"அப்போ வெள்ளிக்கிழமை வெச்சுக்கலாமே. மக நட்சத்திரம். மகத்துப் பெண் ஜகத்தை ஆளும். ஒரு நிமிஷம், டைம் கூடச் சொல்லிடறேன்."

ஏதோ கல்யாணத்திற்கு நாள் குறிப்பது போல் குறிக்கப்பட்டது.

ஹாஸ்பிடல் கூப்பிடு தூரம்தான். ஆனால் நடந்து போனால் யார் கண்ணாவது படும். அப்பா ஆட்டோ பிடித்து வரக் கிளம்பினார். "ஆட்டோ வேண்டாம்பா. நடந்தே போயிடலாம்" என்ற சாந்தாவின் பேச்சுக்கு யாரும் எதிர்ப் பேச்சு பேசவில்லை. கிளம்பும் நேரம் சுமுகமாய்க் கிளம்பலாமே, விவாதம் எதற்கு என்ற எண்ணம்தான் காரணம்.

காலையில் வெறும் வயிறு. ஏதும் சாப்பிடக் கூடாது. வேண்டிய பொருட்களைத் தானே எடுத்து வைத்துக் கொண்டாள். "அம்மா, அப்பா கிளம்பலாம்" – நடந்தே கிளம்பி விட்டனர். இன்னும் சில மணி நேரத்தில் குழந்தை பெற்றுக் கொள்ளப் போகும் பெண் நடந்து ஆஸ்பத்திரி செல்லும் விந்தையைப் பாட்டி மூக்கில் விரல் வைத்துப் பார்த்தாள்.

"உங்க அப்பா பொறந்தப்போ, வலில ஒரு நாள் பூரா என்ன அவஸ்தைப் பட்டேன், சத்யா! இப்பப் பாரேன் இவ ரேஸ் குதிரை யாட்டமா டம் டம்னு நடந்து போறா" – ஒப்பு நோக்கி, மாய்ந்து போனாள்.

சத்யாவிற்கு இன்னும் கடவுள் மிகப் பெரியவராகவே தோன்றினார். ஸ்ருஷ்டி ரகசியம் யாருக்குத் தெரியும்? மனிதன் எப்போதும் தன் துன்ப நேரத்தில்தான் இறைவனை உணர்கிறான். தானே உணர வேண்டிய ஒன்றை, மற்றவர் சொல்லிக் கேட்பதால் மட்டும் புரிந்து கொள்ள முடியாது என்றே அவளுக்குப் பட்டது.

"ட்ரிங் ட்ரிங்" போன் சத்தம் அவள் எண்ண ஓட்டத்தைக் கலைக்க, "ஹலோ" மறுமுனையில் அம்மாவின் குரல் கேட்டது.

"சத்யா, நீ பெரியம்மாவாயிட்டே. குழந்தை ரோஜாப் போல இருக்கு. 3 கிலோ

இருந்தது. நான் அவளை விட்டுட்டு வந்து அவசரமா பேசறேன். நீ உடனே கிளம்பி வா. பாட்டிக்குக் காவலா சுமதியை இருக்கச் சொல்லிட்டு, சட்னு வா." சத்யா, பாட்டியிடம் விஷயம் கூறிவிட்டு ஓடினாள்.

குழந்தை ரோஸ் நிறக் குட்டி மெத்தையில் நிச்சலனமாய், கண்மூடி சுகமாய்ப் படுத்திருந் தது. சத்யாவிற்குள்ளிருந்து பாசம் பிரவாக மாய்ப் பொங்கி வழிந்தது. பிறந்து ஒரு மணி நேரம்கூட ஆகாத அச்சிறு ஜீவனுக்காக.

"அக்கா இங்க வா" என்று ஈன ஸ்வரத்தில் சாந்தா அழைத்தபோதுதான் சத்யாவிற்குத் தங்கை நினைவே வந்தது. கட்டிலருகே சென்ற போது சாந்தாவின் கண்கள் கலங்கி இருந் ததைக் கவனித்தாள். என்னவாக இருக்கும்?

"என்ன சாந்தா? ஏன் அழறே? ஆபரேஷன் ஆன உடம்பு. கண்ல தண்ணி விட்டா தலைவலி வந்துடும்."

"அக்கா, நீ எப்பவும் சொல்ற கடவுளை இந்தக் குழந்தையோட ஜனனம் எனக்கு உணர்த்தி விட்டது. நினைவு தெளிஞ்சவுடன் நான் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? "டாக்டர், குழந்தைக்கு எல்லாம் நார்மலா இருக்கா"ங்கறதுதான். அப்பத்தான் மனசுல சிலீர்னு இருந்தது. ஆபரேஷன்ல குழந்தையை எடுத்துடலாம்னு எவ்வளவு இறுமாப்பா இருந்தேன்! ஆனா அந்தக் குழந்தை கூன் குருடு செவிடு நீங்கி நல்லதாய்ப் பிறக்கணும்னு ஒருகணம் அந்த இறைவனிடம் பிச்சை கேட்காமல் இருக்க முடிந்ததா, என்னால்? அங்கதான் நீ சொல்ற சக்தி இருக்குன்னு தோணிப் போச்சு."


– பேசி முடித்துக் கண்களை மூடிக் கொண்டாள். ஆயாசமாய் இருந்தது போலும். சத்யா விற்குப் புல்லரித்தது. அவளுக்குத் தெரியும், என்றேனும் ஒருநாள் சாந்தாவிற்குப் புரியும் என.

"அம்மா, பாப்பாக்குப் பேர் வெச்சாச்சு, 'ஜனனி'" என்றாள்

என்ன அழகிய பெயர்! ஜகத்காரணி – இந்த உலகம் தோன்றவே காரணமானவள், ஜனனி!

"ங்கே..." என ஜனனி, தன் பெயரை ஆமோதித்துக் குரல் கொடுத்தது.

நியூஸ் சாலட்



மூன்று அணு குண்டுகளை இந்தியா வெடித்துக் காட்டியிருப்பது உலகம் முழுவதும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 1974ஆம் ஆண்டிலேயே ராஜஸ்தானில் உள்ள போக்ரான் பகுதியில் இந்தியா தன் முதல் அணு வெடிச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. அதை விடப் பல மடங்கு சக்தி வாய்ந்தவை சமீபத்திய அணுகுண்டுகள் (அவற்றில் ஒன்று ஹைட்ரஜன் குண்டு). இன்னொரு முக்கிய வேறுபாடும் இந்த சோதனைகளுக் கிடையே உண்டு. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள், இந்தியாவின் முதல் அணு வெடிச் சோதனைக்குப் பிறகு அணு மின் நிலையங்களுக்கு அளித்து வந்த தொழில் நுட்ப உதவிகளை நிறுத்திக் கொண்டு விட்டன. இப்போது முழுக்க முழுக்க இந்திய விஞ்ஞானிகளாலேயே வடிவமைக்கப்பட்ட அணு குண்டு தொழில்நுட்பம் பெரு வெற்றி அடைந்திருக்கிறது. இந்திய விஞ்ஞானிகளுக்கு வெற்றி தான்.

"இந்த அணுகுண்டு சோதனை யாரையும் பயமுறுத்தவோ, போருக்குப் போகவோ அல்ல. நாங்களும் பலம் வாய்ந்தவர்களே என்று நிரூபித்து இருக்கிறோம்" என்று பாரதப் பிரதமர் குறிப்பிட்டு இருக்கிறார்.

தனது முதல் நாவலுக்கே புக்கர் பரிசு பெற்றவர் இந்தியரான அருந்ததிராய் என்பது நமக்குத் தெரியும். சமீபத்தில் அவரது அழகிற்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. "பீப்பிள்" என்ற ஆங்கிலப் பத்திரிகை தேர்வு செய்துள்ள "உலகின் ஐம்பது அழகான நபர்கள்" என்ற பட்டியலில் இவரும் இடம் பெற்றிருக்கிறார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோவைச் சேர்ந்த நம்பி நாராயணன் உட்பட்ட சில பிரபல விஞ்ஞானிகளும், மாலத் தீவிலிருந்து இந்தியா வந்திருந்த மரியம் ரஷீதா என்ற பெண்மணியும் "இந்திய விண்வெளித் தொழில் நுட்பத்தை வெளிநாட்டுக்குக் கடத்த உடந்தையாக இருந்தனர்" என்று குற்றம் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தனர். அவர்களை நிரபராதிகள் என்று அறிவித்து சுப்ரீம் கோர்ட் விடுதலை செய்துள்ளது.

கம்போடியா நாட்டின் ஹிட்லர் என்று வர்ணிக்கப்பட்ட கொடுங்கோலன் போல் பாட் சமீபத்தில் இறந்தான். லட்சக்கணக்கானவர்களைக் கொன்று குவித்த கைமர் ரூஜ் இயக்கத்தின் தலைவனான இவனது இறப்பு காட்டுக்கு நடுவே நடைபெற்ற தலைமறைவு வாழ்வின் போது நிகழ்ந்தது.

இந்தியத் திரைப்பட வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரே ஆண்டில் சிறந்த நடிகர் மற்றும் சிறந்த நடிகைக்கான பிரிவுகளில் தலா இரண்டு கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். களியாட்டம் படத்திற்காக சுரேஷ் கோபியும், சாமந்தரங்கன் படத்திற்காக பாலசந்திரமேனனும் தேசிய விருது பெற, இந்திராணி ஹல்டர் மற்றும் ரிதுபர்னா சென்குப்தா ஆகியோர் தஹன் என்ற வங்காளப் படத்தில் திறமை காட்டியதற்காக சிறந்த நடிகைகளாக தேசிய விருது பெற்றுள்ளனர்.

மத்திய அரசு மின்சாரம் சம்பந்தமாக ஓர் அவசர சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி எல்லா மாநில அரசுகளும் மின்சார மறு சீரமைப்புக் கமிஷன்களை மூன்று மாத காலத்திற்குள் அமைக்க வேண்டும். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை



வழங்குவதால் அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் அனைவரின் மீதும் அந்தச் செலவை சுமத்த வேண்டியிருக்கிறது. இதை மாற்றி அமைக்க பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த அவசர சட்டத்திற்குக் கணிசமான அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. விவசாயிகளிலேயே பெரும் பணக்காரர்கள் உண்டு என்பதும் இவர்களுக்கு இலவச மின்சாரம் அளிப்பது அனாவசியம் என்ற கருத்தும் பலமடைந்து வருகிறது.

கோடிக்கணக்கான தொகையை வரி ஏய்ப்பு செய்த காரணத்திற்காக பீட்டர் கிராஃப் (பிரபல டென்னிஸ் வீராங்கனை ஸ்டெஃபியின் தந்தை) சென்ற ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். மூன்று வருட சிறை தண்டனை என்றாலும் நன்னடத்தை காரணமாக சமீபத்தில் அவரை விடுதலை செய்திருக்கிறது ஜெர்மனி நீதிமன்றம்.

மகாராஷ்டிர மாநிலத்தில் கடுமையான, காலத்திற்கேற்ற சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆபாசமான நாடகங்களும் ("இரட்டை அர்த்த வசனங்கள் நிரம்பியது" என்றே சில நாடகங்கள் விளம்பரப்படுத்தப்பட்டன), இசை நிகழ்ச்சிகளும் பம்பாயில் பெருகிவிட, அத்தகைய நாடகங்களுக்குத் தடை. தவிர ராக் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு முன், அவற்றின் பாடல் வரிகளை கண்காணிக்கும் குழுவின் முன் சமர்ப்பித்து அதன் ஒப்புதலை பெற வேண்டியது அவசியம்.

போலி டாக்டர்கள் ஆங்காங்கே செயல்பட்டு(?) பலர் இறந்ததைத் தொடர்ந்து, தமிழக அரசு "இனி மாநிலத்தில் உள்ள எல்லா தனியார் மருத்துவமனைகளும் பதிவுசெய்யப்பட வேண்டும்" என்று அறிவித்துள்ளது. முன்பே இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றுதான். என்றாலும் "அரசு அதிகாரிகளின் இடையூறு, லஞ்சம் ஆகியவற்றுக்கு இந்தச் சட்டம் வழி வகுக்கும்" என்று பல டாக்டர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்தச் சட்டம் செயல் படுத்தப்படாமல் இதுவரை இருந்தது.

பெருமளவில் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தாலும், சுஹார்தோ தொடர்ந்து ஏழாவது முறையாக இந்தோனேஷியாவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதைத் தொடர்ந்து அங்கு பெரும் கலவரம். மாணவர்கள் பல்வேறு வேடமிட்டு ஊர்வலம் சென்று எதிர்ப் புணர்வைக் காட்டினர்.

— ஜி.எஸ்.எஸ்.



மலிவான விலையில் கிடைக்கும்

சத்துணவு

சமுதாய முன்னேற்றத்திற்கான ஜி.டி. பிர்லா விருது பெற்றிருக்கிறார் திருமதி. இராஜம்மாள் தேவதாஸ். மிகப் பெரும் கல்வியாளரும், உணவுத் துறை மேம்பாட்டில் உலக அளவில் பெரும் சாதனைகளை நிகழ்த்தி வருபவருமான இவர் பழகுவதற்கோ மிகவும் எளியவர். இந்த அற்புதமான பெண்மணி நம்முடைய 'அகமும் புறமும்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது சொன்னார்.

"நீங்கள் இதன் மூலம் ஒரு பெரிய சமூக சேவையையே செய்து வருகிறீர்கள். இந்தியாவின் சத்துப் பற்றாக்குறைக்கு ஒரு மாமருந்து சோயா. இதை நம் தாய்மார்கள் ஏனோ உணரவேயில்லை. நீங்கள் நல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறீர்கள்'' என்றார்.

அவரே நமது மங்கையர் மலருக்கு எழுதிய கட்டுரை இது –

நம் பாரத நாடு, மனித வளத்திலும், தொழில்நுட்பங்களிலும் பெரிதும் முன்னேறி 21-ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கப் போகும் இந்த வேளையிலும், வளர்ந்து வரும் மக்கள் தொகையின் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் புதிய புதிய உணவுகளைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நம் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதோடு மட்டுமின்றி, ஊட்டச்சத்துக் குறைகளையும் தவிர்த்து, குறைந்த விலையில், எளிதில் கிடைக்கக்கூடிய உணவுகளை வரவேற்கிறோம்.

நமது தினசரி உணவில் தானியங்களுடன், பருப்பு வகைகளையும் கலந்து உண்ணும் பழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இந்த உணவுப் பழக்கத்தின் மூலம், தானியத்தில் இல்லாத பல சத்துக்களைப் பருப்புக்களும், பருப்பு வகைகளில் இல்லாத சத்துக்களை தானி யங்களும் சரிகட்டுகின்றன. பருப்பு வகைகளில் சத்து மிகுந்ததாகவும், மலிவான விலையில் கிடைக்கக்கூடியதும், பல சத்துக்களைத் தன்னகத்தே கொண்டதுமான ஒரே பருப்பு 'சீனப் பக', 'சென்ட்ரல்லா பயிர்', 'மஞ்சள் தங்கம்' என்று பல பெயர்களில் போற்றப்படும் சோயாவாகும்.

சோயா மொச்சை, அன்றாட உணவில் பலவற்றைத் தயாரிக்கவும், குழந்தைகளுக்கு மிகவும் தேவையான இணை உணவுகளைத் தயாரிக்கவும், உரத்தை உற்பத்தி செய்யவும், கால்நடை, இறால் தீவனம் தயாரிக்கவும், பெயிண்ட், வார்னிஷ்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றது.

சோயாவிற்கே உரிய சிறப்புத்தன்மை என்ன வென்றால், இதில் பிற பருப்பு வகைகளை விட அதிக அளவில் புரதம் என்ற முக்கியமான உணவுச் சத்து அடங்கியுள்ளது. நாம் வழக்கமாகச் சேர்த்துக் கொள்ளும் பருப்பு வகைகளான பாசிப்பயறு, பாசிப் பருப்பு, கடலைப் பருப்பு, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் மைசூர் பருப்பு இவற்றுடன் சோயா பருப்பை ஒப்பிடும் பொழுது, சோயாவில் இரண்டு மடங்கு புரதம் அதிகமாக உள்ளது.

சோயா மொச்சையிலிருந்து பலவித உணவு வகைகளைத் தயாரிக்கலாம். சோயாவிலிருந்து எண்ணெய், கொழுப்பு நீக்கப்பட்டதும்,



கொழுப்பு நீக்கப் படாததுமான சோயா மாவு, சோயா கறி, சோயா பால் போன்ற உணவில் சேர்க்கக்கூடிய பல பொருட்கள் இப்பொழுது கிடைக்கின்றன.

கொழுப்பு நீக்கப்பட்ட சோயா மாவில் 53 சதவிகிதம் புரதம் அதாவது துவரம் பருப்பில் அடங்கியுள்ள புரதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக அடங்கியுள்ளது. இது குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. புரதச் சத்து பற்றாக்குறையினால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோஞ்சான், சவலை நோயைத் தீர்ப்பதில் சோயா முக்கிய பங்கு வகிக்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சோயா மாவினை 2 – 5 வயதுச் சிறு குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தில் பருப்பிற்குப் பதிலாக 50, 75, 100 சதவிகிதம் மாற்றுப் பொருளாக ஒரு வருடம் கொடுத்து அதனால் உண்டாகும் விளைவுகளை அவினாசிலிங்கம் பல்கலைக் கழக உணவு ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ச்சி செய்தோம். இதற்கு சக்தி சோயா நிறுவனம் சோயா மாவினை அளித்தது. அவர்களின் மற்றொரு தயாரிப்பான 'சோயா பைட்'டும் பயன்படுத்தப்பட்டது. 400 குழந்தைகள் அடங்கிய 12 சத்துணவு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆராய்ச்சி தொடரப்பட்டது. அவ்வாறு ஆராய்ச்சி செய்ததில் குழந்தைகள் உயரத்திலும், எடையிலும், ஹீமோகுளோபின் என்ற இரத்த நிறமியிலும் சிறந்த முன்னேற்றங்களைக் காட்டினர்.

இது தவிர இவற்றிற்கெல்லாம் சிகரமாக சோயா உணவு கொடுத்த குழுக்களில் குழந்தைகளிடம் விளையாட்டுத் திறமையும், மன வளர்ச்சியும் அதிகமாக இருந்ததோடு அவர்களின் பள்ளி வருகைக் கணிப்பும் அதிகமாகக் காணப்பட்டது. இந்த நான்கு குழுக்களிலும் 100% சோயா உணவு சேர்ந்த குழுவில்தான் குழந்தைகளின் உயரம், எடை ஆகியவற்றில் அதிக வளர்ச்சி காணப்பட்டது.

இந்த ஆராய்ச்சியின் விளைவாகத்தான் தமிழக அரசு எல்லா சத்துணவு மையங்களிலும் சோயா மாவை பருப்பில், (செப்டெம்பர் 1992 முதல் ஜூன் வரையிலும் 25 சதவிகிதமும், பிறகு ஜூலை 1993 முதல் 50 சதவிகிதமும்) சேர்ந்த கலவைச் சாதத்தைக் கொடுத்து வந்தனர்.

சத்துணவுத் திட்டத்தில் சோயா மாவு சேர்த்ததின் பலனைக் கண்டறிய மதிப்பீடு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அவரது உதவியாளர்கள் கொண்ட நான்கு குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் அனுப்பப்பட்டனர். ஒரு உறுப்பினர், ஒரு உதவியாளர் கொண்ட இக்குழுக்கள் 96 வட்டங்களுக்குச் சென்று ஆய்வு செய்தனர். ஒவ்வொரு வட்டத்திலும் சுமாராக 5-6 அங்கன்வாடி மையங்களை பார்வையிட்டனர்.

இந்த மதிப்பீடு குழுக்கள் சோயாமாவினை சத்துணவில் சேர்த்தது பற்றி அங்கன்வாடி உறுப்பினர்களின் கருத்துக்களை ஆராய்ந்தனர். அதில் சோயா உணவினைச் சேர்ப்பதால் புரதச்சத்து அதிகமாகவும், எளிதில் கவரக்கூடிய நிறத்திலும், சுவையாகவும், விலை குறைந்ததாகவும், சிறந்த மருத்துவ குணங்கள் நிறைந்ததாகவும், குழந்தைகள் மிகவும் விரும்பி உண்ணுவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் சோயாவை உணவில் சேர்ப்பதற்கு முன்பாக குழந்தைகள் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது சத்துக்குறைவு நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தனர். சோயா உணவில் சேர்த்துக் கொண்ட பின்பு இந்த சத்துக் குறைகள் முழுமையாக மறைந்தன என்றும் புள்ளி விவரங்கள்படி தெரிய வந்தது.

சோயா உணவுகள் இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் எனப்படும் கொழுப்பையும், இரத்த அழுத்தத்தையும் குறைக்க உதவுகிறது. நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களையும் இரத்த சோகையையும் குணப்படுத்தவும், சிறுநீரகக் கோளாறுகளையும், வாத ரோகத்தையும் கட்டுப்படுத்த உதவுகின்றது.

இவ்வாறு பல சிறந்த குணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சோயா பருப்பினையும், மாவினையும் அன்றாடம் உண்ணும் இட்லி, தோசை, அடை, வடை, சாம்பார், சட்னி, பூரி, சப்பாத்தி போன்ற பல பதார்த்தங்களிலும் சேர்க்கலாம். அப்படிச் சேர்ப்பது சுவை, நிறம், மணம், சத்து ஆகியவற்றை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நமது குடும்பச் செலவையும் குறைக்க உதவுகிறது. ஏனெனில் பருப்பின் விலை ஒரு கிலோ கிராம் ரூ. 35.40 என்றால் சோயா மாவின் விலை ரூ. 20.25 தான். ஆனால் அதில் இருமடங்கு சத்துக்கள் உள்ளன.

எனவே மலிவு விலையில் கிடைக்கும் சத்து மிகுந்த சோயா, 'புரதப் பற்றாக்குறை தீர்க்கும் புண்ணியன்' என்று அழைக்கப்படுகிறது. மேலை நாடுகளில் இதனை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி வருகிறார்கள். நம் நாட்டில் இன்னும் முழு விழிப்புணர்வு வரவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். தாய்மார்கள் இதனை முழுமையாக உணர்ந்து குழந்தைகளை மன, உடல்ரீதியாக வலிமை மிக்கவர்களாக வளர்க்க சோயாவை நாடலாம்!

– இராஜம்மா பா. தேவதாஸ்

(வேந்தர், அவினாசிலிங்கம் – மகளிர் மனையியல் பல்கலைக் கழகம், கோவை.)

கண்ணாடி மேஜை மீதுள்ள கறை நீங்குவதற்கு டால்கம் பவுடர் அல்லது கடலை மாவைத் தூவி பிறகு நன்றாகத் துடைத்து விடவும். – மரகதம்





ஒரு பண்டத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது எப்படி என்பதை குழந்தைகள் கற்றுக் கொள்ள வேண்டும். பகிர்ந்து கொள்வது என்பது மிகவும் வரவேற்கத்தக்க, விருப்பத்திற்குரிய பழக்கமாகும். வயதில் சிறியவர்கள் பண்டத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது, முதிர்ச்சி அடைந்தவராகவும் மற்றவர்களைத் தாமாகவே பாவிக்கிறார்கள் என்பதாகவும் அறியலாம். அதுவும் இன்றைய நிலையில் ஒரே குழந்தையாக வளருபவர்கள் சுயநலமிகளாக மாற வாய்ப்புண்டு. அவர்களுக்கு இப்பழக்கத்தை அவசியம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

நான்கு வயதான சுரேஷ் விளையாட்டு மைதானத்தில் ஒரு நாள், புறாக்களுக்கு பிரட் துண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தான். ஒரு புறா, மற்ற புறாக்களை விரட்டி, விரட்டி, மற்ற புறாக்களைவிட அதி வேகமாக, எல்லாத் துண்டுகளையும் கொத்தித் தின்றதைப் பார்த்த சுரேஷுக்கு அடிக்கடி தன் தாய், வீட்டில் கூறும் வரிகள் நினைவுக்கு வந்தன. அவை "நீ மற்றவருடன் பகிர்ந்து கொள்வதேயில்லை" என்ற வரிகள். இந்த வரிகளை நினைவில் கொண்ட சுரேஷ் குறிப்பிட்ட இந்தப் புறாவிடம் இதே வரிகளைக் கூறி கடிந்து கொண்டான். புறாவுக்கு இந்த வரிகள் புரிந்ததோ இல்லையோ எதையுமே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று பெற்றோர் சுரேஷுக்குக் கூறியிருந்தது அவன் மனதில் பதிந்திருந்தது. அது போதுமே!

பல குழந்தைகள் பகிர்ந்து கொள்வதைக் கஷ்டமாயும், குழப்பமானதாகவும் உணருகிறார்கள். ஒரு பொருளை தன்னிடமே வைத்துக் கொள்வது தனது உரிமை என்று மிகச் சிறிய வயதினர் நினைப்பதால், அப் பொருளை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

தான் கொடுத்தது தனக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்பதை அந்தச் சிறிய வயதிலே குழந்தைகள் புரிந்து கொள்ள முடியாது. பகிர்ந்து கொள்ளுதலை, பரஸ்பரமான ஒன்று என்று நினைக்கக்கூடிய மனப்பக்குவம் பெரியவர்களுக்கு இருக்கிறது. அதாவது, ஒரு பொருளை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டால், மற்றவர்களும் வேறு ஏதாவது பொருளைத் தன்னோடு பகிர்ந்து கொள்வார்கள் என்று நினைக்கக் கூடிய மனப்பக்குவம் பெரியோருக்கு இருப்பதைப் போல், சிறு வயதினருக்கு இருக்க முடியாது. சிறிய வயதினரைப் பொருத்தவரை, பகிர்ந்து கொள்வது என்பது தம்மிடம் இருக்கும் பொருளைக் கொடுத்து விடுவது மட்டுமே என்று கருதப்படுகிறது.


பகிர்ந்து கொள்ளப் பழக்குங்கள் உங்கள் குழந்தைகளை...

பெரியவர்கள் தங்கள் குழந்தைகளிடம் ''ஒரு பொருளை உன் சிநேகிதனோடு பகிர்ந்து கொள்" என்று கூறும்போது, பகிர்வது என்ற பதத்தை இரண்டு விதமான பொருள் படுமாறு உபயோகிக்கிறார்கள். சில சமயங்களில் இது மிகுந்த குழப்பத்தை உண்டு பண்ணலாம். ஒரு பொருளை மற்றவருக்குக் கொடு என்ற அர்த்தத்தில் 'பகிர்ந்து



சீடைகள் வேகும்போது, வெடித்து விடாமல் இருப்பதற்கு, இரண்டு விஷயங்களில் கவனம் கொள்ள வேண்டும். ஒன்று: மாவை உள்ளங்கையில் வைத்து, உருட்டி, உருட்டி, கோலியை போல இறுகலாக செய்யக் கூடாது. இரண்டு விரல்களால் மாவை கிள்ளி எடுத்து, மிருதுவாக, பிசிறி னால் போல உருண்டை பண்ண வேண் டும். அடுத்து வாணலியில் எண்ணெய் காய்ந்ததும் சீடைகளை கொட்டும் போது எண்ணெய் நிரக்கக் கொட்டி விட வேண் டும். எண்ணெய் அதிகமாக இருந்து சீடை கள், கொஞ்சமாக இருப்பின், கண்டிப்பாக ஒன்று விடாமல் வெடித்து அக்கம் பக்கத்திற்குக் காட்டிக் கொடுத்து விடும்.

— ஆதிலக்ஷ்மி



கொள்' (share) என்ற பதத்தைப் பயன்படுத்து கிறோம் என்று ஒரு தந்தை கூறுகிறார். சாக் லேட் போன்ற, பயன்படுத்தியவுடனேயே தீர்ந்து விடக்கூடிய பொருளைப் பகிர்ந்து கொள்வதற்கும், ஒரு பொம்மையைப் பகிர்ந்து கொள்வதற்கும் கணிசமான வேறுபாடு இருக்கிறது. சாக்லேட்டைப் பகிர்ந்து கொள் ளும்போது, குழந்தை அதை நிரந்தரமாக இழக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால் பொம்மையைத் திருப்பிப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒரு பொருளை விட்டுக் கொடுப்பது என்பது பல குழந்தைகளுக்கு அச் சத்தையூட்டக் கூடியதாக இருக்கலாம். ஏனென்றால் ஒருமுறை கொடுத்து விட்ட பொருள் தமக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கை குழந்தைகளுக்கு இருக்க முடியாது.

தன் தந்தையோ (அ) தாயோ, 'உம்' என்று, சரியான 'மூட்'ல் இல்லாதபோது குழந்தை அவருக்கு இனிப்புப் பண்டத்தையோ (அ) பொம்மையோ கொடுத்து அவரை மகிழ்விக்க முயல்கிறது. ஏனென்றால் தான் குஷியாக இல்லாதபோது தன்னைக் குஷிப்படுத்த பெற்றோர் பொம்மை (அ) இனிப்பு கொடுப் பது, குழந்தைக்கு நினைவில் வருவதால், குழந்தை அதேபோல் செய்கிறது.

குழந்தை, தன் சாமான்களை மற்றவர் களோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு, மனோரீதியாக, வளர்ச்சி அடையாத நிலை யில், அக்குழந்தையை 'பகிர்ந்து கொள்' என்று கூறுவது பலவிதமான பிரச்னைகளை உண் டாக்கும் என்று டேவிட் பெர்னஸ்டீன் என்ற மனோதத்துவ நிபுணர் கூறுகிறார்.

குழந்தைக்கு பொம்மை கொடுப்பதற்கு முன்னால் அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதற்காகப் புகழ்ந்துவிட்டு, சில நிமிடங் களுக்குப் பிறகு பொம்மையைக் கொடுப்பது சரியான அணுகுமுறை என்கிறார் இந்த மனோதத்துவ நிபுணர். இந்த அணுகுமுறை குழந்தைக்கு நம்பிக்கையை உண்டு பண்ணு கிறது. அதாவது, ஒரு பொருளை, வேறு ஒருவருடன் பகிர்ந்து கொள்வதால், தாம் அந்தப் பொருளை இழந்து விட மாட்டோம் என்ற நம்பிக்கைதான் அது. பொம்மையைக் குழந்தையின் பார்வையிலேயே வைப்பது நல்லது. பொம்மையைக் குழந்தையின் பார்வையிலிருந்து அகற்றி விட்டால், குழந்தை அழ ஆரம்பிக்கலாம். எல்லாப் பொருட் களையும் பகிர்ந்து கொள்ளும்படி குழந்தை யைக் கட்டாயம் செய்ய முடியாது. ஏனென் றால் சில பொருள்களைப் பொறுத்த வரையில் அவை தமக்கு மட்டுமே சொந்தமானவை என்ற எண்ணம் குழந்தைக்கு இருக்கும்.

எல்.கே.ஜி, யு.கே.ஜி பருவத்தினர் தமக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பொருள்கள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா என்று கவனம் செலுத்துவார்கள். எடுத்துக்காட்டாக, நர்சரி பள்ளிகளில் வீடு (அ) மேஜை போன்ற வற்றைத் தயாரிக்க ஏதுவாக, சில மரத் துண்டுகளை (Blocks) குழந்தைகளுக்குக் கொடுப்பார்கள். தனக்குக் கொடுக்கப்பட்ட அதே எண்ணிக்கையே மற்றவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளதா என்று கவனிக்க முற் படலாம். நான்கு வயதான குழந்தை பதி னெட்டு வயதான தன் அக்கா (அ) அண் ணாவுக்குக் கொடுக்கப்பட்ட அதே அளவு ஐஸ்கிரீம் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கலாம்.

தமக்குரிய சாமான்களைத் தம்மிடமே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் குழந்தைகள் குறியாக இருப்பது சகஜம். தன் சாமான்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இல்லாத குழந்தைகள், ஏதோ ஒரு விதத்தில் அவநம்பிக்கையால் அவதிப்பட்டுக் கொண்டி ருப்பதாலேயே, பகிர்ந்து கொள்ளத் தயாராக இல்லை என்பதை நாம் புரிந்து கொண்டு அக்குழந்தைகளுக்கு நம்பிக்கை உண்டாகும் வகையில் செயல்பட வேண்டும்.

— ராஜி



சமீபத்தில் உயர்பதவி வகிக்கும் பெண்களுக்கான கூட்டமைப்பை ஏற்படுத்தும் கருத்தரங்கம் ஒன்று நடந்தது. நிர்வாகத் திறனில் சிறந்து விளங்கும் பல்வேறு துறையைச் சார்ந்த பெண்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். அவற்றுள் சில –

ரேகா ஷெட்டி

'சென்னையில் பெண் மானேஜர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. பாகுபாடு அதிகம் இல்லை' என்றார்.

சமீபத்தில் ஒரு ஆங்கில பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்திருந்தது. அதில் ஒரு பெண்மணி தான் ஏன் உயர்பதவியை ஏற்கவில்லை என்று எழுதியிருந்ததாகவும், அதில் அந்தப் பெண்மணி கூறிய காரணங்கள் தனக்கு ஒப்புதல் இல்லை என்றும், அந்தக் கட்டுரை விவாதிக்கப்படவேண்டிய விஷயம் என்றும் கூறினார். நாம் இந்தக் கண்ணாடி உச்சியை (glass ceiling) உடைக்க வேண்டும். நம்மை நாம் உயர்நிலைக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார். அதே நேரத்தில் தான் ரோட்டரி கவர்னர் பதவி ஏற்றபோது, தனக்கு வாக்களித்தவர்கள் பெரும்பாலும் ஆண்கள் என்றும் கூறினார்.

உனக்கு எதற்கு 'சீட்'?



• ரேகா ஷெட்டி

மஹிந்திரா போர்ட் – பர்சனல் ரிலேஷன்ஸ் மானேஜர் – புவனா ராமலிங்கன்

நல்ல பதவியில் உள்ள பெண் மானேஜர்களை சக ஊழியர்கள் செகரெட்டரிகளைப் போல் பாவிப்பதை விவரித்தார். ஒரு மீட்டிங்கில் பல ஆண்களும், ஒருசிலரே பெண்களும் இருந்தால், ஏதாவது குறிப்பு எடுக்க வேண்டியது, சில காகிதங்களை சீர்செய்ய வேண்டியது போன்ற வேலைகள் பெண்கள் செய்ய வேண்டும் என்று தன்னிச்சையாக எதிர்பார்ப்பதையும், சில பெண்கள் யோசிக்காமல் இயற்கையாகவே இவ் வேலைகளை செய்வதையும் எடுத்துக் காட்டினார். உலக அளவிலும் இந்த மாதிரி கவனிப்பாடுகள் இருப்பதை தான் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் படித்திருப்பதாகக் கூறினார்.

பெண்கள் எப்பொழுதுமே நல்ல நிர்வாகிகள்தான். வீட்டில் பலதரப்பட்ட நபர்களை சமாளிப்பது, பிள்ளைகளைப் பேணிக் காப்பது, அவர்களுடைய வருங்காலத்திற்கு திட்டமிடுவது,



சில பெண்கள் இரசாயனம் கலந்த குங்குமப் பொடிகளை நெற்றிக்கு பொட்டாக வைக்கிறார்கள். இதனால் பொட்டு வைத்த இடத்தில் அரிப்பும் புண்ணும் வருகின்றன. இதற்கு மருந்து வில்வ மரக் கட்டையை உரைத்து அதன் குழம்பைப் பொட்டு வைத்த இடத்தில் பூசி வந்தால் புண் குணமாகும். வில்வ மரக் கட்டையை சந்தனக் கல்லில் சந்தனத்துடன் சேர்த்து அரைத்து அந்தக் குழம்பைப் பூசினால் இன்னும் நல்ல பலனைத் தரும். புண் ஆறிவிடும். அரிப்பு அடங்கி விடும்.

– புதுவை புஷ்பாபழனி



பல தொல்லைகளிலும் திட்டமிட்டவற்றை நடத்திக் காட்டுவது, வீட்டு வரவு செலவு நிர்வாகம், அண்மை வீடுகளுடன் தொடர்பு, உறவு மக்களை அரவணைத்துக் கொள்வது இப்படி எத்தனையோ. ஆனால் இந்தக் காரியங்களில் அவர்களுடைய களம் வீடு. இப்பொழுது களம் மாறுகிறது. அலுவலகம் ஆகிறது. அவ்வளவுதான். இதில் நாம் புதிய மனிதர்கள் என்பதால் பிரச்னைகளை ஏற்றுகொள்ள வேண்டியிருக்கிறது. எப்படியும்,

'பெண் மேலாளர்கள் எல்லாவற்றையும் அடைய முடியும்.

ஆனால் எல்லாம் ஒரே சமயத்தில் இல்லை' என்று கூறினார்.

சாரதா ஜகன் (கோரமாண்டல் பைனான்ஸ் கம்பெனி செகரட்டரியாக பணியாற்றுபவர்) :

பெண்களின் முன்னேற்றத்திற்கு தடைசெய்பவர்களில் பெண்களும் பங்குவகிக்கின்றனர் என்பதற்கு தன் வாழ்க்கையில் ஒரு உதாரணம் காட்டினார். திருமணமான பிறகு, எம்பிஏ படிப்பதற்கு நேர்முகத் தேர்வுக்கு சென்ற போது, ஒரு பெண்மணி சேர்மனாக இருந்தார். இவரைத் தேர்வு செய்யவில்லை. 'திருமணம் செய்து கொண்டு, குழந்தை பெற்றுக் கொள்ளாமல் உனக்கு எதற்கு சீட்' என்றாராம். விடாப்பிடியாக அடுத்த ஆண்டும் இதே கோர்ஸுக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்கும் சென்றார். அதே பெண்மணியைச் சந்தித்தார். மிகவும் எரிச்சலுடன் அந்த பெண்மணி, 'அதுதான் சென்ற வருடமே நான் 'சீட்' இல்லை என்று கூறினேனே, ஏன் மறுபடியும் வந்திருக்கிறாய்' என்று கேட்டாராம். 'எனக்கு இந்தப் பாடம் படிக்க ஆர்வமும், திறமையும் இருக்கின்றன. எப்படி சீட் இல்லை என்று சொல்லுவீர்கள்' என்று வாதாடியதாகக் கூறினார். பெண்கள் சாதனை செய்ய வேண்டும் என்று நினைத்தால், பிடிவாதமாகவும், இலக்கு வழுவாத, ஒரே நோக்குடன் இருக்க வேண்டும் என்றார் அவர்.

ஷீலா ராணி சுங்கத்

பெண் அலுவலர்களைப் பற்றியும், மேலாளர்களைப் பற்றியும் முழு தகவல் இல்லையென்றும், பெண்கள் மேம்பட, படிப்பறிவு பெற உண்டான வழிகளை கிராமப்புறங்களில் அதிகமாக பரப்ப வேண்டும் என்றும் கூறினார். பெண் சிசுவதை கொடுமையையும், அதைத் தடுக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்தினார்.

பெண் மேலாளர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து முன்னேறுவதற்கு வழிகாட்டியாகவும், ஒருவருக்கொருவர் 'வலைபின்னிக்' கொள்வதன் அவசியத்தையும், இந்தக் கூட்டம் வலியுறுத்தியது.

— வசுமதி எஸ். குமார்

வீட்டிலேயே கண் மை தயாரிக்கலாமே!



கடைகளில் வாங்கும் கண்மை சிலருக்கு ஒத்துக் கொள்ளவில்லை என மை வைப்பதையே விட்டவர்களுண்டு. கோடை நாட்களில் கண் வலி, உறுத்தல், இமைகள் இரண்டும் ஒட்டிக் கொள்ளுதல், நீர் வடிதல் போன்ற துன்பங்கள் உண்டாகின்றன.

வீட்டில் தயாரிக்கும் கண்மையைப் பயன்படுத்தும் குழந்தைகளுக்குக் கண் சம்பந்தப்பட்ட நோய் வரும் வாய்ப்பு குறைவு. மிகச் சிறிய வயதிலேயே கண்ணாடி போடுவது கூட தவிர்க்கப்படுகிறது. வீட்டில் மை தயாரிப்பது நம் பழமையான கலைகளில் ஒன்று. இதற்கு முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது சுத்தம், சுகாதாரம் இரண்டுமே. பிறந்த குழந்தைகளின் கண்களில் மை வைத்து விட்டு கண்ணின் நுனிப் பகுதியில் விரலால் மிருதுவாக அழுத்தி விட்டால் கண்ணின் வடிவம் அவ்வளவு அழகாக மாறிவரும்.

மை தயாரிக்க தேவையானவை:

1) கண்மை தயாரிக்க வெண்மையான நந்தியாவட்டை புஷ்பம் அல்லது வெற்றிலைச் சாறு அல்லது பொன்னாங்கண்ணிச் சாறு அல்லது கல் சந்தனம் இதில் ஏதாவதொன்று அவசியம். அளவு அவரவர் அவசியத்துக்கு (மை செய்ய) தேவையானது.

2) மெல்லிய சுத்தமான வெண்மையான பழைய துணி 1 துண்டு (இது திரி செய்யப் பயன் படுத்த தேவை)

3) ரிஃபைண்டு செய்யாத கனமான பச்சை (ஆமணக்கெண்ணெய்) விளக்கெண்ணெய் 100 மில்லி. அவரவர் மை தயாரிக்கத் தேவையானபடி எண்ணெய்.

4) பெரிய அகல் விளக்கு (சுமார் 1 கரண்டி எண்ணெய் கொள்ளும் அளவு)

5) பள பளப்பாக துலக்கிய தட்டு பித்தளை அல்லது செம்பு உலோகத்தாலானது. செம்புத் தட்டில் தயாரிப்பது மிக உயர்ந்தது.

6) குழைக்கத் தேவையான சிறு கிண்ணம், சுத்தமான கத்தி! சிறிது பச்சை கற்பூரம். பசு வெண்ணெய், மை நிறைக்கச் சிமிழ்.

7) வெள்ளைத் தாள் ஒன்று.

மை தயாரிக்கும் விதானம்:

மை பெண்களின் மங்கலச் சின்னத்தில் ஒன்றல்லவா! இதையும் நல்ல நாள் பார்த்துச் செய்வது அவசியம். அமாவாசையைப் பூரணமான நாளாக எண்ணுவதால் அன்று வைப்பது நல்லது. கொஞ்சம் கூட காற்றில்லாது விளக்கு அசையாமல் எரியும் இடம் தான் ஏற்றது. இடத்தை சுத்தமாக துடைக்கவும்.

குறிப்பு எண் 1ல் கொடுத்துள்ள ஏதாவதொரு பொருளை தேர்ந்தெடுக்கவும். உதாரணமாக கண்ணுக்கு மிக நன்மை கொடுக்கும் பொன்னாங்கண்ணி கீரையை இளந் தளிராகத் தேர்ந்தெடுத்து சுத்தமான நீரில் போட்டு நன்கு அலசி எடுத்து வடிக்கவும். மினரல் தண்ணீர் சேர்த்து விழுதாக அரைக்கவும். விழுதில் சாறு பிரியும்படி சிறிது தண்ணீர் சேர்த்து ஒரு பக்கம் தூக்கலாக வைக்கவும். விழுது தங்கி சாறு மட்டும் இறங்கும். இச்சாறில் துண்டுத் துணியை தொட்டுத் தொட்டு நன்கு ஈரமாக்கவும். சாறை முற்றிலும் உறிஞ்சிவிடும்.

தங்கியுள்ள விழுதை கழுவி வைத்துள்ள செம்புத் தட்டில் பின்புறத்தில் சமமாக தடவி வைக்கவும். ஈரமான துணி, விழுது தடவிய தட்டு இரண்டையும் வெய்யிலில் வைத்து கூடை கவிழ்த்து உலர்த்தவும். கூடை கவிழ்ப்பதால் ஈ, கொசு படிவதை தவிர்க்கலாம்.

அகல் விளக்கில் சுத்தமான ஜலம் ஊற்றித் தேய்த்து கழுவித் துடைத்து காய வைக்கவும். பித்தளை விளக்கு வைக்கலாம். ஆனால் மண் விளக்குக்கு குளிர்ச்சி அதிகம் என்பதால் நல்லது. உலர்ந்து விட்ட துணியை விரல் நீள அளவுத் துண்டுகளாக வெட்டவும் இதை மெல்லிய திரி செய்து கொள்ளவும். சுமார் 7 திரிகளாகுமாறு செய்யவும். இவற்றை அடுக்கி மத்திய பாகத்தில் நூலால் கெட்டியாக கட்டவும். இந்தக் கட்டின் கீழ்ப்புறத்தை பரவலாகவும் மேற்புறத்தை திரி போல கூர்மையாகவும் செய்து அகல் விளக்கின் மத்திய பகுதியில் வைக்கவும். (ஒரு சிறு வளையத்தினுள் நுழைத்தும் வைக்கலாம்.)

ஆமணக்கெண்ணையை திரி வழியாக விடவும். வெண்மையான தாளை கீழே விரித்து அதன்மீது அகல் விளக்கை வைத்து ஏற்றவும். விளக்கின் இருபுறமும் சமமான உயரமுள்ள இரண்டு கிண்ணங்களை வைத்து தீபச்சுடர் படும்படியாக விழுது தடவியுள்ள தட்டை வைக்கவும். விளக்கை அவ்வப்போது (அணையாமல்) பார்த்து எண்ணெய் விடவும். எண்ணெய் முழுதும் ஆகி திரி கரைந்ததும் தட்டை அசைக்காமல் எடுத்து வேறொரு சுத்தமான காகிதத்தில் கத்தியால் கீறி எடுத்துச் சேர்க்கவும்.

சிறு கிண்ணத்தில் பச்சை கற்பூரம் சிறு துளி, மைத்தூள், வெண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய் இரு சொட்டுகள் போட்டு குழைக்கவும். குழைக்கும்முன் கடலை மாவு போட்டு கைகளை தேய்த்துக் கழுவிக் கொள்ள வேண்டும். மைச் சிமிழ்களை கழுவித்துடைத்து நிறைக்கவும். இச்சிமிழை வெள்ளைத் துணியில் சுற்றி வைக்கவும்.

சாப்பிட்ட பின் மை எடுத்தால் கண் எரியும். குச்சியால் எடுத்து இட்டுக் கொண்டாலும் கண் எரியும். தவறாமல் இட்டுக் கொண்டால் கண் பார்வை தீட்சண்யமாகும். இரவு படுக்கப் போகுமுன் மை வைத்துக் கொள்வது நல்லபழக்கம்.

அமைதியான உறக்கம் வர இது நல்லது என நம்புவதே காரணம்.

வருடத்துக்கொருமுறையும், வீட்டில் திருமணம், குழந்தை பிறப்பு போன்ற சமயங்களிலும் தயாரிப்பதை எங்கள் குடும்ப வழக்கமாகக் கடைபிடித்து வருகிறோம்.

— பிரேமா ராவ்



சில பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் வயிற்று வலி, இடுப்பு வலி என்று உண்டாவதுண்டு. இதற்கு வெந் தயத்தை வறுத்து எடுத்து இடித்துப் பொடி செய்து அத்துடன் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால், அப்போது ஏற்படும் வயிற்று வலி, இடுப்பு வலி நிற்கும்.

— புஷ்பா பழனி

சொல்ல விரும்புகிறோம்

✉ "தங்கம் நீயும் நானும் ஒண்ணுதான், நான் பிளான் வரைகிறேன். நீ கட்டிக் கொடுக்கிறே. அவ்வளவுதான். நாம் இருவரும் இந்தத் தொழிலில் பார்ட்னர்ஸ்" என்று ஆர்க்கிடெக்ட் சித்ரா மிக அன்போடு சித்தாள் தங்கலட்சுமியை அணைத்துக் கொண்ட விதம் உண்மையிலேயே நேர்த்தியான நளினமான அழகோ அழகு.
தனலட்சுமி வடிவேல், புதுச்சேரி-13.

✉ அடிக்கடி கட்சியையும், கொள்கைகளையும் மாற்றிக் கொள்கிற அரசியல்வாதிகளைப் பார்க்கும்போது, இவர்களுக்கெல்லாம் மான ரோஷமே கிடையாதா? என்ற எண்ணம் நம் எல்லோர் மனதிலும் இயல்பாய் தோன்றுவதுண்டு. ஆனால், ஆசிரியரின் சில வார்த்தைகளை படித்தவுடன், அரசியல்வாதிகளுக்கு நாமும் கொஞ்சமும் சளைத்தவர்களல்ல என்பதை புரிந்து கொண்டேன். அரசியல்வாதிகள் பகைவனையே நண்பர்களாக்கி விடுவார்கள். நாம் நண்பர்களையே பகைவர்களாக பாவித்து வாழ்ந்து வருகிறோம். அவ்வளவுதான்.
எல். முருகன், மதுரை-16.

✉ இரண்டும் கெட்டான் வயதில் இருக்கும் பையன்கள் மட்டுமல்ல, பெண்களும் தவறான சில பழக்கவழக்கங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதற்கு 'பான்பராக்' பழக்கம் ஒரு எடுத்துக் காட்டுதான். பெற்றவர்கள் மட்டுமின்றி, வியாபாரிகளும், விளம்பரத் துறையினரும் முழுமையாக ஒத்துழைத்தால் தான் சமுதாயத்தினின்று இத்தகைய சீர் கேடுகளை அறவே ஒழிக்க முடியும்.
பூங்கோதை கிருஷ்ணராஜ்,
கிரப்பாளையம்.

✉ மோரில், வாழைத்தண்டு மோர், வெள்ளரிக்காய் மோர், வெந்தய மோர், அரிசிக் கஞ்சி மோர் ஆகியவற்றை எப்படி தயாரிப்பது, அவற்றினால் ஏற்படும் நற்பலன்கள் முதலானவற்றை குறிப்பிட்டுள்ளீர்கள். மோர் கோடை கால வெப்பிலுக்கு மிகவும் உகந்தது. தயிர் நல்லதல்ல. ஆனால் அதனையே நீர் சேர்த்து கடைந்து வெண்ணை எடுத்து மோராக்கி உட்கொண்டால் அதன் ருசியே தனிதான். மோர் அருந்தி வருவதனால், 100 வயதுக்கு மேல் வாழலாம். அதுவும் ஆரோக்கியத்துடன் என்னும்போது, மோரின் பெருமையினை மீண்டும் மீண்டும் நினைவு கூறத்தக்கது. ஒன்ஸ் மோர்.
கோமதி அனந்தமணி, குன்னூர் - 1.

✉ இதழ் முழுக்க ஆங்காங்கே வெளியாகியிருந்த விடுமுறை சிறப்பு விஷயங்கள் ஆண்டாண்டு காலத்திற்குப் போற்றிப் பாதுகாத்துப் பயனடையத்தக்கவைகளாக அமைந்திருந்தன.
இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

✉ "ரஸவாதம்" என்ற அற்புதமான சிறுகதையைப் படித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். குடும்பத்தில் வழக்கமாக ஏற்படும் மாமியார், மருமகள் சச்சரவை மிகவும் சிலாக்கியமான அணுகுமுறையைக் கையாண்டு குடும்பத்தில் மூவரும் மகிழ்ச்சியான மனநிலையை அடைய வழி வகுத்த முறை மிகவும் அபாரம்.
ஆர்.பாலசுப்பிரமணியன்,
காட்பாடி - 7.

✉ ஹாலிடே மூட் பற்றி பாட்டிகளிடம் பேட்டி கண்டு வெளியிட்டது வித்தியாசமாய் ரசிக்கும்படி இருந்தது.
ராஜிராதா, திருச்சி-14.

✉ பெண்களின் சபரிமலை கட்டுரை கண்டேன். அதில் ஆற்றுகால் பகவதி அம்மன் பற்றிய செய்திகள் புதியதாகவும் வியப்பாகவும் இருந்தது. கண்களைக் கவரும் வகையில் வண்ண புகைப்படங்களையும் வெளியிட்டு, எங்களை கேரளத்திற்கே நேரில் அழைத்துச் சென்று அன்னையைத் தரிசனம் செய்வித்ததுபோல் இருந்தது.
சாந்தி கந்தசாமி, தருமபுரி.

✉ உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்றை பேசி உட் கபடம் புரியும் காலம் இது. நாகரீகம் என்ற போர்வையில் வெளி வார்த்தைகளில் தேன் தடவி மனதிற்குள் விஷ விருட்சமே உருவாக்கி விடும் நேரம் இது. தக்க சமயத்தில் எச்சரிக்கையான அறிவுரை ஆசிரியரின் கட்டுரை.
லீலா இராமச்சந்திரன், சென்னை - 77.

✉ இனிய பயணத்துக்கு இத்தனை இடங்களா இந்தியாவில் என்ற பயணக் கட்டுரையில் கோவாவில் புகழ் பெற்ற புனித தாமஸ் உடல் இங்கு வைத்துள்ளது என்று படித்தேன்.

கோவாவில் இருப்பது புனித தாமஸ் உடல் அல்ல. புனித சவேரியாருடைய உடல் என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.
மேரிதாஸ், ஆலப்புழை.

அட்டை வண்ணப்படம் -
டி.சி. நாகேஷ்

குறுநாவல்



மணி எட்டடித்து ஓய்ந்து விட்டது. மைதிலி பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள் சமையலறையில். இன்று வீட்டு வேலையோடு சேர்ந்து என்ன சமைப்பது என்று குழப்பம் வேறு காலையிலிருந்து.

ஆபீஸில் ஆடிட்! அவதியில் இரண்டு நாளாய் சரியாகக் கூட சாப்பிட முடியாமல் ஓடிக் களைத்து, லேட்டாய் வந்து இன்று ப்ரிஜ்ஜைத் திறந்தால் 'ஓ'வென்று காற்று வாங்குகிறது. காய்கறி ஒன்று கூட இல்லை!

நேற்று பார்க்க முடியாததற்கு தண்டனையாய் காலையில் எழுந்தவுடன் டென்ஷன். எப்படிச் சமாளிப்பது?

குழம்பிப் போய் வற்றல் குழம்பை வைத்து இறக்கியாகி விட்டது.

மேலே என்ன செய்வது என்று யோசித்தபடியே கொதிக்கும் வெந்நீரை இறக்கி பாத்ரூமில் கொண்டு போய் வைத்தாள். மாமனாரின் வெந்நீர் ரெடி!

குரல்கொடுக்க வேண்டும். எங்கே போய் விட்டார்? தேடிக் கொண்டு ஓடினாள்.

வாசலில் ஈஸிசேரில் மாமனார் உட்கார்ந்து பேப்பரை உருப் போட்டுக் கொண்டிருந்தார்.

காலையில் ஆறு மணிக்கு வந்த பேப்பரை ஒரு அட்சரம் விடாமல் ஒன்பது, பத்து மணி வரை மனப்பாடம் செய்வார் பரீட்சைக்குப் படிப்பது போல.

இடையில் வேறெந்த வேலையும் சொல்லிவிட முடியாது. கோபம் வந்து விடுகிறது. இரண்டு பேப்பர்



உமா குமார்

வேறு. இங்கிலீஷ், தமிழ்! மனப்பாடமாக வேண்டும்.

"ஒரு கிளான்ஸ் பேப்பரை பார்த்துட்டு அப்புறம் நாங்க ஆபீஸ் போன வுடனே நாள் முழுக்க படிங்களேன் ஆற அமர. நடுல ஒன்பது மணிக்கு பிரகாஷை கொண்டு போய் ஸ்கூல்ல விட்டுட்டு வந்திடுங்க மாமா!"

இப்படிச் சொல்லிவிட்டு ஆறேழு மாதங்கள் மைதிலி பட்ட பாடு! ஏண்டா சொன்னோமென்று ஆகிவிட்டது!

வார்த்தைக்கு வார்த்தை தெறித்த குத்தலில் குன்றிப் போனாள்.

"ஏண்டா! இன்னும் கிளம்பலியா நீ? அப்புறம் எம் புள்ளையை ஏண்டா ஸ்கூலுக்கு லேட்டா அழைச்கண்டு போறேன்னு உங்கம்மா கத்துவா. ஓடியா."

குழந்தையிடம் இப்படி.

"ஐயய்ய! பூஜை பண்ண உட்கார்ந்துட்ட? எழுந்துரு. ஏதாவது வேலை இருந்தா பண்ணித் தொலைச்சுட்டு அப்புறம் ஆற அமர பூஜை பண்ணு. மகாராணி உத்தரவு எழுந்திரு" – மனைவியிடம் இப்படி.

"என்னப்பா தூங்கியாச்சா?"

ரவி இப்படி சாதாரணமாய் கேட்டாலும் வள்ளென்று விழுவார்.

"தூக்கமா? இல்லையே... எதையாவது செய்யணுமா? கேட்டுச் சொல்லு. வேலை இருந்தா பண்ணிட்டு படுத்துக்கறேன்!"

இப்படி சொடுக்கி இழுப்பார். சண்டையே வேண்டாமென்று பிரகாஷிற்கு ரிக்ஷா வைத்தாகி விட்டது. அந்தப் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி விழுந்தது அத்தோடு.

பேப்பரில் மூழ்கியிருந்தவரிடம் பேசியபடியே காலில் தைலம் தடவிக் கொண்டிருந்தாள் மாமியார்.

"பூஜை பண்றது கூட பிடிக்கறதில்லை இப்ப. அரையும் குறையுமா குளிச்சேன்னு பேர் பண்ணிட்டு, ஒரு கவுனை எடுத்து மாட்டிண்டு உடனே குக்கர் புஸ், புஸ்

மாமனார்

ஸான்னு. பட்டுனு சமைக்கறேன் பேர் வழின்னு அரைக் காய்ச்சலா எல்லாத்தையும் இறக்கி வச்சிட்டு, ஒட்டம்... வாய்ல வைக்க முடியலை சமையல். யார் சொல்றது?"

காதில் வந்து விழுந்த மாமியாரின் வார்த்தைகளில் கலங்கிப் போனாள் மைதிலி.

உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"மாமா! உங்க வெந்நீர் ஆயாச்சு! குளிக்க வாங்க!" - சொல்லிவிட்டு பட்டென்று நகர்ந்தாள்.

"பார்த்தியாடி திமிரை. ஆர்டர் போட்டுட்டு போறா. தன் பிள்ளைக்கு ரிக்ஷா வச்சாச்சில்ல. அந்த ஆத்திரம்! இந்த பாலு எப்படின்னு இவளுக்குத் தெரியாது."

- வாசலில் உட்கார்ந்தபடியே கத்தினார்.

"ம்! என்ன பண்றது? இவாளை நம்பி கிடக்கம். பிள்ளைகள் கையை எதிர்பார்த்தா அப்படித்தான்!"

பேப்பரை மடித்து கீழே அடித்தார் மனைவிக்கு பதிலாய்.

"புள்ளை கையை எதிர்பார்க்கலடி நான். சொளையா ஆயிரம் ரூபாயைத் தூக்கி மாசம் பொறந்தா மூஞ்சில அடிக்கறேன். நாம ரெண்டு பேரும் வெறுமனே உட்கார்ந்து சாப்பிடலை. ஞாபகம் வச்சுக்கச் சொல்லு."

வீட்டில் அனைவர் காதிலும் விழட்டுமென்று ஹாலில் வந்து நின்று திரும்பச் சொன்னார்.

"சொளையா ஆயிரம் ரூபாயைத் தூக்கிக் கொடுக்கறன்டி அப்பன், ஆயிக்கு சோறு போடறதுக்கு. நீ எதுக்கு கவலைப்படறே? யார் கால் கீழேயும் இல்ல நாம."

கத்தி விட்டு இரண்டு நிமிடம் நின்று பார்த்தார். எந்தத் திசையிலிருந்தும் பதில் வராமல் போக ஆத்திரத்தோடு துண்டை உதறித்

கவிதைப் பக்கம்

அவள்
முகம் கழுவினாள்
சுமங்கலியானது
முகம்
பார்க்கும்
கண்ணாடி....

— பத்மினி சுரேஷ்

தோளில் போட்டுக் கொண்டு குளிக்கப் போனார் முனகியபடியே.

பயந்து கொண்டேதான் மாமனாரின் இலையில் பரிமாறினாள் மைதிலி.

"கருமம்! பண்ணின பாவம் ஜென்மாந்தரத்தில" ஓங்கி தலையில் அடித்துக் கொண்டார் தட்டின் முன்னால் உட்கார்ந்து.

எதிரில் மௌனமாய் சாப்பிட ஆரம்பித்திருந்த ரவி நிமிர்ந்து பார்த்தான் தந்தையை.

"என்னப்பா ஆச்சு?" - தண்ணீரை எடுத்து குடித்தபடியே கேட்டான் இடுக்கில்.

"என்னாச்சா!" - முறைத்தார்.

"நாக்கு செத்து போச்சோ என்ன இழவோ உனக்கு. புளித் தண்ணியைக் காச்சி வச்சிருக்கு. மூழுங்கறே! சமையலாடா இது? ஒரு வேளை சோறு ஒழுங்கா இருக்கா இந்த வீட்ல? தெண்டச் சோறா போடறே?"

"இந்தக் கிழவனுக்கு பல்லு இல்லை வலுவான்னு தெரிஞ்சும் கருவடாமும், வத்தலும் பொறிச்சு வச்சிருக்கு. உங்கம்மா பல்லுல பாதி விழுந்து, பாதி உடைஞ்சு கிடக்கே அவ எப்படிடா கடிச்சு சாப்பிடுவா?"

கத்தினார் பிசாசாய்.

"அப்பா! என்ன பண்றது? காய்கறியே ஒண்ணும் இல்லை. யாரும் பார்க்கலை. வாங்கிட்டும் வரலை. என்ன பண்றது சொல்லுங்க?"

பரிதாபமாய்க் கேட்டான் ரவி.

"யாரும் பார்க்கலை என்னடா? நாங்க பார்ப்பமா? மொத்த சம்பளத்தையும் அந்த மகாராணி கைலதானே கொண்டு போய் கொடுக்கறே. பட்ஜெட் போட்டு செலவு பண்ணத் தெரியறது பைசா பைசாவா. காய்கறியைப் பார்த்து வாங்கத் துப்பில்லையா? - பார்க்கலியாம்... யாருக்கு காது குத்தறே? உன் அப்பன்டா நான். எனக்கா?"

அவர் கத்த காத்திருந்தவள் போல தண்ணீர் கொண்டு வரும் சாக்கில் ஒரு டம்ளர் தண்ணீரைக் கொண்டு வந்து டேபிளில் வைத்தாள் 'ணங்'கென்று.

"ம்! எதுக்கு, கத்தி கத்தி வீணா உடம்பைக் கெடுத்துக்கறீங்க. தலையெழுத்து நமக்கு! வேறென்ன... அனுபவிக்கறோம். ஏம்ப்பா ரவி, பொண்டாட்டிக்கு வக்காலத்து பேசறியே.. நேத்தைக்குக் கடைக்குப் போயி நாலு உன் பாவாடை வாங்கத் தெரிஞ்சவனுக்கு காய்கறி வாங்க மட்டும் நேரமில்லையா? அது மட்டும் மறந்து போச்சா? தனக்கு வேண்டியது ஞாபகமிருக்கும்!"

அப்பாவின் வாய்க்கு சளைத்தவளா நான் என்பது போல வரிந்து கட்டிக் கொண்டு அம்மாவும் நிற்க தலை சுற்றியது ரவிக்கு.

மைதிலி ஆபீஸிலேயே யாரோ விற்ற உள் பாவாடையை வாங்கித் தூக்கிக் கொண்டு வந்

தான் என்று சொன்னால் நம்பவா போகி றார்கள் இருவரும்.

"அம்-மா-ஆ! அது ஆபீஸ்லயே யாரோ விக்கறான்னு வாங்கியிருக்கா. இவ்வளவு பேச றியே நீயாவது பார்க்கக் கூடாதா? – அப்பா போயி நாலு அடி நடந்து இரண்டு காய்கறி கூடவா வாங்கக் கூடாது? எடுத்ததுக்கெல் லாம் எதையாவது ஆரம்பிக்கிறீங்களே..."

ரவி சொல்லி வாய் மூடுவதற்குள் அம்மா 'குபுக்'கென்று கண்ணீரை வெளியே கொட்ட... ஆரம்பமானது. புயலாய்க் கத்திய அப்பாவின் முன்னால் கூனிக்குறுகி நின்றான் ரவி. என்ன செய்வதென்று புரியாமல்.

பாதி சாப்பாட்டிலேயே கையை உதறிக் கொண்டு ரவி எழுந்து போக....

அழுதுகொண்டே தண்ணீரை மொண்டு குடித்து விட்டு வெறும் வயிற்றோடு மைதிலி ஆபீஸ் கிளம்ப...

பாலு பெருமையோடு,

"பார்த்தியா, போட்ட போட்ல வாய அடைச்சு போயிட்டான் பாரு! வாயைத் திறக்க லியே அவளும்" – என்று தன் வெற்றியை பறைசாற்றிக் கொண்டிருந்தார் மனைவியிடம் அன்று முழுவதும்.

"என்ன பாலு! எப்படியிருக்கே?" – தோளில் உரிமையோடு விழுந்த கை அவரைச் சட்டென்று திரும்ப வைத்தது.

எதிரே கீர்த்திவாசன்! பக்கத்து வீட்டில் பதினைந்து வருடங்களுக்கு மேல் இருந்தவர். சொந்த வீடு கட்டிக் கொண்டு போய் ஏழெட்டு வருடங்கள் ஆகிவிட்டது. பெயர் சொல்லி அழைக்குமளவிற்கு நெருக்கம். ஒரே வயதுத் தோழமை!

ஆசையோடு கீர்த்திவாசனின் கையைப் பிடித்துக் குலுக்கினார் முகம் மலர.


"ம்! ஆறேழு வருஷமாச்சு பார்த்து. எம் பையன் கல்யாணத்துக்குக் கூட வரலை நீ. எப்படியிருக்கே? முன் தலை பூரா வழுக்கை விழுந்து கிடக்கு."

கண்ணாலேயே தன்னை அளந்த கீர்த்திவாசனின் தோளில் தட்டினார் பாலு சிரித்தபடியே.

"ம்! ஆகாம என்ன? நமக்கு வயசாச்சோ இல்லையோ அங்க கவர்ன்மெண்ட்டுக்கு மூக்குல வேர்த்துடுமே. சரி! அதை விடு. எப் படியிருக்கே? வீட்ல எல்லாரும் எப்படி யிருக்காங்க? – ஒரு பையன் கூட இருந்தானே உனக்கு. ரவி! கல்யாணமெல்லா ஆச்சா..."

கேட்டுக் கொண்டே போன கீர்த்திவாசன், பாலுவின் பதிலைக் கேட்டு மலைத்துப் போனார்.

"கல்யாணமா! அந்தச் சனியனால வந்த வினைதான் இது. எல்க்ட்ரிக் பில் கட்டற



தினசரி காலையில் ஒரு டம்ளர் பச்சை தண்ணீரை வெறும் வயிற்றில் குடித்து வந்தால் உடம்பிலுள்ள பல வியாதிகள் மறையும்.

— ஆர். பிரகாசம்

க்யூவுல ஒரு மணி நேரமா கால் கடுக்க நிக்கறேன். வெய்யில்ல நடந்து வீட்டுக்குப் போகணும் இப்ப."

அவரின் பதில் குழப்ப பேச்சை மாற்ற எண்ணி கீர்த்திவாசன் சிரித்தார்.

"சரி சரி! பாலு வா! பக்கத்துல ஒரு நல்ல ஹோட்டல் இருக்கு. காப்பி சாப்டுட்டு போக லாம்."

பாலுவைத் தள்ளிக் கொண்டு நடந்தார். ஹோட்டல் வரை நடந்து டேபிளில் போய் உட்காருவதற்குள் சடசடவென்று அருவி யாய்க் கொட்டித் தீர்த்தார் பாலு.

அவர் குளவியாய் மாறி பிள்ளையையும், மருமகளையும் கொட்டிக் கொட்டிக் குதறு வதை ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண் டிருந்தார் கீர்த்திவாசன்.

"அதனாலதான் உனக்கும் சொல்றேன். நம்ம பிடியை விடக் கூடாது. கொஞ்சம் தளர்த்தினமோ ஏறி மிதிக்க ஆரம்பிச் சிடுவாங்க. காலைலயே பாரு இன்னைக்கி வெறும் வத்தல் குழம்பு, சீரக ரசம், கருவடாம். சமையலா இது! ரவியும் இருந்தான். புடிச் சேன் ஒரு புடி. வாயைத் திறக்கணுமே... ம்ஹூம்!

பொண்டாட்டி அழுதுண்டே சாப்பிடாம ஆபீஸ் போறான்னு கோபம். தானும் பாதி சாப்பாட்டுல எழுந்து போயிட்டான்."

அலுப்பில்லாமல் தொடர்ந்தார் பாலு குடும்பக் கதையை.

"ம்! இங்க வாப்பா! என்ன ஸ்வீட் புதுசா இன்னைக்கி போட்டிருக்கு சொல்லு!"

சர்வரைக் கிட்டே அழைத்துக் கேட்டார் கீர்த்திவாசன்.

"மைசூர் பாக் சார்! சூடா இப்பத்தான் வச்சேன் தட்ல."

"வா! மைசூர் பாக்... பாலு வேணுமா

வாஷிங் மெஷினில் துணி துவைப்பவர்கள் சட்டை காலரில் அழுக்குப் போகவில்லையே என கவலைப்பட வேண்டாம். மிஷினில் போடுவதற்கு முன் காலரில் காலர் (கடைகளில் விற்பதை வாங்கி) லோஷனை தடவி நீரில் போட்டால் காலரின் அழுக்கு போன இடமே தெரியாது.

– சந்திரா

உனக்கு?" – குஷியோடு பாலுவை விசாரித்தார்.

"ம்! என் ஒய்ப்புக்கு புடிக்கும். ரெண்டு பீஸ் கட்டிக் கொண்டா!"

ஆர்டர் கொடுத்து சர்வரை அனுப்பி விட்டு திரும்பிய பாலுவை ஆச்சரியமாகப் பார்த்தார் கீர்த்திவாசன்.

"என்ன அப்படிப் பார்க்கறே? இப்படித்தான் கமுக்கமா எங்க ரெண்டு பேருக்கும் மட்டும் வாங்கிண்டு போவேன் நான். சத்தமில்லாம சாப்பிட்டு பேசாம இருப்போம்! அவனுக்குக் கொடுத்தா பொண்டாட்டிகிட்ட நீட்டுவான். அவளுக்கென்ன வேண்டியிருக்குன்ன? அதுவும் அந்தப் பிசாசு இருக்கு பாரு... பெத்து வச்சிருக்காளே ஒண்ணு. பிள்ளையா அது... அது திங்கற தீனி!"

பாலுவைப் பார்த்து மலைத்தே போனார் கீர்த்திவாசன். பிள்ளை அவனாகி, மருமகள் அவன் பொண்டாட்டியாகி, பேரக் குழந்தைகள் பிசாசாகி...

மனதில் இப்படி ஒரு துவேஷமா?

வாழ்ந்து, இன்ப துன்பங்களை அனுபவித்து, நல்லது கெட்டதுகளை உணர்ந்து... பழுத்த வயதில் வழிகாட்டியாய் இல்லாமல் இப்படி ஒரு ரூபமா?

என்ன பெரியவர்கள்? எதில் பெரியவர்கள்? அருகில் வந்த சர்வரிடம் ஆர்டர் கொடுத்து விட்டு நிமிர்ந்தார்.

"பார்த்தியா. அப்பவுலேர்ந்து நானே புலம்பிக் கொட்டறேன். வாயே திறக்கலை நீ. சொல்லு! உன் ரிடையர்ட் லைஃப் எப்படியிருக்கு? தனியா இருக்கீங்களா. இல்லை பிள்ளையோடயா? உனக்கு இன்னொரு வசதி. நீ சம்பாதிச்ச கட்டின சொந்த வீடு. ஏதாவது பேசினா போடான்னு கழுத்தைப் பிடிச்சு வெளீல தள்ளு சொல்றேன்."

அறிவுரை வழங்கிய பாலுவைப் பார்த்து அமைதியாய்ச் சிரித்தார்.

"ம்! நாங்க எப்படி? என் குடும்பம் எப்படின்னு நானே சொன்னா நல்லாயிருக்குமா? உன்னை மாதிரியே எனக்கும் நாக்கு துடிக்குது. ஆனா, சொல்ல மாட்டேன். ஏன்னா, நீயே வந்து கண்ணாலப் பாரு. அதோட எங்க வீட்லயும் ஒரு பங்ஷன் இன்னைக்கு. கட்டாயம் வா நீ! இப்பவே என்னோட கிளம்பேன்!"

"இப்ப இல்லை. வீட்டுக்குப் போயிட்டு, அவ பிள்ளை நாலு மணிக்கு வரும் திரும்பி ஸ்கூல்லேர்ந்து. அதுக்கப்புறமா கிளம்பி வரேன் கண்டிப்பா. இரண்டு அதட்டு போட்டாதான் அடங்கும் அது. வரேன்!"

சொன்னபடியே மனைவியிடம் சொல்லி விட்டு சரியாக ஐந்து மணிக்கெல்லாம் கீர்த்திவாசனின் வீடு போய்ச் சேர்ந்து காலிங் பெல்லை அழுத்தினார்.

கதவைத் திறந்த வாசன் மகிழ்ந்து போனார். "ம்! சொன்ன மாதிரி வந்துட்ட. ரொம்ப நல்லாயிருக்கு மனசுக்கு. வா."

உள்ளே போய் அமர்ந்தனர்.

"வாங்க! வீட்ல எல்லாரும் நல்லாயிருக்காங்களா? அங்கேயேதானே இருக்கீங்க?"

வந்து விசாரித்த கீர்த்திவாசனின் மனைவியை அதிசயமாய்ப் பார்த்தார்.

கஞ்சி மொடமொடத்த காட்டன் புடவையில் மொழுக்கென்று ஒரு பெண் குழந்தையை சுமந்து கொண்டு வந்தாள். இடது கையில் டிபன் பிளேட்!

"ரீத்தும்மா! சமர்த்து குட்டி ஓடியா. பாட்டி இந்தத் தாத்தாவுக்கு டிபன் கொடுக்கட்டும்! ஓடியா!" – கீர்த்திவாசன் குரல் கொடுக்க இறங்கி ஓடிவந்து அவர் மடியில் ஏறிக் கொண்டது.

"இதுதான் எங்க பேத்தி ரீத்து. படுசுட்டி!" – பெருமையோடு அறிமுகப்படுத்தினார் பேத்தியை.

"ரொம்ப நாள் கழிச்சு இன்னைக்கு கீர்த்திவாசனைப் பார்த்தது மனசுக்கு ரொம்ப நல்லாயிருந்தது. மனசு பாரம் குறைஞ்சே போச்சுன்னு வச்சுக்கங்க. அவ்வளவு கொட்டித் தீர்த்திருக்கேன் நான்!

என்ன பண்றது சொல்லுங்க! காலம் முன்னைய மாதிரி இல்லை. கலி காலம் முத்திப் போச்சு. வீட்டுக்கு வர பொண்கள் பிசாசா வந்து நம்ம கண்ல விரலை விட்டு ஆட்றதுக. என்ன பண்றது நாம?

நிம்மதியில்லாம ஒவ்வொரு நாளும் ஓடிண்டிருக்கு. எம் பொண்டாட்டி பேச மாட்டா. பேசினா நாக்கை பிடுங்கிக்கணும். அதே மாதிரி நறுக்குன்னு கேட்பா. நான்

விடறதேயில்லை. மண்டைல தட்டி உட்கார வச்சுண்டேயிருப்பேன்."

பாலு பேசிக் கொண்டே போக கிரிஜா புருவத்தை நெறித்து கணவன் கீர்த்தி வாசனைப் பார்த்தாள்.

கீர்த்திவாசன் புன்முறுவலை உதிர்த்தார். "அது ஒண்ணுமில்லை கிரிஜா. நாங்க மேல மாடில போயி காத்தாட உட்காரப் போறோம். ஜாலியா பேசிண்டிருப்போம். குழந்தேள்லா வரட்டும் ம்!"

பாலுவை அழைத்துக் கொண்டு மாடியில் போய் உட்கார்ந்தார் கீர்த்திவாசன்.

"ரீத்துகுட்டி! ஓடு... அம்மா வர மட்டும் விளையாடி முடி. ஓடு! விழுந்துடாம பார்த்தும்மா!" - ரீத்துவை பந்தை கொடுத்து விரட்டினார்.

பார்த்துக் கொண்டிருந்த பாலுவிற்கு சிரிப்பு வந்தது.

"வீட்டுக்கு வீடு வாசற்படி. பார்த்தியா நடுங்கறே மருமகள்கிட்ட!"

பாலு புலம்பிக் கொண்டேயிருக்க யாரோ தடதடவென்று படியேறி வரும் சப்தம் வந்தது. சௌம்யா முகம் மலர கையில் காப்பி டிரேயோடு மேலே வந்தாள்.

"வாம்மா! மகேஷ் வந்தாச்சா?"

"ஹாப்பா. ஜஸ்ட்! இப்பத்தான்."

சிரித்தபடியே காப்பியை நீட்டினாள் இருவரிடமும்.

"சௌம்யா! இது பாலு. நாங்க முன்னால குடியிருந்த வீட்டுல பக்கத்துல இருந்தாங்க."

கீர்த்திவாசன் அறிமுகப்படுத்த சௌம்யா மென்மையாய் பாலுவைப் பார்த்துச் சிரித்தாள்.

"அதோட ஒரு விஷயம். இவரோட காப்பி சாப்பிடலாம்னு ஹோட்டலுக்குள்ள நுழைஞ்சனா, என்ன ஸ்பெஷல்னு கேட்டா மைசூர் பாகுங்கறா. விசேஷ நாளும் அதுவுமா உனக்கு புடிச்ச ஸ்வீட். சாப்பிட்டியா? இல்லையா..."

"ஓ! வந்து நுழைஞ்சவுடனே அம்மா கொண்டு வந்து முதல்ல அதைத்தான் நீட்டினாங்க. தேங்க்ஸ்ப்பா! ரொம்ப நல்லாயிருந்தது. அதோட அம்மா வேலையைப் பாருங்க..." பெருமையாக காதைக் காட்டிய சௌம்யாவைப் பார்த்துச் சிரித்தார்.

"என்ன? தோடுதானே! சீட்டு முடிஞ்சவுடனேயே பட்டுன்னு போயி உனக்காக வாங்கி ஒளிச்சு வச்சிருந்தா, தெரியுமா? - வாங்கிப் பத்து நாளாச்சு மேடம். டிசைன் செலக்ஷன் என்னுதாக்கும்."

காலரைத் தூக்கி விட்டபடியே சிரித்தார் கீர்த்திவாசன்.

ஆவென்று வாயைப் பிளந்தபடி பாலு காப்பியை உறிஞ்சிக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தார் நடப்பதை.

"அதோடம்மா ரீத்துக்குட்டியோட ஹோம் ஒர்க்லாம் ஆயிடுத்து. எல்லாம் பண்ண வச்சிட்டேன். அந்த ரைம்ஸ்லா கொஞ்சம் ராகத்தோட சொல்லிக் குடு நீ ஆக்ஷனோட. ஆறு மணி ஆகப் போறது. விளையாடினது போறும். இழுத்துண்டு போயிடு கூட.

டயப்படி ஒவ்வொரு வேலையும் பண்ண குழந்தைக்கு இப்பவுலேந்தே கத்துத் தரணும். ஆம் ஐ ரைட்?"

கேட்ட கீர்த்திவாசனைப் பார்த்து கண் மலர சிரித்தாள் சௌம்யா. "எக்ஸாட்லி!" என்றபடி.

"அதோடப்பா! மகேஷோட கோவிலுக்குப் போகப் போறேன். நீங்களும் வரீங்களா?"

"இல்லம்மா! என்ஜாய் யுவர் செல்ப்! என்ன? ரொம்ப நாளைக்கப்புறம் இவரைப் பார்க்கறேன். இப்படியே கொஞ்சம் காத்தாட உட்கார்ந்து அரட்டையடிக்கறோம். நீ கிளம்பு மகேஷோட."

கீர்த்திவாசன் சொல்லியபடியே காலி கப்பை எடுத்து டிரேயில் வைக்க எடுத்துக் கொண்டு படியிறங்கிப் போனாள் சௌம்யா.

பாலுவின் பக்கம் திரும்பினார் கீர்த்தி வாசன். 'ஆ'வென்று வாயைப் பிளந்து கொண்டு சௌம்யா, போன திசையையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் பாலு.

"இது... இந்தப் பொண்ணு" நீட்டினார் நிறைய தயக்கத்தோடும், ஆச்சரியத்தோடும்.

"ஓ! சௌம்யாவை கேட்கறியா? என் மருமகள்தான்" - பாலிற்கு ஆச்சரியம் தாள முடியவில்லை.

"என்ன அப்படிப் பார்க்கறே? மருமக



வெண்டைக்காய் பொரியல் பண்ணும் போது 1 ஸ்பூன் தயிர் விட்டால் வெண்டைக்காயின் கொழ கொழப்பே இருக்காது. வெண்டைக்காயில் எண்ணெய் அதிகம் சேர்க்காமலும், நீர் தெளித்து வெந்தபின் தயிர் விட்டு வதக்கி இறக்கவும்.

— சந்திரா

இப்படிக் கூட இருக்க முடியுமாண்ணா?"

தன் மனத்தை படித்துப் பார்த்தது போல கீர்த்திவாசன் கேட்க பாலு தலையாட்டினார் தயங்கி.

"ஆமாம்ப்பா! இந்தக் காலத்துல இவ்வளவு அட்ஜஸ்ட் மெண்ட், மாமனாரோட பேசி சிரிச்சுண்டு..."

"ஏன்? நீ உன் மருமகளோட பேசறது இல்லையா?" சமயம் பார்த்து மடக்கினார் கீர்த்திவாசன்.

"அது வேறு விஷயம்ப்பா. திமிர் பிடிச்சவ! என் விட்டு கதையையே விட்டுத் தள்ளு."

பாலு அலட்சியமாக சொல்ல, மறுத்துத் தலையாட்டினார் கீர்த்திவாசன்.

"இல்ல. ஒரே கதைதான் எல்லா வீட்லயும். ஒரே பாத்திரங்கள்தான். நாம பார்க்கற கண்ணோட்டம்தான் வேற."

அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்.

"இப்பவே பாரேன். சௌம்யா மகேஷை பேர் சொல்லித்தான் கூப்பிடுவா. இருக்கட்டுமே! நமக்கென்ன அதுல. புது ஃபாஷன்! அதுவும் இருக்கட்டுமே வீட்ல.

இதையெதுக்கு பெரிசு பண்ணணும்? விட்டுட்டோம். நாங்க பண்றதில்லைப்பா. சின்னச் சின்ன கடுகையெல்லாம் பெரிசு பண்ணி அப்புறம் பெரிசா எதுக்கு வாங்கிக் கட்டிக்கணும்?

நம்ம வீட்டுக்கு வர்ற பெண்ணை தீர விசாரிச்சு, பார்த்து, பிடிச்சுப் போயி, வீட்டுக்குள்ளார ஆரத்தி எடுத்து மனப்பூர்வமா அழைச்சுட்டு வர்றோம்.

அப்புறம் என்னப்பா சண்டை?

உன் வீட்டைப் பத்திச் சொல்லு சொல்லுன்னியே இப்பக் கேளு.

ரிடையர்ட் ஆகிட்டேன். என் ஒய்ஃப், நான், என் பிள்ளை, என் மருமக, எங்களோட பேத்தி... சின்னக் குடும்பம்! சண்டை, சச்சரவு இல்லாம நிம்மதியா இருக்கோம். இருக்கறதை பகிர்ந்து அஞ்சு பேரும் சாப்பிடறோம். சுக துக்கங்களை பங்கு போட்டுக்கறோம்.

இன்னைக்குக் கூட விசேஷம்னு சொன்னேனே என்ன தெரியுமா? சௌம்யாவோட பிறந்த நாள்."

பாலுவிற்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. பெருமூச்சு ஒன்றை விட்டார் பெரிதாக.

"எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கணும்ப்பா! உன் மருமக தங்கமா வந்து சேர்ந்திருக்கறதுனால தலைகால் புரியலை உனக்கு. பெத்த மகனே அந்தப் பக்கம் சாய்ஞ்சா அப்பாவாவது, அம்மாவாவது? தினமும் ப்ராப்ளம் தான்."

விரக்தியாக ஒலித்தது பாலுவின் குரல்.



புருவத்தை நெறித்தார் கீர்த்திவாசன்.

"ம்! அப்ப ஒரே ஒரு கையால சத்தம் வருதுங்கறியா உன் வீட்ல?"

அவர் கேட்க பாலுவிற்கு பதில் சொல்ல முடியவில்லை.

"உன் பிள்ளை புரியாம கேட்டான் னியே ஒரு கேள்வி அதையே நானும் திருப்பி கேட்கறேன். நீ என்னதான் எதிர் பார்க்கறே உன் பிள்ளை, மருமகள்கிட்ட?"

பாலுவிற்குக் கோபமே வந்தது கேள்வி காதில் விழுந்ததும்.

''என்னப்பா புதுசா கேட்கறே? வேறென்ன? இப்ப உன் பிள்ளை, மருமக இல்லை இப்ப வீட்ல...

பொரிந்து கொட்டினார் சிடுசிடுவென்று.

"இருக்காங்க. ஆனா ஒன்னு! ஏதோ ஹாஸ் டல்ல பணம் கட்டிட்டு கடமைக்கு இருக்கறாப்பல ஒண்ணாந் தேதி ஆயிரம் ரூபாயைக் கொண்டு வந்து நான் என் பிள்ளை முகத்துல வீசறதில்லை அதாம்ப்பா நம்ம சாப்பாட்டு பணம்னு.

யோசிச்சுப் பாரு! சாப்பாட்டுக்கு பணம் கட்டிட்டு இருக்கற மெஸ்ல வேறென்ன நாம எதிர்பார்க்க முடியும்? பாசத்தையா? ஆசையையா? ம்!

எங்க சௌம்யாவை எடுத்துக்க. இந்த வீட்டுக்கு வரும் போது சமைக்கவே தெரியாது. படிச்ச, வேலைக்குப் போயி, பாவம் இங்க வந்துட்டா தாலியைக் கட்டிண்டு.

என் ஒய்ஃப்தான் சொல்லிக் கொடுத்தா எல்லாமே. இரண்டே மாச டிரெயினிங்!

பிரமாதமா செய்யறா இப்ப குழந்தை. எதுக்கு சொல்ல வரேன்னா இதை. அனுபவத்துல தலைவெளுத்த நாம நம்ம குழந்தைங்களுக்கு வழி காட்டலேன்னா வேற யார் சொல்லிக் கொடுப்பாங்க?

நம்ம குழந்தைங்க! புது ஜெனரேஷன். உண் மையா சொன்னா நம்மளை விட சில விஷ யங்களை அவங்க அறிவுபூர்வமா நல்லாவே டீல் பண்றாங்க.

பண்ணட்டுமே! நம்ம அனுபவமும் சின்னப் பசங்க அறிவும் சேர்ந்து குடும்பத்தை நல்லாவே நடத் திட்டுப் போகலாம்.

இதுதான் நான் பண் றது. ரேஷன் கடைக்குப் போறதை மட்டமாவோ,



பேரக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்கறதை தண்டனையாவோ நாங்க நினைக்கறதே இல்லை.

நிஜமா பல விஷயங்கள் மனசுக்கு நல்லா யிருக்கு. கஞ்சி மொடமொடப்போட காட்டன்தான் கட்டணும் நீங்கன்னு மருமக பிடிவாதம் பிடிக்கும் போது அதை ஆசையோட, உரிமையோட சொல்றான்னு என் பொண்டாட்டி உடனே ஏத்துக்கிட்டா. நல்லது தானே!

பனிச்சினு நல்லாயிருக்கணும் வீடு அவளுக்கு. அதுக்காக நாலு பேருமே ஞாயித்துக் கிழமை துணியும், துடைப்பமுமா நிற்போம். சுத்தப்படுத்தறோம்!

சிம்ப்பிளா சொல்லப் போனா தினை விதைச்சவன் தினை அறுப்பாங்கற மாதிரி அன்பை, பாசத்தை விதைக்கறோம். பல மடங்கா எங்களுக்கு திரும்பக் கிடைக்குது. தட்ஸ் ஆல்!"

பூரிப்போடு பேசிக் கொண்டே போன கீர்த்திவாசனை பார்த்துக் கொண்டிருந்தார் பாலு.

கையில் தண்ணீர் செம்பும், தம்ளருமாக படியேறி வந்தாள் கீர்த்திவாசனின் மனைவி.

"நிஜந்தாங்க! பெரியவங்க, வாழ்ந்து அனுபவிச்ச நாமளே நம்ம குழந்தைங்களை வாயில வந்ததை பேசினா சின்ன புள்ளைங்க என்னத்த செய்யும் பாவம்!

இரண்டு தடவை அப்பாவாச்சே, அம்மாவாச்சேன்னு பொறுத்துப் பார்த்துட்டு மூணாவது தடவை முகத்துல அடிச்சாப்புல பதிலை சொல்லுவாங்க.

நம்ம புள்ளை நல்லா குடியும், குடித்தனமுமா இருக்கணும்னு கல்யாணத்தைப் பண்ணிட்டு பின்னால நாமளே மருமகளை சாபமிட்டா நல்லாவா இருக்கு?

அந்தப் பொண்ணு நல்லா, சந்தோஷமா இருந்தாத்தான் நம்ம பிள்ளை நல்லாயிருப்பான். நாம பெத்த பிள்ளை நல்ல நிலைமைல நல்லா இருந்தாத்தானே நாம நல்லா இருக்க முடியும்? வேறென்ன வேணும் நமக்கு? சொல்லுங்க!"

பேசியபடியே தண்ணீர் தம்ளரை நீட்டிய

மனிதன்
இயற்கை
நெறியிலிருந்து
தவறி நடக்கும் போது
நோய் வருகிறது.
- காந்தியடிகள்
தகவல் :
ஆர். பிரகாசம்

வளை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை பாலுவால்.

சகலமும் நிஜம் என்று முழு மனமும் தயக்கமின்றி ஒத்துக் கொள்ள ஒருகணம் ஆடிப் போனார்.

நிஜம்தான்!

பெண் பார்க்கப் போன அன்று அத்தனை பேர் நடுவில், "எங்க அப்பா, அம்மா வயசான காலத்தில எந்தப் ப்ராப்ளமும் இல்லாம இருக்கணும். அதுக்கு, எனக்கு தோளோடு தோள் நின்னு அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகணும். அதுக்கு உங்க பொண்ணு ரெடின்னா ஓகே!"

இப்படிச் சொன்னவன் என் பையன் ரவி.

ஏன் இன்று, இந்த நிமிடம் வரை எதிரில் நின்று பேசியதில்லை. எதுவும் சொன்னதில்லை. மைதிலியும் கூட! பொறுக்க முடியவில்லை என்றால் வெறுமனே, "என்னப்பா பண்றது? நீங்களே சொல்லுங்களேன்" என்பதோடு சரி. எதுவும் பேசாமல் மௌனமாக சட்டையை தேடியெடுத்துக் கொண்டு வெளியில் போய் விடுவான் பல சமயங்களில்.

மைதிலி!

வாயைத் திறக்காமல் ஒதுங்கி நிற்பாள்! ரொம்பவும் கத்தினால் பதிலுக்கு அழுகை அடைத்துக் கொண்டு வர நிற்பாள். அறையில் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு அரை மணி கழித்து வெளியில் வருவாள்.

இமை கரந்து விக்கமெடுத்து அவள் அழுததை பறைசாற்ற எத்தனை தடவை மனதிற்குள் திருப்திபட்டிருக்கிறேன்! எக்காளமிட்டிருக்கிறேன்.

தன் செயலே அருவருப்பாய் தோன்ற பாலு குறுகிப் போய் அமர்ந்திருந்தார்.

குப்பென்று வியர்த்தது.

மேலே கிடந்த துண்டையெடுத்து ஒற்றிக் கொண்டார்.

இரண்டே இரண்டு மைசூர் பாக்கை வாங்கிக் கொண்டு போய் குரங்கு வருவதற்கு முன் சாப்பிடு என்று அவசரமாய் மனைவிக்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டது இப்போது நினைவுக்கு வந்து மகா கேவலமாகப் பட்டது.

எத்தனை மட்டமாக நடந்து கொண்டிருக்கிறேன்...

"பாலு! ஏதோ இன்னைக்கு இருக்கோம். நாளைக்கு நடக்கப் போறது, ஏன்? அடுத்த செகண்ட் என்ன நடக்கும்னு நமக்குத் தெரியாது. நாம ஆசைப்பட்டதெல்லாம் விட்டுட்டு, சொந்த பந்தங்களையெல்லாம் விட்டுட்டு ஒருநாள் போயிடப் போறோம். நமக்கு அப்புறம், அப்பாடி! வீடு நிம்மதியாச்சுன்னு நம்ம குழந்தைங்க தலைமுழுகக் கூடாது நமக்கு.

நம்மளோட நினைவுகள் எப்பவும் அவங்க கூட இருக்கணும். பெருமையா 'எங்கப்பா,

மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

சிறுதொழில் சேவை நிலையம், சென்னை

தொழில் அமைச்சகம், பாரத அரசு வழங்கும் 6 வார "அழகுக்கலை" பயிற்சி

பெண்களுக்கு சொந்த அழகு நிலையம் நடத்துவதற்கான சிறப்பு பயிற்சி திட்டம்.

(அரசின் பெண் தொழில் முனைவோருக்கான திட்டத்தை பயனுள்ளதாக்கிக் கொள்ள மகளிர்க்கு மணியான வாய்ப்பு)

மூக்கிய அம்சங்கள்:

- இந்திய அரசு வழங்கும் சான்றிதழ்
- அதிகபட்ச பங்கேற்பவர்களின் மொத்த எண்ணிக்கை 20.
- 100 சதவீத செயல்முறை விளக்கம்
- ஆறே வாரத்தில் அழகுக் கலை நிபுணராகலாம்.
- பயிற்சி முடிந்தபின் சொந்த அழகு நிலையம் தொடங்கும் அளவுக்கு நம்பிக்கையான பயிற்சி முறை மற்றும் பார்லர் நிர்வாகம்.
- Hostel வசதி செய்து தரப்படும்.
- பாட புத்தகம் வழங்கப்படும்.
- பொருட்கள் வாங்கும் இடங்கள் பற்றிய விளக்கம்.
- மூலிகை மற்றும் ரசாயன அழகுப் பொருட்கள் தயாரிக்கும் முறைகள்.
- அரசு கடன் முறைகள் பற்றிய விவரங்கள்.
- ஹெர்பல் முறை அழகுப் பயிற்சி.
- யோகா, ஜிம் மற்றும் பாடி ஸ்லிம்மிங்.

பயிற்சி காலம் : 6 வாரங்கள் Morning Batch 10 a.m. to 1p.m.; Evening Batch 2p.m. to 5p.m.

9/7/98 to 19/8/98 பதிவு செய்ய கடைசி நாள் : 8/7/98

பயிற்சி கட்டணம் : தனிநபர் ஒருவருக்கு ரூ. 5000/- பணமாகவோ உள்ளூர் காசோலையாகவோ அல்லது "SISI ACADEMY" Govt. of India, பெயருக்கு டிமாண்ட் டிராப்ட் எடுத்து நேரில் அல்லது தபால் மூலமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

BOBBY SCHOOL OF COSMETOLOGY

27, Adyar Bridge Road, (Opp. Adyar Aavin Park),Adyar, Chennai - 600 020. Ph:4916360; Pager:9628442656

Timings : Mon - Sat. 9.30 a.m. to 7.30 p.m. Sun. 9.30 a.m. to 3.30 p.m.

மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

அதிர்ஷ்டக் கற்களின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க

ராசி, நட்சத்திரம், தேதி, மாதம் பார்த்து ஜாதிகற்கள் அணிவதால் போதிய பலன் அளிப்பதில்லை, ஜாதகத்தினை துல்லியமாக கணித்து தற்போதைய பலன்கள்படி ஜாதிகற்களை அணிவதன் மூலமே பலன் அளிக்கிறது என்று சப்த ரிஷிகள் கூறியுள்ளார்கள்.

K.P. ஜுவல்லரியில் வித்தியாச மான முறையில் தங்க நகை வியாபாரம் செய்வதோடு பாரம்பரியமிக்க ஜோதிடரைக் கொண்டு ஜாதகத்தை துல்லி-யமாக கணித்து குடும்பத்தில் குழப்பம், தடைபடும் திருமணம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், வீடு, மனை, வியாபாரம் இவைகளுக்கு ஏற்ப அதிர்ஷ்டக்கல் அணிந்து பூரண வெற்றி பெறலாம்.

KPJ

K.P. ஜுவல்லரி & ஜெம்ஸ்

11, துரைசாமி ரோடு, (பாலம் அருகில்), தி. நகர்.
சென்னை - 600 017. ✆ : 4341186 / 4320132

இத்தாலி பவளம், ஐதராபாத் முத்துக்கள் தங்கத்திலும் வெள்ளியிலும் கிடைக்கும்

எங்கள் மூலம் ஆயிரக்கணக்கானவர்கள் பயன்பெற்று ஆனந்தமாக வாழ்கின்றனர்.

அதான் உன் தாத்தா அப்படி சொல்வார்ப்பா' 'எங்க அம்மா சொன்னது இது' அப்படீன்னு நம்மளைப் பத்தி தன் பசங்களுக்குச் சொல்லணும்.

போன மாசம் பாரு, திடீர்னு நெஞ்சு வலி எனக்கு. என் பிள்ளை ஓடிப் போயி டாக்டரை வீட்டுக்கே கூட்டிட்டு வந்து ஒரே திமிலோகம்!

கொஞ்ச நேரம் கழிச்சு என் பையன் பக்கத்துல வந்து உட்கார்ந்து என் கையை இறுக்கிப் பிடிச்சுண்டான். கையெல்லாம் நடுக்கம். பாவம்!

"எப்படியிருக்கீங்கப்பா?" - இதுதான், இந்த ஒரு வார்த்தைதான் கேட்டான். மேல பேச முடியலை அவனால. தொண்டை கம்மி, கண்ணெல்லாம் கலங்கி...

மனம் நிறைஞ்சு போச்சு எனக்கு. இந்தப் பாசம் ஒண்ணு போதும்ப்பா எங்களுக்கு. பாங்க் பேலன்ஸ் அது இது எல்லாம் தூசி இதுக்கு முன்னால. வேறென்ன சொல்ல உனக்கு?" மனம் நெகிழ கண்களைத் துடைத்துக் கொண்டார் கீர்த்திவாசன்.

அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் மனத்தில் புகுந்து பம்பரமாய்ச் சுற்றிச் சுற்றிச் சுழல ஆமென்று தலையாட்டினார் பாலு.

காலையிலிருந்து மாலை வரை நாகமாய் படமெடுத்து சீறிக் கொண்டு வார்த்தைக்கு வார்த்தை விஷத்தை கக்கிக் கொண்டு... என் பணம், எங்க பெட்டி, என்னோட சேர் என்று சுயநலத்தில் குளித்துக் கொண்டு...

பெரிய பூசணிக்காயாய் கண் முன் வந்து நின்ற தன் நடத்தையை நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது பாலுவிற்கு.

எத்தனை அற்பமாய் வாழ்க்கையை ஓட்டுகிறோம். "இந்தாங்க அம்மா கால் வலிக்கு இந்த டியூப் வாங்கிட்டு வந்தேன். ஆபீஸ்ல என் பிரண்ட் சொன்னா நல்லாயிருக்குன்னு."

இப்படி கொண்டு வந்து நீட்டிய மைதிலியிடம், "இந்தா! எங்களுக்கு யார் தயவும் வேண்டாம். எவ்வளவு ஆச்சு? யாரும் பிச்சை போட வேணாம்" என்று மறு நிமிடம் நறுக்கென்று இருபது ரூபாய் தானைக் கொண்டு போய் மருமகளின் முன்னால் போட்டேனே...

மனத்தின் உறுத்தலை இப்படி எண்ணிக் கொண்டே போனால் எண்ணிலடங்காமல் நிற்கும்.

தெம்போடு எழுந்தார் பாலு.

"தலைநரைச்சா என்ன? தப்புன்னா திருத்திக்கத்தான் வேணும். இல்லையா?"

ஆ, ஊன்னு ஆடிட்டு இப்ப திரும்பிப் பார்த்தா சே!ன்னு இருக்கு. இப்ப முன் எங்க இருக்குன்னு தெரிஞ்சு போச்சு. எடுத்துப் போட்டுட்டு நடக்க ஆரம்பிக்கறேன். வரட்டுமா? நீயும் கண்டிப்பா உன் குடும்பத்தோட ஒரு தடவை வா."

மனம் லேசாகி எழுந்தார்.

கையில் பை நிறைய காய்கறியோடு உள்ளே நுழைந்த பாலுவின் எதிரே முதலில் வந்தவள் மனைவி.

"என்னத்துக்கு! பை நிறைய தூக்கிண்டு? முதுகு பிடிச்சுண்டு வேதனை அப்புறம்..."

முணகியவளைப் பார்த்தார் நிமிர்ந்து.

"ஒரு முதுகும் பிடிக்காது. மைதிலி எங்கே. கூப்பிடு" அவரின் புதிய தோரணை அவளைக் குழப்பியது.

அதற்குள் பாலுவே சமையலறை வரை போக இது என்ன அதிசயம்? என்று தானும் பின்னாலேயே போனாள்.

"அம்மாடி! இந்தா... காய்கறி மலிவா கிடைச்சது. வாங்கிண்டு வந்தேன். ப்ரிஜ்ல வச்சுடும்மா! அதோட நாளைக்கு சமையலுக்கு என்ன வேணுமோ எடுத்துத் தனியா வை வெளில.

கமலா! சும்மாத்தானே இருக்கே. அப்படியே உட்கார்ந்து நறுக்கி ப்ரிஜ்ல வை. காலைல ஈஸியா இருக்கும் சமைக்கறதுக்கு."

மாமியார் குழப்பத்தோடு கணவரையும், மருமகளையும் மாறி மாறிப் பார்க்க... மாறாக

மைதிலிக்கு தலையே சுற்றியது. என்ன வாயிற்று என் மாமனாருக்கு?

பட்டென்று காய்கறியை எடுத்து வைத்து ப்ரிஜ்ஜை மூடிவிட்டு ஹாலுக்கு ஓடினாள்.

டாணென்று ஏழு மணிக்கு டிபன் வேண்டும். வந்ததே லேட். சோபாவில்... அவள் கண்களை நம்ப முடியவில்லை.

பாலு அமர்ந்திருக்க, அவரின் மடியில் பிரகாஷ்.

மைதிலி எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

"டிபன் சூடா இருக்கு. தட்டு வச்சிடவா உங்களுக்கு?" அருகில் வந்து மென்று விழுங்கியவளை மெல்ல நிமிர்ந்து பார்த்தார்.

பத்து நிமிடம் லேட்டானாலும்...

"ஏன்? இந்தக் கிழவன் ஒருத்தன் இருக்கானே, அவனுக்கும் சோறு போடணும்னு இப்பத்தான் ஞாபகம் வந்துட்டுதாக்கும்" என்று கொக்கரித்து ஆத்திரப்படுபவர்.... இன்று நிதானமாய் மருமகளின் முகம் பார்த்துச் சொன்னார்.

"இல்லம்மா! எல்லாம் ரெடி பண்ணி வச்சிடு. ரவி வரட்டும். எல்லாருமே சேர்ந்தே சாப்பிடலாம்."


நடப்பது, தன் காதுக்குள் விழுவது, தான் பார்ப்பது எல்லாம் நிஜமா? மைதிலிக்கு ஆச்சரியத்தில் ஒன்றும் புரியவில்லை. கனவா? நிஜமா?

'நறுக்'கென்று தன்னைத்தானே கிள்ளிக் கொண்டாள்.

ஆவ்! வலித்தது நிஜமாய், சந்தோஷமாய்.

இயற்கை செயல் மறந்து விடும்போது


பூப்படைவது – மொட்டாக இருக்கும் பெண் மலர்ந்து மணம் வீசத் தொடங்கும் பருவம். பெண் குழந்தைகள் இவ்வயதை நெருங்கும் போது இந்நிகழ்ச்சி இயற்கையாக தடங்கலின்றி நேர வேண்டுமே? எப்போது நேரும்? என்ற கவலை இளம்பெண்களின் தாய்மார்களின் மனதை வதைக்கத் தொடங்குகிறது. இயற்கையாக நேரக்கூடிய இந்த மாறுதல் தோன்றாமல் போனால், நடுவயதில் மாதவிலக்கு ஏற்படாமல் இருந்தால், முதுமைப் பருவத்தில் மாதவிலக்கு நின்று விட்டதா என்ற சந்தேகம் ஏற்பட்டால் செய்து கொள்ள வேண்டிய சிகிச்சைகள் என்னென்ன? கும்பகோணத்தில் பெண்களுக்காக சிறப்பு மருத்துவ வசதிகள் கொண்ட எஸ்.வி.ஆர். நர்ஸிங் ஹோம் நடத்தி வரும் டாக்டர் வசந்தா ராமமூர்த்தி அமெனோரியா என்ற இந்நிலை பற்றி விளக்குகிறார்...



கேள்வி : அமெனோரியா (Ameno - rrhoea) என்றால் என்ன? இந்நிலை ஒரு நோயாகக் கருதப்படுகிறதா?

டாக்டர் : அமெனோரியா என்றால் மாதவிலக்கு வராமல் இருக்கும் நிலை. இந்த நிலை ஒரு பெண்ணின் வாழ்க்கை யில் அவள் பூப்படைவதற்கு முன், குழந்தையை வயிற்றில் சுமக்கும் போது, குழந்தைக்குத் தாய்ப்பால் அளிக்கும்போது, சுமார் நாற்பத்தி ஐந்து வயதிற்கு மேல் மெனோபாஸ் என்ற நிலை யடையும் போது இயற்கையாக ஏற்படுகிறது. மேற்கூறிய நிலைகளைத் தவிர மற்ற சமயங்களில் மாதவிடாய் நின்று போனால் உடலில் கோளாறு ஏற்பட்டுள்ளது என்றறிய லாம். இதை நோய் என்று கூறுவதை விட, ஒரு மாற்றம் என்றே கூறலாம்.

கேள்வி : ஒரு பெண் எந்த வயதில் பூப்படைய வேண்டும்? இந்நிலை ஏற்படா விட்டால் என்ன செய்ய வேண்டும்?



காதினுள் எறும்பு புகுந்து விட்டால் அய்யோ குய்யோ என்று திக்குமுக்காட வேண்டாம். காதினுள் டார்ச் லைட் வெளிச்சத்தை பாய்ச்சுங்கள். எறும்பு தானாக வெளி வந்துவிடும். இது என் சொந்த அனுபவம்.

— ஆர். கே. லிங்கேசன்

டாக்டர் : சாதாரணமாக பத்தரை வயதிலிருந்து பதினாறு வயதிற்குள் ஒரு பெண் பூப் பெய்துகிறாள். இந்த வயதில் மூளை நன்கு வளர்ச்சி அடைந்து, மூளையில் ஹார்மோன் சுரக்கத் தொடங்கும். இதன் மூலம் ஓவரி இயங்கத் தொடங்கி, ஓவரி ஹார்மோன்களை சுரக்கத் தொடங்கும். இந்த ஹார்மோன்கள் கர்ப்பப் பையில் மாற்றம் ஏற்படுத்தி மாதவிடாய் ஏற்படுகிறது.

இந்த மாற்றங்கள் ஏற்படாமல், மாதவிடாய் வராதிருந்தால், அதை பிரைமரி அமெனோரியா என்கிறோம். சில பெண்களுக்கு ஓவரி வளர்ச்சி இல்லாமல் இருக்கும். ஓவரி வளராமல் இருந்தால் அந்தப் பெண்ணுக்கு பதினான்கு வயதில் மார்பக வளர்ச்சி மற்றும் உடல் வளர்ச்சியும் இல்லாமல் போகும். சிலருக்கு ஓவரிகள் வளர்ந்திருக்கும். ஆனால் கர்ப்பப்பை வளராதிருக்கும். சிலருக்கு கருப்பையின் வாயில், யோனியின் வாய்ப்பகுதியில் அடைப்பு இருக்கக்கூடும். இவ்வாறு பல காரணங்களால் பிரைமரி அமெனோரியா ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இவற்றைத் தவிர, காசநோய், தைராய்டு தொடர்பான நோய், நீரிழிவு நோய், அனீமியா ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பூப் பெய்தாமல் இருக்க நேரிடலாம். சிலருக்கு க்ரோமோஸோம்கள் தொடர்பான நோயினால் கூட அமெனோரியா ஏற்படும். மேலும் சில குடும்பங்களில் பரம்பரையாகவே பூப்பெய்தும் வயது தள்ளிப் போகும். இவர்கள் அதிகபட்சமாக பதினேழு வயது வரை காத்திருந்து பார்க்கலாம்.

இவ்வாறு சில காரணங்களால் பருவ வயதில் மாதவிலக்கு ஏற்படாத போது மகப்பேறு மருத்துவரை அணுகுவதுதான் சரியான முறை. கர்ப்ப வாயில் சதை அடைத்திருந்தால் மிகச் சிறிய அறுவை சிகிச்சை செய்து சரி செய்து விடலாம். ஓவரியில் கோளாறு என்றால் ஜெனடிக் பரீட்சை செய்ய வேண்டும். காச நோய் போன்ற மேற்கூறிய இதர வியாதிகள் இருந்தால் அதற்கான சிகிச்சை பெற்றால் நோய் குணமாகியதும் பூப்பெய்த வாய்ப்புண்டு. இவற்றைத் தவிர மூளையில் கட்டிகள், பிட்யூட்டரியில் நோய், கபாலத்தில் எலும்பு முறிவு போன்றவற்றால், ஹைபோதாலமஸ் நோய்களால் அமெனோரியா ஏற்படக்கூடும். வலிப்பு நோய் உள்ளவர்களுக்கு எலக்ட்ரிக் ஷாக் வைத்தியம் அளிப்பதால் அமெனோரியா ஏற்படும் இந்நிலைகளுக்கும் வைத்தியம் செய்து, பூப்பெய்தச் செய்யலாம்.

கேள்வி : அறுவை சிகிச்சை செய்து கொள்ளாவிடில் என்ன நேரிடக்கூடும்?

டாக்டர் : கருப்பை வாயில் சதை அடைப்பு ஏற்பட்டு அது நீக்கப்படவில்லையெனில் மிகவும் அபாயமானதாகும். ஏனெனில் பூப்படைய வேண்டிய வயதில் ஓவரியும் கருப்பையும் சரியாக இருப்பதால் பூப்படைந்து விடுவாள். ஆனால் உதிரம் வெளியே வராமல் உள்ளேயே தேங்கி நிற்கத் தொடங்கும். இந்நிலை கிரிஸ்டோமெனோரியா என்றழைக்கப்படும். ஒருசில மாதங்களில் உதிரத் தேக்க அளவு அதிகமாவதுடன், வயிற்றில் வலி உண்டாகும். இன்பெக்ஷன் ஏற்படும். இந்த நிலையில் கூட சிறிய அறுவை சிகிச்சை செய்து தேக்கத்தை நீக்கி, இன்பெக்ஷனுக்கு மருத்துவமளிக்கலாம். இந்நிலையிலும் அறுவை சிகிச்சை செய்யவில்லையெனில் உதிரம் பெலாபியன் ட்யூப் மூலம் வயிற்றுக்குள் சென்று அதிக வலி, அதிக இன்பெக்ஷன் என பிரச்னைகள் பன்மடங்காகத் தொடங்கும்.

கேள்வி : செகண்டரி அமெனோரியா என்ற நிலை எப்போது ஏற்படுகிறது?

டாக்டர் : ஒரு பெண் பருவமடைந்ததிலிருந்து மெனோபாஸ் வயது வரையில் இடையில் உள்ள நிலையில் எப்போது மாதவிடாய் நின்று போனாலும் அதை செகண்டரி அமெனோரியா என்கிறோம். ஒரு பெண் கருத்தரிக்கும் போது ஹார்மோன்கள் நிறைய சுரப்பதால் மாதவிடாய் நின்று விடும். இதில் கூட சிலருக்குக் கருப்பை இரு பிரிவாக


இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்
Murugan
முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை – 3.
போன்: 5350182, 5343412

இருக்கும். ஒரு பிரிவில் குழந்தை வளர்ந்து கொண்டிருக்கும். மற்றொரு பிரிவில் மாத விடாய் ஏற்படும். சிலருக்கு வயிற்றில் குழந்தை இறந்து விட்ட பின்னரும் மாதவிடாய் வரா மல் இருந்து விடும். இதற்கு Missed Abortion என்று பெயர். இதனைச் சரிசெய்ய கருப்பை சுத்தம் செய்யப்பட வேண்டும்.

குழந்தை பிறந்த பிறகு குழந்தைக்குத் தாய்ப் பால் சுரப்பதினால் ஹார்மோன் அதிகம் சுரக்கத் தொடங்குகிறது. இதனால் பெண்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் அளிக்கும் வரை மாதவிடாய் ஏற்படாதிருக்க வாய்ப்புள்ளது. சிலருக்குக் குழந்தை பிறக்கும் போது அதிக உதிரப் போக்கு ஏற்பட்டு, அதனால் பிட்யூட்டரி கிளாண்ட் பாதிக்கப்படுகிறது. இதனால் தாய்ப்பால் இல்லாமல் போகலாம். தாய்ப்பால் அளிப்பதை நிறுத்திய பிறகும் மாதவிடாய் ஏற்படாதிருக்கும். இதற்கு மருத்துவமளித்ததும் நிலை சரியாகும்.

கேள்வி : கருத்தரிக்காமல் சாதாரண நிலையிலேயே சிலருக்கு ஒழுங்காக வந்து கொண்டிருக்கும் மாதவிடாய் திடீரென்று தள்ளி வருகிறது. ஏன்?

டாக்டர் : ஓவரிகளில் ஏற்படும் மாறுதல்களால் ஹார்மோன் சுரப்பதில் கோளாறு ஏற்படும்போது அமெனோரியா ஏற்படும். அல்ட்ரா சவுண்ட் ஸ்கான் மற்றும் டி அண்ட் சி செய்து கோளாறு எதனால் ஏற்பட்டுள்ளது என்று கண்டுபிடித்து குணப்படுத்த வேண்டும். ஓவரியில் சிறிய சிறிய நீர்க்கட்டிகள் இருக்கும். இதற்கு பாலிசிஸ்டிக் ஓவரி என்று பெயர். இதனால் மாதவிடாய் வராமல் போகலாம். இதை மருந்துகளாலும், லாப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை மூலமும் குணப்படுத்தலாம்.

சிலருக்கு மாதவிடாய் நின்று முகத்தில் ரோமம் வளரத் தொடங்கும். இந்நிலை ஓவரிகளில் ஏற்படும் சில கட்டிகள் ஆண்களுக்கு சுரக்கும் ஆன்ரோஜன் ஹார்மோனை சுரப்பதால் ஏற்படுகிறது. இதற்கு உடனடியாக சிகிச்சை பெற வேண்டும். சிலருக்கு மெட்ரோபதியா என்ற நோயினால் பல மாதங்கள் மாதவிடாய் வராதிருந்து விட்டு, திடீரென்று அதிகமாக உதிரப் போக்கு ஏற்படத் தொடங்கும். இந்நிலை ஏற்படாதிருக்க அமெனோரியா ஏற்பட்டதும் மருத்துவரை அணுகினால் உதிரப் போக்கு அதிகம் ஏற்படாதிருக்க ப்ரோஜெஸ்டிரோன் ஹார்மோன் மாத்திரைகளை அளிப்பார்கள்.


கேள்வி : சிலருக்கு டி அண்ட் சி என்ற சிகிச்சை செய்து கொண்ட பிறகு மாதவிடாய் வராதிருந்து விடுகிறதே, ஏன்?

டாக்டர் : கர்ப்பப் பையில் உள்ளே மிக ஆழமாகச் செய்வதால், கருப்பையில் மாதவிடாய் வரும் ஜவ்வு முற்றிலும் அழிந்து விடும். இன்பெக்ஷன் கூட ஏற்பட்டிருக்கலாம். இதனால் அமெனோரியா ஏற்பட்டு விடுகிறது. எனவேதான் டி அண்ட் சி அடிக்கடி செய்வதை தவிர்க்க வேண்டும்.

மேற்கூறிய சில நோய்களைத் தவிர ஹார்மோன் தொடர்பான நோய்கள், அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் அடிஷன்ஸ், cushings நோய் நெடுநாட்களுக்கு ஏற்படும் ஜுரம் போன்றவற்றாலும் அமெனோரியா ஏற்படக்கூடும். அனெரெக்ஸியா நெர்வோசா என்ற மன வியாதியால் பாதிக்கப்பட்டோர் சாப்பிடாமலேயே இருப்பர். இவர்களுக்கும் அமெனோரியா ஏற்படும். அதே போல் அதிகம் சாப்பிட்டு உடல் மிகவும் பருத்திருப்பவர்களுக்கும் ஏற்படும். எந்த நிலையில் ஏற்பட்டாலும் மகப்பேறு மருத்துவரை அணுகி

தஞ்சை பெரிய கோயிலும், ஜெயங்கொண்டம் கோயிலும், ஒரே மாதிரியாகக் கட்டப்பட்டவை. ஜெயங்கொண்டம் கோயிலின் சிறப்பு அம்சம் வெளியே என்ன வெயில் அடித்தாலும் கோயிலினுள் மிகக் குளுமையாக இருக்கும். சூரியன் எந்தத் திசையில் இருந்தாலும் மூலவர் மேல் சூரிய ஒளி பட்டுக் கொண்டிருக்கும்.

– *'சிந்தனைக்கு விருந்தாகும் மணியான செய்திகள்'* நூலிலிருந்து; பா. அச்சுதன்



அந்த சில நாட்களில் வேதனை குறைவாகவா இருந்தது?



அந்த சில நாட்கள் என்றாலே, நம்மில் பலருக்கு சங்கடமும் வேதனையும் தான். தவிர, தொடைகளின் மென்மையான சருமத்தின் மீது சானிட்டரி நாப்கின் உரசுவதனால் ஏற்படும் எரிச்சலால் நிலைமை இன்னும் மோசமாகிறது. ஆனால் இனிமேல் அப்படி இல்லை. கலக்கமும் வேதனையும் தரும் நாப்கின் ரேஷ்களை **லிசென்ஸா** கொண்டு குணப்படுத்துங்கள். தடவிய உடனேயே **லிசென்ஸா** குளுமையும் இதமும் தருகிறது. மிகக் கடுமையான எரிச்சலையும் குணப்படுத்தும் வண்ணம் கிருமிநாசினிகளும் இதர பொருட்களும் கொண்டு விசேஷ முறையில் தயாரிக்கப்படுகிறது **லிசென்ஸா**. வெப்பம், வியர்வை மற்றும் இறுக்கமான பேண்ட்டீஸ்களினால் ஏற்படும் எரிச்சல்களிலிருந்து நிவாரணம் பெற இந்த மென்மையான ஆயிண்ட்மெண்டை பயன்படுத்தலாம். **லிசென்ஸா** முற்றிலும் பாதுகாப்பானது. 60 ஆண்டுகளுக்கும் மேலாக சரும வியாதிகளை குணப்படுத்துவதில் புகழ்பெற்றது. **லிசென்ஸா** உங்கள் துணிகளில் கறை உண்டாக்குவதில்லை. அந்த சில நாட்களைப் பற்றி எதுவும் செய்ய முடியாது என்றாலும் **லிசென்ஸா** உங்கள் முகத்தில் புன்னகையை வரவழைக்கும்.



லிசென்ஸா பித்தவெடி, வெடிப்புக்கள், வண்ணாண் படை, நமைச்சல் மற்றும் கை-கால் விரல்களுக்கு இடையே ஏற்படும் இன்ஃபெக்ஷனை குணப்படுத்துவதில் பெயர்பெற்ற ஆயிண்ட்மெண்ட்.

For more information on skin problems, write to P.O. Box No. 1994, Chennai-600 001

இது டாலர் கம்பெனி தயாரிப்பு.

நண்பர்கள் உறவினர்களுக்குக் கடிதம் எழுதும் போது, சின்னச் சின்ன படங்களைக் கடிதத்தில் வரைந்து அனுப்புங்கள். கார்ட்டூன் போடலாம். ஏன் கடிதத்தின் நான்கு மூலையிலும் சின்ன பூக்கள் கூட வரைந்து அனுப்பலாம்.

- போரூர் ஆர். சீதா

சிகிச்சை பெற வேண்டியது மிக அவசியம்.

கேள்வி : நாற்பது வயதிற்கு மேல் மாதவிலக்கு ஏற்படாமல் போனால் மெனோபாஸ் நிலை வந்து விட்டது என்று விட்டு விடலாமா அல்லது வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமா?

டாக்டர் : இது மாதவிடாய் நிற்கும் பருவம். இந்தப் பருவத்தில் கர்ப்பம் தரிக்க அதிக வாய்ப்பில்லை. ஆனால் மாதவிடாய் இயற்கையாக நின்றிருக்கிறதா அல்லது ஹார்மோன் சுரப்பதில் ஏற்பட்ட மாறுபாட்டினாலா, ஓவரியில் கட்டிகள் ஏற்பட்டுள்ளதா, புற்றுநோய் ஏற்படவில்லையா என்ற சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். எனவே இவர்களுக்கு மருத்துவர் பரிசோதனைகளாக அல்ட்ரா சவுண்ட் மற்றும் டி. அண்ட் சி செய்வார்கள்.

சிலர் வருடக்கணக்கில் கருத்தடை மாத்திரைகளை சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு நிலையில் திடீரென்று அமெனோரியா ஏற்படும். இந்த மாத்திரைகளை சாப்பிடுவதை நிறுத்தி விட்டு பத்துப் பதினைந்து நாட்களில் மாதவிலக்கு வருகிறதா என்று பார்க்க வேண்டும். வராவிடில் எளிதாக மாத்திரைகள் அளித்து குணப்படுத்தி வேறு கருத்தடை முறைகளை மேற்கொள்ள கூறப்படுகிறது.

பொதுவாக பெண்களுக்கு நாற்பத்தி ஐந்து வயதிற்கு மேற்பட்டே ஐம்பது வயதிற்குள் மெனோபாஸ் ஏற்படும். மிகச் சிலருக்கே நாற்பது வயதில் ஏற்படும். இதை Premature Menopause என்றழைப்போம். சில குடும்பங்களில் பரம்பரையாக இவ்வாறு ஏற்படும் தாய் - மகள் இருவருக்கும் மெனோபாஸ் வயது அநேகமாக ஒன்றாகத்தானிருக்கும். சில சமயம் குழந்தை பிறந்த சில வருடங்களிலேயே மெனோபாஸ் ஏற்பட்டு விடும்.

கேள்வி : மெனோபாஸ் ஏற்பட்ட பிறகு பெண்களுக்கு ஏற்படும் மாறுதல்கள் என்னென்ன?

டாக்டர் : இயற்கையாக மெனோபாஸ் நிலையை அடைபவர்கள் அதிகம் பாதிக்கப் படுவதில்லை. இளவயதில் மெனோபாஸ் நிலையைச் சில நோய்கள் காரணமாகவோ, அறுவை சிகிச்சை காரணமாகவோ அடைந்தவர்கள் சற்று மனம் தளர்ந்து போகின்றனர். தாய்மை அடையும் வாய்ப்பு நின்று போய் விடுகிறது என்ற நிலை. அவர்களை தாக்குகிறது. இந்நிலையைத் தாண்டி வர அவர்கள தங்களை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உடல்ரீதியாக குப்பென்று வியர்த்துப் போவது மிக சகஜமாக காணக்கூடிய ஒரு மாற்றம். தலைவலி ஏற்படலாம். உடல் தளர்ச்சி, மனதில் எரிச்சல், அடிக்கடி எரிச்சலுடன் சிறுநீர் கழிக்கத் தோன்றுதல், தலை சுற்றல் போன்றவை ஏற்படலாம். இடுப்பு வலி, பின்பகுதியில் வலி ஏற்படலாம். இவை அனைத்திற்கும் மருத்துவம் அளிக்க முடியும். தேவைப்பட்டால் ஈஸ்ட்ரஜோன் ஹார்மோன் அளிக்கலாம்.

பொதுவாக பெண்கள், மாதவிலக்கு ஏற்படும் போது வலியின் காரணமாகவும், எரிச்சல், உடல் தளர்ச்சி காரணமாக மாதவிலக்கு ஏற்படாமல் இருக்காதா, நின்று விடாதா என்று நினைப்பது சகஜம். ஆனால் நிஜத்தில் அவ்வாறான நிலை ஏற்பட்டால் அதன் பின்னணியில் எத்தனை பிரச்னைகள் உருவாகி விட வாய்ப்பிருக்கிறது. அதனால் பூப்பெய்வது முதல் மெனோபாஸ் வரை இயற்கையாக இந்நிகழ்ச்சிகள் நடைபெறுவதே ஆரோக்கியமானது; தொந்தரவு இல்லாதது.

பேட்டி : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**





திருமதி ஜெயா, அரக்கோணம்.

அரோமா தெரபி என்பது என்ன? இந்த அழகு சிகிச்சை பற்றி விளக்கம் தேவை.

'அரோமா' என்றால் வாசனை பொருட்கள், 'தெரபி' என்றால் சிகிச்சை என்று பொருள். பலவித வாசனை தரும், மூலிகைகளைக் கொண்டு தயார் செய்யப்பட்ட எண்ணெய்களை பயன்படுத்திச் செய்வதுதான் இந்த சிகிச்சை முறை. இதை ஃபேஷியல் செய்ய பயன்படுத்துவதால், சருமத்தின் வறண்ட தன்மை மாறும். அதிக எண்ணெய்ப் பசையுள்ள சருமத்திற்கு இந்த சிகிச்சை தரப்பட்டால் சருமம் எண்ணெய்ப்பசை நீங்கி சாதாரண நிலைக்கு வரும். கறுத்த நிறம் மாறி நிறம் மேம்படும்.

இந்த மூலிகை (வாசனை எண்ணெய்) பயன்படுத்தி 'head massage' செய்வதனால் முடியின் வேர்க்கால்கள் பலப்படும். முடி உதிர்வது கட்டுப்படும், வேகமாக நரைப்பதும் குறையும். மல்லிகை மலர் கொண்டு தயார் செய்யப்பட்ட எண்ணெய், 'செடர் உட்' ஆயில் போன்ற எண்ணெய்களை பயன்படுத்திதான் தலைமுடி சிகிச்சைகள் தரப்படுகின்றன.

கை, கால் விரல்களின் நகங்கள் இளம் சிவப்பு நிறத்தில் பளபளவென இருப்பதே தனி அழகுதானே? நகங்களுக்கு அழகும், வலுவும் தரும் வகையில் அவைகளுக்கு செய்யப்படும் 'மெனிக்யூர்', 'பெடிக்யூர்' சிகிச்சைகளுக்கும் இந்த எண்ணெய்கள் பயன்படுகின்றன.

கண்களின் கீழ் விழும் கருவளையங்கள் நீக்க இந்த 'அரோமா' எண்ணெய்கள் பயன்படுத்தப்படுகின்றன. சருமம் மற்றும் முடியின் தன்மைக்கு ஏற்ப இந்த எண்ணெய்களை தேர்ந்தெடுத்து இந்த வகை சிகிச்சை தர 'அரோமா. தெரபி'யில் பயிற்சி பெற்ற அழகுக் கலை நிபுணர்கள் உண்டு. இந்த சிகிச்சையை முறையாக செய்தால் மிகவும் நல்ல பயன் தரக்கூடியது இந்த 'அரோமா தெரபி'.

ஃபேஷியலுக்கு லவண்டர், ரோஸ் போன்ற பலவித எண்ணெய்கள் பயன்படுத்தப்படும்.







பரு சிகிச்சைக்கு வேப்பெண்ணை, ஜாதிக்காய் எண்ணெய் போன்றவைகள் பயன் தரும். தூக்கமின்மையை மாற்றி நல்ல உறக்கம் வரச் செய்யும் சிகிச்சை இது. 'Tension' என்று நாம் கூறும் மன நிலையை மாற்றி ஓய்வெடுக்க உதவுவதுதான் இந்த 'அரோமா தெரபி'.



செல்வி ராதிகா, விழுப்புரம்

'பிக்மெண்ட் இம்ப்ளாண்டேஷன்' (pigment implantation) என்றால் என்ன? அழகு மச்சம் வைத்துக் கொள்ளுதலும் இதைச் சார்ந்தது தானா?

இயற்கையாகவே சில பெண்களுக்கு புருவத்தில் முடியில்லாமல் இருக்கும். வேறு சில பெண்களுக்கு புருவம் மிகவும் மெலிந்து காணப்படும். 'தைராய்ட்' பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு புருவத்தில் உள்ள முடி வேகமாக உதிர்ந்து விடும். இது போன்ற பிரச்னைகள் உள்ளவர்களுக்குப் புருவத்தை அழகாக்க செய்யப்படும் சிகிச்சைதான் 'பிக்மெண்ட் இம்ப்ளான்டேஷன்!' இதைச் செய்யும் போது சிறிதளவு வலியிருக்கும். இதைப் பொறுத்துக் கொண்டால், நிரந்தரமான அழகு தரும் தீர்வு இது. நிரந்தரமானது இந்த சிகிச்சை முறை. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இதன் நிறம் சற்று மங்கும்போது மீண்டும் 'டச்-அப்' செய்து கொண்டால் போதும்.




மச்சம் வைத்துக் கொள்வதும் நிரந்தரமானதுதான். பெண்கள் சிலருக்கு உதட்டின் மேல் இயற்கையாகவே அழகு மச்சம் அமைந்திருக்கும். அது போன்ற மச்சம் இல்லையே என்று ஏங்கத் தேவையில்லை. நிரந்தரமாக அழகு மச்சம் வைத்துக் கொள்ளும் வழிதான் இப்பொழுது உள்ளதே!

இந்த அழகு மச்சம் அதிர்ஷ்டமச்சமாக அமைந்து எத்தனையோ பெண்களுடைய வாழ்க்கை முறையைக்கூட மாற்றியுள்ளது. வலியின்றி செய்து கொள்ளும் சிகிச்சை இது.

செல்வி லத்திகா செங்கல்பட்டு

"எனக்கு நெற்றி அகலமாக யிருக்கும், தலைமுடி அலையலையாக (Wavy - ஆக) யிருக்கும். எந்தவிதமான 'ஹேர்-கட்'- எனக்கு எடுப்பாகயிருக்கும்? பொதுவாக ஹேர் - கட்டில் உள்ள வகைகள் பற்றியும் சொல்லுங்கள்.

அகன்ற நெற்றி உடையவர்களுக்கு அழகு தரக் கூடியது 'ஃபிரிஞ்சு கட்' இதை நடு





இந்த மாத ஹேர்-ஸ்டைல்





வெயில் காலமான இப்போது - மிக அதி காலையில் செடிகளுக்கு தண்ணீர் விட வேண்டும். மாலையிலும் நன்றாக வெயில் தாழ்ந்த பின்னரே நீர் விட வேண்டும். இதனால் நீண்ட நேரம் மண்ணில் ஈரப்பதம் இருக்கும். தொட்டிகளில் நீர் விட்ட பின் ஓரிரு பாலிதீன் பேப்பரை சற்று இடைவெளி விட்டு பரத்தி வெயிட் ஒரு கல்லை வைத்து விட்டால் வேகில் நீர் ஆவியாகாது

— எஸ். பட்டம்மா

வகிடு எடுத்து இருபுறமும் வெட்டி 'செட்' செய்யலாம். ஒருபுறம் பக்க வகிடு எடுத்தோ, அல்லது வகிடே எடுக்காமலேயேகூட இந்த 'ஃபிரிஞ்சு கட்' செய்து செட் செய்ய முடியும். சாதாரணமாக உள்ள நேரான (straight) நீண்ட முடியிலும், அலையலையாக (wavy) உள்ள முடியிலும் 'இது போன்ற முன்புறம் 'ஃபிரிஞ்சு' கட் செய்து செட் செய்ய முடியும். மிகவும் சுருண்ட முடியென்றால் அதில் 'ஃபிரிஞ்சு' கட் செய்வது கடினம்.

முடியின் பின்புறம் முக அமைப்புக்கு ஏற்ப 'ப', 'ஸ்டெப்' மற்றும் 'ஸ்ட்ரெயிட்' - போன்ற வகைகளில் முடியை வெட்டிக் கொள்ளலாம்.

இன்றைய இளம் பெண்களில் பலரும் மிகவும் குட்டையாகவே முடியை வெட்டிக் கொள்ள விரும்புகின்றனர். 'டயானா' 'மஷ்ரூம் (Mushroom), வெட்ஜ் (Wedge) போன்ற பலவகை ஹேர் கட்டுகள் இன்று பிரபலமானவை. அவரவர்களின் முக அமைப்புக்குத் தகுந்தபடி முடி வெட்டிக் கொண்டால் அழகாகயிருக்கும்.

செல்வி. பிரியதர்ஷினி, திருச்சி.

'எனக்குத் திருமணம் நிச்சயமாகி உள்ளது. மணப் பெண் அலங்காரத்திற்கு முன்பு எப்போது எத்தனை முறை பார்லர் செல்ல வேண்டும்? என்னென்ன சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும்?

திருமணம் நிச்சயமானவுடனேயே, திருமணத்திற்கு 2, 3 மாதங்கள் இருக்கும்போதே பார்லருக்குச் சென்று மேற்கொள்ள வேண்டிய சிகிச்சைகள் நிறைய உண்டு.

நிறத்தை நன்கு மேம்படுத்தக் கூடிய ஃபேஷியல்கள், தேவையற்ற முடிகளை மறைக்க 'ப்ளீச்' அல்லது அவைகளை அகற்ற வேக்சிங் இவைகளை செய்து கொள்ள வேண்டும். கை, கால்களையும் விரல் நகங்களையும் அழகு படுத்த மேனிக்யூர், பெடிக்யூர் தலைமுடியை பலப்படுத்தி முடி உதிர்வைத் தடுத்துப் பாதுகாக்க தலை முடிக்கான சிகிச்சைகள் போன்றவைகள் கட்டாயம் செய்து கொள்ள வேண்டியவைகள் ஆகும். மூலிகை சிகிச்சைகள்தான் இவை அனைத்தும். 15 நாட்களுக்கு ஒருமுறை பார்லர் சென்று தேவையான அழகு சிகிச்சைகளை செய்து கொள்ள முகம் பளப்பளப்பாகும். மணப்பெண் அலங்காரத்திற்காக 'மேக்-அப்' செய்யும்போது மேலும் அழகாகத் தெரியும்.

அழகுக் கலைக்கான பயிற்சி பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள ஆசை. நான் +2 படித்து இருக்கிறேன். அழகுக் கலையில் குறைந்த பட்ச கல்வித் தகுதி என்ன? எத்தனை மாதம் கற்க வேண்டும்.


இதற்குக் குறைந்த பட்ச கல்வித் தகுதி என எதுவும் இடையாது. ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகளிலும் இக்கலையில் பாடங்கள் உண்டு. விருப்பப்பட்ட மொழியில் கற்கலாம். இது முழு நேர பாடத் திட்டம். காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை தினமும் வந்து செயல்முறை விளக்கங்களுடன் பயில வேண்டிய கலை இது. 2 மாதங்கள் தொடர்ந்து கற்க வேண்டும். வெளியூர்களில் உள்ளவர்களுக்காக தற்போது தபால் மூலமும் இந்த 'கோர்ஸ்' உண்டு. தபால் மூலம் பயில்பவர்கள் தங்களால் முடியும் நேரம் தொலைபேசி மூலம் அப்பாயின்ட்மென்ட் வாங்கிக் கொண்டு வந்து 5 நாட்கள் செயல்முறை விளக்கப் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மாத ஹேர் — ஸ்டைல்

பார்ட்டிகளில் கலந்து கொள்வோர் மட்டுமின்றி மணப்பெண்ணுக்கும் இந்தத் தலை அலங்காரம் உகந்தது. முதலில் தலையை நன்கு வாரி போனி டெய்ல் போட்டுக் கொள்ள வேண்டும். அதை 2 பாகமாக்கிக் கொண்டு ஒரு பாகத்தின் ஒரு ஓரத்தில் ஒரு பக்கமாக 'ஃபிரெஞ்ச் ப்னாட்' போட வேண்டும். பின்பு மறுபுறமும் அதேபோல போட்டு அதை அடியில் மறைத்துப் பின் செய்ய வேண்டும். பின்பு மேலே ஒரு சின்ன 'attachment fum' வைத்து பின் செய்து 'டெகோரேட்' செய்யலாம்.

கல்லூரி மாணவிகள் கேட்கலாம்

அகமும் புறமும் நிகழ்ச்சிக்கு முன்னும், பின்னும் எப்போதும் வசந்தராவைச் சுற்றி கல்லூரி மாணவிகள் கூட்டம். "இவர்களுக்குத் தான் எத்தனை சந்தேகங்கள்!" என வியக்கிறார் வசந்தரா. கல்லூரி மாணவிகளுக்கென்றே ஒரு கேள்வி - பதில் நிகழ்ச்சி ஆரம்பிக்கலாமே என்றதன் விளைவுதான் இப்பகுதி. அழகுக் கலை பற்றி உங்களுக்கு ஏற்படுகின்ற எந்தச் சந்தேகத்தையும் நீங்கள் கேட்கலாம். வசந்தரா பதிலளிக்கிறார்... ஆலோசனைகளுக்கு 8254079 எனும் அவருடைய தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



எய்ட்ஸ் பற்றி சரியாக தெரிந்து கொள்ளுங்கள்.

எய்ட்ஸ்

உடலுறவு மூலம் எப்போது பரவும்?

1. திருமணத்திற்கு முன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளுவதால் பரவலாம்.
2. திருமணத்திற்குப் பின் மனைவியைத் தவிர மற்றவர்களுடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளும் போது பரவலாம்.

உடலுறவு மூலம் எப்போது பரவாது?

1. திருமணம் வரை உடலுறவைத் தவிர்த்தால் பரவாது.
2. திருமணத்திற்குமுன் உடலுறவு கொள்ள நேரிடும்போது ஆணுறை அணிந்தால் பரவாது.
3. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறிமுறையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் பரவாது.
4. திருமணத்திற்குப் பின் மனைவியைத் தவிர வேறெந்த பெண்ணிடமும் உடலுறவு கொள்ளும் போது ஆணுறை அணிந்தால் பரவாது.

இரத்தம் மூலம் எப்போது பரவும்?

1. மருத்துவமனைகளில் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை நோயாளிகளுக்குச் செலுத்தினால் பரவலாம்.

இரத்தம் மூலம் எப்போது பரவாது?

1. நன்கு பரிசோதனை செய்யப்பட்ட இரத்தத்தை செலுத்துவதால் பரவாது.
2. மனித உடலில் சிரிஞ்சின் மூலம் வெளியே எடுக்கப்பட்ட இரத்தம் சில நிமிடங்களில் உறைந்துவிடுகிறது. மேலும் அதில் உள்ள எய்ட்ஸ் கிருமிகள் சூரிய ஒளியில் அழிந்துவிடுவதால் அந்த இரத்தத்தைச் செலுத்தி எய்ட்ஸை பரப்ப முடியாது.

ஊசி மூலம் எப்போது பரவும்?

1. ஒருவருக்கு பயன்படுத்திய சிரிஞ்ச் மற்றும் ஊசிகளைச் சுத்தப்படுத்தாமல் மற்றவருக்குப் பயன்படுத்துவதால் பரவலாம்.

ஊசி மூலம் எப்போது பரவாது?

1. ஒருவருக்கு பயன்படுத்திய சிரிஞ்ச் சுத்தப் படுத்திய பிறகு மற்றவருக்கு உபயோகித்தால் பரவாது.
2. சிரிஞ்சில் இரத்தத்தை வெளியே எடுத்தபின் அது உறைந்து விடுவதால் எய்ட்ஸ் கிருமிகள் அழிந்து விடுகின்றன. உறைந்த இரத்தத்தை ஊசி மூலம் செலுத்த முடியாது. அதனால் ஊசியின் மூலம் எய்ட்ஸ் பரவ வாய்ப்பில்லை.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

417, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை - 600 008.

தொலைபேசி எண் : 044-8255467

TNSACS/2002/98/ELEGANT

தேவியின் சக்திகள் — 8

காளி - என்றதும் கோரமான ரூபமுகத் தோடு, தெத்துப் பல்லோடு கபால மாலை அணிந்து கொண்டு - பலி கேட்கும் தேவதையாக பலர் நினைத் துக் கொண்டுள்ளனர். ஆனால் உண்மையில் அப்படியன்று. பரிபூர்ண ஞானம் தரும் ஆனந்த ரூபிணியே காளி. மனிதர்களுடைய காலத்தை வேகமாக விரட்டி ஆயுளை அப கரிப்பவன் காலனான யமன். அந்தக் கால னையே விரட்டுவதால் காளி எனப் பெயர் பெற்றாள். இவன் காளிக்குப் பூஜை செய் கிறானே? இவனிடம் போகக் கூடாது. ஏதாவது ஏவி விடப் போகிறான் என பயந்து, தவறான அபிப்ராயத்தை காளியிடமும், காளியை வழி படுபவர்களிடமும் வைப்பதுண்டு.

வாஸ்தவத்தில் காளி அஞ்ஞான வாச னையை ஒழித்து க்ஷேமப் பாதையைக் காட்டு பவள். சம்சார சக்கரத்தில் உழன்று, சுழன்று தவிப்பவர்களுக்குக் காளியின் திருவடிக்கமலம் பரம ஞானத் தத்துவத்தைப் போதிக்கிறது.

ஆதி காளி

மஹா மாயா ஸ்வரூபிணியான பராசக்திக்கு உருவம் கிடையாது. ஆயினும் பல தீய சக்தி படைத்த அசுரர்கள் தோன்றி தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும், ஸாதுக்களுக்கும் எல்லையற்ற தொல்லையளிப்பதைப் போக்கி, அவர்களைக் காத்து, உலகங்களுக்கு நன்மை உண்டாக்க அந்த பராசக்தி தாமஸ, ராஜஸ, ஸாத்விக குணங்களுக்கு ஏற்பவும், தாம் ஏற்ற காரியத்தை செய்ய ஏற்றவாறும் பல ரூபங்களை ஏற்றுக் கொள்கின்றாள்.

ஒளி நிறைந்தவளும் காலத்தையே படைப் பவளுமான காளிகா சக்திக்கு ரூபம் கிடை யாது. ஆயினும் குணம் க்ரியை இவற்றைக் கொண்டு அவளுக்கு உசித ரூபங்கள் கொடுக் கப்படுகின்றன.

"எப்போது நல்லோருக்குத் துக்கம் ஏற்படு கின்றதோ அப்போது அவர்களைக் காக்க நான் தேகம் ஏற்றுக் கொள்கிறேன். தேவர்களை ரக்ஷிப்பதற்காகவே ரூப மில்லாத எனக்கு ரூபமும் ஜன்மா (பிறவி) இல்லாத எனக்கு ஜன்மாவும் ஏற்படுகின்றது என்பதை மஹிஷாஸுரா நீ அறிந்து கொள்!" என்ற மஹிஷா ஸுரமர்த்தினியின் பிரதிக் ஞையையும் இங்கு நினைவு கொள்ள வேண் டும்.

ஐஸ்வர்யத்தை அளிக் கும்போது பவளம் போன்ற சிவப்பு நிறம் கொண்டவளும், கல் வியை அளிக்கும்போது சரத் காலத்திய சந் திரன் போன்று வெண்ணிறங் கொண்டவளும், சத்ருக்களை வெற்றி கொள்ளும் போது நீலநிறம் கொண்ட வளுமான ஜகன்மாதாவான தேவி யைச் சரணடைகிறேன் என்ற ஸ்லோகத் தாலும் அறியலாம்.


மேகம் போன்று கருத்தவளும், பிறைச் சந் திரனை சிரத்தில் அணிந்தவளும், சிவந்த ஆடையுடுத்திக் கொண்டிருப்பவளும், வர முத் திரை, அபயம் இவற்றை இரு கரங்களில் தரித் திருப்பவளும், இனிய இலுப்பைப் பூவினால் செய்யப்பட்ட மதுவருந்தி தன் முன் நடமிடும் மஹாகாலனைக் கண்டு மலர்ந்த முகத்தினளும், மலர்ந்த செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளு மான ஆதிகாளியை ஸேவிக் கிறேன். மஹா காளியின் பீஜாக்ஷரம் 'க்லீம்'. இனி கூறப்படும் காளிகளின் பீஜாக்ஷரம் 'க்ரீம்' என்பதாகும். இந் தக் காளியின் மூலமந்த்ரம் "ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்ரீம் பரமேச்வரீ ஸ்வாஹா" என்பதாகும். இந்த ஆதிகாளி இருகர முடை யவள். ஸௌம்ய ரூபமுடையவள்.

காளியைப் பூஜை செய்ய துஷ்ட பூதங்கள், கிரஹங்கள், ரோகங்கள் ஆகியன தொலையும். பயம் அகலும், புத்திர பௌத்திரர்களுடனும் சுகம், ஐஸ்வர்யம் இவற்றுடனும் அவன் வீடு மகிழ்வுடன் இருக்கும். அவன் வள்ளலாகவும், பலரை போஷிப்பவனாகவும், உயிருடன் இருக் கும் போதே நற்புகழுடையவனாகவும், இருப் பான். இந்த யந்த்ரம் இவ்வாறான அருளை நல்கும்.

தாருகனை வதைத்த பத்ரகாளி

இந்தக் காளி தீயோரை அழிக்கவும், நல்லோ ரைக் காக்கவும் பல யுகங்களில் பல அவ தாரங்களை எடுத்தருளியுள்ளாள். இந்த பத்ர காளியின் மாஹாத்மியம் மார்க்கண்டேய புரா ணத்தில் உள்ளதாய்க் குறிக்கப் பெற்றுள்ளது.

ஆனந்த ரூபிணி காளி



தாரும்மதீ என்ற அசுரப பெண்ணுக்குத் தாருகன் என்ற புத்திரன் பிறந்தான். அவன் பிரம்மனைக் குறித்துத் தவம் செய்து தேவர் முதலியவர்களாலும் ஆயுதங்களாலும் சாகா வரம் பெற்றான். அதிகமான பலத்தையும் பிரம்மதேவரிடமிருந்து அவர் தண்டத்தையும் பெற்றான். அத்துடன் தன் ரத்தம் கீழே சிந்தினால் அதனின்றும் ஆயிரக்கணக்கான அவன் போன்ற அவுணர் தோன்றவும் வரம் பெற்றான். ஆயினும் அவன் பெண்ணினத்தை லட்சியம் செய்யவில்லை. ஆகவே அவன் பெண்கள் மூலமாய் சாகாவரம் பெறவில்லை. அதனால் பிரம்மா "நீ ஒரு திவ்ய ஸ்த்ரீயினால் மரணம் அடைவாய்" எனக்கூறி மறைந்தார்.

தாருகன் மாயா புத்ரீயான மனோஹரீ என்பவளை மணந்தான். ஸ்வர்கலோகம் சென்று தேவரை வெற்றி கொண்டு, அதைத் தன் வசமாக்கிக் கொண்டான். அனைவரும் தாருகனால் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்தனர்.

ஒரு சமயம் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலியவர் ஒன்று கூடி கயிலையில் யோசித்தனர். மஹாவிஷ்ணுவின் ஆலோசனைப்படி, பிரம்மா, விஷ்ணு, மஹேச்வரன், ஸ்கந்தர், இந்திரன்,

யமன் ஆகியோர் முறையே ப்ராம்ஹி, வைஷ்ணவி, மஹேச்வரி, கௌமாரி, இந்த்ராணி, வாராஹி என்ற ஆறு சக்திகளைத் (பெண்ணுருக் கொண்டவர்களை) தோற்றுவித்தனர். இவர்களுக்கு ஷண்மாதர் (ஆறுதாய்மார்கள்) எனப் பெயர் சூட்டினர்.

இவர்கள் அனைவரும் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி தாருகனுடன் போர் புரிந்தனர். அப்போது மஹேச்வரி அவனைத் தன் திரிசூலத்தால் குத்த, அவன் சரீரத்தினின்றும் ரத்தம் சிந்த, ஆயிரக்கணக்கில் தாருகன் போன்ற அசுரர்கள் உண்டானார்கள். அவர்களைக் கண்டு பயந்து ஆறு சக்திகளும் ஓடி மறைந்தனர்.

இது கண்டு தாருகன் தேவரைப் பரிகசித்தான். ருத்ரனையும் பரிகாசம் செய்தான். நாரதர் மூலமாய் இந்த விவரம் தெரிந்த ருத்ரன், ஸம்ஹார ருத்ரராய் மாறி மாபெரும் உருவங் கொண்டு வானளாவி வளர்ந்தார். அப்போது அவர் நெற்றிக் கண்ணினின்றும் பத்ரகாளி உதித்தாள்.

மலைபோன்ற கருத்த தேகம், ஆயிரம் முகங்கள், இரண்டாயிரம் கரங்கள், நெருப்பைக் கக்கும் லக்ஷக்கணக்கான கண்கள், பயம் விளைவிக்கும் அட்டகாசம் (பயங்கரச் சிரிப்பு) செய்யும் பத்ரகாளியைக் கண்டு பரமன் பக்கத்திலிருக்கும் பார்வதியே கலங்கினாள். பார்வதி அந்தக் காளியை அழைத்து "இந்த பயங்கரமான உருவத்தை நீக்கி, உன் சுய உருவங்கொள்" என்றாள். பத்ரகாளியும், மூன்று கண்களும், பதினாறு கைகளும், யானைத் தோலாடையும், யானை மணித்தோடுகளும், இரட கேயூராதி ஆபரணங்களும் கொண்டு சுமுகியாய் பார்வதி முன் காட்சி கொடுத்தாள். பார்வதியும் மகிழ்ந்து "நீ ஆறு மாதாக்களுக்கும் முதல்வியாய் இரு" என அருளினாள். "உன்னைச் சேர்த்துத் தாயர் எழுவராய் விளங்கட்டும்" எனவும் கூறினாள். உடன் அந்த பத்ர காளி கணங்கள் புடை சூழப் புறப்பட்டு தாருகனுடன் சண்டையிட்டு அவனை முச் சூலத்தால் அழித்தாள். தேவர் மகிழ்ந்து அவளைத் துதித்தனர்.

பத்ரகாளி நீ சத்ருக்களை ஸம்ஹரிப்பவள். அனைத்துக் கர்மாக்களுக்கும் நீதான் சாட்சி: நீ உக்ரமான சக்தி. உனக்கு நமஸ்காரங்கள்.

நீ மஹாவித்யா ரூபிணி. நீயே மஹாமாயா. மஹாகாளியும் நீயே. நீயே சிறந்த புத்தியாய் விளங்குகின்றாய். மஹாசுரனாகிய தாருகனை வதைத்தவள் நீ. ஹே பத்ரகாளி உனக்கு நமஸ்காரங்கள்.


பிரம்மா, விஷ்ணு, மஹேச்வரன், மற்றைய தேவர்கள் அனைவரின் தேஜஸ்ஸிலிருந்து நீ உதித்தவள். ஹே பத்ரகாளி உனக்கு நமஸ்காரங்கள்.

தக்ஷ யக்ஞம் அழித்த பத்ரகாளி

தக்ஷயக்ஞத்தின் போது தோன்றினாள் ஒரு காளி. ஸ்காந்த புராணம் இந்த பத்ரகாளி பற்றி விஸ்தாரமாய்ப் பேசுகின்றது.

முன்னொரு சமயம் கனகலம் என்ற கங்கைக் கரையிலுள்ள மஹாக்ஷேத்திரத்தில் பிரம்மாவின் புத்திரனாகிய தக்ஷன் என்பவன், தம் மாப்பிள்ளையாகிய ருத்ரனுக்கு ஹவிர்பாகம் கொடுக்காமல் ஒரு வேள்வி தொடங்கினான். அதனால் விதியை மீறும் தக்ஷன் மீது கோபங் கொண்டார் ருத்ரன். உடன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். அதினின்றும் ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் கொண்டு, வீரபத்திரர் தோன்றினார். தக்ஷனின் புத்ரீ ஸதி என்பவள். இவளை சிவன் மணந்து கொண்டார். அவள் தன் தகப்பனாகிய தக்ஷன் செய்யும் வேள்வி காணவும் அவனுக்கு உபதேசம் செய்யவும் எண்ணியவளாய் பரமன் வார்த்தையையும் மீறி யாக சாலைக்கு வந்தாள். வந்த சதி தேவிக்கு மரியாதை செய்யாமல் அவளை அவமதித்ததோடன்றி, சிவனையும் நிந்தித்தான். சதி பெருஞ்சினம் கொண்டாள். அவளது கோபமே காளி தேவியாய் உருவெடுத்தது. ஆயிரம் சிரங்களும் இரண்டாயிரம் கரங்களும் கொண்ட இக்காளி தனக்குத் துணையாக எட்டு காளிகளையும் தோற்றுவித்தாள். அவர்களின் பெயர்கள் :

காளி காத்யாயனி சாந்தா சாமுண்டா முண்டமர்த்தினி:



பாயசத்திற்குப் போட முந்திரிப் பருப்பு இல்லாவிட்டால் கவலை வேண்டாம். இரண்டு ஸ்பூன் நெய் விட்டு பொட்டுக்கடலையை பொன்னிறமாக வறுத்து, பாயசத்தில் சேர்த்துப் பாருங்கள்... மாறுபட்ட சுவை...

- வசந்தி

பத்ரகாளி ததா பத்ரா த்வரிதா வைஷ்ணவீததா:

காளி, காத்யாயனி, சாந்தா, சாமுண்டா, முண்டமர்த்தனி, பத்ர, த்வரிதா, வைஷ்ணவி என்பன. பத்ரகாளியையும் சேர்த்து ஒன்பது எனக் கூறுவர். இதனால் நவகாளிகள் ஆயினர். நவ துர்கைகள் போன்று நவகாளிகளும் பிரஸித்தமானவர்களே.

இந்த பத்ரகாளி சதி தேவியின் ஆக்ஞைப் படி வீரபத்ரருடன் சேர்ந்து எட்டு காளி களுடன் தக்ஷன் வேள்விச்சாலை சென்று அதனை அழித்தாள். இவளையும் பத்ரகாளி என்றே அழைப்பர்.

குஹ்ய காளி

தேவி பாகவதத்தில் குஹ்யகாளி என்பவள் பற்றியும் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டிருக் கின்றது. துர்கமன் என்ற அசுரன், தேவர் முனிவர் மற்றுமுள்ளவர்களிடமுள்ள மந்த்ரங் கள் அனைத்தும் தன்னிடம் வந்துவிட வேண் டும் என வரம் பெற்றான். அதனால் அனை வரும் மந்த்ரங்களை மறந்தனர். வேள்விகள் செய்ய முடியாத காரணத்தால் உலகில் துர் பிக்ஷம் உண்டாயிற்று. தேவர் ஹவிர்பாகம் இன்றி வருந்தினர். ஜீவராசிகள் ஜலமின்மை யாலும் உணவின்மையாலும் மடிந்தனர். இந்த சமயம் தேவர் பிரார்த்தனையால் சதாக்ஷீ என்ற சாகம்பரீ தேவி உதித்தாள். தன் கண்ணீரால், நதிகளையும், குளங்களையும் நிரப்பி உலகை வளமுறச் செய்தாள்.

மனிதனுடைய ஆணவ மலம், மாயாமலம், கன்ம மலம் என்கிற மூன்று மலங்களையும் போக்கக் கூடியவள் காளி தேவியே. மனத்தில் தவறான எண்ணங்களை விதைக்காமல், ஏகாக்ர சித்தத்தில் நல்லெண்ணத்தை (ஞான விசாரத்தைத்) தூண்டி அறிவைப் பிரகாசிக்கச் செய்பவள் காளி.

பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமி கள், சில பக்தர்களின் மிக இக்கட்டான சூழ் நிலையில் உள்ளவர்களின் சங்கட நிலையைப் போக்கிட காளியை ஆவாஹனம் செய்தே பூஜித்து, உத்தரவு கேட்பார்கள். விரோதிகளின் வியூகத்தை உடைத்து, அவர்களை நிலை குலையச் செய்து, பக்தனுக்காக, அவர் களுடைய பலத்தை பலவீனப்படுத்தி, வெற்றி தருபவள் காளிகாதேவி.

சென்னை அம்பத்தூர் ரெட்ஹில்ஸ் சாலை யில் அமைந்துள்ள ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தில் பிரதி அஷ்டமி தினங்களில் மகாகாளியை ஆவாஹனம் செய்து பூஜிப்பது பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் வழக்க மாகும். செய்வினைக் கோளாறினால் சில குடும்பங்களில் சகஜமான நிலை இல்லாமல் திடீரென சண்டை வந்துவிடும். அமைதியிழந்து களையிழந்து பிரியமானவர்கள் கூட பிரிந்து விடும்படியான சூழ்நிலை வந்துவிடும். சனிக் ரஹ கொடுமை காரணமாய் உடம்பில் வியாதி, தீராத நோய், பணக்கஷ்டம், கடன் போன்றவை ஏற்பட்டு வறுமையில் தள்ளிவிடும். பணம் நிறைய இருந்தும் மங்கல வாழ்வு கிட்டாது. வீட்டில் கீழ்த்தரமான வார்த்தைகளால் ஒருவ ரை ஒருவர் திட்டிக் கொள்வார்கள். வெளியில் இருந்து வீட்டிற்கு வந்தால் போதும் போர்க் களமாய் வீடு மாறிவிடும். ஏன் வீட்டிற்கு வரு கிறோம் என நினைக்கத் தோன்றும். எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் புரிந்து கொள்ள மாட் டார்கள். அவர்கள் தகாத செயலைச் செய்தும், தொடர்ந்து அந்தச் செயலில் தீவிரம் காட்டி சந்தோஷமாய் இருந்த குடும்பத்தில் நிம்மதி விழக்கும்படியான நிலையை உருவாக்கி விடு வார்கள். ஏன் இவ்வாறு அவர்கள் செய்கிறார் கள் என்பது அவர்களுக்கே தெரியாது. அதைச் சொன்னாலும் கேட்க மாட்டார்கள்.

காலம் காளிதேவியிடம் தனது வேலையைக் காட்டாது. காலத்தை மாற்றி அருள்பவள் காளி. அதனை நன்குணர்ந்த ஸ்ரீஸ்வாமிகள் தக்ஷிணகாளி என்கிற ஸ்ரீவித்யா மகாராக் ஞியின் பூஜையில் இப்படி பாதிக்கப்பட்ட, அன்பர்களுக்காக நெக்குருக பிரார்த்தித்து வேண்டுவோருக்குப் பிரத்யட்சமாக காளி மாதா கருணை புரியத் தொடங்குகிறாள். மலை போல் குவிந்த பாவக் குவியலையும், தீவினை யையும், கோடாரி போன்று காளி வெட்டி வீழ்த்துகிறாள். இதனை நாங்கள் கண்கூடாக பார்த்துக் கொண்டுதான் வருகிறோம்.

— ஸ்ரீ பரத்வாஜ சுவாமிகள்



இந்த வெய்யிலில் தயிர் புளித்து விட்டால் மோர்க்குழம்புதான் வைக்க வேண்டும் என்று இல்லை. ஒரு கப் தயிரில் 5 ஸ்பூன் சர்க்கரை, ஒரு ஸ்பூன் வெண்ணெய், சிட்டிகை உப்பு, 3 ஐஸ் துண்டுகள் சேர்த்து, மிக்ஸியில் அடித்து பருக லஸ்ஸி சுவையுடன் இருக்கும். அதோடு புளிப்பு எங்கே எனத் தேடுவீர்கள்!

— பாலா

திருமதி குமுதவல்லி, புதுவை.

எனக்குச் செடிகள் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வமுண்டு. ஆனால் எங்கள் வீட்டில் செடிகள் வளர்க்க மண்தரை இல்லை, என்ன செய்யலாம்? செம்பருத்தி போன்ற செடிகளைத் தொட்டிகளில் வளர்க்கலாமா?

வளர்க்கலாம். போதிய அளவு வெயில் வருகிறதா என்று பார்த்து அதற்கு ஏற்ற செடிகளாக தேர்ந்தெடுங்கள். வெயில் போதவில்லை என்றால் Indoor செடிகள் வளர்க்கலாம். வெயில் இருக்கும் பட்சத்தில் பூச்செடிகளைத் தாராளமாக தொட்டிகளில் வளர்க்கலாம்.



மண்ணே இல்லாமல் செடிகள் வளர்க்கும் முறை கூட உலகில் உள்ளது தெரியுமா உங்களுக்கு? ஹைட்ரோபோனிக்ஸ் (Hydroponics) என்பது இப்படி ஒரு வகைதான். அதாவது செடிகளை தண்ணீரில் வளர்ப்பது. செடிகளுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் தண்ணீரிலேயே கலந்து கிடைக்குமாறு பார்த்துக் கொண்டால், செடிகள் மண் இல்லாமல் தண்ணீரிலேயே வளரும். எல்லா வகையான வீட்டுச் செடிகள், குரோட்டன்ஸ் என்கள்ளிச் செடிகளைக் கூட இப்படி மண்ணே இல்லாமல் தண்ணீரில் வளர்க்கலாம்.

மண் பரப்பு அதிகம் இல்லாத ஜப்பான் தீவிலும் மண்ணில் வளமில்லாத அரபு நாடுகளிலும் இந்த முறை பரவலாக உள்ளது. மண் பரப்புக்குப் பஞ்சமில்லாத இந்தியாவில் இது அதிகம் பிரபலமாகவில்லை. மேல் சொன்ன நாடுகளில் காய்கறிகள், கீரைகள், பூச்செடிகள் ஆகியவற்றை இந்த முறையில் உற்பத்தி செய்கிறார்கள்.

தண்ணீரில் செடிகள் வளர்ப்பதால் மண்ணோடு சம்பந்தப்பட்ட பூச்சிகள், நோய்கள் செடிகளைத் தாக்குவதில்லை. தண்ணீரில் செடிகள் வளர்ப்பது அத்தனை சுலபமான காரியமில்லை. பெரிய ஆய்வுக் கூடங்களில் தண்ணீர் குடுவைகளில் செடிகள் வளர்க்கிறார்கள். சீதோஷ்ணம், வெளிச்சம், தண்ணீரில் கலந்துள்ள சத்துக்களின் விகிதாசாரம் ஆகியவற்றைப் பார்த்துப் பார்த்து கவனித்து வளர்க்கிறார்கள். வேர்கள் தண்ணீரில் வளர்வதால், செடிகள் தங்கள் வெயிட்டைத் தாங்கி நிற்பதற்கு குச்சிகளோடு சேர்த்துக் கட்டி, அதன் மேல் படர விடுகிறார்கள். ஆக, நமது வயல் வெளிகளில் காற்று வீச, அதற்கேற்ப தலையசைத்து நிமிர்ந்து நிற்கிற செடிகளைப் பார்க்க முடியாது. தக்காளிச் செடிகள் 10, 12 காய்களோடு வெயிட் தாங்க முடியாமல் குச்சிகளில் சாய்ந்து தண்ணீரில் நிற்கின்ற காட்சி பார்க்க வித்தியாசமாக இருக்கும்.

திருமதி ரேவதி ராமு, சென்னை.

எங்கள் வீட்டில் ரோஜாச் செடி மிகவும் உயரமாக மரம் போல உள்ளது. அதைப் பதியன் போடும் முறையைக் கூறுவீர்களா?

செடிகளை பதியன் போடுவது பொதுவாகவே எளிதான ஒன்று. முதலில் நன்கு வளர்ந்துள்ள கிளைகளாகத் தேர்ந்தெடுங்கள்.

இவற்றை மண்ணைத் தொடுமாறு வளைத்து, அதில் ஒரு பகுதியை மண்ணில் புதையுங்கள். கிளையின் வளரும் நுனிப் பகுதி புதைக்கப்படாமல் மேல் நோக்கி இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். மண்ணில் புதைந்துள்ள கிளைப் பகுதியின் கணுக்களில்

வீட்டுக்குள் தோட்டம்

பதில்கள் : தண்மதி திருவேங்கடம்

தொலை பேசி எண்: 04144-22810 ஃபாக்ஸ்: 04144-22987

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தொலைதூரக் கல்வி இயக்ககம்

திறந்தமுறைப் பல்கலைக்கழக அமைப்பு

1998-99 ஆம் ஆண்டுக்கான சேர்க்கை அறிவிப்பு - முதுகலை, இளங்கலை மற்றும் பட்டயப் படிப்பு

தொலைதூரக் கல்வி இயக்ககம் கீழ்க்கண்ட படிப்புகளைத் திறந்தமுறைப் பல்கலைக்கழக அமைப்பின் கீழ் வழங்குகிறது.

சேர்க்கைக்கு முறையான கல்வித் தகுதி தேவையில்லை

1. முதுகலை படிப்புகள்: (இரண்டு ஆண்டுகள்)

   எம்.ஏ: வரலாறு*/பொருளாதாரம்*/சமூகவியல்*/ஆங்கிலம்/தமிழ்/பொதுத்துறை ஆட்சியியல்/மக்கள் தொகையியல்*

   எம்.காம்.* கூட்டுறவு மேலாண்மை

2. இளங்கலை படிப்புகள்: (மூன்று ஆண்டுகள்)

   பி.ஏ: வரலாறு*/சமூகவியல்*/உளவியல்/பொருளாதாரம்*/அரசியல் அறிவியல்*/ஆங்கிலம்/தமிழ்/மக்கள் தொகையியல்*

   பி.லிட்.(தமிழ்)/பி.காம்.*/பி.எஸ்ஸி.(கணிதம்)

3. பட்டயப் படிப்பு: (ஓராண்டு) சைவ சித்தாந்தம்*

(*இக்குறியிட்டவை அனைத்தும் ஆங்கிலம் மற்றும் தமிழ் வழி சார்ந்தவை)

தகுதி:

இளங்கலை, பட்டயப் படிப்புகளில் (எண்கள் 2 மற்றும் 3) சேர விரும்புபவர்கள் 01.07.1998 அன்று 18 வயது நிரம்பியவர்களாகவும், முதுகலை படிப்புகளில் (எண் 1) சேர விரும்புபவர்கள் 25 வயது நிரம்பியவர்களாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர்தான் அவர்களுடைய படிப்புச் சேர்க்கை நிரந்தரமாக்கப்படும்.

விண்ணப்ப வேண்டுகோள் கடிதத்துடன் Director, D.D.E., Annamalai University என்ற பெயரில் ரூ.50/க்கான வங்கி வரைவினை (Demand Draft) அண்ணாமலைநகர் அல்லது சிதம்பரத்தில் உள்ள எந்த வங்கியிலும் மாற்றக் கூடியதாக எடுத்து தனி அதிகாரி, திறந்தமுறைப் பல்கலைக்கழக அமைப்பு, தொலைதூரக் கல்வி இயக்ககம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் - 608 002 என்ற முகவரிக்கு தன் முகவரி உள்ள உறையுடன் (27 செ.மீ. × 21 செ.மீ.) அனுப்பி விண்ணப்பப் படிவத்தையும் குறிப்பேட்டையும் பெற்றுக்கொள்ளலாம். காசோலைகள், பணவிடைகள் மற்றும் அஞ்சல் ஆணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. **01.04.1998**க்கு பிறகு எடுக்கப்பட்ட வங்கி வரைவுகளே ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவத்தினை பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் ரூ.50/- ஐ தொலைதூரக் கல்வி இயக்கத்திலும் மற்றும் கீழ்க்கண்ட படிப்பு மையங்கள், மற்றும் தொடர்பு மையங்களிலும் அலுவல் நேரங்களில் நேரடியாகச் செலுத்தி **11.04.1998** முதல் விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்துச் செவ்வாய்க் கிழமைகளும், இரண்டாவது திங்கட் கிழமைகளும், மற்ற எல்லா பொது விடுமுறைகளும் படிப்பு மையங்களுக்கும் மற்றும் தகவல் தொடர்பு மையங்களுக்கும் விடுமுறை நாட்களாகும்.

விண்ணப்பப் படிவங்கள் **22.06.98** வரை அளிக்கப்படும். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி நாள்: **29.06.1998.**

நேரடிச் சேர்க்கை:

நுழைவுத் தேர்வுக்கான நேரடிச் சேர்க்கை தொலைதூரக் கல்வி இயக்ககம் மற்றும் அனைத்து படிப்பு மையங்களிலும் **11.04.98** முதல் அனுமதிக்கப்படும். 1995-96, 1996-97, 1997-98-ம் ஆண்டுகளில் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, வகுப்பில் சேர முடியாதவர்கள் இவ்வாண்டு நுழைவுத் தேர்வின்றி சேரலாம்.


விண்ணப்பப் படிவம் மற்றும் சேர்க்கை பற்றிய விவரங்கட்கு, மாணவர்கள் நேரடியாக படிப்பு மையங்களையும் நேரடியாக அல்லது தபால் மூலமாக தொலைதூரக் கல்வி இயக்கத்தையும் அணுகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சேர்க்கை, தனிப்பட்ட அமைப்புகள் அல்லது நபர்கள் மூலம் வழங்கப்படுவதில்லை. முறைகேடான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இடம்: அண்ணாமலைநகர்
நாள்: 01.04.1998

டாக்டர். எல்.பி. வெங்கட்ரங்கன்
இயக்குநர்

படிப்பு மையங்கள்: 1. கல்கத்தா: 19, சர்தார் சங்கர் ரோடு, கல்கத்தா - 700 029 (☎ 4667215), 2. கோயம்புத்தூர்: 72, சரோஜினி தெரு, ராம்நகர், கோயம்புத்தூர் - 641 009 (☎ 234406), 3. காரைக்குடி: 7, ஏழாவது தெரு, சுப்பிரமணியபுரம், காரைக்குடி - 630 002 (☎ 23417), 4. சென்னை: i) 19, ருக்குமணி லெட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 600 008 (☎ 855010); #ii) 27, வடக்கு பூங்கா தெரு, வெங்கடபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053; iii) 138, ஜி.என்.டி ரோடு, (வெற்றி தியேட்டர் எதிரில்) குரோம்பேட்டை, சென்னை - 600 044, 5. மதுரை: 176, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001 (☎ 628327), 6.#நாகர்கோவில்: 316-ஈ, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629 003 (☎ 30561), 7. புது தில்லி: 51.A, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, துக்லகாபாத் (பத்ரா ஆஸ்பத்ரி அருகில்) புதுதில்லி - 110062 (☎ 6987638), 8.சேலம்: 15, டாக்டர் சுப்பராயன் தெரு, (பேலஸ் தியேட்டர் அருகில்) சேலம் - 636 001 (☎ 419660), 9. திருநெல்வேலி: 1-சி, ரோச் பில்டிங், இரண்டாவது மாடி (பாளை பஸ்ஸ்டாண்ட் அருகில்) ஹை கிரவுண்ட் ரோடு பாளையங்கோட்டை - 627 002 (☎ 572923), 10. திருச்சி: 32-பி, 7வது குறுக்கு சாலை, தில்லைநகர், திருச்சி- 620 018, (☎ 760950), 11. வேலூர்: 4, தியாகராஜபுரம்,(லெட்சுமி திரை அரங்கு அருகில்), வேலூர் - 623 001 (☎ 27647). (# இக்குறியிட்டவை தொடர்பு மையங்கள்)

இருந்து வேர்கள் தோன்ற ஆரம்பிக்கும். இப்போது வளைத்த கிளைப் பகுதியை வெட்டி விட்டால் இரண்டு செடிகள் கிடைக்கும். வளரும் நுனிப் பகுதியில் புதிய இலைகள் தோன்றியவுடன் வெட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது என்று தெரிந்து கொள்ளலாம். கொய்யா, மல்லி, ரோஜா ஆகியவை பதியன் போட ஏற்றவை.



ரோஜாவை பதியன் போடுவதைவிட 'கட்டிங்' போடுவது ஒரே சமயத்தில் நிறையச் செடிகள் கிடைக்க சிறந்த வழி. விரல் தடிமன் உள்ள கிளைகளாகப் பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள். மேல் நோக்கு வெட்டுக்களாக வெட்டி, ஜாண் நீளத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். இவற்றை மண்ணில் (செம்மண் ஒரு பங்கு, மணல் 2 பங்கு, கம்போஸ்ட் 1 பங்கு கொண்ட ஸ்பெஷல் கலவை) நட்டு வைத்தால் எளிதில் வேர் பிடித்து நிறையச் செடிகள் கிடைக்கும்.

திருமதி சுந்தரி, சென்னை.

Moss stick என்றால் என்ன? இதனை எதற்குப் பயன்படுத்துகிறார்கள்?


கொடி வகைச் செடிகள் கொழுகொம்பு கிடைத்தால் நன்கு வளர்வது இயற்கையல்லவா? இம்மாதிரியான செடிகளை நாம் ஆசைக்காக வீட்டில் வளர்க்கும்போது தடிகளை அல்லது குச்சிகளை ஊன்றி அதன்மேல் படர விடுகிறோம். Money plant, Philodendron போன்ற அழகுச் செடிகளை வளர்க்கும்போது அவை நன்கு வளர்வதற்காக நாம் செய்து தரும் ஒரு கொழுகொம்புதான் Moss stick. இது ஸ்பாக்னம் மாஸ் (Sphagnum Moss) எனப்படும் ஒரு வகைப் பூஞ்சையைக் கொண்டு தயாரிக்கப்படுவது. இந்தப் பூஞ்சையை ஒரு தடியைச் சுற்றி வைத்து, நைலான் கயிற்றால் நெருக்கமாகக் கட்டித் தருவார்கள். அதன் மேல் செடிகளை ஏற்றிவிட்டால் வேர்கள் பரவி, பெரிய பெரிய இலைகளோடு நன்கு வளரும். மாஸ் ஸ்டிக்கை வீட்டில் எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு எப்படித் தயாரிப்பது என்று சென்ற இதழில் விளக்கியிருந்தேன்.


செய்து பாருங்கள் :

செடிகள் பெரிதாக வளர்ந்து விட்டன, வேறு தொட்டியில் மாற்றுவது எப்படி என்று பலரும் கேட்கிறார்கள். வளர்ந்துவிட்ட செடிகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படாமல், நீங்களே புதிய, பெரிய தொட்டிக்கு, எளிதாக மாற்றலாம்.

1. தொட்டியை முதலில் நீர் ஊற்றி நனைத்துக் கொள்ளுங்கள். பின் செடியைப் பிடித்துக் கொண்டு தொட்டியை தலைகீழாகச் சாய்த்துத் தட்டுங்கள். செடியுடன் கூடிய மண் பகுதி, தொட்டியை விட்டுத் தனியாக வந்துவிடும்.

2-3) இதைப் பெரிய தொட்டியில் வைத்து செம்மண், மணல், கம்போஸ்ட் மூன்றும் சமபங்காகக் கலந்த கலவையினால் தொட்டியை நிரப்பிப் பின் நீர்ப் பாய்ச்சுங்கள். புதிய தொட்டி ரெடி.





‘ஆண்பார்த்த அடுக்குள்ளும், பெண் பார்த்த அம்பலமும்’ என்று முன்பு சொன்ன பழமொழி இக்காலத்துக்கு ஒவ்வாது. பிள்ளைக் குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே, காப்பி கூட வைக்க, பால் காய்ச்ச, 15 வயதில் சாதம், குழம்பு, பொரியல் செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். வேலை நிமித்தம் வெளிநாடு செல்லும் பிள்ளைகள் சமைத்துச் சாப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் வரும்போது விழிக்க வேண்டாம். திருமணம் ஆன பின்பும், மனைவி பிரஸவத்துக்குப் போகும் போதும் கைகொடுக்குமே.

— ஆர். பார்வதி

திரு ரத்தினம், சென்னை.

எங்க்ள் வீட்டில் சப்போட்டா சரியாகக் காய்க்க மாட்டேன்கிறது. நான்கு வருடங்களாகியும் பயன் இல்லை. என்ன செய்வது?

சப்போட்டாவில் ஓவல், கிரிக்கெட் பால், பாலா, கீர்த்தி பர்த்தி, பாரமாசி என்று ஏகப்பட்ட வகைகள் உள்ளன. அது போல் ரகங்களும் அநேகம். பொதுவாக கோ - 1, கோ - 2, பெரிய குளம் - 1 ஆகியவை நம் பகுதிகளுக்கு ஏற்றவை. மே மாதத்தில் (வைகாசி - ஆனி) முதலில் 3X3X3 அடி அளவில் குழி தோண்டிக் காயவிடுங்கள். ஒரு மாதம் கழித்து மட்கிய தொழு உரத்தையும், மேல் மண்ணையும் அடுத்தடுத்து இட்டு நிரப்பி நீர்ப் பாய்ச்சுங்கள். செடிகளை நடும்போது ஒவ்வொரு குழியிலும் மேல் மண்ணுடன் ¼ கிலோ காம்ப்ளெக்ஸ் உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1 கிலோ இயற்கை உரம் அல்லது கம்போஸ்ட் கலந்து இடுங்கள். ஜூலை முதல் நவம்பர் வரை (ஆடி - மார்கழி வரை) செடிகளை நடலாம். மா, சப்போட்டா கன்றுகளை நடும்போது ஒட்டுக் கட்டப்பட்ட இடம் தரை மட்டத்திற்கு மேல் அரை அடி உயரத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். செடிகள் காற்றில் ஆடாமல் இருக்க குச்சிகளை இருபுறமும் வைத்துக் கட்டுங்கள். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு செடியின் தண்டுப் பகுதியில் பூமியிலிருந்து சுமார் 2 அடி உயரம் வரை தோன்றும் தளிர்களை நீக்குங்கள். இதனால் செடி ஒரே ஒரு உறுதியான தண்டுடன் வளரும். முதல் நான்கு ஆண்டுகளுக்கு அவ்வப்போது நீர்ப் பாய்ச்சிக் கொண்டிருங்கள். முதலாண்டில் செடிகளின் மீது மாதமொருமுறை வேப்பம் புண்ணாக்கு கரைக்கப்பட்ட தெளிந்த நீரைத் தெளிக்கலாம். இது பூச்சிகளைக் கட்டுப்படுத்தும். சப்போட்டாவிற்கு வருடம் இருமுறை உரமிடுதல் நல்லது. 5 வருடங்களுக்கு மேற்பட்ட மரங்களும் உர விபரமும்:

உரம்	**ஜூலை-ஆகஸ்ட் (கிலோவில்)**	**அக்டோபர்-நவம்பர் (கிலோவில்)**
தொழு உரம்	50	50
கடலை/வேப்பம் புண்ணாக்கு	5	5
அம்மோனியம்சல்பேட்	3	2
சூப்பர் பாஸ்பேட்	–	2
பொட்டாஷ்	2	2

இவற்றைச் சரியாகச் செய்து வந்தால் ரகத்திற்குத் தகுந்தாற் போல் மரமொன்றுக்கு 300 - 1000 வரை காய்கள் பெறலாம்.

வேர்க்குரு என்பது வெறும் அரிப்பல்ல.
அது ஒரு சருமக்கோளாறு.



விரைவில் நிவாரணம் பெற நைஸில்.

வெயில் காலத்தில் வியர்த்துக்கொட்டி, பிசுபிசுவென்று உடல் இருக்கையில் உங்கள் சருமத்தின் வியர்வை சுரப்பிகள் அடைத்துக்கொள்ளும். அதனால் அரிப்பு ஏற்படும், கடுமையாக சொரியத் தூண்டும்.

அப்போது சருமத்தில் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு.

நைஸிலில் மட்டுமே உள்ளது கிருமிகளைக் கொல்லும் க்ளோர்க்ஃபெனஸின். இந்த முக்கிய உட்பொருள் வேர்க்குருவுக்கு எதிராக கடுமையான செயல்புரியும். அதனால் வேர்க்குருவிலிருந்து விரைவான நிவாரணம் தருவது மட்டுமல்லாது, அதைச்செய்கையில் இதமும், சுகமும் கூடுதலாய் தரும்.



நைஸில்

வேர்க்குரு பவுடர்

2161.98

கிருமிகளைக் கொல்லும் க்ளோர்க்ஃபெனஸின் அடங்கியது.

சென்னையில் அங்குமிங்கும் ஏதோ ஒன்றிரண்டு பெண்கள் ஆட்டோ ஓட்டினாலும், முறையாக 'இனோடா' என்ற அமைப்பின் மூலம் சென்னை அண்ணா நகரில் பெண்களுக்கு மட்டும் ஆட்டோ நிலையம் துவங்கப்பட்டிருக்கிறது.



'இனோடா' அமைப்பு, நாராயணன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பின் மூலம் பெண்களுக்கு இலவச பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. திருமதி வசந்தா ராமமூர்த்தி தான் இந்த பெண்களுக்கு முன்னோடி, வழிகாட்டி பயிற்சியாளர்... எல்லாம்! திருமதி வசந்தாவின் கணவரும் ஆட்டோ ஓட்டுகிறார். கணவரின் ஒத்துழைப்புடன் கடந்த 5, 6 வருடங்களாக இவர் சென்னையில் ஆட்டோ ஓட்டுகிறார். இவருக்கு ஆட்டோ மட்டுமல்ல, பஸ் ஓட்டுவதிலும் ஆர்வம் உண்டாம்! அதற்குத் தேவையான 'ஹெவி லைஸன்ஸும்' வாங்கியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் சென்னை, கோயம்பேட்டில் நூறு பெண்களுக்கு ஆட்டோ ஓட்ட பயிற்சி அளித்திருக்கிறார்.

ஆட்டோ ஓட்டுவது ஜாலியா இருக்கு?

இதில் தற்சமயம் 15 பெண்கள் ஆட்டோ ஓட்டத் துவங்கியுள்ளனர். அவர்களை சந்திக்கச் சென்ற போது, 'நிலையத்திற்கு' வந்து நின்ற உடனேயே சவாரி கிடைத்து 'பறந்து' கொண்டிருந்தார்கள். நம்மிடம் சிக்கியவர், குமாரி அருள் ஜோதி. அவருக்கும் பத்து நிமிடங்களில் பயணிகள் கூப்பிட, சீக்கிரம் பேட்டியை முடித்துக் கொடுத்து விட்டே ஆட்டோவைக் கிளப்பினார்...

கே: வித்தியாசமான இந்த ஆட்டோ ஓட்டும் தொழிலில் ஈடுபட ஏதாவது தனிப்பட்ட காரணம் உண்டா?

"நான் +2 முடிச்சதும், மேலே படிக்கத்தான் ஆசைப்பட்டேன். வசதியில்லை. படிச்சா மட்டும் என்ன வேலை காத்துக்கிட்டா இருக்கு? சின்ன வயசிலேயிருந்து எனக்குத் துணிச்சல் அதிகம். அதனால இங்கே அக்கா (வசந்தா ராமமூர்த்தியை அப்படித்தான் கூப்பிடுகிறார்கள்) ஆட்டோ ஓட்ட கத்து தரதைப் பற்றி கேள்விப்பட்டு, கத்துக்கிட்டு, இப்போ ஓட்ட ஆரம்பிச்சுட்டேன்."




கே.: இந்த அமைப்பில் இருக்கும் மற்ற பெண்களும் உங்களைப் போலத்தானா?

"என்னைப் போல 'குமாரிகள்' இருக்காங்க, கல்யாணமானவங்க, விதவைங்க, அகதிகள் இப்படி பலதரப்பட்ட பெண்கள் இருக்காங்க."

கே.: இது உங்க சொந்த ஆட்டோவா?

"இல்லை வாடகைக்குத்தான். தினமும் காலை எட்டு மணிக்கு எடுத்து, மாலை ஆறரை மணிக்குத் திரும்ப விடுவேன். பெண்கள் பொறுப்பாக பணத்தை ஒழுங்காக கட்டிவிடுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பாங்கில் எங்களுக்கு கடன் கொடுக்க முன் வந்திருப்பதால், நானும் இந்தத் திட்டத்தில் கூடிய சீக்கிரம் சொந்தமாக ஆட்டோ வாங்க திட்டமிட்டிருக்கிறேன்."



மிளகை வறுத்துப் பொடி செய்து, குழந்தைகளுக்குப் பருப்பு சாதத்தில் ஒரு சின்ன சிட்டிகை கலந்து ஊட்டினால், வயிறு மப்புத்தட்டாது. மிளகு ரஸத்தை விட, இது எஃபெக்ட் ஜாஸ்தி.

— ஆர். பார்வதி

கே: முதல் நாள் அனுபவம் எப்படி இருந்தது?

"என்னதான் பயிற்சி எடுத்திருந்தாலும் முதல் நாள் நெர்வஸ்ஸாக இருந்தது உண்மை தான். கூடவே அக்காவும், சக நண்பர்களும் உற்சாகமூட்டவே, இயல்பாக ஓட்ட ஆரம்பித் தேன். இப்போ ஆட்டோ ஓட்டறது ரொம்ப 'ஜாலியாக' இருக்கு!"

கே: உங்களைத் தேடி பயணிகள் வருகிறார்களா? இல்லை...

"முக்கியமாக பெண்கள், எங்களைப் பார்த்தால் உற்சாகமாக (ஆண் டிரைவர்களைத் தவிர்த்து) வருகிறார்கள். வயதானவர்களும் எங்களிடம் பத்திரமாக ஓட்டுவியா என்று பாசத்தோடு கேட்பார்கள்.

ஆண்களும் வருவதுண்டு. ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவதானால் கட்டாயம் எங்களைத்தான் கூப்பிடுகிறார்கள். எல்லாப் பயணிகளும் எங்களுடன் ஒத்துழைக்கிறார் கள்."

கே: வம்புக்காக வரும் 'ஜொள்ளு பார்ட்டி', 'போதை' பயணிகளை ஏற்றிக் கொள்வதுண்டா?

"சிலரை பார்த்தவுடனேயே ஆபத்தான பயணி என்று தெரிந்துவிடும். அவர்களிடம், வண்டி 'வெயிட்டிங்'கில் இருக்கு, வராது என்று சொல்லிவிடுவேன். கவனிக்காமல் ஏறிவிட்டு, பிறகு இறங்கும் போது வம்பு செய்கிறவர்களும் உண்டு. அந்த சமயங்களில் எங்கள் 'சகோதர ஓட்டுனரை'க் கூப்பிட்டால் உதவிக்கு வருவார் கள். அப்படி உதவ முடியாத சந்தர்ப்பம் ஏற் பட்டால் நானே சமாளிக்கத் தயாராகிவிடு வேன். காரணம் பயிற்சியின் போது தற்காப் பிற்கு 'கராத்தே' கற்றுக் கொண்டிருக்கிறோம்! ஆனால் இது போன்ற அனுபவம் இதுவரை ஏற்படவில்லை."

கே: எப்போது கூப்பிட்டாலும் வருவீர்களா?

"காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரைதான் எங்கள் நேரம். இரவில் நாங்கள் ஓட்டுவதில்லை. எங்களுக்கும் தற்காப்பு தேவை!

கே: வண்டியை வேகமாக ஓட்டுவது, 'ஓவர் டேக்' செய்வது உண்டா?

"அப்படியெல்லாம் போகமாட்டோம். வண்டியில் பயணிகள் ஏறிவிட்டால் நமக்குத் தான் பொறுப்பு அதிகமாயிடறது. அநேகமாக பெண்கள் குழந்லைதகளோடு வாராங்க. அதனால் 'ஓவர் டேக்' செய்யறது எல்லாம் கிடையாது. பயிற்சியின் போதே எங்களுக்கு கத்துக் குடுத்த பாடம் 'நிதானம்'. அதை மறக்க மாட்டோம்."

கே: உங்கள் 'மீட்டர்', சூடாயிருக்குமா?

"உங்கள் கேள்வி புரிகிறது. இது 'சூடு' மீட்டர் இல்லை. சரியானதுதான். பேராசை, பணம் சம்பாதிக்கும் ஆசையில் யாரோ செய்யும் தவறால் பொதுவாக எல்லா ஆட்டோ மீட்டர்களும் 'சூடு'ன்னு முத்திரை குத்திடாதீங்க. நிறைய நல்லவங்களும் இருக் காங்க. நாங்க மீட்டருக்கு மேலே கேட்ப இல்லை. குடுத்தாக் கூட வாங்க மாட்டோம். நியாயம், நேர்மையான முறையிலே, வண்டி ஓட்டி வரும் வருமானமே போதும்ங்கற திருப்தி இருக்கு. பெரிய லக்கேஜ், இருந்தாத்தான் அதற் குக் கேட்பது வழக்கம். அடுத்த தெருவுக்குக் கூப்பிட்டாக் கூட வருவோம்."

கே: இப்போ 'குண்டு வெடிப்பு' வதந்தி அதிகமாகயிருக்கே. எப்படி சமாளிப்பீங்க?

"பெண்களுக்குச் சாதாரணமாக 'உள் ளுணர்வு' அதிகம்னு நான் நினைக்கிறேன். வண்டியில் ஏறும் நபர், கையிலே சந்தேகப்படும் படியான பெட்டி ஏதாவது இருந்தா, பார்வை யிலே எடை போடுவோம். நாங்க, சந்தேகப் படறது தெரிஞ்சவுடனேயே நழுவி விடுவாங்க. அப்படியில்லைனாலும் சக ஆட்டோ டிரை

வர்கள் உதவிக்கு வருவாங்க!"

கே: யூனிஃபார்ம் போடறதை நீங்க விரும்பறீங்களா?

"நிச்சயமாக விரும்பறோம். வழக்கமா உடுத்தற புடைவை, சல்வார் கமீஸ் மேலே 'காக்கி' சட்டை போடறது கண்யமாகதான் இருக்கு!"

கே: வண்டி ஓட்டும் போது வழியில் கோளாறு ஏற்பட்டால் சமாளிப்பீங்களா?

"காலையில் வண்டி எடுக்கும்போது, செக் பண்ணிதான் எடுப்போம். இன்று கூட 'பாரீஸ்' போகும் போது, சின்ன கோளாறு ஏற்பட்டது. வண்டி நின்றதும், அந்தப் பக்கம் போகும் ஆட்டோ டிரைவர், விசாரித்து, வண்டியைச் சரி செய்து கொடுத்தார். அடுத்ததாக அதற்கும் பயிற்சி பெற்று விடுவோம்."

கே: சக ஆட்டோ (ஆண்) டிரைவர்கள் உங்களை வரவேற்கிறார்களா?

"நிச்சயமாக. நீங்களே பார்த்தீங்க, இங்க இருக்கறவங்க எங்களுக்கு உடன் பிறந்தவர்களைப் போலத்தான் உதவி செய்யறாங்க. அறிமுகம் இல்லாதவங்க கூட வழியிலே 'ஹலோ' என்று கை ஆட்டி உற்சாகப்படுத்தி விட்டுப் போகிறாங்க. இதுவரை எந்த எதிர்ப்பும் காட்டவில்லை."

கே: உங்கள் எதிர்கால திட்டம்... திருமணம் செய்து கொள்வீர்களா?

"+2 படித்துவிட்டு மேலே படிக்க வசதி இல்லாத காரணத்தால் ஆட்டோ ஓட்டும் பயிற்சி பெற்று ஓட்டுகிறேன். சொந்தமாக ஆட்டோ வாங்க வேண்டும், மேலே படிக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் ஆட்டோ ஓட்டுவதை நிறுத்த மாட்டேன்! என்னைப் புரிந்து கொண்டு, ஆட்டோ ஓட்ட அனுமதிக்கும் நபரை நான் மணக்கத் தயார். ஆபீஸ் போவது போல், இதுவும் ஒரு 'வேலைதான்'! நிறைய பெண்கள் இந்தத் துறைக்கு வரவேண்டும் என்பதுதான் என் ஆசை. இதில் நேர்மையும், தன்னம்பிக்கையும்தான் மூலதனம்! பயணிகளுடன் நல்ல நட்புறவை ஏற்படுத்திக் கொண்டு சேவை செய்ய வேண்டும் என்பதே என் குறிக்கோள்!"

பேட்டி : **லக்ஷ்மி ஸ்ரீநிவாஸ்**

அழகுக்கு அழகு செய்ய...

ஆரோக்கியத்தின் அருமை பெருமைகளை அறியாதாரில்லை. ஆரோக்கியமே அழகு. ஆரோக்கிய அகத்தை அடைவதற்கும் காப்பாற்றுவதற்கும் சில முறைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என எண்ணுபவர்கள் சிலர். எண்ணினாலும் முறைகளை அனுஷ்டிக்க முயற்சி செய்பவர் மிகச் சிலரே.

சாதாரணமாக உடல் ஆரோக்கியமாக இருக்கும் வரையில் மக்கள் உடலைப் பற்றிக் கவனிப்பதில்லை. பலம் குறைந்து நோய் கண்டு அவதிப்படும் போதுதான் உடலைப் பற்றிக் கவனிக்கத் தொடங்குகின்றனர். ஒருவர் தன் உடலைப் பற்றிக் கவனிக்க வேண்டிய காலம் இளம் பிராயமே.

பல வியாதிகள் பரம்பரையாக வருகிறது. என்னிடம் வருபவர்கள் 'எங்கள் பரம்பரையில் இளம் நரை உள்ளது அதனால் எனக்கும் வருகிறது' என்று கூறுவர். பரம்பரை குணம் போல, இது போன்ற சில குறைகளும் அப்படியே வருகிறது. ஆனால் இவற்றையும் தடுக்கலாம். எதற்கு எடுத்தாலும் அவசரம், டென்ஷன், கோபம், சத்து குறைவு. இவற்றிலிருந்து நம்மை சரிப்படுத்திக் கொண்டால் பரம்பரை இளம் நரை, சர்க்கரை வியாதி பலவற்றிலிருந்து காத்துக் கொள்ளலாம். பரம்பரை குணம் என்று சொல்லும் நாம் அதைச் சரி செய்ய ஏன் வழிவகுக்கக் கூடாது?



சுருக்கமாகக் கூறினால் ஆரோக்கிய வாழ்வுக்கு மன அமைதி, சாந்தி, போதுமென்ற மனம், நேர்மை, தெய்வ பக்தி, தொழில் தர்மம் தேவை. கூடவே வாழ்க்கையை நகைச்சுவையுடன் நடத்திச் சென்றால் அகமும், புறமும் அழகு பெறும். அழகுக் கலையுடன் இவை சம்பந்தப்பட்டிருப்பதால்தான் இவற்றை எழுதுகிறேன்.

அதே போல் அதிகமாக கோபத்திற்கு அடிக்கடி உள்ளானால் அசதி, பலவீனம், தூக்கமின்மை, பசியின்மை, அஜீரணம், மலச்சிக்கல், மயக்கம், தலைவலி உண்டாகும். மிகவும் சோர்வைத் தரும். எவ்வளவு மூலிகை 'பேக்' போட்டு அரோமோ ஆயில் மசாஜ் செய்தும் பலன் அளிக்காது. 'நேற்று ஃபேஷியல் செய்தும், அப்படியே இருக்கு' என்கிறார்கள். ஃபேஷியல் செய்வதால் இரத்த ஓட்டத்தை ஊக்குவித்து சருமத்தைப் புத்துணர்ச்சியோடும், கெட்டியாகவும் விளங்கச் செய்யலாம். சருமத்திற்குத் தேவையான மூலிகைச் சத்து 'பேக்' போடுவதால் சருமத்தை மினுமினுப்பாக்கலாம். ஆனால் நம் உள்ள உணர்ச்சிகளை அப்படியே முகம் படமாகக் காட்டும். நல்ல சிந்தனை, எப்போதும் இனிமையாக இருத்தலே அழகு. இவ்வாறு இருப்பதால், தானே ஒரு அழகு வந்துவிடும்.


— மங்கையர் மலர்

வருடக் கணக்கில் சருமத்தைப் பாது காத்துக் கொள்ளாத ஒருவர் என்னிடம் ஒரே நாளில் சரி செய்ய முடியுமா, நான் நிறைய இடங்களில் ஃபேஷியல் செய்து கொண்டாகி விட்டது என்றார். அவர் சாப் பிடும் உணவு சரியான முறையில், செரிமான ஆகாத நிலையில் உடலில் உள்ள அழுக்கு கள் சரியான முறையில் வெளியில் செல் லாத நிலையில் அப்படியே திட்டுத் திட்டான கறுப்பு. இதை எவ்வாறு சரி செய்வது?

என்னுடைய அனுபவத்தில் 'உணவே மருந்து' என்ற அடிப்படையில் சரி செய்ய லாம். ஆரோக்கியமான சருமத்தைப் பெற நல்ல ஊட்டச் சத்துள்ள உணவும் மன நிம்மதியுமே போதும். இதற்காகத் தனியாக பவுடர்க்ளோ, அன்றி கிரீம்களையோ போட்டு எந்தப் பலனும் இல்லை. ஒவ் வொருவரும் தன் சருமம் நிறத்துடன் பொலிவுடன் இருக்க வேண்டும் என்று ஆசை கொள்வதில் தவறு இல்லை. பொறுமை, நம்பிக்கை நல்ல பலனை கட்டாயம் தரும். இயற்கை சிறந்த வழி. அதிக அளவில் பழங்களை சாப்பிடுவது நல்லது. இன்று புகழ் பெற்ற நிறுவனங்கள் அழகு சாதனப் பொருட்களை மூலிகைகள் உதவியோடு வெளிக் கொண்டு வந்துள்ளன.

அரோமோ ஆயில் மசாஜ் சருமத்திற்கு நல்ல பளபளப்பை உடன் கொடுக்கிறது. தாமரை, ரோஜா, சம்பங்கி, மல்லி, மற்றும் உயர்தர மூலிகைகளைக் கொண்டு நான் தயாரிக்கும் ஆரோமோ ஆயில் வாடிக்கை யாளர்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ளது. நான் என் சிகிக்சை முறைகளை சாப்பிடும் உணவிலிருந்து தான் ஆரம்பிக்கிறேன். உச்சி முதல் பாதம் வரை பயன்பெறும் வரையில் தலைக்கு மூலிகை எண்ணெய் மசாஜ் செய்து ஹென்னா போடுகிறோம். சத்துணவு மூலம்தான் எல்லாவற்றுக்கும் தீர்வு காண முடியும் என்பதை சொல்லி வருகிறேன். (இது பற்றி 4817157 தொலை பேசியில் என்னிடம் பேசலாம்.) சுத்தம், சுகாதாரம் மிக, மிக அவசியம். மூலிகைப் பொருட்களை வாங்கி வஸ்திர காயம் செய்து (ஒரு தவம் போல்) ஸ்பெஷல் மூலிகை 'பேக்' செய்து பயன்படுத்தும் போது விளைவு அருமையாக இருக்கிறது. மூலிகை ஆயிலும் கூட தலைமுடியின் வேர்பாகங்களை செழுமைப்படுத்தி முடி நன்கு வளர உதவுகிறது.

— ஹேமா லக்ஷ்மண்
அழகு மற்றும் சிகை அலங்கார நிபுணர்.



இந்த இதழில் Commerce, Vocational, Biology மற்றும் Pure science மாணவர்களுக்கான கம்ப்யூட்டர் கோர்ஸ் பற்றியும், கம்ப்யூட்டர் சயின்ஸ் மாணவர்களுக்கான தனிச் சிறப்பு கோர்ஸ் பற்றியும் பார்க்கலாம்.

Commerce மாணவர்களுக்கு

+2வில் Commerce மாணவ, மாணவிக்களுக்குக் கீழ்கண்ட Course மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

1) Spreadsheet packages
   1. Lotus 1-2-3
   2. Excel
2) Application Software

Accounting software (உதாரணத்துக்கு TALLY என்றழைக்கப்படும் Software)

Spread sheet packatge -களான Lotus 1-2-3, Excel இவைகளின் துணையோடு நம்மால் கணக்கீடு சம்பந்தப்பட்ட அனைத்துப் பயன்பாடுகளையும் திறம்படச் செய்ய முடியும். மேலும் Statement-கள் தயாரிக்க முடியும்.

உதாரணத்துக்கு,

→ Salary slip
→ Temporary Journal Entry
   Trial Balance
   Profit & Loss Account
   Balance Sheet
→ Stock maintenance statement

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த கோர்ஸ் சேர்ந்து படிக்கும்போது நீங்கள் கவன மாக இருக்க ஒரு டிப்ஸ்!

Spread Sheet packageகளான Lotus, excel, இவைகளைப் படிக்கும்போது மேலோட்டமாகக் கற்றுக் கொண்டால் போதாது.. இந்த package-களில் MACRO PROGRAMMING என்ற புரோகிராம் எழுதும் 'டெக்னிக்'குகளும் உள்ளன. அவற்றையும் நீங்கள் கண்டிப்பாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் முழுமை யாக இந்த package களின் பயனை அடைய முடியும்.

⇒ Accounting Software ஏதேனும் ஒன்றை நன்கு கையாளப் பழகிக் கொண்டால் கம்ப்யூட்டரிலேயே அக்கவுண்ட்ஸ் தயாரிக் கலாம்.. TALLY எனப்படும் Accounting Software இப்போது எல்லா அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப் படுகிறது... இது முன்பே எழுதப்பட்ட புரோகிராமிங் Package. இதில் நீங்கள் Program எழுதத் தேவை யில்லை. அதனை திறமையாகக் கையாளப் பழகினாலே போதுமானது.

+2 படித்துக் கொண்டிருக்கும்போதே இவைகளின் பயன்பாட்டை தெரிந்து கொள்வதினால் என்ன பயன்?

+2 முடித்த பிறகு மாலைக் கல்லூரியிலோ

'காம்கேர்' கே. புவனேஸ்வரி





விடுமுறையில் உபயோகிக்காமல் வைத்திருந்ததால் சிலர் வீட்டில் ஷூ பாலிஷ் உலர்ந்து போயிருக்கக்கூடும். அவ்வாறு இருந்தால் சில துளிகள் ஆலிவ் எண்ணெயை அதில் விடவும். மறுநாள் பாலிஷ் புத்தம் புதிது போல இருக்கும்.

— பூங்கோதை கிருஷ்ணராஜ்

அல்லது தபால் மூலமாகவோ நீங்கள் உங்கள் பட்டப் படிப்பை தொடர நேரிடலாம். அப்போது உங்கள் நேரத்தை வீண் செய்யாமல் பகுதி நேர அக்கவுண்டன்ட் ஆக பணி புரிந்து பொருளீட்டலாம்.

வங்கியில் கடன் பெற்று ஒரு கம்ப்யூட்டர் வாங்கி வைத்துக் கொண்டு உங்கள் பகுதியில் உள்ள அனைத்துக் கடைகளுக்கும் சகாயமான தொகைக்கு கணக்கு எழுதிக் கொடுக்கலாம்... இதன் மூலம் பட்டப் படிப்பு முடிப்பதற்குள் அலுவலக அனுபவம் கிடைத்து விடும். கூடவே வருமானமும். பின்பு நீங்கள் வேலை தேடினால் கண்டிப்பாக பிரகாசமான எதிர் காலம் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும்.

BIOLOGY மற்றும் PURE SCIENCE மாணவர்களுக்கான Course:

DBMS PACKAGES;
- d BASE
- FOXBASE, FOXPRO Programming.

DBASE -ல் ஏராளமான டேட்டாவை பதிவு செய்து கொள்ளலாம். டேட்டா எனப்படுவது தகவல்.

அந்தத் தகவல்களை உபயோகித்து நமக்குத் தேவையான Report - தயார் செய்ய FOXBASE மற்றும் FOXPRO உபயோகமாக உள்ளது. இவைகளின் துணையோடு நம்மால் Program எழுத முடியும்... Program எழுதி நமக்குத் தேவையான Report தயார் செய்யலாம்.

இந்த கோர்ஸ் சேர்ந்து படிக்கும்போது நீங்கள் கவனமாக இருக்க ஒரு டிப்ஸ்!

FOXBASE மற்றும் FOXPRO -வில் programming கற்றுக் கொள்ளும்போது இரண்டு வகையான programming technique களையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

1) முன்பே பதிவு செய்யப்பட்ட தகவல்களை உபயோகித்து Program எழுதுதல்.

2) தகவல்களை உபயோகப்படுத்தாமல் Program எழுதுதல்.

இரண்டிலுமே நீங்கள் கை தேர்ந்தவராக இருந்தால் மட்டுமே இந்த DBMS Course -ன் பயனை முழுமையாக நீங்கள் பெற முடியும்.

+2 விலேயே இதனை கற்றுக் கொள்வதினால் பயன்?

+2 முடித்தவுடன் நீங்கள் மருத்துவராகவே முயற்சிப்பீர்கள். அது எந்தப் பிரிவு மருத்துவராகவும் இருக்கலாம்.

கால்நடை மருத்துவர்...
தாவர மருத்துவர்...
மனித நேய மருத்துவர்...

இப்படி எந்தப் பிரிவு மருத்துவராக நீங்கள் முயற்சித்தாலும் இந்த Course - உபயோகமாக இருக்கும்.

தாவரங்களின் பெயர்கள் மற்றும் அவைகளின் நோய் பற்றிய விபரமும், நோய் தீர்க்கும் மருந்துகளின் விபரங்களையும் dBASE-ல் பதிவு செய்து வைத்துக் கொள்ளலாம்.

இதைப் போலவே விலங்கினங்களின் தகவல்களையும் பதிவு செய்து கொள்ளலாம்.

எதிர்காலத்தில் நீங்கள் டாக்டராக வரும் போது பிரிஸ்கிரிப்ஷனை கையால் எழுதாமல் (கிறுக்காமல்!) கம்ப்யூட்டர் பிரிஸ்கிரிப்ஷன் தயாரித்து "மெடிகல் ஷாப்!" நடத்துபவர்களின் கண்களைப் பாதுகாக்கலாம்.

மேலும் நோயாளிகளின் பெயர் மற்றும் முகவரி அவர்களின் நோய் பற்றிய விபரங்கள் இவற்றை DBASE -ல் பதிவு செய்து வைத்துக் கொண்டு... நோயாளிகள் நோயை மட்டும் நீங்கள் (diagonise) - கண்டு பிடித்து விட்டு... கம்ப்யூட்டரிடம் இருந்து மருந்துகளின் விபரங்களை நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி Program எழுதி வைத்துக் கொள்ளலாம் FOXBASE மற்றும் FOXPRO இவைகளின் துணையோடு.

மருத்துவரானால் மட்டும்தான் உபயோகமாக இருக்கும் இந்த கோர்ஸ்... மெடிகல் சீட் கிடைக்கவில்லை என்றால்? 'பேரா மெடிகல்' எனப்படும் மருத்துவத்தைச் சார்ந்த எந்தக் கல்விக்கும் இது உபயோகமாக இருக்கும். மருத்துவ சம்பந்தமாக கம்ப்யூட்டரை இயக்கக் கற்றுக் கொண்டு விட்டால் போதுமே. பிறகு அதனை சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் விரிவு படுத்திக் கொள்ளலாம்.

Vocational/ மாணவர்களுக்கு

DTP - Desk top publishing
- PAGE MAKER


SILVER JUBILEE YEAR
வெள்ளிவிழா ஆண்டு
1974-98

- CORAL DRAW
- VENTORA
- PHOTO PAINT

CAD - Computer Aided Design.

DTP என்பது ஒரு டேபிளிலேயே ஒரு அச்சகம் செய்யக் கூடிய அனைத்து வேலைகளையும் செய்து விட முடியும். பழைய காலத்தில் அச்சு அடிக்கும் அச்சகத்தில்

1) Block தயாரித்தல்
2) எழுத்துக்களைக் கோர்த்தல்
3) Proof (சரி பார்த்தல்)
4) Correction (பிழை திருத்துதல்)
5) Printing இவையெல்லாம் நடக்கும். இந்த வேலைகள் அனைத்தையும் ஒரு டேபிளிலேயே கம்ப்யூட்டர் மூலமாக முடித்து விடலாம் மிகக் குறைந்த நேரத்திலேயே... அதனால்தான் "Desk Top Publishing" என்று பெயர் வந்தது...

CAD எனப்படும் Computer Aided Design இதனைக் கொண்டு Computer லேயே design செய்து கொள்ளலாம்.

+2வில் இதைப் பற்றித் தெரிந்து கொள்வதால் என்ன பயன்?

+2 முடித்து விட்டு எந்த 'குரூப்' செய்தாலும், இது கை கொடுக்கும்.

DTP கற்று வைத்துக் கொண்டால் சுய தொழில் ஆரம்பித்து சொந்தக் காலில் நிற்கலாம்.

DTP -க்கு எந்தக் காலத்திலும் அழிவு இல்லை... படிப்பு இருக்கும்வரை, பத்திரிகைகள் இருக்கும் வரை, விளம்பரங்கள் இருக்கும் வரை, வியாபாரங்கள் இருக்கும் வரை, போட்டி இருக்கும் வரை DTP யின் வாழ்வும் இருக்கும். இரண்டு மூன்று கம்ப்யூட்டர்கள் வாங்கி வைத்துக் கொண்டு, டைப் செய்வதற்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டுக் கொண்டு சுயதொழில் ஆரம்பித்தால் கட்டாயம் நீங்கள் வாழ்க்கையில் முன்னேறலாம். உங்களால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வாய்ப்பு உள்ளது...

CAD - mechanical மற்றும் Civil இன்ஜினியரிங் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அவர்களுக்கு உங்கள் கம்ப்யூட்டரில் நீங்கள் கற்றுக் கொடுக்கலாம்.

மேலும் கட்டிட வல்லுனர்களை விற்பன்னர்களை அணுகி அவர்கள் கையால் தயாரிக்கும் வீட்டுக்கான ப்ளான்களை கம்ப்யூட்டரில் தயாரித்துக் கொடுக்கலாம். மேலும் இத்துறையில் விரிவான வாய்ப்புகள் உள்ளன.

கம்ப்யூட்டர் மாணவர்களுக்கு

கம்ப்யூட்டர் சயின்ஸ் - ஐ முக்கியப் பாடமாக எடுத்துப் படிக்கும் +2 மாணவர்கள் எல்லாவித கம்ப்யூட்டர் கோர்ஸிலும் முழு அறிவு பெற வேண்டும்....

உதாரணமாக


BASIC
FORTRAN
COBOL
PASCAL
C,
C++
VC++,
VISUAL BASIC (VB)
Power Builder (PB)
JAVA, JAVA ++, VISUAL JAVA++
ORACLE
DEVELOPER 2000 இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்....

முதுகலைப் பட்டப் படிப்பு வரை இவர்கள் நாள்தோறும் வளர்ந்து வருகின்ற கோர்ஸ் படித்துக் கொண்டே வர வேண்டும். மற்ற குரூப் மாணவர்களை விட இவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம். ஏனெனில் இது கம்ப்யூட்டர் உலகமாகி விட்டதே...

கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் மாணவர்களுக்குக் கற்றுக் கொள்வதில் ஒரு வரையறை வைத்துக் கொள்ள முடியாது... "இது போதும்! படித்து முடித்தாகி விட்டது... இனி வாழ்வில் செட்டில் ஆகி விடலாம்!" என்று தங்கள் வட்டத்தை குறுக்கி வரையறுத்துக் கொண்டால் அவர்கள் முன்னேற முடியாது...

அப்படி வரையறை செய்து கொண்டபலர் BE Computer படித்துவிட்டு வேலை இன்றி அல்லாடிக் கொண்டிருப்பதை பார்க்கிறோம்.

(தொடரும்)




கோலம் கற்கும் சிறு பெண்கள் வீட்டில் இருக்கும் graph paper (பழைய நோட்டில்தான்)இல் பழக ஆரம்பித்தால் கோணல், மாணல் ஆக வராது. நன்றாக வரும். இது அவர்களை மேலும் உற்சாகப் படுத்தவும் உதவும்.

— லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

ஆரோக்கியமான கூந்தலை விரும்புகிறீர்களா

"கிருத்திகா ஹேர் வைடலைசர்" பாதுகாப்பான சித்த மருந்து



• பொடுகை நீக்குகிறது • முடி உதிர்வை தடுக்கிறது • பலவீனமான முடிவேர்களை உறுதியாக்குகிறது • ஆரோக்கியமான, அடர்த்தியான பளபளப்பான கூந்தலை வளர்க்கிறது • தலைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியை தருகிறது • **பதினோரு அரிய மூலிகைகளிலிருந்து,** தூய தேங்காய் எண்ணெயில் ஏழுமுறை காய்ச்சி வடிக்கப்படுவதால், முடிவேர்களுக்குள், ஆழமாக ஊடுருவி செயல்படுகிறது.

கிருத்திகா™

ஹேர் வைடலைசர்

• செம்பருத்தி பூவின் குணநலன்களை உள்ளடக்கிய போஷாக்குடன் கூடிய ஓர் உன்னத தயாரிப்பு
• பரிந்துரைக்கப்பட்ட அளவுகளின்படி தொடர்ந்து உபயோகியுங்கள்,

"கிருத்திகா ஹேர் வைடலைசர்"

குறிப்பு: "கிருத்திகா ஹேர் வைடலைசர்", மிகுந்த மருத்துவ குணங்கள் கொண்ட தயாரிப்பு என்பதால் மிகுந்த பலன் பெற (சைனஸ் உள்ளவர்கள் தவிர) கிருத்திகா ஹேர் வைடலைசருடன் வேறு எந்த ஹேர் ஆயிலோ, அல்லது எண்ணெயோ கலக்காமல் நேரிடையாக பயன்படுத்தவும்.

மேலும் விபரங்கள் பெற தொடர்பு கொள்ளவும்

- Product Manager



சில்லறை விலை (வரியுடன்)

டிரையல் பேக் 50 மி.லி ரூ. 60/-
ரெகுலர் பேக் 100 மி.லி ரூ. 100/-
மணிசேவர் பேக் 200 மி.லி ரூ. 156/-

"புதிய மூலிகை நறுமணத்துடன் இப்போது விற்பனையில்"

mothi Pharma Pvt. Ltd.
Post Box No. 2471 Chennai - 29. (Tamilnadu)
Ph: 6445448, Fax: 044-614780

கேர்லெஸாய் இருந்தால் ஹேர்லெஸ் ஆகும்

பாக்டீரியாவை அடக்கி வாசிக்க விடாதீர்கள்!

என் கணவர் ஒரு வங்கியில் அதிகாரி. ஆதலால் நாங்கள் 3 வருடத்திற்கு ஒருமுறை, "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று இடம் விட்டு இடம் மாறிக் கொண்டிருப்போம்.

தற்சமயம் டேராடூனில் போஸ்டிங். ஆகையால் முதலில் ஆறு மாதம் மளிகைச் சாமான் கடை, பெண் பிள்ளை ஸ்கூல் அட்மிஷன் என்று ஓடி விட்டது. சரியாக போன வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து என் பெண் வீணா கேந்த்ரீய வித்யாலயத்தில் படித்துக் கொண்டிருக்கிறவள்.

"வயிறு கனமாக ஃபீல் ஆகிறது, சாப்பிட ஒன்றும் வேண்டாம்" என்று சொல்லி விட்டு டிபனும் எடுத்துச் செல்ல மாட்டாள். இதுவே தினப்படியாகவே, மிகவும் கவலையாகி, பக்கத்து வீடுகளில் இருக்கும் வட இந்தியர்களிடம் விசாரித்ததற்கு, அவர்கள் எல்லோரும் ஒரே குரலாகச் சொன்னது– இங்கு டேராடூன் தண்ணீரில் கால்ஷியம் அதிகம் என்றும், அதனால் கல் சாப்பிட்டால் செரிப்பவர்களுக்குக் கூட இங்கு ப்ராப்ளம் வரும் என்று சொன்னார்கள்.

நானும் விட்டு விடாமல், பக்கத்தில் உள்ள டாக்டரிடம் காண்பித்து மருந்து உட்கொண்டாள். பத்து நாட்கள் பலன் தெரிந்து, பிறகு மருந்துகளுக்கு வயிறு "டாடா" சொல்லி விட்டது. ஜனவரி ஆரம்பத்திலிருந்து மிகவும் பிராப்ளம் அதிகமாகி பிரபல ஆஸ்பிடலில் ஸ்பெஷலிஸ்ட் பற்றி விசாரித்து ஜனவரி கடைசியில், 'எண்டோஸ்கோப்பி' டெஸ்ட் செய்ததில் தெரியவந்தது– இன்டைஸ்டைனும் வயிறும் சேரும் இடத்தில் புண்ணாகி இருக்கிறது என்று. டாக்டரிடம் மிகவும் துருவி விசாரித்ததில் இது பாக்டீரியாவினால் ஏற்பட்டது என்று சொன்னார்.

இதற்குக் கால அட்டவணை ஒன்றும் கிடையாது. நாலு மாதமோ அல்லது நான்கு வருடங்கள் முன்போ எப்பொழுதாவது வயிற்றுக்குள் வந்து உட்கார்ந்து விடும். பின் அவ்வப்பொழுது வேகமாக செயல்படுமாம். அதன் எதிரொலிதான் வயிறு உப்பல், வாந்தி, பசியின்மை, ஜீரணிப்பதில் சிரமம் எல்லாம். இப்பொழுது ஒரு மாதமாக மருந்துகள் உட்கொண்டு நன்கு குணம் தெரிய ஆரம்பித்து இருக்கிறது.

சுருக்கமாக நான் சொல்ல விரும்புவது இதுதான்– வயிற்றுப்போக்கு, வயிறு உப்பல், வாந்தி, பசியின்மை, ஜீரணிப்பதில் சிரமம் இதில் எல்லாமோ அல்லது ஏதேனும் மூன்று அறிகுறிகளோ தெரிந்தாலும், ஜீரண மருந்துகள் உட்கொண்டு, பாக்டீரியாவை அடக்கி வாசிக்க விடாதீர்கள்! உடன் பரிசோதித்துக் கொள்வது நல்லது.



— ஆர். சித்ரா

விழாவில் மட்டுமே வெள்ளி . . .
பரிசுகளில் வைரம் !





ஸ்ரீராம் சிட்ஸின் வெள்ளி விழா சிறப்புப் போட்டி. எண்ணற்ற பரிசுகள். விழாவில் மட்டுமே வெள்ளி; பரிசுகளில் வைரமும், தங்கமும் காத்திருக்கின்றன.

சிறப்புப் பரிசு "வைர மோதிரம்"

இலக்கியங்களில் மோதிரங்கள் உங்களுக்கு கதைகள் பல சொல்லியிருக்கும். துஷ்யந்த மகாராஜன் தன் சந்திப்புக்கு அடையாளமாக சகுந்தலைக்கு மோதிரம் ஒன்றை அளித்தான். முனிவர் சாபத்தால் மோதிரத்தை தொலைத்துவிட்ட சகுந்தலையை, துஷ்யந்தனுக்கு அடையாளம் தெரியவில்லை. மீன் விழியாள் தொலைத்த மோதிரம் மீன் ஒன்றின் வயிற்றிலும், பின்னர் அதைப் பிடித்த மீனவன் கையிலும், அவன் மூலம் துஷ்யந்தனுக்குமாக பயணப்பட்டது. துஷ்யந்தன் மோதிரத்தையா கண்டான்? இல்லை, இனிய காதலியின் இதயத்தையே கண்டான். இப்படி பல சுவையான கதைகள் மோதிரத்தைச் சுற்றி. உங்கள் வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்களுக்குப் பின்னாலும் ஒரு மோதிரம் ஒளிந்திருக்கின்றது. அது ஸ்ரீராம் தரும் வெற்றி மோதிரம்.



உங்களுக்குத் திருமணமாகி 25 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டதா? உடனே எடுங்கள் பேப்பரையும், பேனாவையும் இந்த 25 வருட குடும்ப வாழ்வில் நிகழ்ந்த சுகங்கள், சோகங்கள் அவற்றை நீங்கள் எதிர் கொண்ட விதம், எதிர்பாராது நேரிட்ட பொருளாதார நெருக்கடி அதிலிருந்து நீங்கள் மீண்ட விதம், தன்னம்பிக்கை, முயற்சி இவை உங்கள் வாழ்வில் கை கொடுத்த சம்பவங்கள். இப்படி எவையாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் சுவையாகவும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமலும் இருப்பது அவசியம். உங்களுக்காக உங்கள் வாரிசுகளும் களத்தில் இறங்கலாம். போட்டியில் கலந்து கொள்ளும் நீங்கள் ஸ்ரீராமின் சந்தாதாரராக இருந்தால் உங்கள் சீட்டு வரிசை எண், கிளை இவற்றைக் குறிப்பிட்டு எழுதினால் கூடுதல் மதிப்பெண்கள் உண்டு. இன்றே எழுதுங்கள், வைரமோதிரம் மட்டுமின்றி ஏராளமான தங்க நகைகளும் காத்திருக்கின்றன. உங்கள் கட்டுரைகள் வந்து சேர வேண்டிய **கடைசி தேதி** 30.6.98.

விதிமுறைகள்

❖ கட்டுரையுடன், உங்கள் குடும்ப புகைப்படம் ஒன்றை இணைக்க வேண்டும் ❖ கட்டுரையை திருத்தவோ, பிரசுரிக்கவோ நிறுவனத்துக்கு உரிமை உண்டு ❖ நடுவர் தீர்ப்பே இறுதியானது ❖

பரிசுகள்

• சிறப்புப் பரிசு (1) : வைர மோதிரம் • முதல் பரிசு (1) : தங்க நெக்லஸ் • இரண்டாம் பரிசு (2) : தங்க மோதிரம் • மூன்றாம் பரிசு (10) : 4 கிராம் தங்க நாணயம் • ஆறுதல் பரிசு (50) : அறிவு நூல்கள் •





கட்டுரைகளை அனுப்ப
வேண்டிய முகவரி :

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்,
'சுப்ரமணியன் பில்டிங்' , 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன் : 8520700, 8520797, 8522651, 8523932, 8525536

திருமண மலர்

மணமகள் தேவை

■ வடமாள், ஐயர், ஸ்ரீவத்ச கோத்திரம், உத்திராடம், 29/170/பி.ஏ. (Corporate Secretaryship) ரூ. 5000/- தனியார் துறையில் மேனேஜராக பணிபுரியும் பையனுக்கு வேலையில் உள்ள தகுந்த பெண் தேவை. பெட்டி எண் : 14853

■ ஐயர், பிரஹசரணம், கபிகோத்திரம், திருவோணம், 38/165/பி.ஏ./1500/- வக்கீலிடம் தனிப்பட்ட குமாஸ்தாவாக பணிபுரியும் பையனுக்கு தனியார்/அரசு வேலையிலுள்ள பெண் தேவை. சொந்த வீடு சென்னையில் உள்ளது. உட்பிரிவுகள் சம்மதம். எளிய திருமணம். பெட்டி எண் : 14854

■ Hindu, Yadava, slim, 41/5.4" D.E.C.E. 4500/- Officer in Limited Company own flat seeks below 35, preferably working, good looking, slim girl. Caste no bar. Box No. 14855

■ Any Brahmin girl for Vadamal, Kousika, Sadayam, B.Com (Hons) ICWAI (Inter) 33/163 cms/9000/- fair medium lean, looks much younger, supervisory, very reputed Central Govt. Dept. Mumbai. Horoscope optional. Box No. 14856

■ Brahacharanam, Koundinyam, Revathi, 27/168 fair System Analysist, USA H1 visa. Seeks only computer qualification, fair bride, M.Sc., MCA., ME., M.Tech., BE., B.Tech, below 25. Horoscope, bio-data to Box No. 14857

■ ஐயர், 47/7000/- வியாகரத்தான சென்னையில் சொந்த வீடுள்ள கண்பார்வை குறைவான வரனுக்கு, பரந்த மனபான்மையுள்ள பிராமண வாழ்க்கைத் துணைவி தேவை. பெட்டி எண் : 14858

■ கார்காத்தார் பிள்ளை (சாத்துகுடி) மூலம், டி.சி.ஈ/ 29/165/6000/- தனியார் கம்பெனியில் கட்டிட என்ஜினியர், சொந்த வீடு வசதியுள்ள மாநிறமுள்ள ஒரே பையனுக்கு அதே இனத்தில் மணமகள் தேவை. கோவையில் வேலையில் இருக்கும்/கோவைக்கு மாற்றலாகக்கூடிய வேலையில் இருக்கும் பெண்ணுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14859

■ தெலுங்கு பிராமணாள் வேங்கிநாடு, அனுஷம், காச்யபம், 30/6'/10,100/- பி.ஏ., பி.ஈ, டாடாவில் இஞ்சினியர். சொந்த வீடும் வசதியும் கொண்ட சுத்த ஜாதகர்க்கு, முதுகலையில் எம்.எஸ்ஸி., எம்.காம், அல்லது பி.ஈ. படித்த மாற்றத்தக்க உத்யோகத்தில் உள்ள அழகான 23 - 25 வயதுடைய குடும்பப் பயிற்சியும் இசையில் ஆர்வமும் கொண்ட நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, பெட்டி எண் : 14860

■ வடகலை, ஐயங்கார், கௌசிகம், மூலம், 32, 5.6" பி.எஸ்ஸி, (சி.ஏ.) Ltd Co., Acct. Officer, ரூ. 6000/- மாதம் வரனுக்கு படித்த வேலையிலுள்ள மணமகள் தேவை. பெட்டி எண் : 14861

■ ஐம்பதுக்கு மேல் வயதும் 10,000க்கு மேல் வருமானமும் உள்ள வேளாளர், தன்னையும் வீட்டையும் பொறுப்போடு கவனித்துக் கொள்ள ஒரு துணையை நாடுகிறார். பத்தாவதுக்கு மேல் படித்த, 35 வயதுக்குள் உள்ள குடும்பப்பாங்கான பெண்கள் எழுதுங்கள். வேறு நிபந்தனைகள் இல்லை. பெட்டி எண் : 14862

■ அஷ்டசஹஸ்ரம், கௌசிகம், மகம், ஐயர், பி.காம், 30/5.10" பெங்களூரில் சொந்தமாக தொழில் செய்யும் வரனுக்கு பட்டதாரி வேலைக்கு செல்லும் குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகமும், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். போன்: 080 - 3472612. பெட்டி எண் : 14863

■ Vadama, Haritha, Pooram, 36/165/B.Com, Computer professional having own business, New Delhi seeks smart, fair, Tamil Brahmin graduate girl around 30-32 years, preferably Delhi/North based. Horoscope optional. Reply Box No. 14864

■ Parents of Thenkalai Iyengar, Koundinya, Aswini, 27/166/9000 p.m. DECE, Senior Engineer, Public Limited Company seeks suitable working graduate girl for only son whose all sisters married. Box No. 14865

■ Alliance invited from fair, good looking girls from good family for Telugu Mulakanadu boy 28 years, 172 cms, Aswini qualified and company employed. Apply with horoscope and details. Box No. 14866

■ ஐயர், பிரஹசரணம், பாரத்வாஜம், ரேவதி, 28/170/ A.C.A. வரனுக்கு குடும்பப்பாங்கான ICAI/ICWAI-Inter முடித்த (preferably with computer knowledge) பிரஹசரணம், வடமாள் பெண்களின் ஜாதகங்கள், பிறந்த ஊர்/தேதி/நேரம், குடும்ப விவரங்களுடன் அனுப்பவும். பெட்டி எண் : 14867

■ ஐயர், வடமாள், கௌண்டின்யம், மிருகசீரிஷம், 34, 160 செ.மீ. 4000/- தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பையனுக்கு அரசு/தனியார் நல்ல வேலை பார்க்கும் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 14868

■ Hindu, Sozhia Vellala, decent family, clean habits boy Avittam, Kumbam, 165 cms/28/M.Sc./10,000/- proprietor Registered Trading Establishment, suitable respond with details and horoscope. Subsects acceptable Box No. 14869

■ சைவ வெள்ளாளர், கார்த்திகை, 32/171/பி.ஈ. மத்திய அரசு நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் எக்சிகியூடிவ் இன்ஜினியராகப் பணிபுரியும் வரனுக்கு சைவ வெள்ளாள குடும்பத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பு படித்த, லட்சணமான வேலையிலுள்ள அல்லது இல்லாத மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் எழுதுக. பெட்டி எண் : 14870

சென்னை, தியாகராய நகரில் வசிக்கும் திருமதி ஏ. ஜானகி அம்மாள் தெரிவிக்கிறார்:

"மார்ச் மாத மங்கையர் மலரில் திருமண விளம்பரம் செய்ததில் என்னுடைய இரண்டு மகன்களுக்கும், எங்களுக்கு ஏற்றபடி நல்ல இடத்தில் பெண்கள் கிடைத்து விட்டார்கள். மூன்று வருடங்களாக முயற்சி செய்தும் முடியாதது, மங்கையர் மலரில் திருமண விளம்பரம் மூலம் இனிதே முடிந்ததற்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் தகும்."

இதுபோல் ஏராளமான நன்றிக் கடிதங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அனைவருக்கும் எங்களது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைத்துத் தர மக்களின் இல்லங்களையும் அலங்கரிக்கும் மங்கையர் மலரில் நீங்களும் விளம்பரம் செய்து பயனடையலாமே!

■ கொங்கு வெள்ளாளர், சேரலான் குலம், கம்ப்யூட்டர் லெக்சரர், 37/153, ஆயில்யம், கடகலக்ன பையனுக்கு, இதே இன எம்.எஸ்ஸி/எம்.பி.ஏ/எம்.சி.ஏ/ கம்ப்யூட்டர் படிப்புள்ள வெளிநாடு செல்லும் விருப்பமுள்ள பெண் ஜாதகங்கள் வரவேற்கப்படுகின்றன. பெட்டி எண் : 14871

■ Vellalar Doctor, Bharani, Trichy, 33/173 fair, clean habits, convent educated, needs slim, fair, beautiful, homeloving understanding good family and financial background, below 30, preferably Doctor bride, alternatively employed Science postgraduate. Subsects acceptable. Apply horoscope, bio-data to Box No. 14872

■ Alliance invited from a caring, affectionate female and willing to settle in Canada for second marriage to an Engineer, 39 years, Tamil, employed abroad. Caste, Religion, Language no bar. Box No. 14873

■ முதலியார் கலப்பு மணம் முதுகலை பட்டம், 27/162/5000/- பூரம், மாநில அரசு சென்னையிலுள்ள ஒல்லியான நல்ல நிறம் மணமகனுக்கு முதலியார், கலப்பு மண முதலியார், பிள்ளை, உடையார், வாணிய செட்டியார், சோழிய வெள்ளாளர், வெள்ளாள பிள்ளை, வெள்ளாள செட்டியார் இனங்களிலிருந்து குடும்பப்பாங்கான அசைவம், நல்ல நிறம் ஒல்லியான +2 க்கு குறையாத 23 வயது, 5.2" பெண் ஜாதகம், மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 14874

■ Hindu Devanga, 50/165 divorcee, highly qualified well placed with decent income from export business/properties, seeks suitable alliance from suitable, fair, good looking educated bride. Caste no bar. Widows/divorcees without encumbrance accepted. Simple early marriage. Send details to Box No. 14875

■ Affluent Brahacharanam, 28, MBA (I.I.M.) 36,000/- p.m. Chennai, Bharadwaja, Makam, innocent divorcee without any encumbrance. Seeks beautiful bride. Divorcees excuse. Box No. 14876

■ Parents of well settled charming personality, 31/5.11" Bharadwajam, Vadama Iyer, Mirugaseerusham, (B.A.) business magnet, earning Rs. 2.50 lacs annualy, invite alliances from respectable families. Girl should be above 5.5" fair, slim and beautiful. Employment not essential. Simple decent marriage. Respond phone 5513365 Chennai, also Box No. 14877

■ Wanted a bride for a partial blind, fair looking Tamilian 24 years, with E.S.L.C. qualification, comfortable owns a house at Coimbatore. Please reply Box No. 14878

■ US employed Vadama, Srivatsa, Vishakam-4, B.E. (E&E) Computer Consultant, 5.8"/26 years, seeks fair, good looking B.E. Comp. Science girls below 23 years from well to do and respectable family. Box No. 14879

■ Tamil Iyer well settled widower, 43 with 3½ years female child requires Tamil/Kerala Brahmin, fair, good looking bride with a broadmind to accept the child. Young widows can also apply. Box No. 14880

■ Balija Naidu, bridegroom, 36, B.Sc, fair complexioned, 180 cms, Central Govt. employee at Chennai, monthly salary Rs. 10,000/- Divorcee, divorce legally obtained, no encumbrance, suitable bride wanted. Reply Box No. 14881

■ NorthArcot, Vadamal, Koundinya, Pooram, last son, handsome, 30/178/DME Executive Engineer in MNC, 8000/- requires good looking educated girl. Box No. 14882

■ Handsome, fair, Iyer, Brahacharanam, Kasyapa, Ayilyam, 27/170, B.E. Electronics well employed in reputed firm seeks good looking well qualified girl, subsects acceptable. Send horoscope to Box No. 14883

■ Pious Tamil Iyer Srivatsa, 29, 174, Revathi, handsome engineer MNC, Bangalore, clean habits, seeks homely educated above 160 tall really fair girls upto 25. Professional talents in music preferred. Contact Box No. 14884

■ Alliance for Tamil Iyer, Vadama, Koundinya Gothram, Chadayam, 44/178/15,000/- bachelor, based in Mumbai from non-Koundinya Iyer, Vadama employed/unemployed girl upto 38. Send horoscope. Widows/divorcees please excuse. Box No. 14885

■ Iyer, Brahacharanam, Koundinya, Puram, 26/177, software consultant, Texas, USA, handsome, seeks alliance from good looking, homely graduate unemployed girl upto 23. Knowledge of carnatic music must. Ph. 410376. Box No. 14887

■ Iyengar Vadagalai, (Telugu) Harithasa, Rohini, 30/152/8000/- accounts executive, B.Com, reputed company, Delhi (native of Trichy) seeks alliance from graduate girl. Reply with horoscope details to Box No. 14888

■ Wanted fair looking, Brahmin girl for Pune based Vadamal, Bharadwajam, Uthiradam, B.Com., PGDMM, 35/8000/- Asst. Mgr. Private Firm. (innocent divorcee. Mutual consent). Sub castes accepted. No demands. (Divorcees/widows excuse). Box No. 14889

■ Alliance for Mumbai based Tamil Iyer boy Vadama, Srivatsa, Revathi, 33/B.Sc., PGDCA self employed computer programmer, two lakhs per annum. Fam-



திருமணமலர் - விளம்பரக் கட்டணம்

பத்திரிகைக் காகிதம், மற்றும் பத்திரிகை அச்சாகத் தேவைப் படும் பொருட்களின் விலைகள் உயர்ந்து விட்ட காரணத்தால் திருமணமலர் விளம்பரக் கட்டணம் ஜூலை'98 மங்கையர் மலர் இதழிலிருந்து முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 250/- என திருத்தி அமைக்கப்படுகிறது. முப்பது வார்த்தைகளுக்கு மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் ரூ. 10/- கூடுதல் கட்டணம். (இதில் உயர்வு இல்லை.)

